Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 129 | ஞாயிற்றுக்கிழமை | பங்குனி 22 நாள் 04 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 24+24 விலை : ரூ.40 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## வடக்கில் 9 யாழில் 7

கொழும்பு, ஏப். 4

வடக்கு மாகாணத்தில் மேலும் 9 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் ஐந்து பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் முல்லேரியா ஆய்வுகூடம் என இரண்டிலும் 920 பேரின் மாதிரி 23



# வெள்ளைவான் கதை போலிப் பரப்புரையாம்

### வவுனியாவில் வைத்து தெரிவித்தார் கோத்தா

கொழும்பு, ஏப்ரல் 4

நான் அதிகாரத்துக்கு வரும்போது வெள்ளை வான், முதலைகள், சுறா மீன்கள் பற்றியெல்லாம் போலிப் பரப்புரைகளை சமூகமயப்படுத்திய குழுக்கள், அந்தப் பரப்புரைகள் வெற்றியளிக்காத நிலையில் தற்போது சுற்றாடல் பற்றி போலியான மற்றும் மோசமான கருத்துக்களை சமூகமயப்படுத்தி வருகின்றனர் – இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. 23

## பக்கச்சார்பான முடக்கத்துக்காக இழப்பீடு தேவை

### மாவட்டச் செயலரிடம் வர்த்தக சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்ப்பாண நகரின் முக்கிய பகுதியை முடக்குவது தொடர்பில் பின்பற்றப்படும் நடைமுறை பக்கச்சார்பானதாக உள்ளது. அத்துடன் இந்த முடக்கத்தால் ஏற்பட்ட இழப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண வர்த்தக சங்கம் மாவட்டச் செயலரிடம் 23

## உயர்தரப் பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள்

கொழும்பு, ஏப். 4

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பெறுபேறின் முடிவுகளை இந்த மாதம் இறுதிக்குள் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பரீட்சைகளின் பெறுபேற்றைக்கொண்டு 23

## புதையல் தோண்ட முயற்சி தருமபுரத்தில் இருவர் கைது

கிளிநொச்சி, ஏப்.4

தருமபுரம் பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏற்கனவே வட்டக்கச்சி, மாயவனூர் பகுதியில் இவ்வாறு புதையல் தோண்ட முயற்சித்த சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் தருமபுரத்திலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 23

## அராலியில் ஒருவருக்கு நேற்றிரவு கத்திக்குத்து

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழில் இருந்து கல்லுண்டாய் வழியாக சென்று கொண்டிருந்த இளைஞன்மீது நேற்று இரவு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அவரைத் தேடிவந்த ஒருவர்மீது கத்திக்குத்து நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 23

## தமிழர்களுக்கு நீதிப் பொறிமுறையை உடன் முன்னெடுக்கவேண்டும் அரசு!

### அநுரகுமார வலியுறுத்து

கொழும்பு, ஏப். 4

'இறுதிப் போரில் இடம்பெற்றன எனக் கூறப்படும் போர்க்குற்றங்களைக் கண்டறியவும், காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் ஆராய்ந்து தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற 23



## பொலிஸின் கைவிரலை கடித்தாராம் இளைஞன்

யாழ்ப்பாணம், ஏப். 4

பொலிஸாரின் கைவிரலைக் கடித்தார் என்று தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். 23

Fun BLASTER இப்போது புதுப்பொழிவுடன்

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube

உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

Dialog

எதிர்காலம் இன்றே.

noolaham.org | aavanaham.org

### தமிழ் மக்களின்

# விடுதலைக் கனவுடனேயே மறைந்துள்ளார் ஆண்டகை

## தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.4

**தமிழ்த் தேச மக்களுக்கு விடுதலை கிடைக்கவேண்டும் என்ற மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயருடைய ஆசை நிறைவேறாமலேயே அவர் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

ஆயரின் இறப்புத் தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

இயேசு கிறிஸ்துவின் அர்ப்பணம் மற்றும் தியாகம் என்பவை உலகம் முழுவதும் கிறிஸ்தவ மதத்துக்கு வித்திட்டன. கிறிஸ்தவ மதத்துக்கு அத்திபாரமாய் அனைத்து மக்களின் மனங்களிலும் ஆழப்பதிந்துவிட்ட புனிதரானார் இயேசு. அந்த வழியில் கிறிஸ்தவ மதக் குருவானவராய் இணைந்து, பல மாவட்டங்களிலும் பணியிலிருந்து, மன்னார் மறை மாவட்டத்தின் ஆயராய் விளங்கினார் வணக்கத்துக்குரிய ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை. இனவிடுதலைக்கான போர்க்காலத்தின் இறுதியில் 2007 - 2009 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் பாதுகாப்பான இடங்களுக்கு பொதுமக்களை வாருங்கள் என அரசும் இராணுவத்தினரும் அழைத்துவிட்டு அவ்வாறு வந்த மக்கள் மீதும், மருத்துவமனைகள் மீதும் போரில் பாவிக்கத் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தியும், குண்டுகளை வீசியும் செயற்பட்டதால் பல்லாயிரம் மக்கள் கொல்லப்பட்டனர்.

போரின் இறுதிக்காலத்தில் சரணடைய விரும்பியவர்களைக் கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருக்க ஆயர் அரசுடன் பேச்சில் ஈடுபட்டார்.

வன்முறை அழிவுகளை நிறுத்த, போரைநிறுத்த முயற்சிகளெடுத்தார். இறுதிப் போரில் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதை, அரசும் இராணுவமும் போர்க்குற்றமிழைத்தார்களென சர்வதேச அரங்கில் திட்டவட்டமாக அறிவித்தார். நீதிக்காக, சமாதானத்துக்காக உயிரைத் துச்சமென மதித்து இறுதிவரை குரலெழுப்பி வந்தார். ஜனநாயக வழிப்போராட்டங்களில் தொடர்ச்சியாகப் பங்கு கொண்டு தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

தமிழ்த் தேச மக்களுக்கு விடுதலை கிடைக்கவேண்டும் என்ற அவருடைய விருப்பம் நிறைவேறாமலேயே அவர் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். நாளை திங்கட்கிழமை மன்னார் மாவட்டத்தில் அனைத்து ஆயர்களும் அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனையில் ஈடுபடவுள்ளனர். நாளை நாம் எல்லோரும் வடக்கு கிழக்கிலும் முழுமையான துக்கநாளாகக் கடைப்பிடித்து வணக்கத்துக்குரிய கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு அஞ்சலி செய்வோம் -என்றுள்ளது. (ப)

வீடு வாடகைக்கு
கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் பழனி ஆண்டவர் கோயில் முன்பாக 4 அறைகளுடன் கூடிய பெரிய வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. வாகனத்தரிப்பிடம் (Garrage) பயன் தரும் மரங்கள் உள்ள காணியும் உள்ளடக்கம்.
தொடர்பு 077 756 9476

# தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைக்க அரும்பாடுபட்டவர் ஆண்டகை ஜோசப்

## ரெலோ அமைப்பு இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 4

பிரிந்து நிற்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைய வேண்டும் என்ற செய்தியை வலியுறுத்தி வந்ததோடு மாத்திரமல்லாமல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சகல முயற்சிகளையும் எடுத்தவரே அதி வணக்கத்துக்குரிய ஓய்வுநிலை ஆண்டகை இராயப்பு ஜோசப் என்று ரெலோ அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆயரின் உயிரிழப்பு தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

போர்க் காலத்திலே எம்மக்கள் மீது கட்டவிழ்த்து எமது இனம் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வருகிறது, எங்கள் இனத்துக்கான விடுதலை அவசியம் என்பதை தெள்ளத்தெளிவாக சர்வதேசத்துக்கும் தொடர்ந்து வந்த அரசுகளுக்கும் துணிச்சலோடு எடுத்துக்கூறிய பெருந்தகை.

தமிழ் இனத்துக்காக, மதக் கோட்பாடுகளைக் கடந்து அயராது குரல் கொடுத்து வந்த அன்னார் இன்று எம்மை விட்டு பிரிந்தாலும் தொடர்ந்து தமிழ் மக்களின் மனதில் வாழ்ந்து கொண்டே இருப்பார் என்றுள்ளது. (ப)

# தமிழரின் துயரைத் துடைத்தெறிய மிகத் துணிவுடன் பயணித்த துறவி

## ஜனநாயக மக்கள் முன்னணி இரங்கல்

கொழும்பு, ஏப்.4

இலங்கை வரலாற்றில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தவர்களில் முக்கியமான காத்திரமான பங்கு வகித்தவர் அருட் தந்தை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை என்பதுடன் தமிழர்களின் ஒற்றுமைக்கும் பெரும் பணியாற்றியவர் என ஜனநாயக மக்கள் முன்னணியின் உபதலைவர் சி.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் உள்ளதாவது;

இலங்கையில் தமிழர்களுக்கெதிராக நடைபெற்ற உச்ச தாண்டவ இன அழிப்பு வேளையில் மக்களோடு மக்களாக மக்களின் துயறறிந்து மக்களுக்காக இலங்கையிலும் உலகின் பல நாடுகளுக்கும் எமது மக்களுக்காக உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்த பெருமை அடிகளாரையே சாரும். இலங்கையில் நடந்த பல போராடங்களில் அடிகளார் கலந்துகொண்டு மக்களுக்காகக் குரல் கொடுத்ததையும் உரத்து துணிவுடன் கருத்துரைத்ததையும் வாழ்க்கையில் மறக்க முடியாததொன்றாக எமது சமுதாய வரலாற்றில் பதியப்படும் -என்றுள்ளது. (ப)

# மரியசேவியரின் மறைவுக்கு இரங்கல்

கொழும்பு ஏப்.4

கலைகளின் வளர்ச்சிக்காக மட்டுமன்றி கலைஞர்களின் உயர்வுக்காகவும் அரும்பணியாற்றிய திருமறைக்கலாமன்றத்தின் நிறுவுநர் அருட் தந்தை மரியசேவியரின் மறைவுச் செய்தி கேட்டு வேதனையடைகின்றோம் என்று தேஜஸ்வராலயா கலைக்கூடத்தின் இயக்குநர் கலைஞானச் சுடர் ஸ்ரீமதி சுபாஷினி தெரிவித்துள்ளார்.

மரியசேவியர் அடிகளாரின் மறைவை முன்னிட்டு விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

# நீதி வெல்லும்வரை ஆண்டகை எம்முடன்

## உறவுகள் உருக்கம்

கிளிநொச்சி, ஏப்.4

மிகக் கொடூரமான போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்து நின்ற மக்களின் துயரங்களைத் துடைக்க மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அரும்பாடுபட்டார் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்

ஆயரின் இறப்பு குதித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

முள்ளிவாய்க்கால் உறை நிலைக்குச் சென்ற பின்னர், காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிய அயராது உழைத்தார்.

போராலும், சுனாமியாலும் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு இல்லம் அமைத்துக் கொடுத்தார்.

குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் மஹிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் சென்று மிகத் துணிச்சலோடு ஆதாரத்தோடு ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் காணாமல் போய் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியை வெளிப்படையாக சொன்ன ஒரு மனிதரும் இவரே.

ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் இழக்க முடியாத ஆளுமை கொண்ட உன்னத மனிதரை இழந்துவிட்டோம். அவர் உயிர் நீத்த பின்னரும் எமக்கான நீதி வெல்லும் வரை எம்முடனே கூட இருப்பார். (ப-6)

# ஜோசப் ஆண்டகை ஓர் சகாப்தம் - ஆனந்தசங்கரி இரங்கல்

பேராயர் இராயப்பு ஜோசப் ஓர் சகாப்தம் என கூறுவது மிகை ஆகாது. பல வழிகளிலும் அன்னாருக்கு அப்பெயர் பொருத்தமாகும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

ஆயரின் இறப்பு குறித்து அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

**சமயத் தொண்டோடு அவர் பங்கெடுத்த பணிகள் பல.** அவற்றுள் மிக பிரதானமானது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவர் ஆற்றிய தொண்டேயாகும். எவருக்கும் பயப்படாது தான் சரியென நினைத்ததை கடைசிவரை செய்து முடித்தவர் அவர். போர் இடம்பெற்ற காலப்பகுதியில் அன்னாரால் சுட்டிக்காட்டப்பட்ட சிறு தவறுகளைக்கூட அரசும், விடுதலைப் புலிகளும் திருத்திக்கொண்டனர். அச்செயல் அன்னாருக்கு இருசாராரும் கொடுத்த பெரும் மதிப்பினாலேயே ஆகும். இனப்பிரச்சினை சம்மந்தமாக சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒன்று சேர்க்க பெரும் முயற்சி எடுத்திருந்தார். அன்னார் உயிருடன் இருந்தவரை எம்மக்கள் மிக்க தைரியமாக செயற்பட்டார்கள் இன்று அவர்கள் அநாதைகளாக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மாதத்தின் இறுதியில் தொற்று அதிகரிக்கலாம்!

*மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை*

மன்னார், ஏப்.4

மன்னாரில் இந்தமாத இறுதியில் கொரோனாத் தொற்று அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அதனால் மக்கள் அவதான மாகச் செயற்படவேண்டும் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

மன்னார் மாவட்டத்தில் 2020 மற்றும் 2021 காலப்பகுதியில் மொத்தமாக 338 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுவரையில் 12 ஆயிரத்து 615 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வருடம் ஜனவரி மாதம் மேற்கொண்ட பரிசோதனையில் 4.4 வீதமும், பெப்ரவரி மாதம் 5.5 வீதமும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆனால் மார்ச் மாதம் இந்த விகிதாசாரம் 3.9 ஆகக் குறைந்திருந்தது. ஆனால் இந்த மாதம் தொற்றாளர்களின் வீதம் அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மாதம் தமிழ் சிங்கள புது வருடத்தை முன்னிட்டும் வேறு பல காரணங்களுக்காகவும், பொதுமக்கள் ஒன்று கூடுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதனால் மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் செயற்படவேண்டும்-என்றார். (ப-213)

# ஒட்டுசுட்டானில் ஒரு வாரமாக தண்ணீர் விநியோகம் இல்லை

*பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு*

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் ஒரு வார காலமாக தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை என புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ச.சத்தியசுதர்சன் தெரிவித்துள்ளார்.

சம்மளங்குளத்தின் நீர்த் தாங்கியில் இருந்து ஒட்டுசுட்டான், தட்டார்மலை, வித்தியாபுரம் மற்றும் சம்மளங்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 வரையான குடும்பங்களுக்கு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வார காலமாக குடிதண்ணீர் விநியோகம் இடம் பெறவில்லை. இது தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அதிகாரிகளிடமிருந்து நீர்ப்பம்பி பழுதடைந்துள்ளது. நீர்த் தொட்டிகள் துப்பரவு செய்கின்றோம் என்கின்ற மழுப்பலான பதில்களே கிடைக்கின்றன. தற்போது நிலவும் கடும் வெயிலால் தண்ணீரின் தேவை அதிகமுள்ள நிலையில் ஒரு வார காலமாக குடிதண்ணீரை விநியோகிக்கா மல் இருப்பது ஒரு பொறுப்பற்ற செயல் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-13)




# வாகன கூடாரத்தை கழற்றியதால் அனுமதிப்பத்திரம் பறிப்பு

**முல்லைத்தீவில் சம்பவம்**

முல்லைத்தீவு, ஏப். 5

கப் ரக வானத்தின் பின்புறம் கூடாரத்துடன் அனுமதி பெறப்பட்டுள்ளபோதும், குறித்த கூடாரம் கழற்றப்பட்டுள்ள நிலையில் வாகனம் பயணித்ததால், குறித்த வாகனத்தின் வரி அனுமதிப்பத்திரத்தை வாகன பரிசோதகர் பறித்து முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். அதனால் தனது வாழ்வாதார நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வாகன உரிமையாளரான மரத் தொழிலாளி தெரிவிக்கின்றார்.

கடந்த 26ஆம் திகதி தான் இந்த வாகனத்தில் முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் சென்றுகொண்டிருந்தபோது முல்லைத்தீவு மாவட்ட மோட்டார் போக்குவரத்து பரிசோதகர், வாகனத்தை பரிசோதித்து வாகனத்தின் வரிப்பத்திரத்தைப் பறித்து முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். இதனால் தனது தொழில் நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று வாகனத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். வாகனத்தின் உரிமையாளரான என்னை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர். ஆனால் நான் நீதிமன்றத்தை நாடவுள்ளேன். இந்த வழக்கு எதிர்வரும் 23ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாவட்டத்தில் எத்தனையோ வாகனங்கள் பயணிக்கின்றன. எனினும், எனது வாகனத்தை மாத்திரம் இவ்வாறு மறித்து சோதனைசெய்து அனுமதிப் பத்திரத்தை பறித்து வைத்திருப்பதால் எனது தொழில் நடவடிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருப்பிலும் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம்!



கொழும்பு, ஏப். 4

**வெலிகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையத் தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பருப்பில் 'அவ்லாரொக்சின்' இரசாயனம் அடங்கிய புற்றுநோய்க் காரணி கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

அரச இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை ஊடாக இது உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று வெலிகம பிராந்திய பிரதம பொது சுகாதார பரிசோதகர் எம்.எச்.நிஹால் தெரிவித்தார். குறித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையத்திலிருந்து காலாவதியான, நுகர்வுக்குப் பொருத்தமற்ற 3 ஆயிரத்து 150 கிலோ கிராம் பருப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

காலாவதியான யோக்கட் விற்பனை செய்யப்பட்டது என்று கிடைத்த முறைப்பாட்டை அடுத்து, இந்த விற்பனை நிலையத்தில் நடத்திய சோதனையின்போதே பருப்பிலும் குறித்த இரசாயனம் அடங்கியுள்ளமை தெரியவந்தது என்று தெரிவித்தார்.

தேங்காய் எண்ணெயில் அவ்லாரொக்சின் குறித்த இரசாயனம் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அது குறித்தான சோதனைகள் பரவலாக முன்னெடு க்கப்பட்டு வரும் நிலையில், பருப்பிலும் குறித்த இரசாயனம் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 07 . 1960

மறைவு 03 . 04 . 2021

### மேகராஜா யோகலிங்கம்

**(ஜெகன் இரும்பகம் உரிமையாளர்)**

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட மேகராஜா யோகலிங்கம் அவர்கள் நேற்று (03.04.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இந்துமதி அவர்களின் அன்புக் கணவரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
077 6478931, 077 6669 404

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### இராமசாமி திருச்செல்வம்

**(தலைவர்-ஊரெழு மனோன்மணி அம்மன் ஆலய பரிபாலனசபை)**

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஊரெழு கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட இராமசாமி திருச்செல்வம் (03.04.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி சிவக்கொழுந்து தம்பதியினரின் மகனும், கனடாவைச் சேர்ந்த சின்னத்துரை காலஞ்சென்ற நாகரட்ணம், தம்பதியினரின் மருமகனும், திருமதி சுசிலாதேவி (ராசு) அவர்களின் அன்புக் கணவரும், திருமதி மகாலட்சுமி வில்வராசா (கனடா), திரு.கணேசலிங்கம் (சின்னமணி-உரும்பிராய்), திரு.குகனேஸ்வரன் (குகன்-ஊரெழு), திரு.ஜெகதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் சகோதரனும், ரமேஸ் (ஜேர்மனி), சதீஸ் (லண்டன்), சங்கீதா (பிரான்ஸ்), கோபிகிருஸ்ணா (கனடா), விதுஷ்கரணி (கொழும்பு) ஆகியோரின் தந்தையும், அஸ்வினி, சுகிர்தா, சிவனேசன், அபிராமி ஆகியோரின் மாமனும், Joel, அஞ்சலினா, பிரியங்கா, கிஷோர், சிவாலன், ஜனார்த், சிவானி, ஏகன், ஆரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

ஊரெழு கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் (05.04.2021) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று ஊரெழு பொக்கணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஊரெழு கிழக்கு,**
**சுன்னாகம்.**
**021 224 0845**
**077 141 4213**

தகவல்:
குடும்பத்தினர்.

## பாதுகாப்புக்காக 12 ஆயிரம் பேர் களமிறக்கம்

கொழும்பு, ஏப். 4

ஈஸ்டரை முன்னிட்டு இலங்கையிலுள்ள தேவாலயங்களின் பாதுகாப்புக்காக 12 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் அன்று இலங்கையிலுள்ள தேவாலயங்களை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் காரணமாக ஈஸ்டர் வழிபாடுகளுக்கு பாதுகாப்பு வழங்க அரசு முடிவு செய்தது.

கடந்த ஒரு வாரமாக இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இன்றைய தினம் ஈஸ்டர் என்பதால் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)


## தேவை

யாழ்ப்பாணத்தில் அச்சுவேலியில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஆண் கணக்காளர் தேவை.

தொடர்பு:- 075 8388 236

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் கோப்பாய் வீதியில், மெயின் றோட்டுடன் 19 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை. (கோப்பாய் வீதி, கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமை)

தொடர்பு : 077 288 0152
077 623 4204
077 235 2656


## மரண அறிவித்தல்

### சிறிஸ்கந்தரட்ணம் சிவஞானசந்திரன் பேற்றிடினேஸ் (சனா)



**தோற்றம் 26.08.1975**

**மறைவு 02.04.2021**

யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானசந்திரன் பேற்றிடினேஸ் (சனா) 02.04.2021 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிறிஸ்கந்தரட்ணம் யூன் அலக்சிஸ் சுந்தரேசி தம்பதியரின் பாசமிகு மகனும் கௌந்தினியின் அன்புக் கணவரும், சியாம் சிவஞானரட்ணம், சிவஞானசுந்தரம் ரெக்சன், சங்கர், சிவஞானசெல்வன் சுமன், பிரியங்கா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அஜித்தின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.04.2021 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**ஸ்ரீமோட்டார் வேக்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சௌபாக்கியம் உரித்தாகட்டும்!

அரச மற்றும் தனியார் துறையினருக்கு SLT Mobitel இடமிருந்து மனம் கவரும் Samsung Galaxy M01s.

500 நிமிட அழைப்பு இலவசம் (எந்தவொரு வலையமைப்பிற்கும்)

1GB டேட்டா

மாதாந்த கட்டணம் ரூ.350/-

mPower Upahara

SLTMOBITEL


## கும்பாபிஷேக பெருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, கலையடி அருள்மிகு ஞானவேலாயுத சுவாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.10 மணிமுதல் 6.50 மணி வரை இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகாலை 4 மணிமுதல் பூசை வழிபாடுகள் இடம்பெறும் என்றும், 11 மணிமுதல் மஹா அபிஷேகம், திருக்கல்யாண உற்சவம் மற்றும் முருகப்பெருமான் வீதியுலா என்பவை இடம்பெறும் என்றும் ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ப)

## ஸ்கூட்டரில் இருந்த பணம் திருட்டு

கொடிகாமம், ஏப்.4

மரணச் சடங்கில் கலந்து கொண்ட ஒருவரின் ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளின் ஆசனத்தின் கீழ் உள்ள பாதுகாப்பு பெட்டியில் வைக்கப்பட்டிருந்த பணம் திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தென்மராட்சி மீசாலை கிழக்கில் நடந்துள்ளது. குறித்த பாதுகாப்பு பெட்டி போலித் திறப்பால் திறக்கப்பட்டு அதற்குள் இருந்த 3ஆயிரத்து 500 ரூபா பணம் இரண்டு சிம் அட்டைகள் மற்றும் ஏ.ரி.எம் அட்டை என்பவை திருடப்பட்டுள்ளன. எனினும் கைத்தொலைபேசி உட்பட ஏனைய பொருள்கள் அப்படியே திரும்ப வைக்கப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-159)

## கொரோனாவை விரட்ட விசேட பூசை வழிபாடு

கொடிகாமம், ஏப்.3

இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும், அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இறை ஆசி வேண்டி நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு தென்மராட்சி மிருசுவில் வடக்கு மன்னன் குருச்சி நெல்லிக் கிணத்தடி தான்தோன்றி கந்தசுவாமி கோயிலில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. இந்த வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ வெ.தில்லையம்பலக் குருக்களின் அருளாசி உரையும், வேதபாராணயமும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)





இப்புத்தாண்டில், நேர்த்தியின் பிரதிபலிப்பு
உங்கள் இல்லத்தில் செழித்தோங்கட்டும்.

இப்புத்தாண்டில் 30% கழிவுடன் உங்கள் வீட்டின் களிப்பை இரட்டிப்பாக்குங்கள். Rocell டைல்ஸ், குளியலறை மற்றும் உதிரிப்பாகங்கள். நாடு முழுவதிலுமுள்ள Rocell காட்சியறைகள் மற்றும் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

Rocell என்றும் இனிமை

www.rocell.com | அழையுங்கள் 076 6 22 33 44 | காட்சியறைகள் வாரத்தின் 7 நாட்களும் திறந்திருக்கும்.

TILES | BATHWARE | ACCESSORIES


# மன்னார் கடற்கரையில் 33 கிலோ கஞ்சா மீட்பு!

கொழும்பு, ஏப். 4

மன்னார், வன்காலைபாடு கடற்கரைப் பகுதியை அண்மித்த பகுதியில் 33 கிலோ 415 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கடந்த 30ஆம் திகதி சந்தேகத்துக்கிடமான [illegible] டதை அடுத்து, [illegible] படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 15 பொதிகளாக கஞ்சா மீட்கப் [illegible]னரின் ரோந்து நடவ[illegible] காரணமாக கடத்தல்காரர்கள் கேரளக் கஞ்சாவை படகில் மறைத்து வைத்திருந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா சட்ட நடவடிக்கைக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. (கு-319)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஒன்றரை மாதங்களில் 128 பேர் கைது

கொழும்பு, ஏப். 4

வடக்கு, கிழக்கு, வடமேற்கு, வடமத்திய மற்றும் தென்கிழக்கு கடற்படைக் கட்டளை மையங்களைச் சேர்ந்த கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில் கடந்த ஒன்றரை மாதங்களில் 128 பேர் கைது செய்யப்பட்டனர். 41 படகுகளும் கைப்பற்றப்பட்டுள் ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி முதல் கடந்த 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீன்பிடி அனுமதிப் பத்திரங்கள் இல்லாமல் மீன் பிடித்தல், சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடித்தல், சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட சுறா மற்றும் அவற்றின் துடுப்புகளை வைத்திருத்தல், தடைசெய்யப்பட்ட பகுதிகளில் மீன்பிடித்தல் மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட நண்டுகளை வைத்திருத்தல் போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-319)

## துவாய்க்குள் போதைப்பொருள்

### சந்தேகநபரான பெண் கைது

கொழும்பு, ஏப். 4

துவாய்க்குள் இருந்து போதைப்பொருள் மற்றும் புகையிலை என்பலை சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதியைப் பார்வையிட வந்த பெண் ஒருவரைசோதனைக்கு உட்படுத்தியபோதே இவை மீட்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். (ஒ)

# தனியான தமிழ்க் கல்வி அமைச்சை மீளவும் உருவாக்க வேண்டும்

## முன்னாள் எம்.பி. சென்னன் கோரிக்கை

பதுளை, ஏப். 4

**ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில்லால் தனியான தமிழ்க் கல்வி அமைச்சு நீக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. மீண்டும் தனியான தமிழ்க் கல்வி அமைச்சு உருவாக்கப்பட வேண்டும். அதுவரை நாம் ஜனநாயகப் போராட்டங்களில் ஈடுபடுவோம். இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உதவிச் செயலரும், பதுளை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சென்னன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் முயற்சியாலேயே ஊவா மாகாணத்துக்கு தனியான தமிழ்க் கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது. ஆனால் தற்போது ஆளுநர் யாருடனும் கலந்துரையாடல் நடத்தாமல் தனியான தமிழ்க் கல்வி அமைச்சை இல்லாது செய்து வர்த்தமானி வெளியிட்டுள்ளார்.

இந்தச் செயற்பாடானது மாகாண தமிழ் மக்களுக்கும், கல்விசார் சமூகத்தினருக்கும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தப் போகின்றது.

ஆளுநர் மேற்கொண்டுள்ள இந்த முடிவு மீள்பரிசீலனை செய்யப்படல் வேண்டும். தனியான தமிழ்க் கல்வி அமைச்சை நீக்கியமை குறித்த வர்த்தமானியை மீளப்பெற்றுக் கொள்ளல் வேண்டும். தவறின், இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக ஜனநாயக வழிமுறையில் பல்வேறு போராட்டங்கள் இடம்பெறவே செய்யும்.

ஊவா ஆளுநரும் சிறுபான்மை சமூகத்தவராக இருக்கும் நிலையில், தனியான தமிழ்க் கல்வி அமைச்சு இல்லாமல் செய்யப்பட்டதன் பின்னர் ஏற்படும் பாதிப்புக்களை உணர்ந்து, தனியான தமிழ்க்கல்வி அமைச்சை மீண்டும் ஊவா மாகாணத்தில் ஏற்படுத்த ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (ஒ)

# கச்சான் செய்கையை மேம்படுத்த மேலும் 100 பேருக்கு நிதி உதவி

## விவசாய அமைச்சர் உறுதி



மட்டக்களப்பு, ஏப். 4

வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் கச்சான் செய்கையை மேம்படுத்த மேலும் நூறு பேருக்கு நிதி உதவி வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்தானந்தா அளுத்கமகே தெரிவித்தார். வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் கதிரவெளியில் கச்சான் பதனிடும் நிலையம் மற்றும் ஒன்றுகூடல் மண்டபம் என்பவற்றைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கச்சான் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு வியாபார நிலையங்களை தற்போது நிறுவியுள்ளோம். அதனால் உங்கள் உற்பத்திகளை அரசே பெற்றுக்கொள்ளும். என்னிடம் நீங்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக மேலும் நூறு பேருக்கு கச்சான் செய்கைக்கான நிதி உதவி வழங்கப்படும். அத்தோடு நூறு விவசாயிகளுக்கு நீர் பாய்ச்சும் இயந்திரங்களும் வழங்கப்படும் என்றார். (வ-150)



கொழும்பு ராஜகிரிய ஸ்ரீ ஆதிகாமாட்சி மஹா காளியம்மன் கோயில் திருவிழாவின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் வரவேற்கப்பட்டார். (ற)

## கார் - மோ.சைக்கிள் விபத்தில் 2பேர் சாவு

கொழும்பு, ஏப். 4

காரை முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள் காருடனும் அருகிலிருந்த மின்கம்பத்துடனும் மோதியது. மோட்டார் சைக்கிளில் பயணித்த 25 மற்றும் 27 வயதுகளை உடைய இரண்டு இளைஞர்கள் இந்த விபத்தில் உயிரிழந்தனர். விபத்துச் சம்பவம் பன்னிப்பிட்டி பத்தரமுல்ல வீதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 1.10 மணியளவில் நடைபெற்றுள்ளது. (ஒ.இ)

## குளத்தில் மூழ்கி மாணவன் சாவு!

கொழும்பு, ஏப். 4

பாடசாலை நண்பர்களுடன் குளத்தில் குளிக்கச் சென்ற மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான். தரம் 10 இல் கல்வி கற்கும் உ.அபினேசன் (வயது 15) என்ற மாணவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளான் என இராகலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இராகலை மந்திரிதென்ன பகுதியிலுள்ள குளத்தில் குளிப்பதற்கு சிறுவனும் அவனது இரண்டு நண்பர்களும் நேற்றுமுன்தினம் மதியம் சென்றுள்ளனர். குளித்துக் கொண்டிருக்கும்போது அபினேசன் நீரில் மூழ்கியுள்ளான். அவரை மீட்க முயன்ற மற்றைய நண்பன் சேற்றில் சிக்கியுள்ளான். மூன்றாவது நபர் இதனை அந்தப் பகுதி மக்களுக்கு சம்பவம் குறித்து தெரியப்படுத்தினார். அவர்கள் குளத்தில் நீண்ட தேடுதல் நடத்தினர். காப்பாற்ற முயன்ற சிறுவனை மீட்ட மக்கள் அவனை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். நீண்ட சிகிச்சையின் பின்னர் அவன் காப்பாற்றப்பட்டுள்ளான். நீரில் மூழ்கிய அபினேசனின் சடலம் நீண்ட தேடுதலின் பின்னர் மீட்கப்பட்டது. (ஒ.இ)

## 17 கிலோ தங்கத்துடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஏப். 4

200 மில்லியன் ரூபா பெறுமதியான 17 கிலோ தங்கத்துடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ,இ)

# பிம்ஸ்டெக்கின் தலைவராக அமைச்சர் தினேஷ் தெரிவு

கொழும்பு, ஏப்.4

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சியின் (பிம்ஸ்டெக்) அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தின் 17ஆவது அமர்வுக்கான தலைவராக வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன்படி, கடந்த முதலாம் திகதி கொழும்பில் நடைபெற்ற மாநாட்டுக்கு தலைமை தாங்கிய அமைச்சர் குணவர்தன, பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் சாசனம் விரைவாக இறுதி செய்யப்படல் வேண்டும் எனத் தெரிவித்தார்.



சாசனத்தை நிறைவு செய்ததன் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயகக் கொள்கைகளுக்கு உறுதியளிப்பதற்கும், நாடாளுமன்ற நடைமுறை குறித்த கருத்துக்களையும் தகவல்களையும் பரிமாறிக் கொள்வதற்கும் அவர்களுக்கு அதிகமான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கூட்டத்தின் போது, பிம்ஸ்டெக்கின் உறுப்பு நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியான்மர், நேபாளம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளும் இலங்கையுடன் மெய்நிகர் ரீதியாக இணைந்திருந்தன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவருக்கு உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.4

வலி. கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 31 மாணவர்களுக்கு கோப்பாய் பிரதேச தேசோதய சபையின் அனுசரணையில் ரூபா 5 ஆயிரம் பெறுமதியான உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு வலி. கிழக்கு உதவிப்பிரதேச செயலாளர் திருமதி என் .ராதிகா தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது.

நிகழ்வில் ஒவ்வொரு புலமைச்சுடர் மாணவருக்கும் 2 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு தொகை வைப்பிலிடப்பட்டு, வங்கிக் கணக்கு புத்தகங்களுடன், 3 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ச-50)

# விண்ணப்பம் கோரல்

கொழும்பு, ஏப்.4

கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றுநிருப இலக்கம் 28 / 2016 இற்கு அமைய பட்டதாரி அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்வி பாடநெறியைத் தொடர்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அந்த வகையில் 2021ஆம் மற்றும் 2022 ஆம் ஆண்டுக்காக ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர் எனவும் ஆசிரியர் கல்வி பாடநெறியை இதுவரை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்கள் மேற்படி சுற்றிக்கைக்கு இணங்க எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் 'கல்விப்பணிப்பாளர், ஆசிரிய கல்வி நிருவாகம். கல்வி அமைச்சு, இசுருபாய, பத்திரமுல்ல' எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பபடிவங்களை www.moe.gov.lk எனும் இணையதளம் ஊடாக பெறலாம் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே. கபில பெரேரா அறிவித்துள்ளார். (ச-50)




# காக்கைதீவு இறங்குதுறையில் கட்டடம் அமைப்பதில் தாமதம்

## விரைவுபடுத்த வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஏப்.4

வீதி அபிவிருத்திக்காக இடிக்கப்பட்ட வலி.தென்மேற்கு பிரதேசத்தின் காக்கைதீவு இறங்குதுறையில் மீனவர்கள் பயன்படுத்தி இரண்டு கட்டடங்களையும் மீண்டும் அமைப்பதற்கு நிதி வழங்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் கட்டடங்களை அமைப்பதில் பிரதேச சபை காலம் கடத்தி வருகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதுதொடர்பாக விசனம் தெரிவித்துள்ள மீனவர்களும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபை உறுப்பினர்களும் மீன்பிடி உபகரணங்களின் பாதுகாப்புக் கருதியும் மீனவர்களின் நலன் கருதியும் இரண்டு கட்டடங்களையும் விரைவாக அமைத்து தரவேண்டும் என்று தவிசாளரைக் கோரியுள்ளனர்.

ஓட்டுமடம் சந்தியிலிருந்து கல்லுண்டாய் வீதி ஊடாக பொன்னாலைக்குச் செல்லும் வீதி காப்பெற் வீதியாக மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது வீதியின் இருபுறமும் அகலிப்புப் பணியில் ஈடுபட்டுவரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை வலி.தென்மேற்கு பிரதேசத்தின் காக்கைதீவு இறங்குதுறையில் அமைக்கப்பட்டிருந்த மீனவர்கள் பயன்படுத்திய ஓய்வு மண்டபத்தையும் இயந்திரங்கள் வைக்கப்படும் மண்டபத்தையும் அகற்றியதுடன் இரண்டு மண்டபங்களையும் மீண்டும் அமைப்பதற்கு பிரதேச சபைக்கு 46 லட்சம் ரூபா நிதி வழங்கியிருந்தது.

இந்தப் பணம் வழங்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் கட்டடங்கள் அமைக்கப்படவில்லை.

வள்ளங்களின் வெளியிணைப்பு இயந்திரங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு மண்டபம் இல்லாதமையாலும், ஓய்வு எடுப்பதற்கு வசதி இல்லாதமையாலும் தாம் பாதிக்கப்படுகிறோம் என்று மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இரண்டு மண்டபங்களையும் விரைவாக அமைத்துத் தரவேண்டும் என்று அவர்கள் தவிசாளரைக் கோரியுள்ளனர்.

கடலோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதி கிடைக்காதமையாலேயே மண்டபங்கள் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தவிசாளர் தெரிவித்துள்ளார். (ப-115)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நடராசா சிவகாமிப்பிள்ளை



**தோற்றம்**
•
20
•
09
•
1931



**மறைவு**
•
03
•
04
•
2021

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கை (மதவடி ஒழுங்கை) வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவகாமிப்பிள்ளை (பருத்துறை மாமி) அவர்கள் நேற்று (03.04.2021) சனிக்கிழமை சிவபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நடராசா (C.T.B நடத்துனர்) அவர்களின் மனைவியும், கணபதிப்பிள்ளை தங்கமுத்துவின் மருமகளும், நடராசா தண்டயல் தங்க ரத்தினத்தின் மகளும் இராசரத்தினம், காலஞ் சென்ற கந்தசாமி, பாலகிருஸ்ணன் ஆகியோரின் சகோதரியும், புஷ்பராசா, கலா, விஜயலட்சுமி, வளர்மதி, பகீரதன், ஸ்ரீதரன் ஆகியோரின் பாசமிகு தாயும், நிரஞ்சினிதேவி, சுபாசினி, கார்த்திகா, லோகராசா, யோகலிங்கம் ஆகியோரின் மாமி யாரும், வினிஸ்ரிபன், வினிஸ்ரிகா, விமல்ராஜ், விதுஷன், டிலான், டிலூஜன், வித்தியா, பிரகலதா, மிலான்சன், பிவோரினா, ஸ்ரீநிக்கா, ஸ்ரீநிஷான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகள் யோகலிங்கம்**
**வளர்மதி (மதி)**

**தொடர்பு:**
**077 329 7364**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள்

**மேடம்:** அதிர்ஷ்டத்தை விடவும் உழைப்பு உங்களுக்கு அதிகம் உதவும். ஆன்மிக சிந்தனை அமைதி தரும். புதிய வருமானம் ஒன்று வரும். பேச்சில் மிகவும் கவனமாக இருங்கள்.

**இடபம்:** அலுவலக விஷயங்களில் இன்று வெற்றி காண்பீர்கள். நீண்ட நாள்களாக இருந்த சருமப் பிரச்னைகள் முடிவுக்கு வரும். வாழ்க்கைத்துணையிடம் இருந்த பிரச்னைகள் தீரும்.

**மிதுனம்:** செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். பூச்சிக்கடி ஏற்படலாம். நிறையீப் பேசிக் கவர்வீர்கள். முதலீடுகள் செய்வீர்கள். முகராசியால் வெல்வீர்கள். ரகசியங்களைக் காக்க வேண்டும்.

**கடகம்:** கவனமான செயல்பாடு காரணமாக வெற்றி பெறுவீர்கள். எதிலும் தடை, தாமதம் இருந்தாலும் இறுதி வெற்றி உங்களுக்கே. பணிச்சுமையை மிகுந்த திறமையுடன் சமாளிப்பீர்கள்.

**சிம்மம்:** உயிர் நண்பர்களுக்கு உங்கள் உழைப்பால் நன்மை செய்வீர்கள். புதிய உத்வேகம் உருவாகி செயல்பாடுகளில் முன்னேறுவீர்கள். வாழ்க்கைத்துணைக்கு பதவி, சம்பளம் உயரும்.

**கன்னி:** தனிப்பட்ட சாமர்த்தியம் காரணமாக வெற்றியை எட்டுவீர்கள். பேச்சைக் குறைத்து திறமையை அதிகரித்து வெற்றி அடைவீர்கள். இன்று நன்மை கூடுதலாகக் கிடைக்கும்..

**துலாம்:** தாயாருக்காக செய்யும் முயற்சிகளில் தாமதம் ஏற்படக்கூடும். பிள்ளைகளுக்கு இருந்த பிரச்னைகள் தீர்ந்து நிம்மதி வரும். நீண்ட இடைவெளிக்குப் பிறகு உறவினர் ஒருவர் நன்மை செய்வார்.

**விருச்சிகம்:** சுமை தீர்ந்து நிம்மதிப் பெருமூச்சு வரும். இன உணர்வு வரும். தாயாருக்கு உங்களால் நன்மை உண்டு. வாகனம் வாங்குவீர்கள். நுட்பமான யோசனையால் உயர்வுக்கு வழி கிடைக்கும்.

**தனுசு:** தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தி பிரச்னையில் சிக்க வேண்டாம். தளர்ச்சி நீங்கி வளர்ச்சி கூடும். குடும்பத்தில் முன்னேற்றம் உண்டு. சிறிய பிரச்னைகள் இருக்கும்.

**மகரம்:** சிரமங்களுக்கு இடையே சிறிய நம்பிக்கை பிறக்கும். தவறுகளைத் திருத்திக் கொள்வதன் மூலம் முன்னேறுவீர்கள். மெல்ல உழைத்து மெதுவாகத்தான் முன்னேற முடியும்.

**கும்பம்:** பிள்ளைகளுக்கு உங்களின் உதவியும் ஆதரவும் உண்டு. பணிவுடன் வெல்வீர்கள். சோம்பலைத் தவிர்ப்பது அவசியம். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். கடன் கிடைக்கும்.

**மீனம்:** வரவும், செலவும் உண்டு. முன்னேற்றம் நிதானமாக இருக்கும். மற்றவர்களுக்கு மனக்காயங்களை ஏற்படுத்த வேண்டாம். தன்னம்பிக்கையுடன் இருக்க முயலுங்கள்.

# 3 லட்சம் பேரின் வேலையை பறித்த கொரோனா வைரஸ்

### இலங்கை ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களின் நிர்க்கதி நிலைமை

**கொழும்பு, ஏப். 4**

**கொரோனாத் தொற்றுக் காரணமாக இலங்கையிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றிய 3 லட்சம் ஊழியர்கள் வேலையிழந்துள்ளனர். அத்துடன் பணியாற்றுபவர்களின் சராசரிச் சம்பளம் 40 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுகதந்திர வர்த்தக வலய மற்றும் பொதுச் சேவைகள் தொழிலாளர் சங்கத்தின் செயலர் அன்ரன் மார்க்கஸ் தெரிவித்தார்.**

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழிலாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் அரசு, உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் ஆகியவை இணைந்து முத்தரப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தன. ஆனால் உற்பத்தியாளர்களின் நிர்வாகப் பிரிவினர் அதற்குப் புறம்பாகவே செயற்படுகின்றனர். தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டிய தொழிற்சாலை நிர்வாகப் பிரிவினர் அதனை மறுதலிக்கும் வகையில் செயலாற்றுகின்றனர். கொரோனாப் பரவலைத் தடுக்க இருதரப்புக் குழுவை நியமித்தல், மேம்படுத்தப்பட்ட நிபந்தனைகளுக்காக கூட்டாகச் செயற்பட்ட தொழிலாளர்களுக்கு எதிரான பழிவாங்கல்களை நிறுத்தல், தொழிலாளர்களின் வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குதல் என்பவை தொழிற்சாலை உரிமையாளர்களின் தவிர்க்கப்பட்ட நிபந்தனைகளாக உள்ளன. இந்தப் பிரச்சினைகள் காரணமாக உற்பத்தியாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் உண்மையான ஒத்துழைப்பு இல்லாத நிலையில் இலங்கையின் நிலைமை மோசமடைந்து செல்கின்றது, என்றார். (ஒ.இ)

# சைனோஃபார்ம் ஊசிக்கு வலுக்கிறது எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 4

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள சைனோஃபார்ம் தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று இலங்கை மருத்துவ சபையும் கோரியுள்ளது.

மருத்துவ நிபுணர்கள், மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் எதிர்க்கட்சியினர் சைனோஃபார்ம் தடுப்பூசியைப் பயன்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தியிருந்த நிலையில் இலங்கை மருத்துவ சபையும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

மருத்துவ சபை சுகாதார அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சைனோஃபார்ம் உற்பத்தியாளர்கள் அந்தத் தடுப்பூசி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு முழுமையான தகவல்களை வழங்கவில்லை. அந்தத் தடுப்பூசியின் பாதுகாப்பு, செயற்றிறன் மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் குறித்து ஆராயவேண்டும். மேலும் உலக சுகாதார நிறுவனமும் இன்னமும் அனுமதி வழங்கவில்லை. தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றால் மாத்திரமே இலங்கையர்களுக்கு சைனோஃபார்ம் தடுப்பூசியை வழங்கவேண்டும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.இ)

# ஊவாவில் தமிழ் கல்வி அமைச்சை மீளப் பெற்றுக்கொள்ளும் வழி தெரியும்

### இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 4

ஊவா மாகாணத்துக்கு இதுவரை காலமும் தனியாக இருந்து வந்த தமிழ் கல்வி அமைச்சு நீக்கப்பட்டுள்ள நிலையில் அதனை மீளவும் எப்படிப் பெற்றுக் கொள்வது என்று எமக்குத் தெரியும். மாகாணசபைத் தேர்தல் முடிந்த பின்னர் அதனைப் பார்க்கலாம். இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். கொட்டகலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசின் காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விவகாரத்தில் நாள்கள் கடத்தப்பட்டனவே தவிர தீர்வு காணப்படவில்லை. ஆனால் நாங்கள் தோட்டக் கம்பனிகளுக்கு எதிராக நீதிமன்றம் வரை சென்றுள்ளோம். நாடாளுமன்றத்தில் சட்டத்தை இயற்றி தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்கலாமே?, உங்களிடம் தான் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளதே என்று இப்போது சிலர் சொல்கின்றார்கள். அவர்கள் தொழிலாளர்களை உசுப்பேத்துகின்றார்கள். எல்லாவற்றையும் எடுத்த எடுப்பில் செய்துவிட முடியாது. சம்பள அதிகரிப்புத் தொடர்பில் சம்பள நிர்ணய சபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. கம்பனிகள் நீதிமன்றம் சென்றுள்ளன. 5ஆம் திகதி (நாளை) தீர்ப்பு வரும்.

தொழிலாளர்களுக்கு சாதகமாக அந்தத் தீர்ப்பு அமையாவிட்டால், நிச்சயமாக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றி அதனைச் செய்விப்போம்- என்றார். (ஒ.இ)

# சஜித்துடன் மோதுவதற்கு டயானாவை தூண்டும் ரணில்

கொழும்பு, ஏப். 4

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகேவை, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கு எதிராகத் தூண்டி விடுவதன் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே, 20ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். இதனையடுத்து அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு சஜித் பிரேமதாச நடவடிக்கை எடுத்திருந்தார். இதனை எதிர்த்து டயானா கமகே, சஜித் பிரேமதாசவுக்கு எழுதிய காரசாரமான கடிதம் ஊடகங்களில் வெளியாகியிருந்தது. இந்தக் கடிதத்தை பார்வையிட்ட, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, டயானா கமகேவை அழைத்துப் பாராட்டியுள்ளார் எனக் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Abans

12 நாட்கள்

விசேட புத்தாண்டு சேல்

முந்துங்கள் இன்னும் 9 நாட்கள்

இப்போது மேலும் பிரம்மாண்ட விலை குறைப்பு

SCAN TO BUY ONLINE

Abans.com

48 கடனட்டைகளுக்கு மாதங்கள் வரை வட்டி இல்லை

HNB Credit cards | Sampath Cards | Commercial Bank | Nations Trust Bank | American Express | HSBC | People's Bank | BOC | NDB bank | PAN ASIA BANK | SEYLAN | DFCC BANK | Hatton National

2021 ஏப்ரல் 12 ஆம் திகதிவரை

Abans UHD தொலைக்காட்சி

55" — 3 வருட இலவச உத்தரவாதம் — ABTV55NR316N ரு. 149,999 — COUNT DOWN விலை ரு. 124,999 — ரு. 25,000 தள்ளுபடி

65" — 3 வருட இலவச உத்தரவாதம் — ABTV65NR316N ரு. 199,999 — COUNT DOWN விலை ரு. 174,999 — ரு. 25,000 தள்ளுபடி

Authorized Reseller

iPhone SE — 64GB ரு. 132,999 இலிருந்து — COUNT DOWN விலை ரு. 109,999 இலிருந்து — ரு. 23,000 வரை தள்ளுபடி

iPhone 12 Mini — 20W charger adapter FREE — 64GB, 128GB & 256GB ரு. 234,999 இலிருந்து — COUNT DOWN விலை ரு. 189,999 இலிருந்து — ரு. 52,000 வரை தள்ளுபடி

JBL CHARGE 4 — ரு. 51,999 — COUNT DOWN விலை ரு. 44,199 — ரு. 7,800 தள்ளுபடி

LG Wi-Fi Inverter வளிச்சீராக்கி — 2 YEAR WARRANTY + 3 FREE SERVICES — ரு. 144,990 இலிருந்து — COUNT DOWN விலை ரு. 124,990 இலிருந்து — ரு. 35,000 வரை தள்ளுபடி

Haier Non-Inverter வளிச்சீராக்கி — 1 YEAR WARRANTY + 3 FREE SERVICES — ரு. 104,990 இலிருந்து — COUNT DOWN விலை ரு. 89,990 இலிருந்து — ரு. 18,000 வரை தள்ளுபடி

LG TOP LOADER INVERTER சலவை இயந்திரம்

8KG — T2108VSPM2 ரு. 79,990 — COUNT DOWN விலை ரு. 62,990 — ரு. 17,000 தள்ளுபடி

12KG — T2312VSAM ரு. 99,990 — COUNT DOWN விலை ரு. 79,990 — ரு. 20,000 தள்ளுபடி

குளிர்சாதனப்பெட்டிகள்

LG 190L — GL-B205ALLB ரு. 64,990 — COUNT DOWN விலை ரு. 47,990 — ரு. 17,000 தள்ளுபடி

LG 258L — GL-K272SPTL ரு. 99,990 — COUNT DOWN விலை ரு. 86,990 — ரு. 13,000 தள்ளுபடி

Haier 5-IN-1 CONVERTIBLE 258L — HRRF2782BS ரு. 82,990 — COUNT DOWN விலை ரு. 66,990 — ரு. 16,000 தள்ளுபடி

ELBA TALENT FOR COOKING — ப்ரீ ஸ்டாண்டிங் குக்கர் — N55K204 ரு. 89,990 — COUNT DOWN விலை ரு. 72,990 — ரு. 17,000 தள்ளுபடி

ELBA TALENT FOR COOKING — HOB - மிரர் கிளாஸ் — E41-452DMR ரு. 99,990 — COUNT DOWN விலை ரு. 79,990 — ரு. 20,000 தள்ளுபடி

LG மைக்ரோவேவ் அவன் — MH7636GIS ரு. 42,990 — COUNT DOWN விலை ரு. 32,990 — ரு. 10,000 தள்ளுபடி

Abans infrared கேஸ் குக்கர் — AB-LG23001 ரு. 15,990 — COUNT DOWN விலை ரு. 13,990 — ரு. 2,000 தள்ளுபடி — 35% வரை எரிவாயுவை சேமிக்கிறது. — துல்லியக்கமாக எரியும்

Jaipan மிக்ஷர் கிரைண்டர்களின் — FRUTTICA ரு. 10,990 — COUNT DOWN விலை ரு. 8,990 — ரு. 2,000 தள்ளுபடி


நிபந்தனைகள் உண்டு. இங்கு புகைப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள உற்பத்திகள் நிஜத்தில் வேறுபடலாம். முன்னறிவித்தலின்றி விலைகள் மற்றும் ஏனைய சலுகைகள் மாறுபடலாம். இலவச உற்பத்திகள் சாதாரண விலையில் ரொக்க பணத்திற்கு மாத்திரமே வழங்கப்படும். இலவச பரிசுகள் மற்றும் நீடித்த உத்தரவாதம் தெரிவுசெய்யப்பட்ட உற்பத்திகளுக்கு மாத்திரமே வழங்கப்படும்.

எதிர்காலத்தில் உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கும்.

0115 999 000 — நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் ஸைட் காட்சியறைகளில் பெற்றிடுங்கள் — Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு:15.02.1949 இறப்பு: 02.04.2021

### ஆறுமுகம் தெய்வேந்திரம்

கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தெய்வேந்திரம் நேற்றுமுன்தினம் (02.04.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மனோகரன், கந்தசாமி மற்றும் சிவசாமி மற்றும் கனடாவில் வசிப்பவரான சிவலிங்கம் ஆகியோரின் சகோதரரும், மதிவதனி, நந்தினி, உதயகுமார் (உதயன் கேபிள் விஷன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேதீஸ்வரநாதன், ரமேஷ், வனிதா ஆகியோரின் மாமனும், பரன், கேதாஜினி, பிரவீனா, ஜனார்த்தன், டினேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உதயன் (மகன்)
077 765 1661
077 765 3960

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 03 . 1936

மறைவு 28 . 03 . 2021

### நாகலிங்கம் தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கொழும்பை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தனபாலசிங்கம் 28.03.2021 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா புஷ்பா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணியின் (UK) பாசமிகு கணவரும், ரவி (UK), கீதா (சட்டத்தரணி - UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புவனராணி (ஓய்வுபெற்ற வைத்தியர் - UK), இந்திராணி, ஜெயராஜசிங்கம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), மற்றும் காலஞ்சென்ற பாலேந்திர சிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அன்றூ (ஓய்வுபெற்ற வடபிராந்திய போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்), மற்றும் ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், டிலாணி (நெதர்லாந்து), அஜித் (பிரதேச செயலகம் சாவகச்சேரி), அனுஷியா (மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் ஆசை மாமனா ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி. அ.இந்திராணி (சகோதரி)
திரு. நா.ஜெயராஜசிங்கம் (சகோதரன்)
பேறாமக்கள் (டிலாணி,அஜித்,அனுஷியா)
104, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை

சமையலுக்கும், பூட் சிற்றிக்கும் ஆட்கள் தேவை.

தொடர்பு: 077 073 9853

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### சரவணபவான் அகிலன்



தோற்றம் 16 . 12 . 1976

மறைவு 16 . 03 . 2020

நீ மறைந்தாலும் உன் நினைவுகள் எம்மை விட்டு மறையாது.

நாமகள் ஒழுங்கை
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

சகோதரன்
சுப்பிரமணியம் மணிவண்ணன்
(நோர்வே)

## காட்சி அறை (SHOW ROOM)

யாழ்ப்பாண நகர மத்தியில் 1000 சதுர அடி கொண்ட (கீழ்மாடி) காட்சியறை (மின்சார உபகரணங்கள்) ஒரு நிறுவனத்திற்கு தேவைப் படுகின்றது. கஸ்தூரியார் வீதி, ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி மற்றும் காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி விரும்பத்தக்கது.

## களஞ்சிய சாலை (STORES)

நகரத்தின் 1 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்தில் 2000 சதுர அடியுடன் வீடு ஒரு நிறுவனத்திற்கு களஞ்சியசாலையாக (மின்சார உபகரணங்கள்) பாவிப்பதற்கு வாகன தரிப்பிடத்துடன் உடனடியாக தேவை.

**077 440 1216**

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 26.12.1944



இறப்பு 02.04.2021

DMI COMPUTER EDUCATION இன்
முகாமைத்துவப் பணிப்பாளர் இராஜசிங்கம் நிரோசன்
அவர்களின் தந்தையார்

### K.T இராஜசிங்கம்

(ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

DMI
DMI COMPUTER EDUCATION
ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,

## மரண அறிவித்தல்



அருட்சகோதரி

### மேரி மெற்றில்டா வைத்திலிங்கம் தி.கு

சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் தொல்புரம்- யாழ்ப்பாணத்தை வதிவிடமாக கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி மெற்றில்டா வைத்திலிங்கம் தி.கு (02.04.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிப் பயணத் திருப்பலி (05.04.2021) திங்கட்கிழமை மு.ப. 08.00 மணிக்கு [illegible] திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி.

## வேலையாள் தேவை

e-WIS தொலைபேசி நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதி ஆண் தேவை.

தொடர்பு: 077 071 9104

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1987 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரத்தில் பிறந்த மணமகனுக்கு அரச உத்தியோகத்தில் உள்ள மணமகள் தேவை.

தொடர்புக்கு: **077 977 3676**

## மணமக்கள் தேவை

லண்டனிலிருந்து வருகை தந்துள்ள 1983 பிறந்த மணமகனுக்கும், 1996 பிரான்ஸ், சூரியன், செவ்வாய் மணமகனுக்கும் பொருத்த மான மணமகள் தேவை. 1996, 1991, 1988, 1998 பிறந்த மணமகன்களுக்கு அரச உத்தியோக மணமகள் தேவை.

தொடர்பு:- 0776040373/0775342225

## பணிப்பெண் தேவை

கொழும்பு தெகிவளை சிறிய குடும்பமொன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து சமையலும் வீட்டு வேலைகளும் செய்யக்கூடிய 40-55 வயதுக்குட்பட்ட பணிப்பெண்ணொருவர் தேவை.
தற்போது யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம்.

தொடர்பு:- 071 450 9450

## விற்பனைக்கு

யேசி இன பால்மாடும், 4 மாத பசுக்கன்றும், முட்டையிட்டுக் கொண்டிருக்கின்ற ஊர்கோழிகளும் உடனடி விற்பனைக்கு.

தொடர்புக்கு:
077 066 6473, 076 759 5863
யாழ் நகரம்.

## முதலீட்டாளர்கள் தேவை

வடகிழக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் தனியார் நிறுவனமொன்றுக்கு முதலீட்டாளர்கள் / மொத்த விநியோகஸ்தர்கள் தேவை.

தொடர்புக்கு: **077 844 4518**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

AAA Gold Center

**076 568 4346**

## பெயர் மாற்றம்

இல. 54, 3ம் வட்டாரம் அல்லைப்பிட்டி இல் வசிக்கும் சுதர்ராஜ் பிரசன்னா ஆகிய நான் எனது பெயரை சுதர்ராஜ் பிரசாந்தினி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சுதர்ராஜ் பிரசாந்தினி என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

சுதர்ராஜ் பிரசாந்தினி

## வேலைவாய்ப்பு

- கனரக வாகனங்களின் அனுபவமுடைய வாகன மேற்பார்வையாளர்கள் தேவை.
- தங்குமிடம் இலவசம்

சிற்றி ஹாட்வெயார்ஸ் அன் ஸ்ரோர்ஸ்
55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புக்கு: 077 290 7617

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரிலுள்ள மருந்தகம் ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை.
(முன்னனுபவம் விரும்பத்தக்கது)

**071 072 1020**

## வீடு வாடகைக்கு

இராமநாதன் வீதியில் நாச்சிமார் கோயிலடிக்கு அருகில் சகலவசதி களுடன் 4 அறைகள் 2 BathRoom உடன் கூடிய கீழ் மாடி வீடு வாடகைக்கு உண்டு. சிறியகுடும்பம் அல்லது மாணவர்கள் விரும்பத்தக்கது.

076 249 9979
Viber only + 94 769702532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இலங்கை – இந்திய
# ராஜதந்திர விளையாட்டில் தமிழ் மக்கள் எதிர்காலம்?

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தொடர்பில் இந்தியா தமக்கு சாதக மான நிலைப்பாட்டையே எடுக்கும் என இலங்கை அரசு இறுதி வரை நம்பியிருந்தது. அதனையிட்டு வெளிப்படையாகவே தமது கருத்தையும் வெளியிட்டு வந்தது.

இந்த நிலையில் இந்தியா தமக்கு எதிர்நிலைப்பாட்டை எடுக்கா விட்டாலும் கூட, வாதக் கணிப்பில் கலந்து கொள்வதில் நடு நிலைமை வகுத்தமையானது இலங்கைக்கு அதீத அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதை இலங்கை இந்தியா தொடர்பான விவகாரங் களை அணுகும் முறையின் மூலம் வெளிப்படையாகவே அறிந்து கொள்ளலாம்.

குறிப்பாக வாக்கெடுப்பில் இந்தியா கலந்து கொள்ளாவிட்டாலும் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட 13ஆவது திருத்தச் சட் டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதை வலியு றுத்தும் வாசகங்களை இலங்கைக்கு எதிரான தீர்மான இணைப் பில் சேர்த்துக்கொள்ள பரிந்துரை செய்தமையானது, இலங்கை யரசின் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு எந்த வகையிலும் ஏற்புடையதாக இல்லை. இது இந்திய – இலங்கை ராஜதந்திர உறவுகளில் விரிசல் ஏற்படக் காரணமாகியுள்ளது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

அதிருப்தி நிலை என்பது கொள்கை அடிப்படையில் மட்டுமல் லாது செயற்பாட்டு ரீதியிலும் தீவிரம் கொள்ளத் தொடங்கும் போது கருத்தியல் மோதல்கள் களம் காணத் தொடங்கிவிட்டன.

இந்தியா 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்செய்ய சர்வதேச ரீதியில் ஐ.நா. ஊடாக முழுமையாக அமுல்செய்ய முனைவது அச்சத்தின் அடிப்படையிலான இந்திய அபிலாஷைகளைத் தக்க வைத்துக் கொள்ளவும் அதனூடாக எதிர்காலத்திலும் அதற்கு எந்த வகையிலும் இடர் நேராமல் பாதுகாக்கவும்தான் என்பதை இலங்கை அரசு தீர்க்கமாக புரிந்து கொண்டுள்ளது. இந்த நிலை யில் புதிய அரசமைப்பின் உருவாக்கம் மூலம் 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்வதுடன் அதனடிப்படையில் மாகாண சபை முறைமையையும் அடியோடு அகற்றி விடலாம் என வியூகமைத்துள்ள இலங்கை அரசின் மூலோபாயத்துக்குத் தடையாக இந்தியாவின் இலக்கு அமைந்துள்ளதால் இலங்கை அரசு இந்தியா மீது உள்ளூரக் கடும் எரிச்சல் கொண்டுள்ளது என் பதே யதார்த்தம்.

அரசின் இந்த அதிருப்தி உணர்வை பௌத்த – சிங்கள பேரின வாத அமைப்புகளும், அரசின் சில சிரேஷ்ட அமைச்சர்களும் அரசியல் பிரபலங்களாக தம்மை அடையாளப்படுத்தி நிற்கும் தேரர்மார்களும் அண்மைக் காலமாகத் தமது இந்தியா மீதான அதிருப்தி அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தி வருகிறார்கள்.


குறிப்பாக அமைச்சர் சரத் வீரசேகர போன்றவர்களின் அன்றாடக் கடமைகளில் ஒன்றாகவே 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் மாகாண சபை முறைமைக்கும் எதிராக அறிக்கைகள் விடுதலும் அமைந்திருப்பதைக் காண முடிகின்றது. இது மற்றொரு வகை யில் ஆட்சியாளரின் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டின் குரலாக வும் அமைந்துள்ளதென்றே கூறமுடியும்.

அமைச்சர்களில் ஒரு சாரார் மாகாண சபைகளை அகற்ற முடியா தென்றும் அவற்றுக்கான தேர்தல் விரைவில் நடக்குமென்றும் சமாளிப்பு அறிவிப்புக்களை செய்து வரும் அதேவேளை சரத் வீரசேகர போன்றவர்கள் அரசின் இன்னொரு முகத்தைப் பிரதிப லிப்பவர்களாகவே உள்ளனர்.

இந்தியாவால் பலவந்தமாகத் தரப்பட்டதே மாகாண சபை அது நடைமுறைக்கு அவசியமற்றது என யாழில் வைத்து சரத் வீரசே கர கூறியிருப்பதானது வெறுமனே அமைச்சர் என்ற ஒரு மனிதரது பொறுப்பற்ற கருத்தென நிராகரித்துவிட முடியாது. அவர் அடிக் கடி இதேபோன்று கருத்துக்களை வெகு வீராவேசமாக கூறி வரு கிறார். ஆகவே இதனை அரசின் நிலைப்பாடாகவே அர்த்தம் கொள்ள முடியும். இந்நிலையில் அரசே வெளிப்படையாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முடியாது. மாகாண சபைகள் குறித்த முடிவு புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தின் முடிவாலேயே தீர்மானிக்கப்படும் எனக் கூறிவிடலாமே.

ஆனால் அரசால் அப்படிச் சொல்ல முடியாது. அந்த நேர்மை அரசுக்கு இல்லை. அப்படிச் சொல்வது இந்தியாவுடனான உறவை முறிப்பதாகவே அமையும். அதற்கு அரசு தயாராக இல்லை என்பதே உண்மை. எனவே இந்தியாவுடனான இலங் கையின் உறவு நிலையின் தன்மை தற்போது எந்த திசையில் இருக்கிறது என்பதை இந்தியாவே பரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த இலங்கை – இந்திய ராஜதந்திர விளையாட்டில் உதைபட்டு அல்லாடப் போவது எமது தமிழ் மக்களின் எதிர்காலமே என்பதை மாகாண சபை முதல்வர் நாற்காலிக் கனவில் லயித்துக் கொண்டி ருக்கும் தமிழ்த் தலைமைகள் தான் புரிந்து கொள்ள வேண்டும்.




# யாழ். நகர வர்த்தகர்களுக்கு இந்த வாரம் பி.சி.ஆர். சோதனை

**கொழும்பு, ஏப். 4**

**யாழ்ப்பாண நகரில் முடக்கப்பட்டுள்ள வர்த் தக நிலையங்களின் பணியாளர்களுக்கு நாளையிலிருந்து இரண்டாம் கட்ட பி.சி.ஆர். பரிசோ தனை மேற்கொள்ளப்படவுள்ளது என கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ். மாநகர மத்தியில் முடக்கப்பட்ட பகுதி களிலுள்ள வர்த்தக நிலையங்களில் பணி யாற்றுபவர்களிடம் இரண்டாவது தடவை யாக எதிர்வரும் நாள்களில் பி.சி.ஆர். பரி சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் பெறுபேறுக்கமைய வர்த்தக நிலை யங்களை மீண்டும் திறப்பது தொடர்பில் முடிவு எடுக்கப்படும். கொரோனாத் தொற் றால் பாதிக்கப்படாத பணியாளர்கள் அந் தந்த வர்த்தக நிலையங்களில் பணியாற்ற அனுமதிக்கப்படுவார்கள்.
முடக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் அத்தி யாவசிய தேவை கருதி வங்கிகள் உள்ளிட்ட சில நிறுவனங்கள் மட்டும் இயங்குகின்றன.
பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட வர்களே அங்கு பணிபுரிகின்றார்கள் - என் றார். (ஒ.5,22)

# சோமாஸ்கந்தா கல்லூரியின் பெயரில் பணம் சேகரிக்கும் ஆசாமிகள்

*விழிப்பாக இருக்குமாறு அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், ஏப்.4
புத்தூர் சிறுப்பிட்டி ஆவரங்கால் மற்றும் அச்சு வேலி பிரதேசங்களில் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியில் கல்வி பயிலும் பொருண்மியம் நலி வடைந்த, அங்கவீனமான மாணவர்களுக்கான உதவி என்ற பெயரில் பணம் சேகரிக்கும் நடவ டிக்கையில் சில ஆசாமிகள் ஈடுபட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
சில இடங்களில் கல்லூரியின் பெயரில் நவீல்ட் பாடசாலை போன்ற சில அமைப்புக்களுக்கான நன்கொடை சேகரிக்கின்றோம் என்ற ரீதியிலும் அவர்கள் பணம் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு பணம் சேகரிக்க எவ ருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அவ்வாறு பணம் சேகரிப்போருக்கும் எமது கல் லூரிக்கும் அல்லது கல்லூரியில் இயங்கும் பழைய மாணவர் சங்கம் போன்ற எந்த அமைப் புக்கும் தொடர்புமில்லையெனவும் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்கு மாறும் இவ்வாறு பணம் சேகரிப்பவர்களின் விவ ரம் தெரிந்தால் அதுகுறித்து கல்லூரி அதிப ரிடமோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலை யத்திலோ முறையிடுமாறும் கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ப)

# வவுனியா வளாகத்தை பல்கலையாக மாற்றும் வர்த்தமானி இந்தமாதம்

யாழ்ப்பாணம், ஏப். 4
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துடன் இணைந்த வவுனியா வளாகத்தை, பல்கலைக்கழக மாக மாற்றுவதற்கான வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப் படவுள்ளது.
இந்த வர்த்தமானி இந்த மாதம் வெளியிடப்படும் என்று பல்க லைக்கழகமானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.
இந்த விடயம் குறித்து ஊடக மொன்றுக்கு கருத்துத் தெரிவித்த அவர், வவுனியா வளாகம் தற் போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் இணைந்ததாக உள்ளது.
அதனை, பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற் கான பணிகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் கல்வி அமைச்சும் தற்போது இறு திப்படுத்தியுள்ளன எனத் தெரி வித்தார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்க அறிவித்தல்

## ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடனான "HOMES NOT HOUSES" வேலைத்திட்டத்திற்காக CSEB கற்களின் உற்பத்தி மற்றும் வழங்கல் தொடர்பான வழங்குநர்களுடனான ஒப்பந்தத்தை முடிவுறுத்தல்

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடனான 'Homes Not Houses' வேலைத்திட்டத்தின் கீழ் 720 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான அமுக்கி உறுதியாக்கப்பட்ட கிரவல் கற்கள் (Compressed Stabilized Earth Blocks, CSEB) முழுவதையும் உற்பத்திசெய்து வழங்கிய பின்வரும் உப-வழங்குநர்களுடன் (Sub grantee) செய்துகொள்ளப்பட்ட உப-வழங்குநர் ஒப்பந்தம் 31 டிசெம்பர் 2020ம் திகதியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை Habitat for Humanity Sri Lanka (HFHSL, ஹபிட்டாட் ஃபோ ஹியூமானிட்டி ஸ்ரீலங்கா) பொதுமக்களுக்கு அறிவிக்க விரும்புகின்றது.

1. **Project for Youth (PFY)**
   நவஜீவனம், முரசுமோட்டை, பரந்தன், கிளிநொச்சி,
   தொ.இ: 0213134929,0412229615
2. **LEADS**
   பரந்தன் - முல்லைத்தீவு வீதி (A35), வள்ளிபுனம், முல்லைத்தீவு,
   தொ.இ: 0773245066/0114000259
3. **Inno Blocks Lanka Foundation**
   விக்கிகுடியிருப்பு, தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, தொ.இ: 0770382674
4. **S&M Enterprises**
   கலஹேன, கந்தெவ, புலத்கொஹுப்பிட்டி, தொ.இ : 0702344484
5. விளாவட்டுவான் கிராம அபிவிருத்திச் சங்கம்
   நாவற்காடு, மட்டக்களப்பு,

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு உப-வழங்குநர்கள் 'Homes Not Houses' வேலைத் திட்டத்திற்குத் தேவைப்பட்ட CSEB கற்களை முழுவதையும் வழங்கித் தமது கடப்பாடுகளை நிறைவேற்றியுள்ளதைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட உபவழங்குநர் ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.


2021 ஜனவரி 01ஆம் திகதிக்குப் பின்னர் மேற்படி வேலைத்திட்டம் தொடர்பில் மேற்படி உப-வழங்குநர்களுடன் செய்துகொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் HFHSL பொறுப்பாளியாகாது. மேலும் CSEB கற்கள் தொடர்பாக ஆர்வமுடையோர் மேற்படி உப-வழங்குநர்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளலாம்.

நிறுவனங்களின் திட்ட பிரதானி
Habitat for Humanity
120A-2/1,
ஸ்ரீமத் அநாகரிக தர்மபால மாவத்தை
கொழும்பு 07.

Habitat for Humanity Sri Lanka

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 12 . 1947 — இறப்பு 03 . 04 . 2021



## மயில்வாகனம் தங்கவடிவேலு

தாவளை இயற்றாளை (மந்துவில்) கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தங்கவடிவேலு நேற்று (03.04.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாபாணர் பொன்னையா - தங்கம்மா (கேதுப்பிள்ளை) தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜிதா (விஜி), விஜயானந்தா (குமார் - பிரான்ஸ்), விஜோஜிதா (ராசாத்தி - ஜேர்மனி), விஜயலலிதா (லலிதா - கனடா), விஜயரூபன் (ரூபன் - ஜேர்மனி), விஜயசங்கர் (அப்பன்) ஆகியோரின் அன்பு தந்தையும், இந்திரபாலன், தனிசியா, ராசலிங்கம், கிருபாகரன், விநோதினி, மாலதி (ஆசிரியை - மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சிவகாமிப்பிள்ளை, நடராசா மற்றும் நவரத்தினராஜா, வள்ளிப்பிள்ளை, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற யோகேஸ்வரரின் அன்பு மைத்துனரும், சிவலோகதேவியின் உடன் பிறவா சகோதரனும், சுகந்தி (தேவிகா), ஜெயந்தி (பவா), ரவிகாந்தன் (ரவி), பிரியந்தி (சுட்டி), திவ்வியகாந்தன் (ரமணா), பிரசாந்தி (கோபி) ஆகியோரின் மாமனும், பிரணாத், கோபிநாத், பிரதீபன், கம்ஷா, ராகவி, தாமீரன், ஜஸ்வின், ரிஷி, சரன், அனுசா, யதுசா, கபிஷன், அபி, அபிநயன், அகல்யன், தலோமிகா, கஜானி, அகர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சகாடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 239 3124**
**077 032 7452**

# மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 10 . 1950 — இறப்பு 02 . 04 . 2021



## சடாச்சரம் அமிர்தங்கிளி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தர்மபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சடாச்சரம் அமிர்தங்கிளி நேற்றுமுன்தினம் (02.04.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை கதிரமலை தம்பதியரின் மகளும், காசிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சடாச்சரத்தின் அன்பு மனைவியும், கலா (இலங்கை), இராசன் (சுவிஸ்), சுதா (லண்டன்), லதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், விஜயரட்ணம் (இலங்கை), மதன் (லண்டன்), மணிவண்ணன் (லண்டன்), விஜயகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், வியுசன், வியூபன், வசந்தன் (இலங்கை), மதுமிதா, மதுசாயினி, மதுசன் (லண்டன்), நிதுர்சன், யதுசன், லக்சி (லண்டன்), பிரவீனா, பிரவீன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அன்சிகா, ரிஸ்மியா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (03.04.2021) சனிக்கிழமை அன்னாரின் வீடான 369/6 யூனிட் தர்மபுரம் (RV பந்தல் சேவையில்) வைக்கப்பட்டு இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் சொந்த ஊரான மயிலிட்டியில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை மயிலிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**R.விசயராட்ணம் - 077 288 1184**
**மதன் - [illegible]**
**மணிவண்ணன் - [illegible]**
**இராசன் - 0041 7798 71492**

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 06 . 1960 — இறப்பு 02 . 04 . 2021



## குமாரசாமி செல்வநாயகம்

மீசாலையைப் பிறப்பிடமாகவும் புதிய புன்னைநீராவியை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி செல்வநாயகம் 02.04.2021 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் விமலேஸ்வரியின் அன்புக் கணவரும், யுடிற்றா (மகள்), சயந்தன் (மகன்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகரனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்றைய தினம் (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கலவெட்டித்திடலில் அமைந்துள்ள நெடுமோட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.360,**
**புதிய புன்னைநீராவி,**
**தர்மபுரம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 314 6053**
**077 411 2360**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
31 . 10 . 1974

இறப்பு
02 . 04 . 2021

யாழ் நகரின் பிரபல புலமை ஆசான்

## வேலுப்பிள்ளை அன்பழகன் (ஆசிரியர்)


(யா/ செட்டித்தெரு அ.மி.த.க பாடசாலை)

அவர்களின்

மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

உதயன்

# மரண அறிவித்தல்



பிறப்பு
31 . 10 . 1974

இறப்பு
02 . 04 . 2021

## வேலுப்பிள்ளை அன்பழகன் (ஆசிரியர்)

(யா/ செட்டித்தெரு அ.மி.த.க பாடசாலை)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ். சிவகுருநாதர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அன்பழகன் நேற்று முன்தினம் (02.04.2021) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு இளைய மகனும், சுப்பிரமணியம் - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் கவிதாவின் (ஆசிரியை – யா/ இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், அனுராகன் (யா/ இந்துக் கல்லூரி), கவிநயன் (யா/ இந்து ஆரம்ப பாடசாலை), சாருகானன் (யா/ இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம், பொன்னரியம், துரைசிங்கம், பாலசந்திரன், இராஜேந்திரன், செல்வராணி, ஞானச்சந்திரன், செல்வரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாம்பிகை, அப்புத்துரை, புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, சாந்தநிர்மலா, குணசிங்கம், விஜயநிர்மலா, கிருஷ்ணன், அமரசேகர், ஞானசேகரன், ரஞ்சித் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 656 9660**

# மரண அறிவித்தல்



அன்னை மடியில்
31 . 08 . 1942

இறைவன் அடியில்
29 . 03 . 2021

## இரத்தினசிங்கம் சற்குணநாயகி

யாழ். பன்னாலையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி திருநகரை வதிவிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் சற்குணநாயகி அவர்கள் 29.03.2021 திங்கட் கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னையா சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்புமிகு இளைய மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கமுத்து தம்பதிகளின் பாசமிகு மூத்த மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், இரவீந்திரன் (A&W Express, Scout Ravi- Mahajanan, கனடா), செல்வேந்திரன் (ஜேர்மனி), ஞானேந்திரன்(யாழ் தோசா கோணர்- கனடா), யோகரஞ்சிதம் (கனடா), விமலரஞ்சிதம் (கனடா), கிருபரஞ்சிதம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, அன்னப்பிள்ளை, சின்னத்துரை, செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், தையல்நாயகி மற்றும் செல்வநாயகம்(கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்ற இந்திராணி, சரோஜா, அன்பரசி, மதிவதனி, சேனாதி, ஹென்றி, சங்கர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிரிசாந்தன், பார்கவி, விஷ்ணுவி, தாவிதன், மயூரிகா, வினீஷ், சேரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


முக்கிய குறிப்பு: நாட்டில் நிலவும் கோவிட்-19 தொற்று நோய் காரணமாக அனைவரின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் கருதி எவருக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்துக்கொள்ள அனுமதி தர இயலாத நிலையை எண்ணி வருந்துகின்றோம்.

தொடர்புகளுக்கு:

**தகவல்: குடும்பத்தினர்.**

இரவீந்திரன் - மகன்
Mobile : +14164906477 Mobile : +16479896477
செல்வேந்திரன் - மகன் Mobile : +4929626434 Phone : +491701523612
ஞானேந்திரன் - மகன் Mobile : +16478704473
யோகரஞ்சிதம் - மகள் Mobile : +16477811940
விமலரஞ்சிதம் - மகள் Mobile : +14169023023
கிருபரஞ்சிதம் - மகள் Mobile : +16472928527

# மரண அறிவித்தல்



தோற்றம்
26 . 12 . 1944

மறைவு
02 . 04 . 2021

## K.T. இராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர்)

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மேற்கை பிறப்பிடமாகவும் இராமலிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட K.T.இராஜசிங்கம் (ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்) நேற்றுமுன்தினம் (02.04.2021) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கலட்சுமி தம்பதிகளின் மருமகனும், மகாலட்சுமியின் அன்புக் கணவரும், நிசாந்தன் (கனடா), சுசிதரன் (லண்டன்), நிறோஜி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), நிரோஜன் (முகாமைத்துவ பணிப்பாளர் DMI Computer Education) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரலேகா (கனடா), அனுஷா (லண்டன்), சிவானந்தன் (நிர்வாக உத்தியோகத்தர் பேரவை செயலகம், வடமாகாணசபை), சுகன்யா (மென்பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷன்யா, ஹரிணி, சாருஹாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் பாக்கியம் (லண்டன்), அகிலேஸ்வரி, நல்லையா, கமலாதேவி, கந்தசாமி (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணிக்கு இராமலிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 12 . 1947



இறப்பு 02 . 04 . 2021

### திரு. வேலு நடேசு

யாழ். ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வேலு நடேசு நேற்றுமுன்தினம் (02.04.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற வேலன் - சின்னம்மா தம்பதியரின் சிரேஸ்ர மகனும், காலஞ்சென்ற பசுபதி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், அருளம்மாவின் அன்புக் கணவரும், யுகனஜீவி, யுகதீஸ்வரன், யுகமாலா, குகதீஸ்வரன், மனோகௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கதிரமலை (அமரிக்கா), நாகரத்தினம், தங்கரத்தினம், சிவநேசன் (ஜேர்மன்), குணலிங்கம் (லண்டன்), ராசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குகதீஸ்வரன் - மகன்
(Western Mobile)

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 06 . 1944



இறப்பு 02 . 04 . 2021

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய இ.போ.ச.சிரேஸ்டசாலை பரிசோதகர் பருத்தித்துறை, மன்னார், யாழ்ப்பாணம், நீர்வேலி தெற்கு ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூகத் தலைவர்)

யாழ். நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கந்தசுவாமி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (02.04.2021) வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சோதிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கண் மணியம்மா (கிளியக்கா) அவர்களின் பாசமிகு அன்புக் கணவரும், புண்ணியமூர்த்தி (பாபு- நோர்வே), கிருஸ்ணமூர்த்தி (ரூபன்- லண்டன்), சிவமூர்த்தி (நகுலன்), காலஞ்சென்ற அபிராமி (இ.போ.ச கணக்காய்வாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், வள்ளியம்மை, சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், சுபத்திரா (நோர்வே), இராஜேஸ்வரி (லண்டன்), செல்வகுமாரி (ஆசிரியர் - கிளி பரந்தன் அ.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் (ரத்ன வாத்தியார்), சின்னத்தம்பி (தலைவர் வலி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கம்) மற்றும் முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹரிராம், கீரன் (நோர்வே), சஜீதன், [illegible]சதன், கௌசிதன் (லண்டன்), பவித்திரா, ஹன்சிகா (நீர்வேலி) ஆகியோ[illegible] பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 02.04.2021 வெள்ளிக்கிழமை அன்று பி.ப [illegible].00 மணிமுதல் பி.ப 03:00 மணிவரை அவரது இல்லத்தில் நடைப்[illegible]று பின்னர் நீர்வேலி தெற்கு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் [illegible]யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், [illegible]னைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

[illegible]ர்புகளுக்கு:
- [illegible]ணியமூர்த்தி (பாபு) - மகன் • Mobile : +4791577181
- [illegible]ஷ்ண மூர்த்தி (ரூபன்) - மகன் • Mobile : +447916274406
- [illegible]மூர்த்தி (நகுலன்) - மகன் • Mobile : +94766973035
- • Mobile : +19476362008[illegible]
- [illegible]நபன் - மருமகன் • Mobile : +94761615651

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் காணிக்கை

தோற்றம் 31 . 10 . 1974



மறைவு 02 . 04 . 2021

அமரர்
### வேலுப்பிள்ளை அன்பழகன்

கண்கள் கலங்குகிறதே காற்று வீச மறுக்கிறதே
உங்கள் மறைவுச் செய்தி கேட்டு நெஞ்சு
வெடித்து விடும் போல் இருக்கிறதே.
நேற்றுவரை வாழ்ந்த வாழ்க்கை இன்று
பாரை விட்டுப் போனதேனோ? கதறி அழும் - உங்கள்
உறவுக்கு யார் இனி ஆறுதல் சொல்வார்
மீண்டும் உங்கள் வரவை எதிர்பார்த்து ஏங்குகின்றோம்.
கண் திறந்து பாராயோ? கவலைகள் தான் தீராதோ?
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
2012 Batch

## Mora Engineering (Pvt) Ltd.
## Project : Jaffna - Manipai Road (2:00 to 5:00 km Section)

**1- Project Engineer**

B.SC (Eng] & M.Sc(Construction Eng) with more than 7 years Relevant experience

Site movement on location by own motorbyke and daily Reports on workplan, Action plan & Achevement reports are expected following the posts.

**2-Site Engineer (2 NOS)**

B.SC [Eng] or JESL Accepted or UGC Approved degree in civil engineering with more than 03 years experience.

**3. Technical Officer (3NOS)**

NCT (Civil) or acceptable technical qualification with more than 03 years experience.

**4. Quantity Surveyor :**

NCT (Qs) or acceptable technical qualification with more than 03 years experience in preparation of measurement Sheet & Bill sheet

*Salary : Negotiable with efficency. Of the speedy implementation with required quality control

leaving from job: One month notice or
one month Salary to be paid to the company

**Contact : viber number : 0768 245457**

**Email ID : Moraengineering 2020@gmail.com**

Administration Officer
Mora Engineering (Pvt) Ltd
NO: 218,
Stanley Road,
Jaffna.

## உடன் வேலைவாய்ப்பு

யாழ். கொக்குவிலில் இயங்கிவரும்
இயற்கை மருத்துவ சிகிச்சை நிலையத்தில்
பணியாற்றுவதற்கு யோகா மாஸ்டர்
(ஆண்/பெண்) அக்குபஞ்சர் டாக்டர்,
ஆயுள்வேத தெரபிஸ்ட்
(ஆண் பகுதி நேரம்) பகுதி நேர
(Marketing Staff, Freelance Marketing)
ஆகியோர் உடன் தேவை.
077 893 2908 / 077 913 8944

## ஊர்க்கோழிக்குஞ்சு விற்பனைக்கு

2 கிழமைகள் பூர்த்தியான
ஊர்க்கோழிக்குஞ்சு விற்பனைக்கு
(கழுத்துவெட்டியும் உண்டு) விலை - 140
077 477 5603

## நாகபூஷணி திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள்
ஜாதகங்கள் மிகப்பொருத்தமாக
உடன் தரப்படும்.
021 222 9306, (077 138 7596 Viber)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

01. கணக்காளர்- அனுபவமுள்ளவர்
02. மேற்பார்வையாளர்-

தங்குமிடம் உணவு வழங்கப்படும்.
தொடர்பு: 076 943 5080

## வெல்டர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு ஒட்டு வேலை செய்வதற்கு வெல்டரும் உதவியாளரும் தேவை.
சம்பளம் :- வெல்டருக்கு 40000/= லிருந்து வழங்கப்படும்.
உதவியாளருக்கு 25000/= லிருந்து வழங்கப்படும்.
தொடர்புக்கு: 074 049 0003

## திருமண சேவை

விசேடமாக கிறிஸ்தவ ஆவிக்குரிய சபைகளுக்காக
உருவாக்கப்பட்ட திருமண இணையத்தளம்
www.kirubaimatrimony.com
பதிவுகள் இலவசம்.
தொடர்பு: 011 773 2288, 076 197 2285

## IELTS New Batch

தனிப்பட்டதும், குழு வகுப்புக்கள்
ஆரம்பம் Cont - 077 798 9830
53, சிவகுருநாதர் வீதி, Brown Rd.

## பணிப்பெண் தேவை

சுண்டுக்குளியில் வசிக்கும் சிறு குடும்பத்திற்கு
வீட்டில் தங்கி நின்று பணிபுரியும் (பெண்) வேலையாள்
தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
077 061 0651

## கடை வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதி, வேம்படி சந்திக்கு அருகாமையில் கடை ஒன்று வாடகைக்குண்டு.
தொடர்பு 077 144 2565

## விற்பனைக்கு

உயர் ரக Arc, Mig, Tig வெல்டிங்
மற்றும் Plasma Cutter இயந்திரங்கள்.
Arc, Tig, Mig வெல்டிங் கூர்கள்
மற்றும் வயர்கள். விற்பனையின்
பின்னரான உயர்ந்த சேவை,
உத்தரவாதம் மற்றும் குறைந்த
விலை.
076 358 2389

## தேவை

பளை, இயக்கச்சி, எழுதுமட்டுவாள்,
போன்ற இடங்களில் 10 ஏக்கர் காணி
தேவைப்படுகிறது.
(தரகர் தேவையில்லை)
077 880 0143, 075 880 0143

## விற்பனைக்கு

அரபு நாட்டு பொருட்கள் விற்பனைக்கு

1. LG. SPLIT A/C 2 1/2 Ton
2. I Phone 7
3. Kenwood CAR CD Player
4. மற்றும் பல

தொடர்பு 077 257 1005

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மூளாய் வீதி,
உடுக்கியவளை பிள்ளையார்
கோவிலுக்கு அண்மையில் வீடும்
காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு 077 819 1314

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியசேவியர் அடிகளாருக்கு யாழ். தமிழ்ச் சங்கம் இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.4

உலகத்திசைகளுக்கு தமிழர் பாரம்பரிய கலைவடிவங்களைக் காவிச்சென்றவர் கலைத்தூது கலாநிதி மரியசேவியர் அடிகளார் என்று யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த மரியசேவியர் அடிகாளாருக்கான இரங்கல் செய்தியில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது;

திருமறைக் கலாமன்றம் எனும் அமைப்பை ஸ்தாபித்து அதன் மூலம் உலகின் பல பாகங்களுக்கும் தமிழர்களின் கலைவடிவங்களை காவிச் சென்றவர் கலைத்தூது மரியசேவியர் அடிகளார். அவரால் உருவாக்கப்பட்ட பல கூத்துருவ நாடகங்கள் நூற்றாண்டுகள் கடந்த வரலாற்றுச் சம்பவங்களை மையமாக வைத்து எமது இனம் அண்மையில் சந்தித்த வலிகளைக் குறியீடுகளாக்கிப் பேசும் தனித்துவ வல்லமையைக் கொண்டிருந்தமையை அவரது கலைப்படைப்புக்களை உன்னிப்பாக கவனிக்கும்போது அவதானிக்கக்கூடிய விடயம். மரியசேவியர் அடிகளாரின் முதன்மைப் பண்பாக இருந்தது, தான் ஒரு கிறிஸ்தவர் என்பதை முதன்மைப்படுத்துவதற்கு முன்னால் தன்னை ஒரு தமிழராக என்றும் முன்னிலைப்படுத் த வேண்டும் என்பதாகவேயிருந்தது. இத்தகைய பண்பு இன்று பலருக்கும் எடுத்துக்காட்டான பண்பாகும். அதற்கு இலக்கணமாக அவர் சைவசிந்தாந்தத்துறையில் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும் ஆழமான புலமையையும் குறிப்பிடமுடியும் இன மத நல்லிணக்கத்தின் வடிவமாக கலைகளைக் கையாண்ட பெருமையும் அடிகளாரைச் சாரும். சிங்கள மக்களின் கவைவடிவங்களைப் பயிலும் ஆர்வத்தை தமிழர்களிடமும் தமிழர்களின் கலை வடிவங்களைப் பயிலும் ஆர்வத்தை சிங்கள இளையவர்களிடமும் விதைத்தவர் அவர். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் மீதும் அதன் பணிகள் மீதும் அளவுகடந்த மரியாதை கொண்டிருந்த மரியசேவியர் அடிகளாரின் மறைவுக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் எங்கள் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம் - என்றுள்ளது. (ப)

# ஈழத்து கலைப்பிதாமகரே மரியசேவியர் அடிகளார்

## கஜதீபன் இரங்கல்

கொடிகாமம், ஏப்.4

ஈழத்து கலைகளின் வளர்ச்சிக்காக பாடுபட்ட கலைஞர் மரியசேவியர் அடிகளாரின் மறைவு ஈழத்து கலைத்துறைக்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும் என முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தில் மரியசேவியர் அடிகளாரின் திருவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது அவரது திருவுடலுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகத்தமிழர் அனைவருக்குமே நன்கு பரிச்சயமான கலைக்கூடமான திருமறைக் கலாமன்றத்தை நிறுவி அதனூடாக பெயர் சொல்லக்கூடிய ஆயிரக்கணக்கான கலைஞர்களை உருவாக்கியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் ஈழத்து கலைப் பாரம்பரியத்தையும் உலகறியச் செய்த உன்னத கலைஞராக அடிகளார் விளங்குகின்றார்.

அருட்தந்தையாக இறைபணியோடு மட்டும் நின்றுவிடாமல் கலைகளையும் கலைஞர்களையும் வளர்க்கவேண்டும் என்ற இலட்சியப் பற்றுறுதியோடு செயற்பட்டவர்.

ஒரு கிறிஸ்தவ துறவியாக இருந்த போதிலும் சைவசித்தாந்த துறையிலும், வரலாற்றுத் துறையிலும் கலாநிதிப்பட்டம் பெற்றுள்ளார் என்றால் அவர் தமிழை எந்த அளவுக்கு நேசித்தார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அவ்வாறான உன்னத கலைப்பிதாமகரான கலாநிதி மரியசேவியர் அடிகளாரின் மறைவு எமது கலைக்கும் மண்ணுக்கும் பேரழப்பாகும்என்றார். (ற

# சு.க. பெரமுன திடீர் பேச்சு

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடை யில் திடீர் பேச்சு ஒன்று அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது என அறியமுடிகின்றது.

இரண்டு கட்சிகளுக்கும் இடையில் அண்மைக்காலமாக மோதல் நிலைமை நீடித்து வரும் நிலையில் இந்தப் பேச்சு இடம்பெற்றுள்ளது. இதன்போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஆராயப்பட்டது எனக் கூறப்படு கின்றது.

பெரமுன சார்பில் பசில் ராஜபக்ச, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், கட்சியின் செயலர் சாகர காரியவசம் ஆகியோரும், சுதந்திரக் கட்சி சார்பில் அந்தக் கட்சியின் செயலர் தயாசிறி, துமிந்த, மகிந்த அமரவீர, லசந்த அழகிய வண்ண ஆகியோரும் கலந்து கொண்டனர் எனக் கூறப்படுகிறது. (ஒ.இ)





# அன்பிற்கு இறப்பு உண்டோ?

தோற்றம் 31 . 10 . 1974



மறைவு 02 . 04 . 2021

சாரங்கா குடும்பத்தினரின் நெருங்கிய நண்பராய்
எங்கள் பிள்ளைகளின் நல்லாசிரியருமாகிய
அமரர் **வேலுப்பிள்ளை அன்பழகன்**

*அன்பொளி என்ற நாமம்*
*அகிலத்தின் அறிவின் ஊற்று*
*இன்புடன் கல்வி பெற்றோர்*
*இனியவா உன் பிரிவைக் கேட்டு*
*நெஞ்சகம் பிளந்ததாக உறுகின்றாரோ*
*நின் துயர்*
*அன்பொளி அமைக்க நாமும்*
*அழகிய நிலத்தை ஈந்தோம்*
*வென்று எம் மழலையர் நல்கும்*
*உயர்வுகள் காணும் தோறும்*
*நன்று நன்றென்று சொல்லி*
*நாமுமை நயந்து நின்றோம்*
*என்பையும் பிறர்க்கு ஈயும்*
*இனிய நற்குணங்கள் கொண்ட*
*அன்பனே உன்னைக் கடவுள்*
*அருகினில் அழைத்திட்டாரோ?*
*ஆறுதல் தருவாரின்றி அழுகின்றோம்*
*எனினும் ஓர் உறுதி ஐயா ...*
*மதிப்புளோர் மனதின் வழி*
*அன்பு நீ என்றும் வாழ்வாய்*
*சாந்தி சாந்தி சாந்தி*

பிரிவால் துயருறும்
**சாரங்கன், வைஸ்ணவி, வைதேகி**
**சாரங்கா நகை மாட உரிமையாளரும் ஊழியர்களும்**

# சீன, ரஷ்யத் தூதுவர்களை அமைச்சர் தினேஷ் சந்திப்பு

கொழும்பு, ஏப். 4

இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மெட்டேரி மற்றும் சீனத் தூதுவர் குய் ஜென்ஹோங் ஆகியோரை வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன அண்மையில் சந்தித்து உரையாடியுள்ளார். இதன்போது, இலங்கையில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த வழங்கிய உதவிகளுக்காக ரஷ்யா மற்றும் சீன அரசாங்கங்களுக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார். ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இரு நாடுகளும் இலங்கைக்கு ஆதரவளித்தமை குறித்தும் சந்திப்பின் போது அமைச்சர் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். (வ-இ)

# துன்பங்களைச் சுமந்து நின்ற மக்களின் துயரங்களைத் துடைக்கப் பாடுபட்டவர்!

## மறைந்த ஆயருக்கு மஹிந்த இரங்கல்

**கொழும்பு, ஏப்.4**

**போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்து நின்ற மக்களின் துயரங்களைத் துடைக்கவும், ஏழை மக்களுக்கு உதவவும் மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை அரும்பாடுபட்டார் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதில் மேலும் உள்ளதாவது;

அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவு குறித்த செய்தி அறிந்து மிகுந்த மன வேதனையுடைந்தேன். மனிதாபிமான நடவடிக்கையின்போது நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகவிருந்தது. அந்தவகையில் போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்து நின்ற மக்களின் துயரங்களைத் துடைக்கவும், ஏழை மக்களுக்கு உதவவும் இராயப்பு ஜோசப் ஆண்டகை அரும்பாடுபட்டார். மடு அன்னை தேவாலயத்தை பாதுகாப்பதற்கான அவரின் அர்ப்பணிப்பை இத்தருணத்தில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இழப்பால் துயருறும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றுள்ளது. (ப-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 06 . 1976



இறப்பு 29 . 03 . 2021

# ஸ்ரீகரன் கவிதா

யாழ்.ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீகரன் கவிதா (29.03.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகவடிவேல் புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்வமணி மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், ஸ்ரீகரன் அவர்களின் பாசமிகு மனைவியும், வனேசா (அம்மு) அவர்களின் அன்புத் தாயாரும், கௌரி, மகிந்தன், கஜேந்திரன் ஆகியோரின் சகோதரியும், சாந்தகுமார், சாமினி, புஸ்பராம் ஆகியோரின் மைத்துனியும், ரோகினிதேவி, ஸ்ரீபதி, ஸ்ரீகரன், ஸ்ரீமோகன், ஜெயகௌரி, ஸ்ரீபவன், ஸ்ரீபாலன், ஆகியோரின் மைத்துனியும், யோகராசா, ஜெகநாதன், ரெத்தினகுமார், விஜிதா, ஜமுனா, சியாஜினி, அனுஷா ஆகியோரின் சகலியும்.காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, சிவகுமார், இந்திராணி, கௌசல்யா, ஆகியோரின் மருமகளும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**ஸ்ரீகரன் (கணவர்) +33 625125059**
**மகிந்தன் (சகோதரன்) +33 634310952**
**கஜன் (சகோதரன்) +33 766018881**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 09 . 1949



மறைவு 02 . 04 . 2021

# சின்னத்துரை தவஞான பூரணி

கொக்குவில் மேற்கு முதலியார் கோவிலை பிறப்பிடமாகவும், மருதானை வீதி, வத்தளை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தவஞான பூரணி அவர்கள் 02.04.2021 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் கனகசபை, கனகசபை சைலேஸ்வரியின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், வினோபா (கொழும்பு), வாகீசன் (கொழும்பு), பிரகாசன் (பிரான்ஸ்), ஆகி யோரின் அன்புத் தாயாரும், மனோரஞ்சிதமலர் (இந்தியா), ஞானரஞ்சிதம் (கொழும்பு), தவரஞ்சிதம் (கனடா), காலஞ்சென்ற தபேந்திரன், கொங்காதரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தசவரதனின் (மருமகன்) மாமியும், சந்திரகுமாரி (மருமகள்), சுதர்சினி (மருமகள்) ஆகி யோரின் மாமியும், பவித்ரா, பிரகதின், நிதுர்சினி, சஸ்வர்த், யதுர்சரணியா அஸ்வந் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கெரவல்பிட்டிய இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**Tel: 077 415 6965**
**077 242 5032**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் நாகர் ஏரம்பு

(முன்னாள் இ.போ.ச.சாரதி)




தோற்றம் 20.02.1920
மறைவு 03.04.2015

இவ்வுலகைபிரிந்து ஆண்டுகள்
ஆறு ஆனாலும் எம் உள்ளத்திலும்
வாழ்விலும் என்றும் பசுமையாக
வாழும் எம் அப்பப்பா உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நடராசா சுதானந்தன் ( பேரன் )
இலண்டன் +447448990989

## கண்ணீர் காணிக்கை

மலர்வு 31 . 10 . 1974



உதிர்வு 02 . 04 . 2021

**மட்டுவில் பெற்ற மாமணி, புலமைப்பரிசில் பரீட்சைத்துறையின் வித்தகர்**

# அமரர் வேலுப்பிள்ளை அன்பழகன்

பெருமைக்குரிய மட்டுவில்
சொந்தங்களாய் பிறந்து
நண்பர்கள் ஆனோம்.
கூடித்திரிந்து பல கதை பேசி ஊர் சுற்றி
வித விதமாய் பண்டங்கள் செய்து
ருசி பார்த்து உண்டோம்.
சுதந்திரப் பறவைகளாய் பறந்து
பல இடம் சுற்றி மகிழ்ந்தோம்.

எம்முடன் அன்பைச் சொரிவதில் - அன்பழகனாய்
நல் அறிவை புகட்டுவதில் - அறிவழகனாய்
கண்களால் பேசி மகிழ்விப்பதில் - கண்ணழகனாய்
இனிய கவி பாடுவதில் - கவியழகனாய்
மொத்தத்தில் எம் பெண்கள் கூட்டத்தில்
ஓர் ஆணழகனாய் இணைந்து
ஓர் அழகான குருவிக் கூடாய் இருந்தோம்.
உன் வளர்ச்சி கண்டு மகிழ்ந்தோம்.
உன் புகழ் பேசப்படும் இடத்தில் நாமும் உன்னுடன்
இருந்ததை எண்ணி பெருமை கொண்டோம்.

நாட்டு சூழலும் வாழ்க்கையின்
படி நிலை மாற்றங்களாலும்

பல திசை நாம் பிரிந்து
புதிய வாழ்க்கையில் ஒன்றிப் போனதால்
எமக்கு இடையிலான தொடர்புகளில்
இடைவெளி ஏற்பட்டிருந்தாலும்
நினைவலைகளில் நாம் ஒன்றியே இருந்தோம்.
சந்தர்ப்பங்கள் அமைந்த போது
சந்தோஷமாய் சந்தித்து உரையாடினோம்.
மீண்டும் எல்லோரும் சேர்ந்து சந்திக்கும்
இனிமையான வேளைக்காகக் காத்திருந்தபோது
இடி விழுந்தது போல் - உன்
நோயின் செய்தி அறிந்தோம்
நீ! நீடூழி காலம் வாழ வேண்டி
கடவுளை வேண்டினோம்.
ஆனால்! இறைவன் உனை
தன்னிடம் அழைத்த செய்தி அறிந்து துடிக்கின்றோம்.
மீண்டும் நீ ஒரு பேரழகனாய்
பூமியில் ஜனனம் எடுப்பாய்
பார் புகழ வாழ்வாய்
அதுவரை உன் ஆத்மா சந்தியடைய
கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**உன் மறைவினால் துயருற்றிருக்கும் உனது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து நாமும் அத்துயரில் பங்கு கொள்கின்றோம்.**

**மட்டுவில் தெற்கு, வளர்மதி ஆரம்பக்கல்வி முன்னாள் ஆசிரியைகளும், நண்பிகளும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விற்பனைக்கு

100 முட்டை குஞ்சு பொரிக்கும் இயந்திரம் விற்பனைக்கு. Full Automatic விலை 12500/=

**077 3295 365**

### வேலையாட்கள் தேவை

Lovely Flower Centre புதிதாக அமைக்கப்பட்ட நெல்லியடிக்கிளைக்கு பெண் வேலையாள் தேவை. தொடர்பு: **077 400 5023**

### வேலையாட்கள் தேவை

யாழ் வேம்படிச் சந்தியில் இயங்கும் உணவகமொன்றுக்கு சப்ளையர். அப்ப மேக்கர். றொட்டி மேக்கர். குளிர்பானம் தயாரிப்போர் தேவை. அயலில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.

தொடர்பு:- **077 8828800, 077 061 6089**

### மேசன் வேலையாட்கள் தேவை

யாழ் மாவட்டத்தில் வேலை செய்வதற்கு மேசன் வேலையாட்கள் தேவை. தங்கும் வேலையாட்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு:-075 0799 222**


# கண்ணீர் அஞ்சலி

## வேலுப்பிள்ளை அன்பழகன் (ஆசிரியர்)



பல மாணவப் பறவைகள் வாழ்ந்த
ஆலமரமொன்று அடி சாய்ந்ததோ
வேரோடி பல விழுதுகளை
உருவாக்கிய பெரு விருட்சமே
எமை பாரோடு தவிக்க விட்டு
பாதியிலே போனதேனோ
இளம்பிறையொன்று
தேய்பிறையான கதை கண்டு
விம்மி வெடிக்கிறது இதய நிலம்
பல பிஞ்சுகளின் ஏக்க கண்ணீர்
உங்கள் ஆத்மாவின் பாதங்களை
அலங்கரிக்கின்றது.

*பிரிவால் துயரும்*

**Trilliam Montessori**
**Wyman Road, Nallur.**

# மரண அறிவித்தல்



## சின்னப்பு கனகம்மா

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும். இல.25. குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும். கொண்ட சின்னப்பு கனகம்மா அவர்கள் 02.04.2021 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான சவரிமுத்து மேரிமாக்கிறெற் தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற சின்னப்பு அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான சண்முகம். தங்கமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும். ஞானமலர். திரேசம்மா. காலஞ்சென்ற செல்வநாயகம். மேரி ஜெசிந்தா (கனடா). மேரி ரீற்றா (ஓய்வு பெற்ற உப அதிபர். கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்). மரியநாயகம் (ராசன்). இராசநாயகம் (ஜேர்மனி). யூலியட் அஞ்சனா (பிரான்ஸ்). காலஞ்சென்ற இந்திரா. அரியநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும். அமரசிங்கம். வேதநாயகம். தோமஸ் (கனடா). மகேந்திரன். மரியநாயகம் லின்டன் (பிரான்ஸ்). அருளானந்தி (ஆசிரியை. மு/துணுக்காய் அ.த.க. பாடசாலை). மேரி ரஞ்சினி (ஜேர்மனி). யூடிற் துஷித்தா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும். யசோ. வினோ (லண்டன்). மேரி ஸ்ரெலா (ஆசிரியை கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்) அனிஸ் ரெலா (பண்டத்தரிப்பு). நிசாந்தி (அருட்சகோதரி, திருக்குடும்ப கன்னியர் மடம். யாழ்ப்பாணம்). ரெஜினோல்ட் (தபாலகம். பரந்தன்). றொசானி (கனடா). நிஜிலானி (கனடா). றீகன் (கனடா). ஆஷா (கனடா). யூட்சபின்சன். ஆன் கமில்ற்ரா. ஆன் ஜிந்துஷா. டயானா (இலங்கை வங்கி. பளை). திசாந் (பிரான்ஸ்). குணாசாந். அனிற்றாயினி. நிரோஜன். நிவேதா. பதுசா (பிரான்ஸ்). பானுஷா (பிரான்ஸ்). எழிலினி (பிரான்ஸ்). பிரியங்கா (கனடா). ஹன்சிகா (கனடா). அன்றூ (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.04.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பரந்தன் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று. கோரக்கன் கட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 . 07 . 1952 | 03 . 04 . 2021 |



## விஜயகுமார் லோகானந்தேஸ்வரி

யாழ். உத்தரிய மாதா கோவிலடி. வயாவிளான் வடமூலையை பிறப்பிடமாகவும். பத்தாவத்தை இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஜயகுமார் லோகானந்தேஸ்வரி அவர்கள் நேற்று (03.04.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கநாயகம்-ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம்-றெஜினாமேரி தம்பதியரின் அன்பு மருமகளும், விஜயகுமார் அவர்களின் அன்பு மனைவியும். யேசுதாசன் (ஆசிரியர் - மன்/பாப்பாமோட்டை றோ.க.த.க. பாடசாலை). ஞானசிங்கம் (ஆசிரியர். யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி). விஜயகுமாரி (ஆராய்ச்சி உதவியாளர். நெல் ஆராய்ச்சி நிலையம். விவசாயத் திணைக்களம். பரந்தன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். ஜெரோஜினி. ஜெயமரினோ (ஆசிரியர். வவு/ஓமந்தை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். தெலஸ்ரோ. ஜெவிசன். ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். காலஞ்சென்ற ஞானேஸ்வரி மற்றும் குணேஸ்வரி. தனேஸ்பரநாயகம். இராஜேஸ்வரி. திரேஷா சவுந்தரேஸ்வரி. செல்வேஸ்பரநாயகம். மங்களேஸ்பரநாயகம். சந்திரேஸ்வரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். புஸ்பராணி. ஞானக்குமாரன். கிறேஸ் செல்வக்குமார். மரியதர்மகுலசிங்கம். மரியதாஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனைக்காக நாளை (05.04.2021) திங்கட்கிழமை மு.ப. 9.00 மணியளவில் சித்தரமேழி. இளவாலையிலுள்ள தற்காலிக இல்லத்தில் இருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு சேந்தான்குளம் புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர். சேந்தான்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கணவர்: **077 882 1645**
மகன்மார்: **077 771 7342**
**077 871 1128**
மகள்: **077 308 4722**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 . 06 . 1962 | 01 . 04 . 2021 |



## இராஜகோபால் சின்னத்தம்பி

புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough,Ontario வை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜகோபால் சின்னத்தம்பி 01-04-2021 வியாழக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் ஐந்தாவது மகனும். காலஞ்சென்ற இரஞ்சன்- நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும். பிரபாகினி (துளசி)யின் அன்பு கணவரும். வனுஜன். அனுஜன். சாருகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செல்வராசா. காலஞ் சென்ற மனோகரன். மற்றும் தயாநிதி. சிவயோகநாதன். காலஞ்சென்ற வைகுந்தநாதன் ஆகியோரின் அன்பு சகோதரரும். சரோஜினிதேவி. சியாமளா. பத்மநாதன். மங்களேஸ்வரி. மனோ ரஞ்சிதம். வசந்தன். கௌரி. துசாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும். வதனி. சிவகுமார். தனேஸ்வரன் ஆகியோரின் அன்பு சகலனும். கிரிசாந். கம்சா. பதுளா. ராகவி ஆகியோரின் அன்பு மாமனாரும். தர்சனா. ரஜீவ்குமார். கஜன். நாவண்ணன். கஜீஸ்ராஜ். யர்சன். வினோஜன். சுவர்ணா. எழில். பிரசன்னா. சோபிக்கா. கிரிசோத். சுபிச்சா. அனுஸ்சிகா ஆகியோரின் சித்தப்பாவும். விதுசிகன். கலாகரன். அஞ்ஞனன். யானுதா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2021) மாலை 6.30 (கனடா நேரப்படி) Chapel Ridge Funeral home and Cremation Centre இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

8911, Woodbine Ave,
Markham,
ON 1 L3R 5G1,
Canada

**மனைவி – பிரபாகினி (துளசி)**
416-821-9096 Home: 416-286-3685
**சகோதரன்:**
**சிவயோகநாதன் (ஜேர்மனி):** 004902152555876
**சகோதரி: தயாநிதி (இலங்கை):** 94779582533
**மைத்துனன்: வசந்தன் :** 6479791965
**மைத்துனி: கௌரி :** 6472489160
**மைத்துனி: துசாந்தி:** 6475195925

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

வளர்மதி வீதி மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும்,
முன்னாள் வசிப்பிடமாகவும், நீராவியடி, யாழ்ப்பாணத்தை
தற்போதய வசிப்பிடமாகவும் கொண்டவருமான

**முன்னாள் யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை ஆசிரியருமான**

## வேலுப்பிள்ளை அன்பழகன்



**பிறப்பு**
**31.10.1974**

**இறப்பு**
**02.04.2021**

அன்பின் ஒளி தீபம்

**வேலுப்பிள்ளை அன்பழகன்**

(மட்டுவில் வளர்மதி மக்களின் உள்ளக்குமுறல்)

மட்டுவில்மண் பெற்ற
மாபெரும் ஆசிரியர்
வளர்மதியில் பூத்து
வானம்தொட்டவல்லவன்
ஆரம்ப கல்வியில்
ஆயிரம் மைல் கடந்து
சாதனைகள் பல படைத்த
சரித்திர நாயகன்.
மண்ணில் விதையான
மரண செய்தி!.

மட்டுவிலிலும்
மத்தியிலும் (யாழ்)
பேரதிர்சியுடன்
பேய்அடித்த மரண ஓலம்!
தண்ணீரென கரை புரண்டோடும்
கண்ணீர் மழையில்
மட்டுவில் வளர்மதி .....

சின்ன விழி அசைத்து வரும்
சிங்கார சிட்டுகளை
அள்ளி அனணத்து
அரிய கல்வி ஊட்டிடும்
அற்புத ஆசானுக்கு
நிகர் உண்டோ
நிதர்சனமான இவ்வுலகில் ?

எப்படி உருவானது இந்த
ஆசிரிய இமயம்?
விஞ்ஞானப்பிரிவு உயர்தர கல்வியின் பின்னர்
அன்புவின் ஆரம்ப ஆசிரியத்துவத்திற்கு
மட்டுவில் வளர்மதி கல்வி கூடம்
சுதந்திரத்தையும் வாய்ப்பையும்
வழங்க தன் ஆளுமையால்
வாரி அணைத்துக்கொண்டார்
மட்டுவில் சிறார்களை .
ஐந்தாறு வருடங்கள்
பரீட்சை பெறுபேறுகளால்
தன்னை நிரூபிக்க.
இவரது விருப்பின்படி
ஆசிரிய நியமனம் கிடைத்தது.
இடப்பெயர்வு யாழில் இவர்
திறமையை பறைசாற்ற
கல்வியாளர்கள் பலரை
இவரது கற்பித்தல் நுட்பம் கவர
யாழ் இந்துவும் யாழ் உதயனும்
இவரது திறமையை அங்கீகரிக்க இவரது
சிறார்களின் தரம் 5 பெறுபேறுகளும் மாவட்ட
ரீதியில் சாதனை படைக்க
மிக குறுகிய
காலத்தில் மாவட்ட ரீதியில்
கற்பித்தலில் உச்சம்
தொட ஆயிரக்கணக்கான
சிறார்களின் பரீட்சை ஆளுமையை வளப்
படுத்தும்
கல்வி கூடமாக பரிணாமிக்க
வளர்ச்சி கண்டது அன்பொளி.
கால ஓட்டத்தில் தாய்த் தேச சேவைக்காக
சாவகச்சேரியிலும் கிளை பரப்பி
தென்மராட்சியிலும்
நேரடியாக கற்பித்தார்
கால ஓட்டத்தில்
வடக்கு , கிழக்கு , கொழும்பு
என எல்லா இடங்களிலும் இருந்தும் நேரடி
கற்பித்தலுக்கான அழைப்பு
கிடைத்த போதும்
நேர வரையறையால்
கருத்தரங்குகளாலும்
அன்பொளி வினாத்தாள் சேவையூடாகவும்
பத்திரிகைகள், புலமைசுடர்
வெளியீடுகளூடாகவும்
தேசிய சேவைகளை
விரிவு படுத்திக் கொண்டார் .
முள்ளை முள்ளால் எடுப்பது போல் சிறுவராக
மாறி
சிறுவர்களுக்கு கல்வி வைத்தியம் செய்யும்
உளவியல் வைத்தியமே
இவரது கற்பித்தல் நுட்பம்.
இவரது கற்பித்தல்
உத்தியில் கவரப்பட்டு
தரம் 5 பரீட்சையில் சித்திஅடைந்து இன்று
வைத்தியர் , பொறியியலாளர் , கணக்காளர்கள ,
சட்டவாதிகள் போன்ற பல உயர்பதவிகளில் பலர்
உள்ளனர் இவர்களின் உச்சரிப்பிலும்
சிறார்களின்
எண்ணங்களிலும் மட்டுவில் மக்களின்
மனதிலும் அன்பு வடிவில் உன் ஆத்மா காலம்
உள்ளவரை குடிஇருக்கும் .

உன் பிரிவால் ஆறா துயர் அடைந்திருக்கும்
குடும்பத்தாருக்கு எம் ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதுடன்
உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்

**மட்டுவில் தெற்கு**
**வளர்மதி உறவுகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

இல. 221, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்.
முதலாம் மாடி மட்டும்.
சதுர அடி - 628 (18' X 48' 3")

தொடர்புகளுக்கு:
071 305 9237, 075 261 9446

## சமையல்காரர் தேவை

கொழும்பில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு அனுபவமுள்ள சமையல்காரர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:- 075 8388 236

## மரண அறிவித்தல்



### திருமதி மரிஸ்ரெலா பேதுருப்பிள்ளை

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரிஸ்ரெலா பேதுருப்பிள்ளை (02.04.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.பாவிலுப்பிள்ளை பேதுருப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை றோசமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பாவிலுப்பிள்ளை அன்னம்மா தம்பதியினரின் மருமகளும், டொறின் (ஆசிரியர் யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை), அன்ரன் கிருபானந்தன், எமில் சர்வானந்தன், ஜெயதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுவேந்திரன், தர்சினி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவரான மேரியோசை மற்றும் வில்லியம் அலஸ்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மரியநாயகம், லூர்துமரியலுவிசா மற்றும் அமிர்தநாதன் (அம்புறோஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (05.04.2021) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நாரந்தனையிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித சம்பேதுருவானவர் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனைகள் நடைபெற்று, நாரந்தனை சம் பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாரந்தனை தெற்கு,**
**ஊர்காவற்றுறை**
**077 836 4883**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 10 . 1936



மறைவு 03 . 04 . 2021

### திருமதி மகேஸ்வரி இரத்தினம்

மஞ்சத்தடி இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.மகேஸ்வரி இரத்தினம் நேற்று (03.04.2021) சனிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரவணமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, பரமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஸ்ரீதரன் (ஜேர்மனி), சிவகுமார் (கனடா), சந்திரவதனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுவர்ணா (ஜேர்மனி), நளாயினி (கனடா), பாலகிஷ்ணன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆர்த்திகா (ஜேர்மனி), நளாயினி (கனடா), பாலகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆர்த்திகா (ஜேர்மனி), தர்ஷன் (கனடா), கஜன் (கனடா), சேகரன் (பொறியியலாளர்-CESL), வைஷ்ணவி (மாணவி- யா/இணுவில் மத்திய கல்லூரி), திருமதி.சோபிகா சேகரன் ஆகியோரின் அன்புப் பேர்ததியும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"தாயகம்"**
**மஞ்சத்தடி, இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 07 . 1955



மறைவு 03 . 04 . 2021

### நாகலிங்கம் பஞ்சலிங்கம்

தெல்லிப்பளை கட்டுவன் ஐயனார் கோயிலடியை பிறப்பிடமாகவும் அரியாலை 32 மலர்மகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பஞ்சலிங்கம் நேற்று (03.04.2021) இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு புதல்வனும், நாகலிங்கம் தருமராசா, காலஞ்சென்றவர்களான தம்பிராசா, துரைசிங்கம் மற்றும் செல்வநாயகம், அழகேந்திரன், வனஜா, தனசா, கமலேந்திரன் ஆகியோரது சகோதரனும் தருமராசா ஈஸ்வரி, செல்வநாயகம் ருக்குமணி, அழகேந்திரன் யசோதா, அருந்தவராசா, தயா, கமலேந்திரன் தவமலர் ஆகியோரது மைத்துனரும், சுதன், ஜெனுவா, ஜெகதா, சுமித்திரா, பிரசாந், மிதுலா, லக்சி, அறிஞ்சி, புஜின், புஜித், அஜானா, நிதர்சன் ஆகியோரது பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்பு:**
**076 289 2364**

**தகவல்:**
**கமலேந்திரன் - தவமலர்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 10 . 1941



மறைவு 03 . 04 . 2021

### வரப்பிரகாசம் பெஞ்சமின்

**(ஓய்வுபெற்ற உதவிப்பணிப்பாளர், தொழிற்றுறைத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம், திருகோணமலை)**

மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், காரைநகர், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட வரப்பிரகாசம் பெஞ்சமின் அவர்கள் (03.04.2021) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் உத்தமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தோமா மேரி தம்பதியினரின் மருமகனும்,றோகினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான யோசப், மரியறோசா மற்றும் புஸ்பமலர், டெய்சிமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஜேகப், அற்புதசீலன், பேபிசறோஜா மற்றும், அந்தோனிப்பிள்ளை காலஞ்சென்றவர்களான லூசி, நல்லையா, டானியேல் மற்றும் தவமணி, ஞானமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் இல 20, பேரின்பநாயகம், வீதி.சுண்டிக்குளியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பரி யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 276 7172**
**021 221 5809**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ்ப்பாணம் நகரத்தில் உள்ள வீட்டுத் தோட்டம் ஒன்றைப் பராமரிப்பதற்கு ஆள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் இன்று காலை 9 மணிக்கு நேரில் வரவும்.

**தொடர்பு:**
**392/6, நாவலர் வீதி,**
**(கைலாச பிள்ளையார் ஆலயம் தெற்கு வீதி), யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



**ஆசிரியர் வேலுப்பிள்ளை அன்பழகன்**

எமது பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு பல்வேறு உதவிகளை எமக்கு வழங்கிய ஆசிரியருக்கு எமது கண்ணீர்க் காணிக்கை.

அவரது குடும்பத்தினருக்கு மன ஆறுதலை வழங்க வேண்டுமென்று இறைவனைப்பிரார்த்திப்பதோடு ஆசிரியரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை**

## கண்ணீர்க் காணிக்கை

**திரு.வேலுப்பிள்ளை அன்பழகன்**
**(ஆசிரியர்)**



அன்பழகா! நட்போடு தம்பியாய், நல் ஆசானாய், போற்றிடும் செயற்கரிய வித்தகனாய், தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பினிலே தொடர்ந்து பலகாலம் அறுவர் நாம் பயணித்தோம். அது ஒரு பொற்காலம். ஒன்றாய்,இரண்டாய், பலவாய், எத்தனை எத்தனை நுட்பங்கள் கண்டே மாணவர் உயர்ந்த புள்ளிகள் பெற்றிட அல்லும், பகலும், அர்ப்பணிப்பான சேவைகள் புரிந்தே கைகோர்த்த நல் ஆசானே. உந்தன் பிரிவு எமை வாட்டி வதைக்குதையா! இனி எப்போ காண்போம் அன்பழகா!

**உம்மோடு பயணித்த**
**யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**
**(முன்னாள் )தரம் 5 ஆசிரியர்கள்**
**செல்வி த.குணரஞ்சினி, திருமதி.த.தர்மரத்தினம், திருமதி.மு.சுகிர்தா, திருமதி.ச.விஜயகோபால், செல்வி.க.குவேனி**

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 11 . 1959



மறைவு 03 . 04 . 2021

**கந்தையா தியாகராசா**

சாமியன் அரசடி கரவெட்டியை பிறப்பிடமாகவும் துன்னாலை வடக்கு, தில்லை மாமரத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தியாகராசா அவர்கள் நேற்று (03.04.2021) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி சிவகொழுந்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, கமலேஸ்வரி மற்றும் தங்கவடிவேலு புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவதேவியின் அன்புக் கணவரும், ரிணிதா (ஆசிரியர், இமையாணன் அ.த.க. வித்தியாலயம்), சுகந்தன், ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜீவன் (ஆசிரியர், முல்/ஒட்டுசுட்டான் ம.வி) இனது மாமனும், சுஸ்விந்தின் பேரனும், குணரத்தினம், குணதேவி, ஜெயரத்தினம், இராசரத்தினம், சரஸ்வதி, விஜயராணி, துரைரத்தினம், ஜெயராணி, தருமரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்னாலை வடக்கு கியாங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 317 1323**

## பொய்யை உண்மையாக்கும் வலைத்தளங்கள் !

ஆளும் கட்சி எம்.பி. ஆதங்கம்

சேறடிப்பதற்காகச் சொல்லப்படும் பொய்களையும் உண்மையாக்கும் வலிமை சமூக ஊடகங்களுக்கு இருக்கின்றது. அதனைப் பயன்படுத்தி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்கள் பரப்பப்படுகின்றன. இவ்வாறு ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்த தெரிவித்தார். (ஒ.இ)

## வீடு வாடகைக்குண்டு

யாழ் இந்து கல்லூரிக்கருகில் சகல வசதிகளுமுடைய வீடு வாடகைக்குண்டு
தொடர்பு: **077 833 6848**

## வணிகக் கல்வியும்கணக்கீடும் (O/L)

தரம் 10 & தரம் 11
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்
தனி மற்றும் குழு வகுப்புக்கள்
நியாயமான கட்டணத்தில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
**தொடர்பு: 077 372 1260**

## காணி விற்பனைக்கு

யாழ் நல்லூர் நாவலர் வீதியில் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 1 1/2 பரப்பு காணியும் கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக 2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- **077 60 111 35**

## வேலை வாய்ப்பு

கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு (CIDA Grade C4) பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிவரக்கோவையுடன் 07 நாட்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Civil) (HND,NCT-or Equivalent with Experience)

முகவரி : இல.09, நந்தாவில் வீதி, தாவடி
Email vacancynsc@gmail.com

## தேவை

யாழ்ப்பாணம் நகரில், வீட்டில் தங்கி நின்று வயோதிப அம்மா ஒருவரைப் பராமரிக்கக்க கூடிய பெண் ஒருவர் தேவை. தேவைப்படின் குடும்பமாகத் தங்கி நிற்பதற்குரிய வசதிகளும் செய்து தரப்படும்.

**தொடர்பு:**
**0762276722**

## கண்ணீர் அஞ்சலி

**அமரர்**
**வேலுப்பிள்ளை அன்பழகன்**



அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முகாமையாளர்களும், ஊழியர்களும்**
**ஸ்ரீ லங்கா புத்தகசாலை (யாழ்ப்பாணம்)**
**லங்கா புத்தகசாலை (கொழும்பு)**

## துயர் பகிர்கின்றோம்



நல்லூர் சாரங்கம் இசை மன்றத்தின் உறுப்பினராக இருந்து மன்றத்தின் வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றிய

**திரு. வேலுப்பிள்ளை அன்பழகன்**

அவர்களின்
மறைவுச் செய்திகேட்டு மிகவும் துயர் உற்றதோடு அவர்களின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நல்லூர் சாரங்கம் இசைமன்ற நிர்வாகத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்** 31.10.1974 **மறைவு** 02.04.2021

எமது பாடசாலை தேசிய மட்டத்தில் பல சாதனைகள் புரிய 13 வருடங்கள் முன்னின்றுழைத்து முதுகெலும்பாய்த் திகழ்ந்த எமது முன்னாள் ஆசான்

**அமரர்**
**வேலுப்பிள்ளை அன்பழகன்**
(SLTS I, Primary Trained, B.A, PGDE, MED, குரு பிரதீபா பிரபா விருது))

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி !!!

**ஆசிரியர் நலன்புரிக் கழகமும் பாடசாலைச் சமூகமும்.**
**யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் கீழ்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
01. சமூக ஊடக சந்தைப்படுத்துனர்
02. விற்பனையாளர். ஆண்/பெண்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புக்கு: **077 474 6207**

## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு 1) பெயின்ரர்
2) கூலிவேலையாட்கள்,
3) வேலை பழகுபவர்கள்
தேவை. நிரந்தரமான வேலை, தங்குமிட வசதி உண்டு.

**ஆர்க் தளபாட நிலையம்**
35, கொட்டைகாடு லேன், கோண்டாவில் கிழக்கு.
பஸ்டிப்போ அருகாமை.
021 221 9909, 077 300 1763

## மணமகன் தேவை

யாழ் இந்து 1984 தை உத்தராடம் மகர ராசி பிறந்த விவாகரத்தான சைவ போசனம் உள்ள அரச தொழில் புரியும் மணமகளுக்கு உள்நாட்டில் பொருத்தமான மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்பு:- **076 152 9198**

## இன்றுமுதல் மலிவு விற்பனை

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை.
**230, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**
**076 8219 416, 076 8219 418**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்ப 33 வயது ஆயில்யம் நட்சத்திரம் செவ்வாய் இல்லை. அரச உத்தியோகம் பார்க்கும் மணமக னுக்கு பொருத்தமான அரச உத்தியோகம் உள்ள மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். தொடர்பு பெற்றோர் மட்டும்.
**077 9836097**

## வேலையாட்கள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள சாரூ (Sharu) ஸ்ரூடியோவுக்கு பெண் வேலையாள் தேவை.
தொடர்பு:- **077 248 7442**

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

**பிரிவு-33**

க.பொ.த (சா/த), (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய கால பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

★ English Courses:
Foundation Diploma /
Diploma in English / Spoken English

★ Computer Courses:
Foundation Diploma / Diploma in ICT / Ms-Office/ Website Development / Programming.
★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ்
★ அடிப்படையிலிருந்து

● ICT வகுப்புக்கள்
பாடசாலை மாணவர்களுக்கானது
Grade 10,11,A/L ஆரம்பமாகின்றன

★ SINHALA சிங்கள வகுப்புக்கள்:
பிரபல சிங்கள விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு - 11.00 - 12.30
★ சான்றிதழ் ★ அடிப்படையிலிருந்து
★ எழுத்து, பேச்சு கற்பிக்கப்படும்.

★ IELTS / LIFE SKILLS - A1,B1
BATCH - V
பிரபல விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு 3.00 - 5.00 PM
● Band Score : 7.5 ● 30% Discount
● Sample papers/Mock Exam
● Smart Class room

HND Courses
● HND IT
● HND ENGLISH
● HND IN SOFTWARE ENGINEERING
● HND IN NETWORK ENGINEERING
★ Certificate ★UK, America, Canada, Srilanka.

ஆரம்பம் 10,11/04/2021
10.00 AM, 4 PM

Online பதிவுகள்
076 685 2529
Whatsapp, Viber

**IPS CAMPUS**
பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4640229
076 685 2529

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளைவான்...

வவுனியா போகஸ்வெவ மகா வித்தியாலய வளாகத்தில் நேற்று நடைபெற்ற 'கிராமத்துடன் கலந்துரையாடல்' நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கோத்தாபய ராஜபக்ச முக்கியமல்ல, என்னை இந்த இடத்துக்குக் கொண்டு வந்த கொள்கையும் பலமுமே முக்கியமானதாகும் என்று நான் எப்போதும் கூறி வருகின்றேன். நாம் அதனையே பாதுகாக்க வேண்டும். அரசுக்கும் எனக்கும் எதிராக முன்னெடுக்கப்படும் போலிப் பரப்புரைகளின் நோக்கம் இந்தக் கொள்கையைத் தோல்வியுறச் செய்வதாகும். உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகள் முன்னெடுத்துவரும் இந்தப் போலிப் பரப்புரைகளைத் தோல்வியுறச் செய்து என்னை ஜனாதிபதிப் பதவிக்குக் கொண்டு வந்த கொள்கையைப் பாதுகாப்பேன்.

நுகர்வுக்காக இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருள்களினதும் தரம் தொடர்பில் தொடர்ச்சியாக பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றது. இறக்குமதி செய்யப்பட்ட ஒருதொகை தேங்காய் எண்ணெய் நுகர்வுக்குப் பொருத்தமானதல்ல என அண்மையில் கண்டறியப்பட்டிருப்பது இந்தப் பரிசீலனையின் பெறுபேறாகவே ஆகும். பரிசீலனையைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு நுகர்வுப் பொருள்களின் தரத்தை உறுதிப்படுத்துவது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பொறுப்பாகும்.

நான் அதிகாரத்துக்கு வரும்போது வெள்ளை வான், முதலைகள், சுறா மீன்கள் பற்றி எல்லாம் போலிப் பரப்புரைகளை சமூகமயப்படுத்திய குழுக்கள், தமது போலிப் பிரசாரங்கள் வெற்றியளிக்காத நிலையில் தற்போது சுற்றாடல் பற்றி போலியான மற்றும் மோசமான கருத்துக்களை சமூகமயப்படுத்தி வருகின்றனர். நிறுவனமயப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் அரசுக்கும் எனக்கும் எதிராக முன்னெடுத்துவரும் போலிப் பரப்புரைகளைத் தோல்வியுறச் செய்து என்னை ஜனாதிபதிப் பதவிக்குக் கொண்டு வந்த கொள்கையைப் பாதுகாப்பேன்.

வவுனியா மாவட்டத்தில் நீர்ப் பற்றாக்குறை குறித்து பொதுமக்கள் முன்வைத்த கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றேன். பல தசாப்தங்களாக இருந்துவரும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு ஒரு வருடத்துக்குள் தீர்வை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன்.

போகஸ்வெவ கிராமத்தில் 16 குளங்கள், கிவுல் ஓய திட்டம் உள்ளிட்ட 17 குளங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்குப் பணிப்புரை விடுத்துள்ளேன். தொல்பொருள் மரபுரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் கிராமத்தின் விகாரைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்- என்றார். வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி..எஸ்.எம். சார்ள்ஸ், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், குலசிங்கம் திலீபன், வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சுக்களின் செயலாளர்கள், பாதுகாப்புப் பிரதானிகள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-22)

## வடக்கில்...

கள் இன்று (நேற்று) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 9 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தி வர்த்தக நிலையங்களில் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 4 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அந்தப் பரிசோதனையில் பங்கேற்ற யாழ்ப்பாணம் குமாரசாமி வீதியைச் சேர்ந்த ஒருவக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பணியாற்றும் பட்டதாரி பயிலுநர் ஒருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கிளிநொச்சி வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கிளிநொச்சி கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றார். (ம-26)

## உயர்தரப்...

மாணவர்கள் காலதாமதமின்றி பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுவர் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜூன் மாதத்துக்குள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பெறுபேறுகளை வெளியிட முடியும் என்றும், ஜூலை மாதத்தில் உயர்தர மாணவர்களுக்கான வகுப்புக்களைத் தொடங்க முடியும் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம். பல்கலைக்கழகங்களில் உள்ள வளப் பற்றாக்குறை தொடர்பில் நாம் பரிசீலித்து வருகின்றோம். விரைவில் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ம)

## பக்கச்சார்பான...

கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இது தொடர்பான மனு யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் நேற்றுக் காலை கையளிக்கப்பட்டது. அத்துடன் வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த மாதம் 26ஆம் திகதியிலிருந்து யாழ். நகரப் பகுதி முடக்கப்பட்டுள்ளது. இதில் பாரபட்சமான விடயங்கள் பின்பற்றப்பட்டுள்ளன. வர்த்தகர்களின் செயற்பாடுகள் முற்றுமுழுதாக முடக்கப்பட்ட நிலையில் அதே முடக்கப்பட்ட பகுதிகளில் வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள், நகை அடகு நிலையங்கள் போன்றவை வழமை போல் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. இதை எந்த விதத்திலும் நியாயமாகக் கருதமுடியாதுள்ளது.

கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் சுமார் ஆயிரத்து 440 நகர வர்த்தகர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன என அறிகின்றோம். இதில் 43 பேருக்கு மாத்திரமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப்பிரிவினரால் தெரிவிக்கப்படுகின்றது. இது விகித அடிப்படையில் 3 சதவீதமே.

நகரத்தின் முக்கிய பகுதி முடக்கப்பட்டு வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளதால் உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யும் மொத்த வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுட்டுறவுத்துறை மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகம் செய்ய முடியாதுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்து கொரோனாத் தாக்கம் காரணமாக வர்த்தகத்துறை பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது தங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள தடையானது அவர்களுக்கு மேலும் மிகப் பெரிய அளவில் பொருளாதார ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கொரோனாத் தாக்கம் இருக்கும் நிலையில் யாழ்ப்பாண நகர வர்த்தகர்களை வர்த்தகம் செய்யவிடாது தடை விதித்து அவர்களை பாதிப்படையச் செய்திருப்பது கவலையளிக்கிறது.

தமிழ் சிங்களப் புத்தாண்டு வர இருக்கும் இவ் வேளையில் தாங்கள் ஏற்படுத்திய தடையானது வர்த்தகர்கள், உள்ளூர் உணவு உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபடுவோர் என்று பல துறை சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கு மிகப் பெரிய பாதிப்புக்களையும், மிகப் பெரிய இழப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தகத் துறையை முடக்கிவிட்டு ஏனைய அதிகளவான மக்கள் கூடும் சில நிறுவனங்களுக்கு சகஜமாக செயற்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இது எமது பகுதி வர்த்தகத்துறை பாதிப்படைய வேண்டும் என்ற நோக்கில் பாரபட்சமாக செய்யப்பட்டது என்று வர்த்தகர்கள் கருதுகின்றார்கள்.

பூட்டப்பட்டுள்ள கடை உரிமையாளர்கள் மற்றும் அங்கே தொழில் புரியும் தொழிலாளர்களுக்கான நிவாரணத்தையும் தொழில் இழப்புக்கான இழப்பீட்டையும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆகவே நாம் மேலே குறிப்பிட்ட விடயங்களை கவனத்தில் எடுத்து எமக்கு நீதி வழங்குவதுடன் நாளை திங்கட்கிழமையிலுருந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கடைகளைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-ஒ,5)

## அராலியில்...

தெரியவருவதாவது;

யாழ் நகரப் பகுதியில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றும் குறித்த இளைஞன் கடமை முடித்து கல்லுண்டாய் வீதி ஊடாக சென்று கொண்டிருக்கும்போதே இனந்தெரியாத நபர்கள் வழிமறித்துத் தாக்கியுள்ளனர்.

சம்பவத்தை அறிந்து அராலியில் இருந்து வருகைதந்த ஒருவரை அராலி பாலத்தடியில் வைத்து இனந்தெரியாத நபர்கள் வழிமறித்துக் கத்தியால் குத்தியுள்ளனர். இச் சம்பவத்தால் குறித்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டதுடன் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் தாக்குதலுக்கு உள்ளானவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-27)

## பொலிஸின்...

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்.ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள நாகவிகாரையில் இரவுக் கடமையிலிருந்த பொலிஸாருக்கும் அங்கு பணிபுரிந்த இளைஞனுக்கும் இடையில் இரவு வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாய்த்தர்க்கம் தொடர்ந்து கைகலப்பாக மாறியுள்ளது. இதில் பொலிஸாரின் கை விரலை குறித்த இளைஞன் கடித்துள்ளார். காயத்துக்குள்ளான பொலிஸ் அதிகாரி யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், விரலைக் கடித்த இளைஞரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப)

## புதையல்...

இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் இரவு குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டு தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து சந்தேகத்துக்கிடமான தொழில்நுட்ப உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் வவுனியா பகுதியையும், மற்றவர் அம்பாறை பொத்துவில் பகுதியையும் சேர்ந்தவர் என தெரிவித்த பொலிஸார் மற்றுமொரு சந்தேக நபர் தப்பி ஓடியுள்ளார் என்றும் தெரிவித்தனர். (ப-6)

## தமிழர்களுக்கு...

றுக்கொடுக்கும் பொறிமுறையை இலங்கை அரசு உடன் முன்னெடுத்தே ஆக வேண்டும்' இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

'போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டவுடன் 2009ஆம் ஆண்டில் மக்கள் விடுதலை முன்னணி 14 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, அதில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் குறித்து பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தது.

அத்தோடு போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளனவா?, காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது? போன்ற உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தோம்.

நாட்டின் நீதிமன்ற சுயாதீனம் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும், பொது ஆணைக்குழுக்கள் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் எனவும், சர்வாதிகாரப் போக்கைக் கைவிட்டு சகல மக்களுக்குமான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் நீண்டகாலமாக நாம் கோரி வருகின்றோம்.

தற்சமயம் நிறைவேற்றப்பட்டுள்ள ஜெனிவாத் தீர்மானத்தால் இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என நம்ப முடியாது.

அதேபோல் பொருளாதாரத் தடைகள் ஏற்படும் எனவும் கூறிவிட முடியாது. ஒரு சிலர் அல்லது அரசு செய்த தவறுகளுக்கு ஒட்டுமொத்த நாட்டு மக்களும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டுமா? என்ற கேள்வியும் எங்கள் மத்தியில் உள்ளது' என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 பங்குனி 22 ஞாயிற்றுக்கிழமை (04.04.2021) சிகரம் : 42

ஆரும் குரல் கொடுக்க மறந்தாலும் எப்போதும்
சீறும் மொழியோடு நமக்காய் நீதி கேட்டு– வேரின்
காயாத ஈரமாக கருணை செய்து காத்திட்ட
ஆயராம் இராயப்பு ஜோசப் போல் ஆர் இனி நமக்கு?

*ஒட்டுக்குழு சுவாமிகள்*





ஆயர் இராயப்பு ஜோசப்பின் மறைவு சொல்லும் செய்தி

# வடக்குக் கிழக்கின் எல்லையை தீர்மானித்த தமிழ்த் திருச்சபை

அ.நிக்ஸன்

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் ஆயர் இராயப்பு ஜோசப் மரணிக்கும் வரையும் அதன் பின்னரான சூழலிலும் தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபையின் பங்களிப்பு முக்கியமானதொன்று என்பதில் மாற்றுக்கருத்தில்லை. சமய அடிப்படையில் வடக்குக் கிழக்குத் தமிழ்ச் சமூகத்துக்குள் சிங்கள ஆட்சியாளர்களினால் உருவாக்க முற்பட்ட பிரித்தாளும் தந்திரங்களை அறிந்து, அதனைப் புறம்தள்ளிச் சமயங்களைக் கடந்து ஈழத்தமிழ்ச் சமூகமாக வடக்குக் கிழக்கில் கத்தோலிக்கத் திருச்சபையும் ஏனைய கிறிஸ்த்தவ சபைகளும் செயற்பட்டிருந்தன.


இன்றுவரைகூட அந்த ஒற்றுமை தொடர்கின்றது. சைவ சமயம் (இந்து சமயம் அல்ல) தமிழர்களின் அடிப்படைப் பண்பாட்டு மரபு என்று தமிழ்க் கத்தோலிக்க மக்கள் ஏற்றுக் கொண்டதொரு பின்புலத்தை உணர்ந்து கொண்ட ஆயர் இராயப்பு யோசப்பின் மறைவையடுத்து, சைவ சமய வரலாற்றை ஆய்வு செய்த அருட்தந்தை மரிய சேவியர் அடிகளாரும் இயற்கையெய்தியமை பெரும் துயரமாகும்.

1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இராயப்பு ஜோசப் மன்னார் மறை மாவட்டத்தின் ஆயராகப் பதவியேற்றபோது இரண்டாவது ஈழப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. போரின் மத்தியிலும் பதவியேற்பு வைபவம் அப்போதைய யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை மற்றும் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் மன்னார் மடு தேவாலயத்தில் நடைபெற்றது. பதவியேற்பின்னர் மக்களுடன் பேசிய ஆயர் இராயப்பு ஜோசப் நிரந்தர அரசியல் தீர்வின் அவசியம் தொடர்பான தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

யாழ். மறை மாவட்டத்துடன் இணைந்திருந்த மன்னார் பிரதேசம் 1981 ஆம் ஆண்டு தனி மறை மாவட்டமாக உருவாக்கப்பட்டதன் நோக்கத்தைச் சரியான முறையில் நெறிப்படுத்தியவர் ஆயர் இராயப்பு ஜோசப். அப்போதைய யாழ். ஆயர் தியோகுப்பிள்ளையின் கடுமையான முயற்சியின் காரணமாகவே மன்னார் தனித் தமிழ் மறைமாவட்டமாக உருவானது.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்களினால் அப்போது கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயராக இருந்த மார்க்கஸ் பெர்னாண்டோ, யாழ்.ஆயர் தியோ குப்பிள்ளையுடன் கடுமையாக முரண்பட்டிருந்தார்.

இதன் பின்புலங்களை தர்க்கரீதியாக உணர்ந்து செயற்பட்டவர்தான் ஆயர் இராயப்பு ஜோசப். இலங்கைத் தீவில் பிரித்தானியரின் ஆட்சியின்போதே கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மறை மாவட்டம் தனித்துச் செயற்பட்டிருந்தது. அப்போது அது முற்று முழுதாகத் தமிழ் மாவட்டமாகவே இருந்தது. 1893 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் திருகோணமலை மறை மாவட்டம் உருவானது. ஆயர் இக்னேசியசு கிளெனி திருகோணமலை மறைமாவட்டத்தின் பெயரை மாற்றினார். அதன்படி, 1967 ஒக்ரோபர் 23 ஆம் திகதி திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டம் எனப் பெயரிடப்பட்டது. 1975 டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி திருகோணமாலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் சில பகுதிகள் பிரிக்கப்பட்டுப் புதிதாக அமைக்கப்பட்ட அநுராதபுரம் மறைமாவட்டத்தில் சேர்க்கப்பட்டன.




இங்கேதான் அப்போது யாழ் .ஆயராக இருந்த தியோகுப்பிள்ளை இராஜதந்திரமாகச் செயற்பட்டு 1981 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டத்தை உருவாக்கினார். தனது கட்டுப்பாட்டில் இருந்த மன்னார் மறை மாவட்டப் பகுதியை தனியான மறைமாவட்டமாக உருவாக்க முற்பட்ட போது ஆயர் தியோகுப்பிள்ளை கடும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தார். அதாவது இன ரீதியாக, தியோகுப்பிள்ளை செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டுக்கள் கொழும்பை மையமாகக் கொண்ட கத்தோலிக்கத் திருச்சபையினால் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனாலும் அது சமயப்

**முள்ளிவாய்க்காலில் நடந்தது தமிழ் இன அழிப்பு என்று 2012 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் பகிரங்கமாகவே கூறியவர் ஆயர் இராஜயப்பு யோசப்.**

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
04 ஏப்ரல் 2021



# ஜெனிவாத் தீர்மானமும் பின்னும்..!

○ நிலாந்தன்

**2009** ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் வலைஞர்மடம் தேவாலயத்தை மையமாகக் கொண்டு மருத்துவர்களும் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் இயங்கிக் கொண்டிருந்த ஒரு காலகட்டம். மாதா கோயிலின் பங்குத்தந்தையாக அமரர் அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் இருந்தார். மாதா கோயில் வளாகத்தில் ஒரு பெரிய பதுங்குகுழி இருந்தது. அதைத்தான் மருத்துவர்களும் மதகுருமார்களும் கன்னியாஸ்திரிகளின் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்தி வந்தார்கள். கடைசிக்கட்டப் போரில் கட்டாய ஆட்சேர்ப்பில் இருந்து தப்பி வந்தவர்களுக்கு வலைஞர் மடம் தேவாலயம் ஒரு புகலிடமாகவும் இருந்தது. அந்நாட்களில் அந்தத்தேவாலயம் ஓர் ஊழிக் காலத்தின் சமூக இடையூடாட்ட மையமாகச் செயல்பட்டது. மாத்தளன் துறைமுகமும் வைத்தியசாலைகளும் அந்த மக்களுக்கான அனைத்துலக வாசலாகக் காணப்பட்டன.

அக்கால கட்டத்தில் வலைஞர்மடம் தேவாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த 'மோற்றலோ' தொலைபேசியில் இருந்து சில சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் வெளி உலகத்தோடு தொடர்பு கொண்டார்கள். வன்னியில் இருந்து வரும் தொலைபேசி அழைப்புகளை வன்னிக்கு வெளியே இருந்தவர்கள் எடுப்பதற்கு தயங்கிய ஒரு காலகட்டம் அது. அப்பொழுது மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக இருந்த இராயப்பு ஜோசப் ஆண்டகை வன்னியிலிருந்து வந்த அழைப்புக்களை ஆர்வத்தோடு செவிமடுத்தார். அப்படியொரு தொலைபேசி உரையாடலின்போது ஒரு சிவில் சமூகப் பிரதிநிதி அவரிடம் பின்வருமாறு கூறினார்..."இந்த யுத்தம் ஓர் இனப்படுகொலையில் முடியப்போகிறது. மீனைப் பிடிப்பதற்கு கடலை வடிக்கும் உத்தியை இந்த அரசாங்கம் கையாண்டு வருகிறது. எனவே மீனைப் பிடிப்பதற்காக கடலைப் பிழியும்பொழுது அது நிச்சயமாக ஒரு பேரழிவாகவே முடியும். அதைத் தடுக்க வேண்டும்"என்று..அப்பொழுது ஆயர் திரும்பி கேட்டார் "அப்படிஒரு நிலைமை வந்தால் பெருந்தொகையான மக்கள் இறப்பார்களா?"என்று. "ஆம் குறைந்தது 30 ஆயிரம் பேராவது உயிரிழக்கும் ஒரு நிலைமை ஏற்படலாம் "என்று அந்த செயற்பாட்டாளர் சொன்னார். ஆயர் "ஆண்டவரே" என்றார்." அதை எப்படி தடுப்பது?" என்று கேட்டார்.

அப்பொழுது "நடைமுறையில் இருக்கும் ஒருதலைப் பட்சமான பாதுகாப்பு வலயத்துக்குப் பதிலாக இருதரப்பு பாதுகாப்பு வலயத்தை உருவாக்கவேண்டும். அதை மூன்றாவது தரப்பு மேற்பார்வை செய்ய வேண்டும். அப்படி ஒரு முத்தரப்பு உடன்படிக்கை உருவாக்கப்பட்டால் பேரழிவை தடுக்கலாம்" என்றும் அந்த செயற்பாட்டாளர் சொன்னார். அப்பொழுது உயர் பாதுகாப்பு வலயங்கள் மரணப்பொறிகளாக மாறிக்கொண்டிருந்தன. அந்த உயர் பாதுகாப்பு வலயங்களை அரசாங்கமே ஒரு தலைப்பட்சமாக அறிவித்திருந்தது. அந்தப் பாதுகாப்பு வலயங்கள் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்ல. அதிலும் குறிப்பாக மூன்றாவது தரப்பு ஒன்றின் கண்காணிப்பு அல்லது மேற்பார்வை அந்தப்பாதுகாப்பு வலையங்களுக்கு இருக்கவில்லை. இதுதான் இறுதிக்கட்ட போரில் நிகழ்ந்த அழிவுக்கு முக்கிய காரணம்.


எனவே "இரண்டு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்றாவது தரப்பின் மேற்பார்வையோடு கூடிய ஒரு பாதுகாப்பு வலயத்தை அமைக்குமாறு நீங்கள் கேளுங்கள் "என்று அந்தச் செயற்பாட்டாளர் ஆயரிடம் கேட்டார். "அந்த வேண்டுகோளை நான் கொழும்பில் உள்ள தூதரகங்கள் மற்றும் சம்பந்தபட்டஅதிகாரிகளிடம் முன்வைக்கிறேன். நானே நேரடியாக சென்று சம்பந்தப்பட்டவர்களை சந்தித்து அப்படியொரு முத்தரப்பு உடன்படிக்கைக்குரிய சாத்தியப்பாடுகள் குறித்து உரையாடுகிறேன்" என்று ஆயர் சொன்னார். வாக்குறுதி அளித்தபடி அவர் கொழும்புக்கு போய் தூதரக அதிகாரிகளையும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளையும் சந்தித்தார். ஆனால் அவர் எதிர்பார்த்ததைப்போன்றதொரு பாதுகாப்பு வலயத்தைபோரின் இறுதிக்கட்டம் வரையிலும் உருவாக்க முடியவில்லை.

அப்பொழுது மட்டுமல்ல அதற்குப்பின்னரும் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு பாதுகாப்பும் இல்லை, நீதியும் கிடைக்கவில்லை.

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக தமிழ் மக்கள் பொருத்தமான வெற்றிகள் எதையும் பெறவும் இல்லை. தான் நேசித்த மக்கள் கடந்த 12 ஆண்டுகளாக தொடர்ந்தும் பொருத்தமான வெற்றிகளை பெறவில்லையே என்ற கவலையோடுதான் ஆயர் இராயப்பு ஜோசப் கடந்த புதன்கிழமை உயிர் நீத்திருப்பாரா?

கடைசியாக நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானமும் அதன் உடனடி விளைவுகளும் தமிழ் மக்கள் வெற்றிபெறத் தவறியதைக் காட்டுகின்றன. உள்நாட்டில் கூட்டமைப்பும் புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பில் சில அமைப்புகளும் கூறுவதுபோல அது ஒரு மகத்தான வெற்றியா?

குறிப்பாக புதிய தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கும் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான பொறிமுறை குறித்து மிகையான நம்பிக்கைகள் கட்டி எழுப்பப்படுகின்றன. அது சிரியாவில் உருவாக்கப்பட்ட ஒரு பொறிமுறை போன்றது அல்ல. சிரியாவில் அவ்வாறு உருவாக்கப்பட்ட பொறிமுறை ஐ நா பொதுச்சபையின் கீழ் உருவாக்கப்பட்டது. எனினும் அது கூட ஒரு கட்டத்துக்கு மேல் தேங்கி நின்றுவிட்டதாக இப்பொழுது சுட்டிக் காட்டப்படுகிறது. அதே சமயம் புதிய ஐ நா தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கும் பொறிமுறை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குட்பட்டதாகவே இயங்கும். அப்படி என்றால் மனித உரிமைகள் பேரவைக்குள்ள அத்தனை வரையறைகளையும் அது கொண்டிருக்கும். அதன்படி ஒரு நாட்டுக்குள் அந்த நாட்டின் அனுமதியின்றி இந்த விசாரணைப் பொறிமுறை செயற்பட முடியாது. எனவே இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் நாட்டுக்குள் இறங்கி ஆதாரங்களை திரட்ட அந்தப்பொறிமுறையால் முடியாது. நாட்டுக்கு வெளியே இருந்தபடிதான் அதைச் செய்யமுடியும்.



இப்பொறிமுறை மூலம் திரட்டப்படும் சான்றுகளும் சாட்சிகளும் இலங்கைத்தீவின் அரச படை களுக்கு எதிராக ஒரு நீதி விசாரணையின்போது பயன்படுத்தத்தக்கவை . இலங்கை அரசபடைகளுக்கு எதிரானது என்பது அதன் இறுதி விளைவை கருதிக்கூறின் இப்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துக்கு எதிரானது தான். அப்படிப்பார்த்தால் தன்னை விசாரிப்பதற்காக ஆதாரங்களை திரட்டும் ஒரு பொறிமுறையை எந்த அரசாங்கமாவது தனது நாட்டின் எல்லைக்குள்நுழைய அனுமதிக்குமா? இதுதான் கேள்வி.

எனவே மேற்படி பொறிமுறை இலங்கைக்குள் இறங்கி வேலை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்கப்போவதில்லை. அப்படியென்றால் நாட்டுக்கு வெளியே இருந்தபடிதான் தகவல்களைத் திரட்ட வேண்டியிருக்கும். அப்படித்தான் இதற்கு முன்னரும் சில ஆவணங்கள் நாட்டுக்கு வெளியில் இருந்து தொகுக்கப்பட்டன. அவ்வாறு நாட்டுக்கு வெளியே இருந்து தகவல்களைத் தொகுக்கும் பொழுது அதுவிடயத்தில் புலம்பெயர் தமிழ் சமூகம் தான் அதிகம் வேலை செய்ய வேண்டியிருக்கும். இதற்குமுன் தொகுக்கப்பட்ட ஆவணங்களுக்காகவும் புலம்பெயர்ந்த தமிழர்களே அதிகம் உழைத்தனர். எனவே புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் ஒத்துழைப்பின்றி அந்தப் பொறிமுறையை முன்னெடுக்க முடியாது. இதை சரியாக ஊகித்த காரணத்தால்தான் இலங்கை அரசாங்கம் ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டகையோடு சில நகர்வுகளை முன்னெடுத்திருக்கிறது.

புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்பில் உள்ள சில அமைப்புகளையும் தனி நபர்களையும் பட்டியலிட்டு தடை செய்திருக்கிறது . இப்பட்டியலில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்கள் பல ஏற்கனவே தடை செய்யப்பட்ட பட்டியலில் இருந்து 2015 இல் தடைநீக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது. இதில் தற்பொழுது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 27 பேரின்பெயர்களும் உண்டு. தடை செய்யப்பட்ட உலகத் தமிழர் பேரவையின் தலைவரான கத்தோலிக்க மதகுரு இப்பொழுது யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார். அரசியல் மற்றும் திருச்சபை நடவடிக்கைகளிலிருந்து பெருமளவுக்கு ஓய்வுபெற்று விட்ட அவரை யாழ்ப்பாணத்தின் சாலைகளில் சைக்கிளில் திரியக் காணலாம்.

கடந்த மைத்திரி- ரணில் அரசாங்கத்தில் ஒரு தொகுதி புலம்பெயர்ந்த அமைப்புக்கள் மற்றும் நபர்கள் மீதான தடைகள்அகற்றப்பட்டன. இவ்வாறு தடை நீக்கப்பட்ட அமைப்புகளில் பெரும்பாலானவை 30/1 ஐ.நா. தீர்மானத்துக்குஆதரவானவை என்றும் ஒரு அவதானிப்பு உண்டு. இதன் மூலம் புலம்பெயர்ந்த தமிழர்களை பிரித்தாள முடியும். அதோடு அவர்களை தாயகத்துக்கு வர அனுமதித்து இங்குள்ள கள யதார்த்தத்தோடு தொடர்புற வைப்பதன் மூலம் நாட்டுக்கு வெளியே பிரிவேக்கத்தோடு அவர்கள் முன்னெடுக்கும் அரசியலின் தீவிரத்தை தணிக்கலாம் என்றும் மேற்கு நாடுகளும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் சிந்தித்தன. அதைத்தான் கஜேந்திரகுமார் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார். அதில் அவர் சில அமைப்புகளின் பெயர்களை குறிப்பிட்டு இந்த அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்தின் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்பவை என்றும் சுட்டிக்காட்டினார். இந்த அமைப்புகளில் சில இம்முறையும்ஜெனிவா தீர்மானத்தை உருவாக்க கருக்குழுநாடுகளோடு சேர்ந்து உழைத்திருக்கின்றன என்பதைத்தான் அவை நடத்திய பத்திரிகையாளர் மாநாடுகள் வெளிப்படுத்துகின்றன. ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் மேற்படி அமைப்புகள் ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலில் தீர்மானத்தை ஒரு வெற்றியாக காட்டுவதையும் அதிலுள்ள சில விடயங்களை முக்கிய முன்னேற்றங்களாக காட்டுவதையும் காணமுடிகிறது.13 ஆவது திருத்தம் வடக்கு கிழக்கில் மாகாணசபை தேர்தல் தீர்மானத்தில் தமிழ் என்ற வார்த்தை இணைக்கப்பட்டமை; சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான ஒரு பொறிமுறை போன்றவையே அவர்கள் சுட்டிக்காட்டும் முன்னேற்றங்கள் .

(09ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30.3. 2021 அன்று பத்திரிகையில் ரங்க ஜய சூரிய UNHCRC RESOLUTION IS A TRAGEDY THE GOVERNMENT REACTION IS A TRAGIC COMEDY என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு சுருக்க வடிவில் தரப்படுகிறது.**



# இக்கட்டில் இலங்கை

தமிழில்: ந.பரமேஸ்வரன்

கடந்த வாரம், இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் என்பவற்றை ஊக்குவிக்கும் முகமாக ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஜோ பைடன் நிர்வாகமும் இணைந்து ராஜபக்ச அரசாங்கத்துக்கு கொடுத்த ஒரு எச்சரிக்கை .இந்தத் தீர்மானத்தின் பின்னணியில் புலம்பெயர் புலி ஆதரவு அமைப்புகள் செயற்பட்டுள்ளன. இது அவர்களுக்கு கிடைத்த ஆறுதல் பரிசு என்று சொல்லலாம்.




ஐ.நா.மனித உரிமைகள் சபை ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாரின் தீர்மானம் யாஸ்மின் சூக்காவின்'உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பின்'அறிக்கையை சாராம்சமாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இது ஒரு பிரயோசனமான வரைதான். சிவில்கட்ட மைப்புக்கள் இராணுவமயப்படுத்தப்படல், சுயாதீனக் கட்டமைப்புகள் அரசியல்மயப்படுத்தப்படல், இருபதாவது சட்டத்தின் கீழ் நீதித்துறை உட்பட, சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்சங்கள் உட்பட உயர் அதிகாரிகளையும் சமூகசெயற்பாட்டாளர்களையும் கண்காணித்தல் போன்ற விடயங்கள் ஒரு ஜனநாயக இடைவெளியை ஏற்படுத்தியுள்ளன. இவை யாவும் பெரும் தாக்கத்தை உலக அளவில் ஏற்படுத்தவில்லை.மோடியின் இந்தியா, ட்ரம்பின் அமெரிக்கா,போல் சணரோவின் பிரேஸில் போன்ற நிர்வாகங்களில் ஜனநாயகம் மேலும் கீழுமாக இருந்துள்ளது.அத்துடன் .ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் இந்தத் தீர்மானம் ஒரு பிடியாணையுமல்ல.

இந்த ஆவணம் இறுதியுத்தத்தில் இடம்பெற்றவை எனக்கூறப்படும் விடயங்கள் ,( ஏனைய பயங்கரவாத இயக்கங்களிலிருந்து வேறுபட்ட புலிகளை வெல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட) மருத்துவமனைகள் மீதான ஷெல் தாக்குதல்களில் காயமடைந்த பொதுமக்கள் பற்றிய தருஸ்மான் அறிக்கையை அடிப்படையாக கொண்டவை தருஸ்மான் அறிக்கை, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பதற்கு அந்தக் குழுவுக்கு விசா வழங்கப்படாத நிலையில், புலிகளின் ஊதுகுழலான மேற்குலகத்தால் உயிரிழப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் காட்டி தயாரிக்கப்பட்டது.யுத்தக் குற்றங்களில் ஈடு பட்டதாகக் கருதப்படும் படையினரைத் தண்டிப்பதற்கான ஒரு முன்னெச்சரிக்கை ஆவணமாகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது. இலங்கை அரசாங்கம் இதனை நிராகரித்திருந்தது. ஆனால் மஹிந்த ராஜபக்ச18 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் றப்பர் முத்திரை நாடாளுமன்றத்தையும் அரசியல்மயப்படுத்தப்பட்ட நீதித்துறையையும் உருவாக்கி நாட்டை கேவலப்படுத்தி நீதித்துறை மீது நம்பிக்கையிழக்கச் செய்துவிட்டார்.

மஹிந்தவின் இளைய சகோதரர் கோத்தாபய ராஜபக்சவும் 20 வதுதிருத்தத்தின் மூலம் அதே பாதையில் நாட்டைக் கொண்டு செல்கிறார். ஆனாலும் மிச்செல் பச்லெட் அம்மையார் சர்வதேச அரங்கில் இலங்கையின் பலவீனமான கட்டமைப்பை இல்லாமல் செய்துவிட்டார்.

> **இந்தத் தீர்மானத்தால் இலங்கையில் ஏற்படப்போகும் பொருளாதார வீழ்ச்சியை இனி சர்வதேசம் கண்டுகொள்ளாது. பொருளாதார சிக்கலில் இருந்து மீள்வதற்காக இனிமேல் ஒருவரும் உதவமுன்வரமாட்டார்கள். இவர்களது இனவாத ஊளையிடல்கள் தொடந்தும் சிறுபான்மையினரை வன்முறைப் பாதையை நாடவே வழிகோலும்.**

இதேவேளை, ஐ.நா.மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் கடினமானது. துன்பகரமானது. இந்தத் தீர்மானத்தால் ஒருவருக்கும் ஒரு பிரயோசனமு மில்லை. இந்த தீர்மானத்தை கொண்டு வந்த நாடுகளுக்குக்கூட புவிசார் அரசியல் ரீதியாகக் கூட ஒரு பிரயோசனமுமில்லை. அத்துடன் இந்தத் தீர்மானம் தொடர்பாக அரசும் பாரதூரமாக, ஒரு துன்பியலான விடயமாகக் கருதவில்லை.

" இந்தத் தீர்மானம் சட்டவிரோதமானது. வாக்கெடுப்பு எமக்கு பெருவெற்றி . 47 நாடுகளில் 22 நாடு கள்ஆதரவாக வாக்களித்துள்ளன; 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்துள்ளன; 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை; வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத நாடுகள் இலங்கைக்கு ஆதரவளித்துள்ளன" என்று வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்த்தன சொல்லியிருந்தார்.

அரசாங்கத்துடன் இணைந்து ஆங்கில பத்திரிகையொன்றை நடத்திவரும் வர்த்தகர் ஒருவரின் பத்திரிகை சர்வதேசத்திடமிருந்து படையினரைப் பாதுகாக்கும் நோக்குடன் சட்டமியற்றப் போவதாகவும் செய்தியொன்றை வெளியிட்டது.

இலங்கை ஏனைய நாடுகளை தனது சட்டத்தை ஏற்குமாறு எப்படி வலியுறுத்தலாம் என்பதைப் பற்றி விளக்கமளிக்க வில்லை.

உள்நாட்டுச் சட்டங்கள் சர்வதேச நீதியை பெற்றுக்கொடுப்பதற்குப் போதுமானவையல்ல.

குற்றமிழைத்ததாக கருதப்படுபவர்களை வெளிநாடுகளில் தண்டிக்காமல் பாதுகாப்பதற்காக உள்நாட்டில் சட்டமியற்றுவதென்பது ஒரு மோசமான செயற்பாடே.

இந்தத் தீர்மானம் அரசங்கத்தின் வெளியுறவுக் கொள்கையின் தொடர்ச்சியான தோல்வியை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் இந்தத் தீர்மானம் துரிதப்படுத்தும் விடயத்தில் இன்னமும் அடிமட்டத்திலேயே உள்ளது.

முன்னைய அரசு வழங்கிய இணை அனுசரணையிலிருந்து இப்போது விலகியதால் தற்போதைய அரசு இலங்கையை ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது. முன்னைய அரசு பிரச்சினை களை திசை திருப்பாமல் வெற்றிகரமாக உலகத்துடன் தொடர்பாடலை மேற்கொண்டது.கோத்தாபயவின் தீர்மானம் இராணுவத்தினரும் சிவில் தலைவர்களும் சில நாடுகளில் நீதி விசாரணையை எதிர்கொள்ள வேண்டிய சூழலை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினையிலிருந்து அரசாங்கம் எவ்வாறு விடு படப் போகிறது என்று தெரியவில்லை.

ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது வெளியுறவுக் கொள்கை பற்றிய புரிதல் இல்லாமல் வீதியில் நிற்பவர்கள் போல் சம்பந்தப்பட்டவர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இவர்களது அதிகப் பிரசங்கித்தன மான கருத்துக்கள் ஒரு கட்டத்தில் இந்தியாவையும் மேற்குலகத்தையும் சினம் கொள்ளச் செய்யும்.

இந்தத் தீர்மானத்தால் இலங்கையில் ஏற்படப்போகும் பொருளாதார வீழ்ச்சியை இனி சர்வதேசம் கண்டுகொள்ளாது. பொருளாதாரச் சிக்கலில் இருந்து மீள்வதற்காக இனிமேல் ஒருவரும் உதவ முன்வரமாட்டார்கள். இவர்களது இனவாத ஊளையிடல்கள் தொடந்தும் சிறுபான்மையினரை வன்முறைப் பாதையை நாடவே வழிகோலும். சிங்கள பௌத்த மேலாதிக்கக் கோட்பாடு நாட்டின் மீது மேற்குலகத்துக் கு எரிச்சலை உண்டாக்கும். இதன் விளைவுகள் பாரதூரமானவையாகவே இருக்கும். ஒட்டுமொத்தத்தில் இந்த அரசாங்கம் இலங்கையை ஒரு இக்கட்டான, தர்மசங்கடமான நிலைக்குக் கொண்டு சென்றுகொண்டிருக்கிறது. ■





# உன் காலடி ஓசை

- மிஸ்ரா ஜப்பார்

தியானிக்கப்பட்ட பிரார்த்தனையின்
மோகன வெறுமையின் ஜீவான்மா
இரவின் நிசப்த கொந்தளிப்புக்கள்
ஓர் பட்சியின் தூவலென
அடியாழமற்று மெல்ல
கசிந்து கொண்டிருக்கிறது

இலக்கற்று அலைந்து திரியும்
ஆழ் கடலின் இரகசிய தாழ்வாரங்களாய்
கொதிக்கிறது பனி மூட்டம்

நீ என்னுள் சுகந்தமேறி
கிரகிக் கிடக்கிறாய்
ஓர் அழிந்து போன
நதியின் சீற்றமாய்
நீ தீட்டிக் கொண்டிருக்கும் ஓவியம்
குருதி படிந்த ஓர் அத்தியாயத்தின்
பெரும் சாப மீட்சியடா
என் அத்தனை சோகமும்
உன் ஒற்றைப் புன்னகையில்
காணும் அமைதியது காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சதீஷின் உயிரைப் பறித்தது சட்டவிரோத மின்சாரமா?

## இன்னும் வெளிவராத மர்மங்கள்

○ உளவாளி

அம்மம்மா! இண்டைக்கு வெள்ளிக்கிழமை , வேலை இல்லை. வாகனத்தை கழுவிப் போட்டு முதலாளி வீட்டில விட்டிட்டு வாறன்' என்று சொல்லிவிட்டு வாகனத்தோடு புறப்பட்டான் சதீஷ். அவனை வழியனுப்பி விட்டு வந்த அம்மம்மாவுக்கு சில மணித்தியாலங்களில் இடியாக வந்து தலையில் இறங்கியது அந்தச் செய்தி.

" சதிஷுக்கு கறண்ட் அடிச்சு சீரியஸாம்"

அம்மம்மாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை, தலையிலும் வயிற்றிலும் அடித்து அழத் தொடங்கிவிட்டாள்.

ஓட்டோ ஒன்றில் உடனடியாகவே மருத்துவமனைக்கு ஓடிச் சென்ற அம்மம்மா தன் பேரனின் உயிரற்ற உடலையே காணமுடிந்தது. சதீஷ் அவர்களை விட்டு பிரிந்து போயிருந்தான்.

### துயரின் முன்கதை

சுந்தரலிங்கம் சதீஷ்வரன்.

கிருஷ்ணபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த 25 வயதேயான சதீஷ்வரன் துயரங்களின் பிள்ளையாகவே பிறந்தவன். சதீஷ்வரன் தாயின் வயிற்றில் 8 மாத சிசுவாக இருந்தபோது அவர்கள் தங்கள் சொந்த இடத்தை விட்டு இடம்பெயர்ந்து, அக்கராயனில் வசிக்க நேரிட்டது. இடையிடையே சில இரகசியப்பாதைகள் வழியே, கிளிநொச்சிக்கு சிலர் சென்று வந்ததை அறிந்த சதீஷின் தந்தை தானும் அப்படிச் சென்று, வீட்டில் உள்ள கிடுகுகளை எடுத்துவரப் புறப்பட்டார். அந்தக் கிடுகுகளைக் கொண்டுவந்தால், தறப்பாள் கொட்டில் வெம்மைக்குள் தகிக்கும் வாழ்வுக்கு ஒரு முடிவுகட்டலாமென எண்ணியிருந்தார். ஆனால் அவருடைய துரதிர்ஷ்டம், கிடுகு எடுக்கக் கிளிநொச்சிக்குப் போனவர் அங்கு இராணுவத்தினரது கண்களில் சிக்கி விட, அவர் அதற்குப் பிறகு திரும்பி வரவேயில்லை.

கணவனை இழந்த துயரத்தில் சதீஷின் தாயார் நோய்வாய்ப்பட்டார். சதீஷ் பிறந்து ஒரு வயதான போது, தாயும் நோயின் பிடியில் சிக்கி உயிரிழக்க, சதீஷ் பெற்றோரை இழந்த பாலகனானான். அவனும், அவனது அக்காவும், அண்ணனும் பெற்றோரை இழந்து நிர்க்கதியான போது, அவர்களைக் காக்கும் பொறுப்பை அம்மம்மாவும், மாமாவும் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகு கிளிநொச்சி பாரதிபுரம் மகாவித்தியாயலத்தில் தரம் 10 வரை கற்றுவிட்டு, அப்படியே வேலைக்குப் போகத் தொடங்கினான் சதீஷ். அப்படியே கண்டியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்து அங்கிருந்தபடியே மேசன் வேலை செய்பவர்களுக்குத் துணையாளாக சதீஷ் வேலைக்குப் போய்வந்தான். அந்தப் பணத்தை முதலிட்டு, லீசிங்கில் ஒரு மோட்டார் சைக்கிளும் எடுத்திருந்தான். கண்டியில் தங்கி வேலை செய்ததால், மாதத்துக்கு ஒரு தடவையே கிளிநொச்சிக்கு வந்துபோவான். அவனது அக்கா திருமணம் முடித்து யாழ் சாவகச்சேரி பகுதியில் வசித்து வருகிறார். அக்காவுக்கென வழங்கப்பட்ட வீட்டில் தான் அண்ணனோடும், அம்மம்மாவோடு சதீஷ் வசித்து வந்தான். சதீஷின் அண்ணனுக்கு இறுதி யுத்தத்தின் போது, முள்ளிவாய்க்காலில் காயமேற்பட்டதால், அவரால் வேலைக்கு போக முடியாது, சதீஷின் உழைப்பிலேயே அந்தக் குடும்பம் சீவித்தது.

இப்படியே போய்க்கொண்டிருந்த சதீஷின் வாழ்க்கையில் குறுக்கிட்டது கொரோனா. கண்டியில் தங்கி நின்று வேலை செய்வதெல்லாம் கொரோனாவால் சிக்கலாகிப் போக, மீண்டும் கிளி நொச்சிக்கே வந்தான். வந்தவன் சும்மா இருக்கவில்லை. கிளிநொச்சி சந்தையில் மீனைக் கொள்வனவு செய்து அதனை வாகனத்தில் வைத்து விற்கும் தொழிலுக்குச் சென்றான். விற்று முடிந்ததும் வாகனத்தை முதலாளியின் வீட்டிலேயே விட்டு வருவான். ஆனால் என்னவோ முதல் நாள் வாகனத்தை வீட்டில் கொண்டு வந்து விட்டவன், காலையில் அந்த வாகனத்தோடு புறப்பட்டான். அப்படிக் கிளம்பியவன் பின்னர் திரும்பி வரவே முடியாத இடத்துக்குப் போய்விட்டான்.

## மின்சாரம் இல்லாத வீட்டில் சிக்கிய தடயங்கள்

## கடைசிக் கணங்களில் என்ன நடந்தது?



### போனவன் வரவில்லை

" வழக்கமாக மாலை மீன் வியாபாரம் முடிந்ததும் வாகனத்தை எங்களது வீட்டில் விட்டுவிட்டு அருகிலுள்ள மைதானத்தில் விளையாடி விட்டேவீட்டுக்குச் செல்வான். ஆனால் சம்பவத்துக்கு முதல் நாள் வாகனத்தை வீட்டுக்கு கொண்டு சென்றுள்ளான். காலை தொலைபேசியில் அழைப்பெடுத்து "வாகனத்தை எடுக்க நான் வரவா?" எனக் கேட்டேன். அதற்கு அவன் " வேண்டாம். குளிச்சிட்டு நானே கொண்டு வாறன். வாகனத்தைக் கழுவவும் வேணும்" என்று சொல்லிவிட்டு, காலை 7.30 மணியளவில் கடைக்கு வந்தான்.

கடையில் இருந்து தளபாடம்(சோக்கேஸ்) ஒன்றை ஏற்றிக்கொண்டு எனது அம்மாவின் வீட்டில் கொண்டு போய் இறக்கினான். அபப்டியே வாகனத்தை அருகில் உள்ள சிறிய குளத்துக்கு ஓட்டிச் சென்று வாகனத்தை கழுவிவிட்டு அதனை என் அம்மாவின் வீட்டில் கொண்டுவந்து நிறுத்தி யுள்ளான். அங்கிருந்த என் அம்மாவிடம் " அம்மம்மாவுக்கு பச்சைப் பாக்கு பிடுங்க வேணும்" என்று கூறிக்கொண்டிருந்த போது, அவனுக்குத் போது தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அப்படியே சதீஷ்,வாகனத்தையும் எடுத்துக்கொண்டு கடையடிக்கு வந்து சேர்ந்தான். அவனும் வர, வேறு இருவரும் மோட்டார் சைக்கிளில் கடையடிக்கு வந்தனர். அவர்களோடு அவன் கதைத்துக் கொண்டிருந்த போது,

"இண்டைக்கு யாவாரம் இல்லைத்தானே . நீ வீட்டை போய் றெஸ்ட் எடு" எனச் சதீஷிடம் கூறினேன். உடனேயே அவன் வாகனத்தை எடுத்துக் கொண்டு போக ஆயத்தமானான்.

"எங்கயடா போறாய்?" என்று நான் கேட்க, அவனிடம் வந்தவர்கள்

" அண்ணை ஒரு நாய்க்கூடு ஏத்தி இறக்க வேணும்" என்றனர். " இது என்ர சொந்தத் தேவைக்கு எடுத்தது. வாடகைக்கு விடுறேல்ல " என்று கொஞ்சம் இறுக்கமாக நான் சொன்னேன். உடனே,

"போற வழியில் தானே அண்ணை. பிரண்ட்ஸ் பெடியள் கேக்கிறாங்கள். மாட்டன் எண்டு சொல்லேலாமல் இருக்கு , கெதியா ஏத்தி இறக்கிட்டு வாகனத்தை உங்கட வீட்ட விட்டிட்டுப் போறேன்" எனச் சதீஷ் சொல்ல, நானும் வாகனத்தைக் கொண்டு செல்லச் சம்மதித்தேன்.

9.45 மணி போல அவன் வாகனத்தோடு போய்விட்டான். பத்தரை மணி போல வீட்டுக்கு போன் பண்ணி, " சதீஷ் வாகனத்தைக் கொண்டு வந்து விட்டிட்டானோ?" எனக் கேட்க, "இல்லை" என்ற பதிலே கிடைத்தது. சிறிது நேரத்தில் எனது தொலைபேசிக்கு புதிய இலக்கமொன்றில் இருந்து அழைப்பு வந்தது.

" அண்ணை, நாங்கள் அப்போதை நாய்க்கூடு ஏத்த சதீஷைக் கூட்டிக் கொண்டு போன ஆக்கள் கதைக்கிறம். சதீஷுக்கு கறண்ட் அடிச் சுட்டு. ஆளை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போறம்" எண்டு சொல்லிவிட்டு 'கட்' செய்துவிட்டார்கள்.

நான் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சென்ற போது அவர்களைக் காணவில்லை. அங்கிருந்த காவலாளி ஒருவரை விசாரித்தபோது "மின்சாரத்தால் தாக்குண்டு கொண்டுவரப்பட்டவர் இறந்துவிட்டார். அவர் வழியிலேயே உயிரிழந்து விட்டார் " என்று கூறினார். "என்று சதீஷின் இறுதிக்கணங்களில் என்ன நடந்தது என்பது பற்றி, அவன் பணிபுரிந்த முதலாளி விபரித்தார்.

(மறுபக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனம் பொய் சொல்லுது

நாய்க்கூடு ஏற்றப்போன இடத்தில் சதீஷுக்கு என்ன நடந்தது என்று , அந்த வீட்டினை சேர்ந்தவர் எம்மிடம் தெரிவித்த தகவல்கள் இவை.

"எங்களுக்கு இரண்டு வீடு. ஒண்டை மகளுக்கு சீதனமாக் கொடுத்துவிட்டோம்., முன் வீட்டில் நாங்கள் இருக்கிறோம் . மகளின் வீட்டில் தான் இந்த சம்பவம் நடந்தது. நங்கள் இருக்கும் வீட்டின் மின்சாரத்துக்கான பணத்தைச் செலுத்தாததால் 15 நாட்களுக்கு முன்னரே மின்சார சபையினரால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது.



இந்த நிலையில் சிலர் தவறான ஒரு தகவல் ஊரெல்லாம் பரப்பி வருகிறாகள், அதாவது எங்கள் வீட்டின் மின்னிணைப்புத் துண்டிக்கப்பட்டுவிட்டதால், மகளின் வீட்டில் இருந்தே நாங்கள் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றதாகவும், அந்த சட்டவிரோத மின்சாரத்தில் சிக்கியே சதீஷ்வரன் என்பவர் இறந்தார் என்றும் சிலர் சொல்கிறார்கள். ஆனால் அது அப்பட்டமான பொய். அதில் உண்மையில்லை.

ஆறு மாதங்களுக்கு முன்னர் இரண்டு டோமன் இன நாய்க்குட்டிகளை வாங்கி , வளர்த்து வந்தோம். தொடந்தும் அவற்றை வளர்ப்பது சிரமம் என்பதால் விற்பனை செய்ய முடிவெடுத்து ஒரு நாயை விற்றுவிட்டோம். மற்றைய நாயை எங்களூரில் வசிக்கும் ஒருவரே வாங்க இருந்தார்.அவர் வாகனம் ஒன்றைப் பிடித்து வந்திருந்தார்.(அதுவே சதீஷ் கொண்டுவந்த வாகனம்)

வாகனத்தை காணிக்குள் நிறுத்திவிட்டு, நாயோடு சேர்த்து கூட்டையும் வாகனத்தில் ஏற்றினோம். கூடு அரைவாசிக்கு மேல் ஏற்றப்பட்ட நிலையில் திடீரென நாய் குரைத்தது. இதனால் வாகனத்திலிருந்து கூட்டை ஏற்றிக்கொண்டிருந்த சதீஷ் தனது பிடியை தளரவிட, சரிந்த நாய்க் கூட்டின் கூரைத்தகரம் முன் பகுதியில் போடப்பட்டிருந்த 'பல்ப்'பின் வயரில் வெட்டுப்பட்டு, மின்சாரம் நாய்க்கூட்டில் பாய்ந்தது. இதனால் கூட்டைத் தூக்கிய நான்கு பேரும் மின்சாரத்தால் தாக்குண்டனர். சதீஸ்வரன் பாட்டா அணிந்திருக்கவில்லை. மின்சாரத்தால் தாக்கப்பட்ட சதீஸ்வரன் கீழே விழுந்தார். வீழ்ந்தவர் "தண்ணீர் தண்ணீர்" எனக் கேட்டார். தண்ணீர் கொடுத்தபோது தண்ணீர் இறங்கவில்லை.

மகளின் கணவர் அப்போதுதான், யாழ்ப்பாணத்தில் இருந்து ஓட்டோவில் வந்திருந்தார் . நாய்க்கூடு ஏற்றிய வாகனத்தை எடுத்து வெளியில் விட்டுவிட்டு அவரை ஓட்டோவில் ஏற்றி, கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பரிசோதித்த மருத்துவர் சதீஷ் இறந்துவிட்டார் எனக் கூறினார். உண்மையில் இதுதான் நடந்தது.

- என்று அந்த வீட்டினைச் சேர்ந்தவர் சத்தியம் செய்யாத குறையாகச் சொல்கின்றார்.

## மின்சாரம் இல்லாமல் எப்படி எரிந்தது பல்ப்?

ஆனால் சம்பவம் நடந்த வீட்டின் அயலவர்களும், ஊரவர்களும் சொல்லும் தகவல்கள் சந்தேகத்தைக் கிளற வைத்தன.

"அவர்கள் வீட்டின் மின் இணைப்பு பதினைந்து நாட்களுக்கு முன்பாக துண்டிக்கப்பட்டாலும், அந்த வீட்டில் மின்குமிழ் (பல்ப்) தொடர்ந்து ஒளிர்ந்ததை நாங்கள் கண்டோம். அப்படியானால் எங்கேயோ அவர்கள் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றிருக்க வேண்டும். ஒருவருக்கு மின்சாரம் தாக்கினால் வீட்டில் உள்ள பெண்களாவது சத்தமிடுவது வழக்கம் தானே. ஆனால் அன்றைக்குச் சம்பவம் நடந்த போது வீட்டில் நான்கு பெண்கள் இருந்தனர். ஆனால் ஒரு சிறு சத்தமேனும் வெளியில் கேட்கவில்லை. அந்த இளைஞன் மின்சாரத்தால் தாக்குண்டு, அபாயக் கட்டத்தில் இருந்தபோதும், அயலில் இருந்த எவரையும் உதவிக்கும் கூப்பிடவில்லை. ஓட்டோவில் இரண்டு கால்களும் வெளியே தெரிந்த நிலையில் கொண்டு ஒருவரைக் கொண்டு செல்வதைக் கண்டுவிட்டே அவர்களது வீட்டுக்கு நாம் ( அயலவர்கள்)சென்றோம். அப்போது தான் அவர்கள் அந்த இளைஞனுக்கு மின்சாரம் தாக்கியதைக் கூறினர். " என்று ஒரே மாதிரிச் சொல்கிறார்கள் ஊரவர்கள்.

## தண்ணீர் கேட்டார்

"வாகனத்தை வாடகைக்கு பிடித்து நாய்க்கூடு ஏற்றுவது பற்றி நான் சதீஸ்வரனோடு கதைக்கவில்லை. அவரது முதலாளியிடமே கதைத்தோம். அவர் தான் வாகன திறப்பைக் கொடுத்து ஏற்றி இறக்குமாறு கூறி சதீஸ்வரனை எம்மோடு அனுப்பிவைத்தார். வாகனத்தை வீட்டுக்குள் கொண்டுபோய், நாயோடு சேர்த்து கூட்டையும் தூக்கி ஏற்றினோம். அங்கே முன்பக்கத்திற்கு போடப்பட்டிருந்த பல்புக்கு கொடுக்கப்பட்டிருந்த மின்சார வயரில் நாய்க்கூடு சரிந்து தட்டுப்பட்டு , அதிலிருந்தே மின்சாரம் தாக்கியது. கீழே விழுந்த சதீஸ்வரன் தண்ணீர் கேட்டார். அவர் வாய்க்குள் வெற்றிலை இருந்ததால் வெற்றிலையை எடுத்துவிட்டு தண்ணீரைக் கொடுத்தோம். அம்புலன்ஸ்க்கு அறிவித்த போது தாமதமாகும் எனக் கூறினர்.

அந்தச்சமயம் வீட்டு உரிமையாளர் கிளிநொச்சியிலிருந்து ஓட்டோவில் வந்திருந்தார் . அவரது ஓட்டோவில் ஏற்றிக் கொண்டுசென்று மருத்துவமனையில் அனுமதித்தோம் " என்று தன்னுடைய கோணத்தில் சம்பவத்தை விபரிக்கிறார் சதீஷை வாகனத்தோடு அழைத்துச் சென்ற இளைஞர்.



மின் வயரில் உள்ள அடையாளம்

### 1 சந்தேகம்

மருத்துவமனைக்கு கொண்டு சென்று அவரை அனுமதித்தவர்கள் பெயர் விபரங்களை கொடுத்து பதிவு எதனையும் செய்யவில்லை. மருத்துவமனையில் இருந்து சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்கு சதீஸ்வரனின் உறவினர்கள் வந்த போது, மின்சார சபை வாகனத்தில் இரண்டு ஊழியர்கள் வந்திருந்தனர். சதீஷின் உறவினர்களைக் கண்டதும் அவர்கள் நழுவிச் சென்றுவிட்டனர் எனக் கூறப்படுகிறது. மதியம் ஒரு மணியளவில் பொலிஸார் சகிதம் நீதிவான் வந்தபோதும், முன்பு வந்திருந்த மின்சார சபை ஊழியர்கள் அதிகாரி ஒருவரோடு வந்திருந்தனர். சம்பவ இடத்துக்கு பொலிஸார் வந்து அறிவிக்காமல் ஊழியர்கள் ஏன் வந்தனர் என கேட்டனர். அப்போது அயலில் உள்ள கடைக்காரர் அறிவித்தே தாம் வந்ததாக மின்சார சபை ஊழியர்கள் கூறியுள்ளனர். பக்கத்து வீட்டுக்கே மின்சாரம் தாக்கியது தெரியாத போது கடைக்காரருக்கு எவ்வாறு தெரிந்தது? அந்தக் கடைக்காரரும் தனக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்தது பின்னரே தெரியும் என்று கூறியுள்ளார். அப்படியானால் மின்சார சபையினருக்கு அறிவித்தது யார்? அவர்கள் ஏன் கடைக்காரர் அறிவித்ததாகச் சொல்லவேண்டும்?

### 2 சந்தேகம்

மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் வீட்டில், சம்பவம் இடம்பெற்ற பின்னர் பொலிஸார் பரிசோதித்தபோது, அவர்களது வீட்டுத் தண்ணீர் தாங்கியில் தண்ணீர் முழுதுமாக நிறைக்கப்பட்டிருந்தது. இணையப் பாவனைக்கான ரவுட்டர் ஒன்று சில நிமிடங்களுக்கு முன்னர் வரை இயங்கியதால் உண்டான சூட்டுடன் இருந்துள்ளது. அத்தோடு சம்பவம் நடந்த வீட்டில் இருந்து , மின்சாரம் இல்லை என்று சொல்லப்படும் வீட்டுக்கு இடையில் உள்ள மரங்களில் மின்வயர் கட்டப்பட்டிருந்த அடையாளங்கள் காணப்பட்டுள்ளன. அப்படியானால் மின்சாரம் துண்டிக்கப்பட்ட வீட்டுக்கு எடுக்கப்பட்ட சட்டவிரோத மின்சாரத்தில் சிக்கியே சதீஷ் இறந்தாரா?

### 3 சந்தேகம்

குறித்த வீட்டின் உரிமையாளர் முன்பு மின்சார சபையில் பணிபுரிந்துவிட்டு, தற்போது பிரதேச சபையில் வேலை செய்கிறார் எனவும், 'அந்த அறிமுகத்திலேயே மின்சார சபை ஊழியர்களை அழைத்துவந்து தடயங்களை அவர் அகற்றியிருக்கலாம் எனவும் இறந்தவர்களின் உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அது உண்மையா? சம்பவ இடத்துக்குச் சென்ற மின்சார சபை ஊழியர்களை விசாரணை செய்தால் பொலிஸார் இந்த விடயத்தை இலகுவாகக் கண்டுபிடிக்கலாமே.

### 4 சந்தேகம்

வாகனத்தில் ஏற்றப்பட்ட நாய்க்கூடு இரும்பினாலானது. எனவே அதனைத் தூக்கியவர்களுக்கு அடித்த மின்சாரம் கூட்டுக்குள் இருந்த நாயை தாக்காதது ஏன்? நாய்க்கூடு வாகனத்தில் ஏற்றி முடியும் நேரம் கூடு சரிந்து, ஒரு மின்சார வயரில் மட்டுமே வெட்டுப்பட்ட அடையாளம் இருக்கிறது. ஒரு வயரில் தகரம் முட்டினால் மின்சாரம் தாக்குமா? கூட்டினைத் தாக்கிய மின்சாரம் அதை ஏற்றிய வாகனத்தையும் தாக்கி, மின்னிணைப்புகளை எரித்து, ரயரையும் சேதப்படுத்தி இருக்கும். அப்படி எதுமில்லையே. அது எப்படி?

### 5 சந்தேகம்

வீட்டின் முன்பாக மின்சாரத் தூணில் பெரிய அளவிலான மின்குமிழ் உள்ள போது ஏன் பத்து மீற்றரில் இன்னொரு மின்குமிழ் பொருத்தினார்கள்? சம்பவம் இடம்பெற்ற வீட்டார் காட்டிய வயரில் சதீஷுக்கு மின்சாரம் தாக்கவில்லை எனவும் வேறொரு வயரிலேயே மின்சாரம் தாக்கியதாகவும், அதனை வீட்டார் உடனடியாக மறைத்து விட்டதாகவும் அந்தப்பகுதியைச் சேர்ந்தவர்கள் சொல்வது உண்மையா? சம்பவம் நடந்த இடத்துக்கு மின் அருகிலேயே சதிஷீன் உறவினர் வீடொன்று உள்ளது, அவர்களுக்கு ஏன் சம்பவம் இடம்பெற்ற வீட்டார் தகவல் சொல்லவில்லை?

### 6 சந்தேகம்

சதிஷின் இடது கையால் மின்சாரம் இறங்கி இடது காலால் மின்சாரம் வெளியேறியதாகவும் சம்பவம் நடந்த உடனேயே அவர் உயிரிழந்து விட்டார் எனவும் பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. உயிரிழந்தவர் வலதுகைப் பழக்கம் உள்ளவர். ஒரு பொருளை தூக்கும் போது பழக்கமான கையால் தானே பற்றிப் பிடிப்பார். நாய்க்கூட்டையும் வலது கையால் தானே பலமாக பற்றிப் பிடித்திருப்பார். அப்படியானால் எப்படி இடது கையில் மின்சாரம் தாக்கியது? அவர் மின்சாரத்தால் தாக்குண்ட கணமே உயிரிழந்துவிட்டார் என பிரேத பரிசோதனையில் சொல்லப்படுகின்றது. ஆனல் அவர் மின்னால் தாக்குண்ட பின்னர் தண்ணீர் கேட்டார் என்று சொல்லப்படுவது பொய்யா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே செல்ல உத்தரவில்லை!



எஸ்.தர்சன்

மாலை 4.50 மணி .

பொலித்தீன் பைகளில் உணவுப் பண்டங்களை ஏந்தியவாறு ஒவ்வொருவராக உள்நுழைகின்றனர். அவர்களில் சிலர் தமது கையில் ஒரு துண்டு பேப்பரையும் கொண்டு வருகின்றனர். சிலர் தயக்கத்துடன் உள்ளே நுழைகின்றனர். உள்ளே வந்த அவர்கள் நிரலாகப் போடப்பட்டுள்ள வாங்குகளில் அமர்கின்றனர். போதியளவு வாங்குகள் இல்லாததால் பலர் இருக்க இடமின்றி நிற்கின்றனர். தலை நரைத்து ,தோல் சுருங்கி, நடக்க கூட இயலாதவர்கள் முதல், துள்ளிக் குதிக்கும் கன்றுக் குட்டிகளைப் போன்றவர்கள் வரை அங்கு திரண்டிருந்தனர். எல்லோருடைய கண்களும் ஒரே திசையையே நோக்கியிருந்தன. தொலைபேசிகளை எடுத்து அதில் அடிக்கடி நேரத்தைப் பார்ப்பதும், நிமிர்ந்து பார்ப்பதுமாக அவர்கள் நிற்கின்றனர்.

மாலை 5 மணி.

இப்போது இராணுவ உடையைப் போன்ற சீருடைகளை அணிந்தவாறு ஒரு கூட்டம் உள்ளே இருந்து இவர்களை நோக்கி வருகின்றது. சப்பாத்து, இடுப்பு பட்டி, தொப்பி உள்ளிட்டவற்றை அவர்கள் அணிந்திருக்கின்றனர். வந்தவர்கள் அதிகாரத் தொனியில் பெருத்த ஒலி ஒழுப்புகின்றனர்.

“எல்லாரும் லைன்ல வா”

“பாஸ் இருந்தா மட்டும்தான் உள்ள விடுவம்”

“ஒரு பாசில ஒராள்தான் போகலாம்..”

“மற்றாக்கள் எல்லாம் வெளியால போ”

இதுதான் அவர்களுடைய தாரக மந்திரமாக இருந்தது. கையில் ஒரு சிறு துரும்பு ஆயுதம் கூட இல்லாதபோதும் அவர்களுடைய அந்தச் சீருடை அதிகாரம் அங்கிருந்த மக்களை அடக்கி ஆண்டது. கையில் பேப்பர் துண்டுடன் (பாஸ்) வந்தவர்கள் உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். அந்த துண்டில் அன்றைய திகதி, நேரம் உள்ளிட்டவற்றை சீருடை அணிந்தவர்கள் அடையாளப்படுத்தி அவர்களை உள்ளே அனுமதிக்கின்றனர். இப்போது துண்டு இல்லாதவர்கள் வெளியே கால்கடுக்க காத்திருக்கின்றனர். அவர்களில் பலர் உள்ளே செல்வதற்கு அனுமதிக்குமாறு பிள்ளை பாலுக்கு அழுவதைப் போன்று கெஞ்சிக் கூத்தாடுகின்றனர்.

“ஒருக்காஎண்டாலும்உள்ளவிடுங்கோ. தூர இருந்து வாறன். நம்பிக்கை இல்லையெண்டா பேர்ஸை வைச்சிருங்கோ”

“உன்ன என்ர பிள்ளை போல பார்க்கிறன். ஒருக்கா உள்ளுக்க போகவிடு. உடன பாத்திட்டு ஓடிவாறன்” “துண்டு உள்ள இருக்கிற ஆளிட்டதான் இருக்கு. அவாவால கொண்டு வந்து தரமுடியாது நான் போய் வாங்கிக்கொண்டு வந்து காட்டிப்போட்டு போறன் விடுங்கோ”

"துண்டு இருக்கு. மறந்து போய் வந்திட்டன் . ஒருக்கா விடுங்கோ. இனி வரேக்க கொண்டு வாறன்"

"தங்கச்சியை இங்க தனிய விட்டுட்டு உள்ளுக்குள்ள போக ஏலாது, அவா சின்ன பிள்ள, ஒரு துண்டுதான் இருக்கு. ரண்டு பேரையும் விடுங்கோ"

இப்படி பலவாறாக அவர்கள் கெஞ்சுகின்றனர். ஆனாலும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. கால்கடுக்க காத்திருந்த அவர்கள் எதுவுமே செய்ய இயலாது கண்ணீருடன் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்.

இந்தச் சம்பவங்கள் எங்கோ இந்தியா, பாகிஸ்தான் எல்லைப்பரப்பிலே, இராணுவச் சோதனைச் சாவடியிலோ இடம்பெறவில்லை. நாம் பிறந்த எமது பண்பாட்டு மண்ணான யாழ்ப்பாணத்தின் போதனா வைத்தியசாலையிலேயே இடம்பெறுகின்றது. ஒவ்வொரு நாளும் இதுவே நடக்கின்றது.

பல்வேறு நோய்களுக்கும் உள்ளாகி மருத்துவமனை விடுதிகளில் படுத்த படுக்கையாக உள்ள தமது உறவுகளைப் பார்ப்பதற்காகவே அவர்கள் அங்கு வருகின்றனர். அங்கு வருபவர்கள் வேடிக்கை பார்க்கவோ, அல்லது களியாட்ட நிகழ்வுகளுக்கோ வருவதில்லையே. அப்படிப் பட்ட மக்களை அடக்கி ஆண்டு, அவர்களுடைய கோரிக்கையை தட்டிக் கழிப்பதானது அந்த மக்களுடைய உரிமையைப் பறிப்பதாகவே அமைகின்றது. எமது கல்வியியலாளர்களையும்,, அறிஞர்களையும், மதத் தலைவர்களையும் சாதாரண இராணுவச் சிப்பாய் முழந்தாளிட வைத்தால் நாம் பொங்கி எழுகின்றோம். ஆனால் அதே போன்றே மருத்துவமனையில் இராணுவத்தை ஒத்த சீருடை அணிந்தவர்கள் எமது கல்வியாளர்கள், அதிகாரிகள், ஏன் மக்கள் பிரதி நிதிகளைக் கூட ஒரு புழுவை விடவும் கீழாக நடத்துகின்றனர். அது குறித்து ஏன் யாரும் பொங்குவதில்லை? ஏன் அதற்கான தீர்வுக்கு முயற்சிப்பதில்லை?





> மருத்துவமனை பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு மனித உணர்வுகளை மதிக்கும் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும், உணர்வு ரீதியான சிறந்த பயிற்சிகளின் பின்னரே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வாயிற் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

கொவிட் தொற்றுக் காரணமாக ஒரு பாஸ‌ுக்கு ஒருவரே அனுமதிக்கப்படுவார் என்று மருத்துவமனை நிர்வாகம் அறிவித்திருந்தாலும், மருத்துவமனைக்கு உள்ளே கொவிட் சுகாதார நடைமுறையை அனைவரும் கடைப்பிடிக்கின்றனரா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஏனெனில் மருத்துவமனை விருந்தகத்துக்கு (கன்ரீன்) செல்பவர்கள் அங்கு குழுமியே உணவுப் பண்டங்களைக் கொள்வனவு செய்கின்றனர். சீருடை தரித்தவர்கள் கூட சமூக இடைவெளியை ஒருவருக்கு ஒருவர் பேணுவதில்லை. இவ்வாறு இருக்கும்போது தமது உறவுகளைப் பார்க்கச் செல்லும் மக்களை கொவிட் தொற்றைக் காட்டி அவர்களுடைய உரிமையை மறுப்பது ஏற்றுக்கொள்ளமுடியாததொன்று.

எமது உரிமைகளுக்காக ஐ.நா. வரை சென்றுள்ள எமது இனத்துக்கு, எமது இனத்தவராலேயே உரிமை மறுக்கப்படுவது இங்குள்ள எவருடைய கண்களுக்கும் புலப்படவில்லை போலும். அடக்கு முறை, அடக்கு முறை என்று கத்திக் கூச்சலிடும் நாமே எம் இனத்தவர்களை இரக்கமின்றி அடக்குவதும், அவர்களுடைய உரிமைகளைப் பறிப்பதும் தக்க செயல் அல்லவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மருத்துவமனை நடைமுறை

நோயாளி ஒருவரை விடுதியில் தங்கவைத்து கிசிச்சை வழங்குவதன் நோக்கம், அவருக்கு வேறு எந்தக் கிருமிகளும் தொற்றுவதைத் தடுப்பது, படுக்கை வசதிக்காக, வீடுகளில் உள்ள சிரமங்களை தவிர்த்து நோயை விரைந்து குணமாக்குதல், மருத்துவர்களின் கண்காணிப்பு , நோயாளி என்ற மன அழுத்தத்தை குறைத்தல் போன்ற பல காரணங்கள் மருத்துவத்துறையினரால் விடுதியில் தங்க வைப்பதற்கு காரணங்களாகக் கூறப்படுகின்றன. மருத்துமனையில் உள்ள நோயாளியைப் பார்வையிடுவதற்காக வருபவரிடம் உள்ள கொவிட் வைரஸ் அந்த நோயாளருக்கு தொற்றும், அப்படியே அந்த நோயாயிடம் இருந்து அருகே உள்ள மற்றுமொரு நோயாளிக்கும் அந்தக் கிருமி தாவும், இதனால் அங்குள்ள நோயாளர்கள் அனைவருக்குமே பாதிப்பு ஏற்படுகிறது. மாறாக நோயாளி ஒருவரிடம் இருந்தும் சுகதேகி ஒருவருக்கு கிருமித் தொற்று ஏற்படும் அபாயமும் காணப்படுகின்றது என்றும் மருத்துவத்துறை கூறுகின்றது. குழந்தைகள், சிறுவர்களை மருத்துவமனைக்குள் அனுமதிக்காததற்கான காரணமும் அதுவே என்றும் கூறப்படுகிறது.

### ஊறிப்போன விடயம்

மருத்துவமனைகளில் உள்ள தங்களுடைய உறவினரான நோயாளர்களை வைத்தியசாலைக்குச் சென்று பார்த்தால் தான் திருப்தி என்பதும், அவர்களை நலன் விசாரிக்க வேண்டும் என்பதும் காலாதி காலமாக எமது மக்கள் மத்தியில் ஊறிப்போன ஒரு விடயம். மருத்துவமனைகளில் உள்ள நோயாளர்களும் அது போன்றே, உறவுகள்மருத்துவமனைக்கே வந்து தங்களைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். அவ்வாறு உறவுகள் சென்று நோயாளியைப் பார்ப்பதன் மூலமே அவர்களுடைய மனது ஆரோக்கியமடைகிறது என்றும், அதனால் பாதி நோய் குணமாகிவிடுகிறது என்றும் கூறப்படுகின்றது. அதனாலேயே யாராவது நோய்வாய்ப்பட்டு மருத்துவமனை விடுதியில் அனுமதிக்கப்பட்டால் முண்டியடித்து உறவுகள் அங்கேயே சென்று பார்த்துவிடுகின்றனர். எழுந்து நடக்க முடியாத பாட்டியோ, பாட்டனோ கூட மருத்துவமனைக்குச் சென்று உறவினரைப் பார்த்தால் தான் திருப்திப் படுவார்கள். இதை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாக மும் நன்கு அறியும்.

### தீர்வுதான் என்ன?

மருத்துவமனை பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு மனித உணர்வுகளை மதிக்கும் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும், உணர்வு ரீதியான சிறந்த பயிற்சிகளின் பின்னரே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வாயிற் கடமையில் ஈடுபடுத்தப்படவேண்டும். நோயாளர்களைப் பார்வையிட வரும் உறவினர்களுக்கும் போதியளவு விழிப்புணர்வுகள் மருத்துமனை நிர்வாகத்தால் ஏற்படுத்தப்படவேண்டும். பாஸ் நடைமுறைகளை மறுசீரமைக்கப்பட வேண்டும், அதாவது காலை, நண்பகல், மாலை என்ற அடிப்படையில் வர்ணங்களைக் கொண்ட "கார்ட்" வழங்கலாம். உதாரணமாக காலையில் வருபவர் மஞ்சள் நிற கார்ட்டுடன் வந்தால் மாத்திரமே உள்ளே அனுமதிக்கப்படுவார் என்ற நடைமுறை இருந்தால் வேறு எந்த கார்ட்டுடனும் உறவினர்கள் வரமாட்டார்கள். ஏனைய நேரங்களில் வெவ்வேறு நிறங்களைக் கொண்ட கார்ட்களை வழங்கலாம். இப்படி புதிய வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் நோயாளர்களைப் பார்வையிடவரும் உறவுகளுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்ப்பதுடன், மருத்துவமனை கட்டமைப்புக்களையும் நேர்த்தியாகப் பின்ன முடியும் அத்தோடு, மக்கள் நலன் பேணும் அமைப்புக்களுடனும் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடலாம். இவற்றை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நிர்வாகம் கவனத்தில் எடுக்குமா?





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணி மாத்திரமே என்ற அடிப்படையில் அந்த விவகாரத்தைச் சாதூரியமாகச் செயற்படுத்தியவர் ஆயர் தியோகுப்பிள்ளை.

மன்னார் மறை மாவட்டத்தின் முதலாவது ஆயராக தோமஸ் சௌந்தரநாயகம் பதவியேற்றபோது கலந்துகொண்ட இராயப்பு யோசப் (அப்போது அருட்தந்தை) ஆயர் தியோகுப்பிள்ளையின் கனவுகளை தோமஸ் சௌந்தரநாயகம் நிறைவேற்றுவார் என்று நாசூக்காகக் கூறியதோடு, சமயங்களைக் கடந்து கத்தோலிக்கத் திருச்சபை, தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப்பாடுபடும் என்று கூறியிருந்தார். அந்தக்காலத்தில் ஈழவிடுதலையெனக் கூறிப் போராடிய சில இயங்கங்களின் செயற்பாடுகளையும் அவர் விமர்சிக்கத் தவறவில்லை.

1992 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டத்தின் ஆயராகப் பதவியேற்ற பின்னரான சூழலில் வடக்கு, கிழக்கை மையமாகக் கொண்டு தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபையின் செயற்பாடுகளைச் முன்னிலைப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த ஆயர் இராயப்பு ஜோசப், ஏனைய கிறிஸ்தவ சபைகளின் ஆயர்கள் மற்றும் தலைமைக் குருக்களுடன் உறவுகளைப் பேண ஆரம்பித்தார். அந்த அணுகுமுறை ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமை நோக்கிலானதெனலாம்.

இவ்வாறானதொரு நிலையில் திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தை 2005 ஆம் ஆண்டு பிரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளில் வடக்குக் கிழக்கு ஆயர்கள் மேற்கொண்ட கூட்டு முயற்சி வெற்றியடைந்தது. இதன்படி, 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3 ஆம் திகதி மட்டக்களப்பு மறை மாவட்டம் திருகோணமலை மறை மாவட்டத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுத் தனி மறை மாவட்டமாக பாப்பரசரினால் அறிவிக்கப்பட்டது. அதன் முதலாவது ஆயராக யோசப் பொன்னையா செப்ரெம்பர் மாதம் பதவியேற்றார்.

அதன்படி திருகோணமலை மறை மாவட்டம் தனி மாவட்டமாகச் செயற்பட ஆரம்பித்தது. திருகோணமலை மட்டக்களப்பு ஆயராகப் பதவி வகித்திருந்த கிங்ஸிலி சுவாம்பிள்ளை திருகோணமலை மறை மாவட்டத்தின் ஆயராகத் தொடர்ந்து பதவி வகித்தார். மட்டக்களப்பு தனி மறை மாவட்டமாகச் செயற்பட ஆரம்பித்ததும் ஆயர் இராயயப்பு ஜோசப்," வடக்கு, கிழக்கில் தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபை தற்போது நான்கு மறை மாவட்டங்களைக் கொண்டிருக்கிறது" என்றார்.

அதாவது அவருடைய அந்தக் கருத்தின் தொனி, வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தின் எல்லை தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதையே மறைமுகமாக வெளிப்படுத்தியிருந்தது.

ஏனெனில் 1975 டிசம்பர் மாதம் திருகோணமாலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் சில பகுதிகள் பிரிக்கப்பட்டுப் புதிதாக அமைக்கப்பட்ட அனுராதபுரம் மறைமாவட்டத்துடன் சேர்க்கப்பட்டபோது, தமிழ்ப் பிரதேசங்கள் ஏன் சிங்கள மறை மாவட்டத்துடன் இணைய வேண்டுமென அப்போதைய ஆயர் தியோகுப்பிள்ளைக்கு ஏற்பட்டிருந்த உணர்வைப் புரிந்துகொண்டதன் அடிப்படையில், ஆயர் இராயப்பு ஜோசப் செயற்பட்டிருந்தமையே அந்தத் தொனியின் வெளிப்பாடு எனலாம்.

குறிப்பாக மடு தேவாலயத்தை அனுராதபுரம் மறை மாவட்டத்துடன் வைத்திருக்க வேண்டும் என்பதில் கொழும்பை மையமாகக் கொண்ட கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமை மறைமுகமாக விரும்பியிருந்தவொரு சூழலில் 1981 ஆம் ஆண்டு மன்னார் தனியான தமிழ் மறை மாவட்டமாகப் பிரிக்கப்படமையானது பெரும் வரப்பிரசாதமாகும்.


ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் ஆயர்களும் தமிழ் அருட் தந்தையர்களும் வெளிப்படையாகவும் அரசியல் ரீதியிலும் அது பற்றி வெளிப்படையாக உரிமைகோரவேயில்லை

ஏனெனில் சமயச் செயற்பாடுகளில் அரசியல் இருக்கக் கூடாதென்பது அவர்களின் அடிப்படைப் பண்பு. மன்னார், மட்டக்களப்பு மறை மாவட்டங்கள் தனிமறை மாவட்டங்களாக உருவாக்கப்பட்டமையானது கத்தோலிக்கத் திருச்சபையின் தமிழ் மக்களுக்கான அடுத்த கட்ட சமயச் செயற்பாடாக மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் சார்ந்து கொழும்பை மையமாகக் கொண்ட இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையோடு அவ்வப்போது கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தாலும், சமயப் பணிகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி அதன் மூலம் வடக்குக் கிழக்கு மக்களின் தனித்துவத்தையும் மேற்படுத்திய பெருமை தமிழ் ஆயர்களுக்கு உண்டு.

குறிப்பாக ஆயர் இராயப்பு ஜோசப் அந்தப் பணியைச் செவ்வனே நிறைவேற்றியிருந்தால் அவருடைய மரணச் செய்திக்குச் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்கில் உருவான அரசியல் நிலைமையைத் துணிவோடு கையாண்ட ஆயர் இராயப்பு ஜோசப். சமயப் பணியைக் கடந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றும் விடயத்தில் முன்நின்று செயற்பட்டிருந்தார். தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் தமிழ் இளைஞர், யுவதிகளின் நிலைமை பற்றி கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரங்களுக்கு எடுத்துக் கூறியதோடு இந்தச்செயற் பாடு தமிழ் இன அழிப்பு என்பதையும் வெளிப்படையாகக் கூறியிருந்தார்.




**வெளிநாட்டு இராஜதந்திரிகளைப் பகைத்துக் கொண்டு ஆயர் இராஜயப்பு ஜோசப் கருத்து வெளியிடுவர் அல்லர். மாறாக சிங்கள ஆட்சி யாளர்கள் கடந்த எழுபது ஆண்டுகளாக மேற் கொண்ட தமிழ் இன அழிப்புப் பற்றிய விபரங்களை பகிரங்கமாகவும் துணிவோடும் மன்னார் பிரதேசத்தில் இருந்தே வெளிப்படுத்தியிருந்தார்.**



முள்ளிவாய்க்காலில் நடந்தது தமிழ் இன அழிப்பு என்று 2012 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் பகிரங்கமாகவே கூறியவர் ஆயர் இராஜயப்பு யோசப், கொழும்பில் நடைபெற்ற கத்தோலிக்கத் திருச்பையின் ஆயர்கள் மாநாட்டில்கூட தமிழ் மக்களின் அவலங்களை வெளிப்படையாகக் கூறியதோடு, நிரந்தர அரசியல் தீர்வை அதாவது ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இயல்பாகவே விட்டு விடுவதற்கு என்ன பிரச்சினை ? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் ஆயர் இராயப்பு ஜோசப் சமயப் பணிகளைவிட பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டு வரும் முயற்சியிலேயே அதிகம் அக்கறை செலுத்தியிருந்தார்.

இந்திய மத்திய அரசு இனியாவது ஈழத்தமிழ் மக்களின் நலன்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென ஆயர் இராஜப்பு ஜோசப் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரிடம் கேட்டிருந்தார். பல கடிதங்களையும் அனுப்பியிருந்தார். இந்திய மத்திய அரசு மீது ஈழத்தமிழர்கள் தொடர்ந்தும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று நேர்காணல் ஒன்றில் ஆயர் கூறியிருந்தார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளைப் பகைத்துக் கொண்டு ஆயர் இராயப்பு ஜோசப் கருத்து வெளியிடுபவர் அல்லர். மாறாக சிங்கள ஆட்சியாளர்கள் கடந்த எழுபது ஆண்டுகளாக மேற்கொண்ட தமிழ் இன அழிப்புப் பற்றிய விபரங்களை பகிரங்கமாகவும் துணிவோடும் மன்னார் பிரதேசத்தில் இருந்தே வெளிப்படுத்தியிருந்தார்.

1981 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டம் உருவாக்கப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்திருந்த அப்போதை பிரதமர் ரணசிங்க பிரேமதாச, ஆயர் தியோகுப்பிள்ளையோடு முரண்பட்டிருந்தார். கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் மார்க்கஸ் பெர்ணாண்டோவுடன் தியோகுப்பிள்ளை எதுவுமே பேசாமல் அமைதியாக இருந்து தனித்துவமாகச் செயற்பட்டிருந்தார். அன்றைய இந்த வரலாறுகளை ஆழமாகப் புரிந்து கொண்டவர் ஆயர் இராயப்பு ஜோசப்.

சமயங்கள் வேறாக இருந்தாலும் தமிழர்களாக ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தில் ஆயர் ஜோசப் பலமான நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதை ஜெனிவா மனித உரிமைச் சபையின் அமர்வில் அவர்ஸ்கைப் மூலம் வெளியிட்ட கருத்துக்கள் கோடிட்டுக் காண்பித்திருக்கின்றன. நடந்தது போர் அல்ல தமிழ் இன அழிப்புத்தான் என்ற ஆயரின் குரல், சமயங்களைக் கடந்து ஈழத்தமிழர்கள் தனித்த ஒரு தேசிய இனம் என்பதையே அடையாளப்படுத்தியிருக்கிறது. அது சுயநிர்ணய உரிமைக்கும் வலுச் சேர்த்திருக்கிறது.

ஆயர் இராயப்பு ஜோசப் காலமாகவில்லை.

"நடந்தது போர் அல்ல தமிழ் இன அழிப்புத்தான் என்ற ஆயரின் குரல், சமயங்களைக் கடந்து ஈழத்தமிழர்கள் தனித்த ஒரு தேசிய இனம் என்பதையே அடையாளப்படுததியிருக்கிறது. அது சுயநிர்ணய உரிமைக்கும் வலுச் சேர்த்திருக்கிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிஞ்சு தூரிகைகள்



டெ.தேஜஸ்னி
தரம் 2,
அ.இல -214



ஜெ.பகீரதன்,
யாழ்.கோப்பாய்
கிறிஸ்தவக் கல்லூரி.
தரம்-12



B.விஷ்ணுகன்,
ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.
தரம்-09



கே.அக் ஷிதா
சுண்டுக்குழி மகளிர்
கல்லூரி.
தரம்-03A

# மனம் கொண்டது மாளிகை



ராமநாதபுரம் எனும் ஊரில் ரமேஷ் என்பவனும் அவனது மனைவியும் வாழ்ந்து வந்தனர். ரமேஷ் என்பவன் தற்காலிகமாக அரச வேலை ஒன்றில் பணியாற்றி வந்தான். இதனால் கிடைக்கும் பணத்தில் அவனும் அவனது மனைவியும் திருப்தி மிக்க வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர்.

இதேபோல் முகேஷ் என்பவனும் அவனது மனைவியும் அந்த ஊரில் தான் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் முகேஷ் நிரந்தர அரசாங்கம் வேலை ஒன்றில் பணியாற்றினான். அவன் நிரந்தர வேலையில் பணியாற்றுவதால் சேமிப்பு இல்லாமல் செலவழிப்பான். ஒரு நாள் உலக நாடுகளுக்கு புதிய நோய் ஒன்று அறிமுகமானது. இந்நோய் பல்வேறு நாடுகளிலும் பரவி உயிர்களை எல்லாம் காவு கொண்டது.



இதனால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இதனால் "தற்காலிகமாக அரசாங்க வேலையில் இணைந்த அனைவருக்கும் வேலை இல்லை" என அரசாங்கம் அறிவித்தது. இதனால் ரமேஷ் மிகவும் மனம் வருந்தினான். இருப்பினும் அவன் அன்றாடத் தேவைகளுக்காக கூலி வேலை ஒன்றை செய்ய எண்ணினான். புதிய நோயின் காரணமாக அவனை எவரும் வேலைக்கு அழைக்கவில்லை. அவன் வசித்ததோ வாடகை வீடு. ரமேஷ் வேலைக்கு செல்லாதபடியால் அவனால் வாடகையை கொடுக்க முடியவில்லை.

இதனால் அவனும் அவன் மனைவியும் வீட்டை விட்டு வெளியேறினார்கள். சிறிது காலம் கோவிலில் வாழ்ந்தார்கள். பின் அவனுக்கு நிரந்தர கூலி வேலை கிடைத்தது. இதன் மூலம் கிடைக்கும் பணத்தை தன் தேவைகளுக்கு வேண்டியதைச் செலவழித்துவிட்டு மீதியை சேமிப்பான். அவனிடம் இருந்த சேமிப்புப் பணத்தை வைத்துக் கொண்டு குடிசை வீடொன்றைத் தேர்ந்தெடுத்தான்.

அவன் அக்குடிசை வீட்டை மாடமாளிகை என நினைத்து வாழ்வான். பனையோலைப் பாயில் படுத்தாலும் சுகமாகபடுத்துறங்குவான். செய்கின்ற கூலி வேலையைக் கூட உயர் வேலை போன்று நினைத்து திருப்தியாக வேலை செய்வான். தனது மனைவி உப்பில்லாத உணவைச் சமைத்துக் கொடுத்தாலும் அதை அறுசுவை உணவு போல் நினைத்து உண்ணுவான். எவரைப் பார்த்தாலும் உயர்வான சிந்தனைகளோடு தான் பார்ப்பான். ஆனால் முகேஷ் எல்லாவகையிலும் தாழ்வான சிந்தனைகளைக் கொண்டிருப்பான். எதை எடுத்தாலும் ஒவ்வொரு குற்றம் கூறுவான். எதையும் சகித்துக் கொள்ளமாட்டான். நோய் விடயத்திலும் அலட்சியமாக செயற்பட்டான். இவனது செயற்பாட்டால் இவனுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அந்த மாரடைப்பை குணப்படுத்த அவனிடம் போதியளவு பணம் இல்லைாமல் போனது. இதனால் இறுதியில் முகேஷ் இறந்துபோய் விட்டான். ஆனால் ரமேஷ் கொண்டிருந்த உயர் எண்ணங்கள் மற்றும் நற்பழக்கவழக்கங்கள் காரணமாக அவனுக்கு நிரந்தர அரசாங்க வேலை ஒன்றில் பணியாற்ற வாய்ப்புக்கிடைத்தது. ஆகவே நாமும் எப்போதும் உயர் எண்ணங்களை எண்ணி வாழ வேண்டும்.

**த. துளசிகா**, தரம் 10
யாழ். இந்து மகளிர் கல்லூரி, அ.இல92

# அறிவோம்

அழுகையால் சிவனின் அன்பைப் பெற்ற அடியவர்
**மாணிக்கவாசகர்**

என்கடன் பணி செய்து கிடப்பதே எனத் தொண்டாற்றியவர்
**திருநாவுக்கரசர்**

எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என விரும்பியவர்
**தாயுமானவர்**

முருகனின் அழகைக் காண பிரம்மாவிடம் நாலாயிரம் கண்கள் கேட்டவர்
**அருணகிரிநாதர்**

சிவநாமம் எங்கும் சூழ வேண்டும் என பாடியவர்
**ஞானசம்பந்தர்**

கண்ணனை நினைத்து உருகி வாரணம் ஆயிரம் பாடியவர்
**ஆண்டாள்**

யசோதையாக மாறி கண்ணனைத் தாலாட்டியவர்
**பெரியாழ்வார்.**

# புதிர் விலங்கு



படத்தில் கொடுக்கப்பட்டுள்ள இந்த விநோதமான விலங்கின் உள்ளே மொத்தம் ஆறு விலங்குகள் ஒளிந்துள்ளன. என்னென்ன விலங்குகள் என்பதைக் கண்டறியுங்கள்....

# வேளாண்மை வேண்டும்

நாம் எடுத்து வரும்
நீரற்ற குடமும் நிழலற்ற தடமும்
நிகழ்கால உலகின்
நீங்காத அவலம்!

நாம் வாழும் ஆறற்ற ஊரும்
அழிவுற்ற உழவும் அடித்தட்டு
நிலைக்கு நம் அகிலத்தை
நகர்த்தும்!

நம் கூரற்றமதியும் குறுகி விட்ட
நம் ஊர் நதியும் குறிப்பிட்ட
எதற்கும் உதவாமல் சிதையும்
[illegible]
[illegible]
நம் ஊரோரக்குளமும்
மழையும் சிரிப்பற்ற மனையும்
சிறப்பான எதையும் நம்மிடம்
சேராமல் விலக்கும்!

நம் நாட்டில் வீசும் கேடுற்ற
காற்றும் காடற்ற நாடும்
மேகத்தின் வரவை மெதுவாக
இழக்கும்!

நம் ஓய்வற்ற உழைப்பும்
நோயற்ற உடலும் எம்
ஒப்பற்ற வாழ்வை நமக்காக
வழங்கும்!

உழுகின்ற நிலமும் உயிருள்ள
வரைக்கும் நம்மைக் காக்கும்
நிதமும்!

நம்முடைய ஏரோட்டும் கூட்டம்
இருக்கும் வரைக்கும்
ஏமாற்றம் இல்லா எதிர்காலம்
இருக்கும்!

நம் நேரற்ற வழியும் நெறியற்ற
தொழிலும் நேற்றோடு நம்முடன்
இருந்தது போதும்
இனி வேளாண்மை வேண்டும்

**ச.பிரேமியா** ,தரம் 9
யா/மகாஜனக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாத்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு புதிய ஜெனிவாத் தீர்மானம் தொடர்பாக பிரித்தானியாவையும் கனடாவையும் மையமாகக் கொண்டியங்கும் தமிழ் அமைப்புக்கள் தெரிவித்துள்ள கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. புதிய ஜெனிவா தீர்மானத்தை உருவாக்கியதில் மேற்படி அமைப்புகளுக்கும் ஏதோ ஒரு விகிதமளவுக்கு பங்கு உண்டு.


இலங்கை அரசாங்கம் அவ்வாறு கருதுவதால்தான்ஜெனிவாத்தீர்மானத்துக்கு எதிரான தனது முதல் நகர்வை மேற்படி அமைப்புகளுக்கு எதிராக எடுத்திருக்கிறதா? ஆனால் இங்கேயுள்ள முக்கியமான கேள்வி என்னவென்றால் தமிழ் நோக்கு நிலையிலிருந்து பலவீனமான ஒரு தீர்மானத்தை அல்லது தமிழ் மக்கள் தங்களுக்கு ஒரு பெருவெற்றி என்று கருத முடியாத ஒரு தீர்மானத்தை கடுமையான தீர்மானமாக எடுத்துக்கொண்டு அதற்கு எதிராக அரசாங்கம் கடுமையாக எதிர்வினை ஆற்றியுள்ளதா? என்பதுதான்.

இது தம்மைப் பெரிய அளவில் பாதிக்காது என்று அவ்வமைப்புக்கள் கூறுகின்றன. உண்மைதான். இத்தடை அவர்களை நேரடியாக பாதிக்காது. . ஆனால்புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் தாயகத்தில் வாழும் தமிழ்மக்களுக்கும் இடையிலான இடையூட்டத்தை பாதிக்கும்.புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகளிடமிருந்து தாயகத்துக்கு வரக்கூடிய உதவிகளையும் இரண்டு தரப்புகளுக்கும் இடையிலான தொடர்புகளையும் அரசாங்கம் தனக்கு வசதியான விதத்தில் சட்டவிரோதமாக காட்டி தாயகத்தில் இருக்கும் செயற்பாட்டாளர்களை தூக்கி உள்ளேபோட இது உதவக் கூடும். எனவே இதன் உடனடிப் பாதிப்பு தாயகத்தில் வாழும் செயற்பாட்டாளர்களுக்குத்தான். இப்படிப்பார்த்தால் அரசாங்கம் ஐ.நா. தீர்மானத்துக்கு எதிரான தனது முதல் நகர்வின் மூலம் தாயகத்துக்கும் புலம்பெயர்ந்த தமிழ்மக்களுக்கும் இடையிலான இடையூடாட்டத்தை குறைக்க எத்தனிக்கிறது என்று தெரிகிறது.

இது விடயத்தில்புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்பை கையாண்டு தனக்கு வசதியான ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்த மேற்கு நாடுகளுக்கு ஒரு பொறுப்பு உண்டு. ஐ.நா. தீர்மானத்துக்கு எதிரான முதல் நகர்வு எனப்படுவது, புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புக்கு மட்டும் எதிரானது அல்ல. தர்க்கபூர்வ விளைவுகளைக் கருதிக் கூறின், தீர்மானத்தைக் கொண்டு வந்த கருக்குழு நாடுகளுக்கும் எதிரானதுதான். எனவே இதுவிடயத்தில் மேற்கு நாடுகளுக்கு ஒரு பொறுப்பு உண்டு,தீர்மானத்தின் விளைவு அரசாங்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துமோ இல்லையோ, உடனடிக்கு தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை அரசாங்கம் ஐ.நா.வுக்கும் கருக்குழு நாடுகளுக்கும் உணர்த்தியிருக்கிறது.

அதேசமயம் இதுவிடயத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் அமைப்புகளுக்கும் ஒரு பொறுப்பு உண்டு.இதை நான் எனது கட்டுரைகளில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறேன்.டயஸ்போறாவுக்கும் தாயகத்துக்கும் இடையே ஏற்றுக்கொள்ளத்தக்க சேர்ந்தியங்கும் தளங்களையும் வழிமுறைகளையும் டயஸ்போறா உருவாக்க வேண்டும். ஒப்பீட்டளவில் அதிகரித்த ஜனநாயகச் சூழலைக்கொண்ட நாடுகளில் வசிக்கும் அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் தூக்கும் கொடிகளும் , சின்னங்களும் தாயகத்திலுள்ள செயற்பாட்டாளர்களோடு அவர்கள் உறவுகளை வைத்துக் கொள்வதற்கு தடையாக இருக்கக்கூடாது.இது விடயத்தில் உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிவில் சமூக இடையூடாட்டத் தளங்களை உருவாக்க வேண்டும். இது மிக அவசியம். புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் தாயகத்துக்கும் இடையிலானஉறவுகளைக் கட்டுப்படுத்தினால் நீண்ட எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலின் ரத்தச் சுற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தலாம் என்று அரசாங்கம் நம்புகிறது.

கடைசியாக நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானமும் அதன் உடனடி விளைவுகளும் தமிழ் மக்கள் வெற்றிபெறத் தவறியதை காட்டுகின்றன. உள்நாட்டில் கூட்டமைப்பும் புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பில் சில அமைப்புகளும் கூறுவது போல அது ஒரு மகத்தான வெற்றியா?




## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

SOS சிறுவர் கிராமங்கள் இலங்கை

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 136 சர்வதேச நாடுகளில் 71 வருடங்களாகவும் இலங்கையில் 40 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். இந் நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி வெற்றிடங்கள்

1. FSP இணைப்பாளர் (Coordinator- Family Strengthening Programme) (பெண் - 40 வயதிற்கு உட்பட்டோர்)
   * அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமூகவியல் பட்டம் (Degree) அல்லது (Diploma) கற்கை நெறிசான்றிதழினை கொண்டிருப்பதோடு குறைந்தது ஒரு வருட / ஆறு மாத தொழில் சார் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.
   * சமூகம் சார் வெளிக்கள வேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவராகவும் சாரதி அனுமதிப்பத்திரத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   * கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டவராக இருப்பதோடு, ஆங்கில மற்றும் சிங்கள மொழியறிவு கொண்டிருப்பது விரும்பத்தக்கது.
2. Educator & Counsellor (ஆண்) (இளைஞர் விடுதி)
   * அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முதல்நிலை இளங்கலைப் பட்டம் (Degree) அல்லது அதற்குச்சமமான (Higher Diploma) கற்கை நெறிசான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருப்பதுடன் உளவியல் சார் கல்வித்தகைமையைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
   * தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவராகவும் திருமணமாகாதவராயிருத்தல் வேண்டும்
   * சாரதி அனுமதிப்பத்திரத்தினை கொண்டிருப்பதோடு, விளையாட்டுத்துறையில் ஆளுமையுடன் அனுபவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

இந்நிறுவனத்தின் சேவையாற்ற விரும்புவோர் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 15.04.2021 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

"SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references.

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்
இல:219, நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
தொ.பே: 021-221 1101 / 077- 373 3711
மின்னஞ்சல்:
jaffna@soscvsrilanka.org


பருத்தித்துறை தும்பளை

## அமரர் திரு. சபாநாயகம் ரவீந்திரன் (சபா ரவீந்திரன்)

(சமாதான நீதவானும், சட்டத்தரணியும்) அவர்களின்

# முதலாம் ஆண்டு சிரார்த்த தினம்

04.04.2021

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை



தோற்றம்
14.09.1950

மறைவு
04.04.2020

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன !

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திட செடிவந்து சேரும்

பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திட கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க !
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க !
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க!
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க !
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க !
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க !


குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தும் அறியாமலும்

சூரியன்

# கலப்பு முறையில் மாகாணத் தேர்தல்?




இந்த வருடத்துக்குள் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக தேர்தலை நடத்துவதற்கு சட்டரீதியாக தடையாக உள்ள விடயங்களை தகர்ப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

மறுபுறத்தில் மாகாணசபைத் தேர்தலுக்கு , பௌத்த தேரர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அரசுக்கு ஆதரவு வழங்கும் கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதனால் மாகாணசபைத் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவருவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இதன்படி தொகுதி (70 வீதம்) மற்றும் விகிதாசாரம் (30 வீதம்) எனக் கலப்பு முறையில் தேர்தலை நடத்துவதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், போனஸ் ஆசனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவுள்ளது. இதுவரை மாகாணமொன்றில் கூடுதல் வாக்குகளைப்பெறும் கட்சிக்கு 2 போனஸ் ஆசனங்கள் வழங்கப்படும். புதிய யோசனையின் பிரகாரம் மாவட்டமொன்றுக்கு இரு ஆசனங்கள் வழங்கப்படவுள்ளன. மேல் மாகாணத்தில் மூன்று மாவட்டங்கள் உள்ளன. அப்படியானால் 6 போனஸ் ஆசனங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு தேர்தலுக்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதால் அரசியல் கட்சிகளும் அது தொடர்பில் கழுகுப்பார்வையை செலுத்தி பூர்வாங்கப் பணிகளை முன்னெடுத்துவருகின்றன. தற்போதைய நிலைவரப்படி மாகாணசபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவதற்கு முக்கியமான சில கட்சிகள் ஆலோசனை நடத்திவருகின்றன.

# அதிரடிக்கு தயாராகும் மங்கள!

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சம்பந்தமாக இன்றளவிலும் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. ஜெனிவாவில் 2015 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங்கியமை பாரதூரமான காட்டிக்கொடுப்பாகும் என தற்போதைய அரசும், தேசிய வாத அமைப்புகளும் குற்றஞ்சாட்டுவதுடன், அப்போது வெளிவிவகார அமைச்சராக செயற்பட்ட மங்கள சமரவீரமீதும் சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்துவருகின்றனர். இந்நிலையில் இவற்றுக்கு பதிலடி கொடுப்பதற்கும், உண்மையிலேயே என்ன நடந்தது என்பதை விபரிக்கவும் மங்கள சமரவீர கடந்த புதன்கிழமை விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினார்.



இணை அனுசரணை வழங்கியதாலேயே இலங்கைமீதான சர்வதேச விசாரணை தடுக்கப்பட்டது எனவும், குறித்த பிரேரணையில் இருந்த உள்ளடக்கங்களை மைத்திரிபால சிறிசேன அறிந்தே வைத்திருந்தார் எனவும் மங்கள சமரவீர குறிப்பிட்டார். அத்துடன், ஜெனிவாவில் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் அரசுக்கு பல வழிகளிலும் நெருக்கடியாகவே அமையும் என்ற எச்சரிக்கையையும் விடுத்தார்.

தெற்கு அரசியலில் திடீர் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஒருகால கட்டத்தில் பேர்போன புகழ்பெற்ற மங்கள சமரவீர, சந்திரிக்கா அம்மையாருடன் இணைந்து முன்னெடுக்கவுள்ள புதிய பயணம் சிலரை கிலிகொள்ள வைத்துள்ளது எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

# கறுப்பாடுகளுக்கு எச்சரிக்கை



மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் கடந்த 30 ஆம் திகதி கண்டிக்குப் பயணம் மேற்கொண்டு தலதாமாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசிபெற்றனர். சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

மேற்படி சந்திப்புகளுக்கு பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டிருந்த மைத்திரிபால சிறிசேன, எதிர்காலத்தில் சுதந்திரக்கட்சி ஆட்சியமைப்பதே தனது எதிர்பார்ப்பு என குறிப்பிட்டு அதற்கேற்ற வகையில் கட்சி கட்டியெழுப்பப்படும் எனவும் அறிவித்தார்.

மைத்திரியின் இந்த அறிவிப்பானது மொட்டு கட்சி உறுப்பினர்கள் சிலரை சினம்கொள்ள வைத்துள்ளது. இது தொடர்பில் ஆளுங்கட்சியின் உயர் மட்ட தலைவர்களிடமும் அது தொடர்பில் முறையிட்டுள்ளனர். இதற்கிடையில் கண்டிப் பயணத்துக்கு முன்னர் கட்சி சகாக்களுடன் மைத்திரிபால சிறிசேன, மந்திராலோசனை நடத்தியுள்ளார். எப்படியாவது சுதந்திரக்கட்சியை மீட்டெடுக்க வேண்டும் எனவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அதேபோல கட்சியில் அங்கம் வகித்துக்கொண்டு மொட்டு கட்சிக்கு சார்பாக செயற்படுபவர்கள் வெளியேறினால்கூட பரவாயில்லை, நாம் எமது பயணத்தில் தெளிவாக இருக்க வேண்டும் என்று கடியில் உள்ள கறுப்பாடுகளையும் அவர் எச்சரித்துள்ளார்.

# கிரியெல்லவின் மகள் களத்தில்




மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவின் மகளான ஷாமி கிரியெல்ல போட்டியிடவுள்ளார் என தெரியவருகின்றது.

மத்திய மாகாணசபைக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அவர் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்பத்தை அவர் ஏற்கனவே வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேனவின் மகள் வடமத்திய மாகாணத்தில் போட்டியிடுவார் என முன்னதாக தகவல் வெளியிடப்பட்டிருந்தாலும் தற்போது அது கேள்விக்குறியாகியுள்ளது.

தேசிய மட்டத்திலான தேர்தலொன்றில் போட்டியிடவே அவர் உத்தேசித்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.



# நடவடிக்கை விரைவில்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் அங்கம் வகிக்கும் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இது தொடர்பான உள்ளக கலந்துரையாடல் தற்போது இடம்பெற்றுவருகின்றது. கட்சி தலைமைக்கு எதிராக கருத்து வெளியிட்டமை, கூட்டு பொறுப்பைமீறும் விதத்தில் இரகசியத் தகவல்களை வெளியிட்டமை உள்ளிட்ட விடயங்களை அடிப்படை யாகக் கொண்டே இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. புத்தாண்டுக்கு முன்னர் அல்லது பின்னர் கட்சியின் உயர்பீடம் கூடவுள்ளது. அதன்போது இது பற்றி கலந்துரையாடி இறுதி முடிவெடுக்கப்படலாம்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் எம்பிக்கள் வரிசையில் இவரும் அங்கம் வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும் ஆட்டுக்குட்டியும்



சிறுகதை

○ தபின்

ஆட்டுக் குட்டியள் ரண்டும் ஒண்டையொண்டு தள்ளிக் கொண்டு தாயாட்டின்ரை மடியில பால் குடிக்கிறதைப் பாக்கேக்க ஒரு சந்தோசமாகத்தான் கிடக்குது. எப்பவும் மணி (கிடாய்க்குட்டி) வலப்பக்க மடியிலையும் செல்வி (மறிக்குட்டி) இடப்பக்க மடியிலையும்தான் பால் குடிக்குங்கள். ஒருநாள் கூட அதுகள் மடி மாறிக் குடிச்சதை நான் காணேல்லை. நான் ஆடுகளைப் பிராக்குப் பார்த்துக் கொண்டு நிக்கேக்க, வாசல்ல ஆரோ வாற மாதிரிக் கிடந்திது. எட்டிப் பாத்தன்.

அம்மாதான்!

வேர்த்து, விறுவிறுத்து, கையில உடுப்பு 'பாக்கோட' வாறவாவைப் பாக்கப் பாவமாத்தான் கிடக்குது. ''பாக்கை'' ஒரு பக்கமாப் போட்டிட்டு அம்மா தொப்பெண்டு ஈசிச் சேருக்குள்ள சாஞ்சிட்டா.

கழுகுக்கு மூக்கில வேர்க்கிற மாதிரி அம்மா உடுப்போட வந்தது பக்கத்து வீட்டில விளையாடிக் கொண்டு நிண்ட செந்தூருக்கு என்னெண்டுதான் தெரிஞ்சுதோ, தெரியேல்லை. விளையாடின களைப்போட ஓடி வந்து உடுப்பு 'பாக்கை' எடுத்து பிய்ச்சு அதுக்குள்ள என்னென்ன கிடக்குதெண்டு நோண்டத் துடங்கிட்டான். அம்மாவின்ரை வெள்ளைச்சீலை ரண்டு, ரவுசர்த்துணி ரண்டு, சேர்ட், பிளவுஸ் அண்டஸ்கேர்ட் எண்டு உள்ளுக்க இருந்ததை எல்லாம் எடுத்து வெளியில போட்டான். நான் என்ரை சட்டையையும் ஸ்கேர்ட்டையும் எடுத்துக் கொண்டு அறைக்குள் போய் அளவு சரியாய் இருக்குதோ எண்டு போட்டுப் பார்க்கத் துடங்கேக்க, அம்மாவும் தம்பியும் கதைக்கிறது என்ரை காதில விழுந்தது.

"எணேய் அம்மா! இந்த இரண்டு ரவுசர்த் துணியையும் கொண்டுபோய் ரெயிலரிட்டக் குடுத்திட்டு வரட்டே?"

"உனக்கு எல்லாத்துக்கும் அவசரம். ரெயிலரிட்ட தைக்கக் குடுக்கேக்க அளவைச் சரியாய் குடு .பேந்து போனமுறை மாதிரி அங்க இழுக்குது இஞ்சை இழுக்குது எண்டு என்ரை உயிரை வாங்காதை"

ரண்டு பேரும் கதைச்சு முடிக்கிற துக்குள்ள நான் சட்டையையும் பாவாடையையும் போட்டுக் கொண்டு வெளியால வந்தன். அப்ப அம்மாவுக்கு என்னத்துக்கு எண்டு தெரியாமல் ரண்டு கண்ணும் கலங்கிப் போட்டுது.

"எணேய் இப்ப என்ன நடந்திட்டுது? ஏனணை ,ஏன் இப்படி அழுகிறாய்?"

"ஒண்டுமில்லையடி பிள்ளை"

எண்டாலும் அம்மான்ர மனசுக்குள்ள இன்னமும் அந்தக் கவலை இருக்கிற மாதிரி எனக்குப் பட்டுது. எப்பிடித்தான் கெஞ்சிக் கேட்டாலும் எங்கட அம்மாட்டயிருந்து ஒரு விசயமும் அறியேலாது. அம்மா நழுவி குசினிப் பக்கம் போறதைப் பாத்தும் பார்க்காத மாதிரி நான் கண்ணாடிக்கு முன்னால் நிண்டு கொண்டு சட்டையை வடிவு பாத்தன். கொஞ்ச நேரம் செண்டிருக்கும். அம்மா இறுக்கி அழுகிற சத்தம் கேட்டுது. ஜன்னலுக்குள்ளால மெல்ல எட்டிப் பாத்தன். அம்மா விக்கி விக்கி அழுது கொண்டிருந்தா. அம்மா ஒரு அஞ்சு வருசமா இப்படித்தான். ஒரு நல்ல நாள் பெரிய நாள் எண்டால் காணும். உடனே குசினிக்க போய் அழத் தொடங்கிவிடுவா. அம்மாவை அவவின்ர பாட்டில் அழ விட்டுவிட்டு நான் முத்தத்திலே காயப்போட்ட புழுக் கொடியலை எடுத்துக் கொண்டு வந்து , உள்ளுக்குள்ள வைச்சுப் போட்டு நிமிரேக்க அண்ணையின்ர படம் கண்ணிலை பட்டுது.

"அண்ணை!"

அவன் இப்ப எங்க இருக்கிறான்?

களுத்துறையிலயா?

மகசினிலையா?

இல்லாட்டிச் சிலவேளை....??

சீச்சீ! அப்படியொண்டுமிருக்காது. அண்ணாவுக்கொண்டும் நடந்திருக்காது.

அம்மா ஒரு மாதிரி அழுகையை நிப்பாட்டிப் போட்டு கிணத்தடிக்குப் போய் முகம் கழுவிப் போட்டு வந்து றோட்டை உத்துப் பாத்துக் கொண்டு வாசலில் இருந்தா.

அவவைப் பார்க்க எனக்குப் பாவமாய் கிடந்திச்சு. கிட்டப்போய் அவாவின்ரை தோளில கையை வைச்சன். என்ன? எண்டு கேக்கிற மாதிரி அவா என்னைத் திரும்பிப் பார்த்தா!

"அம்மா ! அழாதையணை, எண்டைக்கோ ஒரு நாளைக்கு அண்ணை கட்டாயம் திரும்பி வருவான்! "

அம்மா ஒண்டும் சொல்லேலை. என்னைக் கொஞ்ச நேரம் உத்துப் பார்த்துக் கொண்டு நிண்டா. பேந்து தன்ரை பாட்டில

" ஓ! அவன் வருவான். அம்மாவைத் தேடி வருவான்.." எண்டு முணுமுணுத்தா.

நான் இனியும் அண்ணையைப்பற்றி ஏதும் கதைச்சா அம்மா அழுது போடுவா எண்டு சொல்லாமலே எனக்கு தெரிஞ்சுது.

போசாமல் அங்காலிப்பக்கமாப் பார்க்கத் தொடங்கினன்.

திரும்பவும் ஆட்டுக் குட்டியள் பால் குடிக்கிறது கண்ணிலை பட்டுது.

அம்மாவோடை அண்ணையைப் பற்றிக் கதைக்காமல் இருக்கிறதுக்காண்டி கொஞ்ச நேரம் அதுகளைப் பிராக்குப் பார்த்துக் கொண்டிருந்தன்.

தாயாடு வரண்டு போன நாக்காலையும் முகத்தாலையும் குட்டியளின்ர முகத்தோட தேய்ச்சு தேய்ச்சு அதுகளுக்கு தன்ரை அன்பைக் காட்டிக் கொண்டிருந்திச்சு. இப்பவும் மணி வலப்பக்க மடியிலையும் செல்வி இடப்பக்க மடியிலையும் தான் பால் குடிச்சுக் கொண்டிருக்கினம்.

எப்படி இதுகள் ரண்டும் இப்பிடி வலப்பக்கம் உனக்கு, இடப்பக்கம் எனக்கு எண்டு பிரிச்சு வைச்சுக் குடிக்குதுகள்? அப்படிப் பிரிச்சுப் பாக்கிறதைத்தானே ஆறாவது அறிவு எண்டு சொல்லுகினம்.

அப்படியெண்டால் ஆடுகளுக்கும் ஆறறிவு இருக்குதோ ? இப்படி நான் கண்டபடி யோசிச்சுக் கொண்டிருக்கேக்க தான்

நான் கனவிலையும் நினைச்சுப் பாக்காத அது நடந்தது. செல்வி தாயிட்ட பாலைக் குடிச்சிட்டு ஓட

செல்வியைத் துரத்திக் கொண்டு சந்தோசத்தில் பின்னால மணி ஓட

செல்வி இன்னும் இறுக்கி ஓட

இதுவும் துள்ளிக் கலைக்க

அது கிணத்துக் கட்டைத் தாண்டிப் பாய மணியும் பாய

"டமார்" இடையில் கட்டுத் தடுக்கி மணி "பொத்" எண்டு கிணத்துக்குள்ள

"எணேய் இப்ப என்ன நடந்திட்டுது? ஏனணை , ஏன் இப்படி அழுகிறாய்?" "ஒண்டுமில்லையடி பிள்ளை" எண்டாலும் அம்மான்ர மனசுக்குள்ள இன்னமும் அந்தக் கவலை இருக்கிற மாதிரி எனக்குப் பட்டுது.



விழுந்துட்டுது.!

"ஐயோ!"

கத்திக் கொண்டு கிணத்தடிக்கு ஓடினன். எனக்குப் பின்னால அம்மாவும் ஆத்துப் பதைச்சுக் கொண்டு ஓடி வந்தா. கிணத்துக்குள்ள மணி கொஞ்ச நேரம் நீந்த வெளிக்கிட்டு பேந்து ஏலாமல் போக தண்ணிக்குள்ள கீழ போறதும் பேந்து மேல வாறதுமாய் இருந்திச்சுது. எனக்கெண்டால் ஒரே அந்தமாப் போட்டுது. என்னெண்டு மணியைக் காப்பாத்துறதெண்டு தெரியேலை. துலாவை நல்லாய்த் தாட்டு, மணி ஏறி வரட்டுமெண்டு வாளியை அதுக்கு கிட்ட விட்டன். ஆனால் தண்ணிக்கை கனநேரம் நிண்டதால அதின்ர உடம்பு விறைச்சுப் போட்டுது போல. அது வாளிக்கை ஏறவேயில்லை. இந்த நேரம் பாத்து செந்தூரும் ரெயிலர்கடைக்கு போட்டான். இல்லாட்டிக்கு இத்தறிக்கு கிணத்துக்க குதிச்சு மணியைத் தூக்கி யிருப்பான்.

கொஞ்சம் கொஞ்சமா மணி சோர்ந்து போற மாதிரி தெரியுது!

"ஐயோ ! அம்மா அது...... கிணத்துக்கை தாழுது! "

அப்பாடா! பிறகு ஒரு மாதிரி தன்னால ஏலு மட்டும் காலை அடிச்சு அடிச்சு மேலே வரப் பாக்குது. பேந்து கிணத்துக் கட்டில கத்திக் கொண்டு நிண்ட தன்ர தாயையும், செல்வியையும், அம்மாவையும் என்னையும் வடிவாய்ப் பார்த்திட்டு ¡ 'ப்ளுக்'! மணி தண்ணிக்குள்ள தாண்டு கீழே போட்டுது. திரும்ப வரும் என்று பார்த்தன் .

வரேலை!

"ம்ம் மேய்ய்ங் ... ...... ம்ம் மேய்ய்ங் ... ... ... " மணிக்குட்டி சாக தாயாடு கத்திக் கொண்டே கிணத்தைச் சுத்திச் சுத்தி வந்து கொண்டிருந் திச்சுது. எனக்கு அதைப் பாக்க "டப்' பென்று அம்மாவின்ர ஞாபகந்தான் வந்திது. அவாவும் இப்படித்தானே.. ..!

அண்ணாவை அவங்கள் பிடிச்சுக் கொண்டு போகேக்கை கத்தியழுதவா! அம்மாக்கும் தாயாடு கத்துறதைப் பார்த்தவுடன அண்ணையின்ர ஞாபகம் வந்துட்டுது போல கிடக்குது! அவவும் அழுது கொண்டு தாயாட்டின் முதுகில,

மெல்லத் தடவி விட்டா. அது அவவின்ர முகத்தோட தன்ரமுகத்தை தேய்ச்சு தேய்ச்சு இன்னமும் இறுக்கி கத்த தொடங்கி விட்டுது.

அதுக்குள்ள செந்தூரும் வந்திட்டான்.

"என்னணையக்கா! எல்லாரும் கிணத்தடியில நிண்டு ஒப்பாரி வைக்கிறியள்?"

" மணி கிணத்துக்கை தவறி விழுந்துட்டுதடா"

"மணியோ? கிணத்துக்கையோ ?"

'அவ்வளவுதான்'!

கிணத்துக்கை செந்தூர் குதிச்சிட்டான். கொஞ்ச நேரத்தால துலாக் கொடியில் மணியைக் கட்டி ஒரு மாதிரி மேலே கொண்டு வந்திட்டான். மணியைக் கண்டவுடன் தாயாடும் செல்வியும் ஓடிவந்து அதை மூசி மூசி மணந்து பாத்திட்டு பேந்து திரும்பவும் பழையபடி கத்தத் தொடங்கிட்டுதுகள். மணி செத்துப் போச்செண்டு எனக்கு விளங்கிட்டுது. நானும் அழத் தொடங்கிட்டன்.

▣ ▣ ▣ ▣

மணி செத்துப்போய் மூண்டாம் நாள் பின்னேரம். இஞ்சி திண்ட குரங்கு மாதிரி ஒரு மாதிரியாய் முகத்தைக் வைச்சுக் கொண்டு செந்தூர் எனக்குக் கிட்ட வந்து நிண்டான். என்னவோ ஒரு பிழை செய்து போட்டானெண்டு வடிவாய் விளங்கிட்டுது.

"என்னடா?"

"ஒண்டுமில்லையக்கா!'

சொல்லிக்கொண்டே, ஒளிச்சு வைச்சிருந்த தன்ரை ஜீன்ஸை எனக்கு முன்னால நீட்டினான். ஜீன்சின் பின் பக்கம் " எல்" வடிவில் கிழிந்து தொங்கியது.

"ஏனடா இப்படிக் கிழிஞ்சது?"

"அது வந்தக்கா . ..... ஜீன்ஸை ஆணியில் கொழுவியிருந்தனான் . இண்டைக்கு ரூபன் மாஸ்ரரின்ரை கலியாண வீட்டு ரிசப்சனுக்கு போறதுக்காண்டி அவசரத்தில எடுக்கேக்க ஆணியில் கொழுவுப்பட்டு....."

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பதுங்கியிருக்கும் அரக்கர்கள்

க. சுவாமிநாதன்
பொறுப்பாசிரியர்,சுகாதாரக் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

முன்னர் அடிக்கடி பத்திரிகைகளில் 'மிதிவெடி வெடித்து ஒருவர் கால் இழப்பு' என்றோ, 'இனம் தெரியாத பொருளை எடுத்து விளையாடிய சிறுவன் பலி' என்றோ செய்திகள் வரும். ஆனால் இப்போது பரவலாக எங்கள் மண்ணில் பதுங்கியிருந்த அரக்கர்களான வெடிபொருள்கள் பெருமளவில் அகற்றப்பட்டு விட்டதனால், அத்தகைய துர்ச்செய்திகள் மெல்ல மெல்ல இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலையில் இன்றைய நாள் எமக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இன்றுத்தான் ( ஏப்ரல் 4 ஆம் திகதி ) சர்வதேச நிலக்கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வு தினம்.

நிலக்கண்ணிவெடி தொடர்பான அபாயத்தில் இருந்து மக்களைப் பார்துகாப்பதற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதன் மூலம் உற்பத்தியைத் தடுக்கவும், விநியோகம், விற்பனை, நிலக்கண்ணிவெடிகளைப் புதைத்தல் போன்றவற்றைத் தடுக்கவுமான விழிப்புணர்வை வலியுறுத்தும் விதத்தில் இத்தினம் முக்கியத்துவம் பெறுகின்றது. பல்வேறு காரணங்களுக்காக உள்நாட்டிலும், நாட்டின் எல்லைப்புறப் பகுதியிலும் வெடிபொருட்கள் புதைக்கப்படு கின்றன. யுத்தத்தின் போது ஆயுதம் தாங்கிய நபர்கள் ஆயுதம் தாங்கிய மற்றொரு தரப்பினரை எதிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் வெடிபொருள்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அவை முழுமையாக அகற்ற முடியாது பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றினால் அதிகளவில் சிறுவர்களே பாதிக்கப்படுகின்றனர். இதற்கு பல காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன.



## முழுதாக அகற்றுவது கடினமே

பெரும்பாலான நாடுகளில் யுத்தத்தின் போது புதைக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் வெடிபொருட்களை எங்கே எங்கே புதைத்தனர், அவை எங்கே காணப்படுகின்றன என அவர்கள் முறையாக ஆவணங்கள்,பட வரைபு பேணுவது குறைவு. அப்படி பட வரைபு இருப்பினும் அவை துல்லியமாக குறித்த இடத்தில் காணப்படாது போகலாம். பல்வேறு காரணங்களினால் புதைக்கப்பட்ட அல்லது காணப்படும் வெடிபொருள்கள் மனித செயற்பாட்டினாலும், மோப்ப நாய்களின் துணை கொண்டு, நவீன தொழிநுட்ப சாதனங்களைக் கொண்டும் வெடிபொருட்கள் அகற்றப்படுகின்றன. எப்படி எவ்வாறு அகற்றும் போது குறித்த பிரதேசத்தில் வெடிபொருள்கள் இல்லை என 100 சதவீதம் ஒருவரினால் உறுதிப்படுத்திக் கூறமுடியாது . ஏனெனில் யுத்தத்தின் போது புதைக்கப்ப டும் வெடிபொருட்கள் சராசரியாக நிலமேற்பரப்பில் இருந்து 15 செ.மீ வரை (சுமார் அரை அடி) வரையே இருக்கும் என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே மீட்புப்பணிகள் இடம்பெறுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களினால் வெள்ளப்பெருக்கு, குழி உருவாதல் காரணமாக அவை குறித்த பகுதியை விட கூடிய ஆழத்துக்கு சென்றுவிடும். இதனால் வெடிபொருள் உள்ளது என கண்டறியவே சில சந்தர்ப்பத்தில் இயலாமல் போய்விடும். பின்பு நிலத்தை உழவு இயந்திரம் கொண்டு உழும் போதோ அல்லது குழி தோண்டும் போது அவை கண்டுபிடிக்கப்படலாம் அல்லது வெடிக்கலாம். இவை தனிநபர் எதிர்ப்பு மிதிவெடிகள், வாகனங்களை இலக்கு வைக்கும் வெடிபொருள், அமுக்க வெடி அல்லது வாகன நிலக்கண்ணிவெடி என அழைக்கப்படுகின்றன.

## காலம் கடந்தும் காத்திருக்கும்

இவைதவிர தரைப்பகுதியில் இருந்து சுடுகலன்கள், ஆகாய போர் கலங்களினாலும் போடப்படும். அதேபோல் கடல் பிராந்தியத்தில் பயன்படுத்தப்படும் கடல்கலங்களில் இருந்து ஏவப்படும் வெடிபொருட்கள், கடல்கண்ணிகள் வெடிக்காது தரையில் வீழ்ந்து அவை அசைவு, அதிர்வு காரணமாக வெடிக்கத்தக்க நிலை ஏற்படும் போது வெடிக்கிறது. உரிய காலத்தின் பின்பும் வெடிக்கின்றன. இவை பல தசாப்தங்களுக்கு தமது கோரச் செயற்பாட்டை நிறுத்தாது விழிப்புடன் உயிர் குடிக்கக் காத்திருக்கும் குறித்த வெடிபொருள் ஒன்றின் விலை உதாரணமாக பத்து டொலர் எனில் அவை நிலத்தில் இருந்து அவ் ஒரு வெடிபொருளை அப்புறப்படுத்த நூறு டொலர் செலவிடப்படும் என அறிக்கைகளில் குறிப்பிடப்படுகின்றது.

குண்டு மழை பொழிந்த எம்தேசத்தில் இதன் பாதிப்பை வடக்கு, கிழக்கு மக்கள் அதிகளவில் அனுபவித்தவர்கள், அனுபவித்து வருகின்றனர்.

2009 ஆம் ஆண்டுடன் யுத்தம் நிறைவடைந்து ஒரு தசாப்தம் ஆகிவிட்ட போதும் நிலத்தில் புதையுண்ட வெடிபொருள், மர்மப் பொருட்கள் மக்களின் அன்றாட செயற்பாட்டில் தனது அச்சுறுத்தல் செயற்பாட்டை வெளிப்படுத்தியவாறு உள்ளது.

ஏன் இன்றுகூட உலகமகா யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட வெடிபொருள்கள் வெடிக்கும் நிலையில் மீட்கப்படுவது குறிப்பி டத்தக்கது.



## பொறுப்போடு செயலாற்றுக

இன்று வெடிபொருள்களின் அபாயகரத் தன்மையைக் கருத்திற்கொண்டு அப்பாவி மக்களைப் பாதுகாக்க பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்னின்று செயற்படுவதை எம்மால் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு விழிப்புணர்வு சுவரொட்டிகள், வீதி நாடகம், கூத்துக்கள், சித்திரப் போட்டிகள் நடாத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. நிலக்கண்ணிவெடிகளுக்கு எதிராக செயற்படும் ஒப்பந்தத்தில் உலகின் பல முக்கிய நாடுகள் கையெழுத்திடாமல் இருப்பது பெரும் வேதனைக்குரிய விடயமாகும். 2021 ஆம் ஆண்டின் தொனிப்பொருளாக Persevernace, partnersiup and progress" அதாவது தொடர்முயற்சி பங்காண்மை மற்றும் முன்னேற்றம்" என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை எதிர்கொண்ட சவால்கள், எதிர்நோக்கப்போகும் சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என ஆராய்ந்து பொறுப்புடன் செயற்படவேண்டியது அவசியமாகிறது.

## விழிப்புணர்வு பெற்றும்....

வெடிபொருள் விழிப்புணர்வு பெற்றவர்களும் தவறுவிடும் துன்பியல் சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. வெடிபொருள்கள், மர்மப்பொருள்கள் தொடர்பான விழிப்புணர்வு நன்கு பெற்ற பலர் விழிப்புணர்வு இன்றி செயற்பட்டு பாதிப்படைந்த வரலாறும் நிறைய நடைபெற்ற சம்பவங்கள் உள்ளன. எமது பகுதியில் மலசலகூடக் குழியின் கொங்கிறீற் மூடியின் மீது காணப்பட்ட மர்மப் பொருளைக் கையாண்டவரின் காது சோனை துண்டாடப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. இதில் பாதிக்கப்பட்டவர் விழிப்புணர்வு செயற்பாட்டில் நல்ல ஆர்வத்தோடு பங்குபற்றியவர். அப்போது குறித்த நபரிடம் தகவல் திரட்டச் சென்ற அரச சார்பற்ற மிதிவெடி விழிப்புணர்வு செயற்பாட்டில் ஈடுபட்ட அதிகாரி அதிர்ச்சியடைந்தார். ஏன் தம்பி என்ன நடந்தது என வினாவிய போது அவர் "அந்தப்பொருள் வெடிக்காது என்று நினைத்தேன்" என்று சொன்னார்.

அப்போது தம்பி ஏன் இடது விரலால் காதைப்பொத்தி வலது கையை உயர்த்தி அமத்தினீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர் குறிப்பிட்டார் தற்செயலாக வெடித்தால்" என்று குறிப்பிட்டார்.

அப்போது அவர் நீங்கள் விழிப்புணர்வு பெற்ற பின் இவ்வாறு செய்தது முறையா எனக் கேட்க தலையை சரித்தவாறு பிழை என்று மௌனமாக நின்றார். இவ்வாறான பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

### அதிகளவில் வெடிபொருள்கள் காணக்கூடிய இடங்கள்

யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களில் பரவலாகக் காணப்படும்.

1. பதுங்குகுழிகள் (பங்கர்) அமைந்திருந்த பகுதி
2. காவலரண்கள் அமைந்திருந்த பகுதி
3. படைமுகாம்கள் அமைந்திருந்த பகுதிகள்
4. மண் அணை (பண்ட்) போடப்பட்ட பகுதிகள்
5. இராணுவ முட்கம்பி வேலிகள் போடப்பட்ட பகுதிகள்
6. யுத்தம் நடைபெற்ற பிரதேசத்தில் பாரிய மரத்தின் அடிப்பகுதி
7. யுத்தம் நடைபெற்ற பிரதேசத்தில் கிணற்றடி, மலசலகூடப் பகுதி
8. பழமரங்கள், தென்னை மரம், மரப்பொந்துகள்
9. குளம், கடல் பகுதியில் இறங்கக்கூடிய பகுதியில் புதைக்கப்பட்டிருக்கும்
10. புற்கள், புதர் நிறைந்த பகுதி
11. அபாய எச்சரிக்கை விளம்பரப் பலகை போடப்பட்ட இடங்கள்

### வெடிபொருள்களைக் கண்டால் நாம் என்ன செய்ய வேண்டும்?

நாம் செல்லும் இடத்தில் மர்மப்பொருளைக் (வெடிபொருளை) கண்டால் என்ன செய்ய வேண்டும்? உடனே குறித்த இடத்திலே நில்லுங்கள். சற்று சிந்தியுங்கள்.

அந்த மர்மப்பொருளை அடையாளம் காணக்கூடியதாக எம்மிடம் அல்லது சூழலில் இருக்கும் பொருளைக் கொண்டு அடையாளப்படுத்துங்கள் (பொருத்தமான முறையில்). பெரிய சத்தத்தில் கூப்பிட்டு பெரியோருக்குத் தெரியப்படுத்தி அடையாளப்படுத்துங்கள்.

நாம் சென்ற பாதச்சுவடு வழியே மீண்டும் திரும்புதல். குறித்த பொருள் தொடர்பாக பெற்றோர்/ கிராம சேவகர்/ பொலிஸார்/ இராணுவத்தினருக்கு உடனடியாகத் தெரியப்படுத்துங்கள். குறித்த பொருளுக்கு அண்மையில் சிறுவர்கள், விலங்குகள், வாகனங்கள், மனித நடமாட்டம் இடம்பெறுவதனைத் தவிர்த்தல். குறித்த சம்பவம் தொடர்பாக ஏனையவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும்....

(தொடர்ச்சி)

"சரி ! அப்படியெண்டால் மற்ற ஜீன்ஸைப் போட்டுக் கொண்டு போவன்"

"மற்ற 'ஜீன்ஸை ' நேற்றுத்தான் லோன்றியில குடுத்தனான் .

அண்டைக்கு அம்மா வாங்கிக் கொண்டு வந்த துணியையும் ரெயிலர் இன்னும் தைக்கேல்லையாம். இல்லாட்டி அதையாவது போட்டுக் கொண்டு போகலாம்"

"இப்ப என்னெண்டடா ரிசப்சனுக்கு போகப்போறாய்?"

"அதுதானக்கா எனக்கும் தெரியேல்லை "

அவனைப் பார்க்கப் பாவமாய் கிடந்திது. என்ன செய்யிறதெண்டு ஒரு நிமிசம் யோசிச்சன். என்ரை கஷ்ட காலத்துக்கு அப்பதான் எனக்கு அந்த யோசனை வந்தது.

"செந்துார் ! அம்மா எங்களுக்கு உடுப்பெடுக்கேக்க அண்ணைக்கும் சேர்த்து எடுத்து அலுமாரிக்குள்ள வைச்சிருக்கிறாவெல்லோ. அதில் ஒரு ஜீன்ஸை நைசாய் எடுத்து தாறன். நீ இண்டைக்கு மட்டும் அம்மாவு க்கு தெரியாமல் போட்டுக் கொண்டு போட்டு திருப்பிக் கொண்டுவந்து வைச்சுப்போடு!"

என்ரை யோசினைக்கு "ஓ"மெண்டு செந்தூர் தலையாட்டினான்.

பிறகு செந்தூர் அலுமாரித் துறப்பை வீடு முழுக்க தடவி குசினிக்க கிடந்து எடுத்துக் கொண்டு வந்து என்னட்டை தந்தான். நான் அம்மா எங்க எண்டு நோட்டமிட்டன். கிணத்தடியில் அம்மா உடுப்புத் தோய்ச்சுக் கொண்டு நிக்கிறது எனக்கு கிறிலுக்குள்ளால தெரிஞ்சுது . எனக்கு நெஞ்சு படபடவெண்டு அடிச்சுது.

'நான் அலுமாரியைத் திறந்து அண்ணைக்கெண்டு அவா சேர்த்து வைச்சிருக்கின்ற உடுப்பை எடுத்தனான் எண்டு தெரிஞ்சால்.. பேந்து மனிசி என்னைச் "சிப்பிலி" ஆட்டிப் போடும்'

இதுதான் சரியான நேரமெண்டிட்டு சாமியறைக்க போய் துறப்பைப் போட்டு அலுமாரியைத் திறந்தன்.

அந்த அலுமாரிக்குள்ள "என்லார்ஜ்" பண்ணின பெரிய படத்தில அண்ணை சிரிச்சுக் கொண்டு இருந்தான். அவன்ரை படத்துக்கு கீழ சேர்ட்டுகளும், ரவுசர்களும் அவனுக்குப் பிடிச்ச பலகார பைக்கற்றுக்களும், அவன்ரை சங்கிலி, மோதிரம் மணிக்கூடு எண்டு ஊரிப்பட்ட சாமான்கள்.. ... ... !

எனக்கு ஒரு பக்கம் அண்ணையை நினைச்சு அழுகையும், மற்றப்பக்கம் அம்மா இப்பிடி காசைக்கொட்டி இதுகளை வாங்கி வீணாப்பூட்டி வைச்சு அநியாயமாக்கிறதைப் பாத்து ஆத்திரமும் வந்தது.

"ஏனடி அலுமாரியைத் திறந் தனீ? "

எனக்குப்பின்னால அம்மாவின்ர ஆத்திரக் குரல். பயத்தோட திரும்பினன். அம்மாவைப் பாக்க எனக்குப் பத்திரகாளியின்ர ஞாபகம் வந்தது.

"அது வந்தணை உவன் செந்துார்தான் ஜீன்ஸ் ஒண்டு இதுக்குள்ள எடுத்துத் தரச் சொன்னவன். அதுதான் .... ...." "பளார்!"

அம்மா அடிச்ச அடியில என்ரை வலப்பக்க கன்னம் ரத்தம் மாதிரிச் சிவத்துப் போட்டுது.

"உந்த அலுமாரிக்கை இருக்கிறதெல்லாம் கொண்ணை க்கல்லோ ! அதை எப்பிடியடி நீ எடுப்பாய்?. அவன் செந்துார்தான் சின்னப்பொடியன். ஜீன்ஸை எடுத்துத் தா எண்டு கேட்டா உடன நீயும் இது தான் சாட்டெண்டு அலுமாரிக்கை என்ன கிடக்கு தெண்டு தோண்டிப் பாக்கிறதோ?"

அம்மான்ரை இந்த "தோண்டிப் பக் பார்க்கிறதோ" எண்ட சொல்லைக் கேட்டவுடன எனக்கு .இனிமேல் இல்லையெண்டளவுக்கு கோபம் வந்திட்டுது.

"ஓமோம்! தோண்டிப்பாக்கிறதுக்கு உதுக்குள்ள பெரிய பொக்கிசமோ வைச்சிருக்கிறியள்?

இது எப்பவோ அவங்கள் பிடிச்சுக் கொண்டு போனவனுக்கு, உடுப்பும், நகையும் சாப்பாடும்தானே வைச்சிருக்கிறாய். உனக்கு விசர் முத்திப் போச்சுது. இல்லாட்டி இப்பிடிக் காசை அநியாயம் பண்ணி அண்ணனுக்குப் பிடிச்சதை எல்லாம் வாங்கிப் பொத்திப் பொத்தி அலுமாரிக்கை வைச்ச ருப்பியோ?. ஊரில் எத்தினை பேர் காணாமல் போட்டினம். அவையின்ரை தாய் தேப்பனெல்லாம் இப்படியோ தங்கட காணாமல் போன பிள்ளையளுக்கு உடுப்புகள் வாங்கிக் குவிக்குதுகள்?. உன்ரை பிள்ளையில பாசமெண்டு ஊர் உலகத்துக்குக் காட்டுறதுக்கு தானே இப்படியெல்லாம் சேர்த்து வைச்சிருக்கிறாய்?"

ஆத்திரத்தில் மரியாதையில்லாமல் அம்மாவைப் பேசிப் போட்டன். இன்னும் கனக்க கதைச்சிருப்பன் அதுக்குள்ள அம்மா "ஓ" வெண்டு அழத் தொடங்கிட்டா. இனியும் நிண்டெனென்டால் வீண்சோலி தான் வருமெண்டிட்டு வெளியில போட்டன்.

'அண்ணனில் பாசமெண்டு மற்றவைக்கு காட்டத்தான் இப்பிடி அம்மா ,அண்ணனுக்குத் தேவையான எல்லாத்தையும் வாங்கி வைச்சி ருக்க வேணும். அப்படியில்லாட்டி அம்மாவுக்கு விசராயிருக்க வேணும். நான் அம்மாவைப் பேசினதில் என்ன பிழை.?'

"ம்மேய் ய்ய் ய்ங்! "

என்ரை கவனத்தை செல்வியின் முனகல் சத்தம் திசை திருப்பிப் போட்டுது. என்னெண்டு பார்த்தன்.

தாயாடு செல்வியை தலையால இடிச்சுத்தள்ளிக் கொண்டு நிண்டுது. தாயாட்டின்ர இடப்பக்க மடியில பால் எப்பனும் இல்லை. வலப்பக்க மடி பெரிசாய் பலுான் மாதிரி ஊதிப்போய்

நிரம்பிக் கிடந்திச்சுது. அதைக் குடிக்கிற துக்கு செல்வி எவ்வளவோ பாடுபட்டும் தாயாடு விடவே யில்லை. சிலவேளை .. .. .. .

எங்கட அம்மா மாதிரித்தான் தாயாடும் தன்ரை மகன் மணிக்காண்டித்தான் அது குடிச்ச மடியில பாலைச் சேர்த்து வைச்சிரு க்குதோ? | அப்படி மணிக்கெண்டு சேத்து வைச்சிருந்தால் அதைச் செல்வி குடிக்கவிடாமல் தாயாடு இடிக்கிறதுக்கு என்ன காரணம்? செல்வியும் அதின்ரை குட்டிதானே! அதுக்கு விசரோ?! இல்லாட்டி மணி திரும்பி வந்து குடிக்குமெண்ட நம்பிக்கையோ?. அப்ப

அம்மாவும் அப்படி அண்ணா கட்டாயம் திரும்பி வருவான் எண்ட நம்பிக்கையிலதானோ அந்த உடுப்புகளையெல்லாம் சேத்து 'வைச்சிருக்கிறா? '

மனம் தெளிஞ்ச மாதிரி ஒரு உணர்வு.

சாமியறைக்க சத்தம் போடாமல் போனன். இன்னமும் அம்மா அழுது கொண்டிருந்தா.

நான் ஒண்டும் கதைக்காமல் கீழே விழுந்து கிடந்த அண்ணையின்ரை உடுப்புக்களை எடுத்து அலுமாரிக்க அடுக்கி வைச்சன். அம்மா இப்ப எழும்பி என்னையும் கட்டிப் பிடிச்சுக் கொண்டு அழத் தொடங்கிட்டா. வெளியில தாயாட்டிட்ட செல்வி அடி வாங்கி அலறும் சத்தம் இன்னமும் கேட்டுக் கொண்டு இருந்தது.

*2002 ஜுலை*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ வடகோவை வரதராஜன்

# தென்னம் தோப்புகளில் பொசிவு நீர்க்குட்டைகள்



செல்லையரின் தென்னம் தோப்பில் உள்ள ஓர் குழியை சிங்கம் மூடி நிரவிக்கொண்டிருந்தார்.

"ஏன் அண்ணை அதை மூடுறீங்கள்?" என்று கேட்டேன் நான் .

" முந்தி, கிடுகு பின்னுறதுக்காண்டி தென்னோலையளை ஊறப்போட வெட்டின துரவு. இப்ப ஆர் கிடுகு வேண்டு கினம் ? அதுதான் மூடுவம் எண்டு சிங்கத்தை வரச்சொன்னானான் "

"தென்னம் தோப்புகளில் இப்படி துரவுகள் இடைக்கிடை இருப்பது நல்லம் அண்ணை"

"உதென்ன விளல் கதை பறையிறாய். தரையெண்டால் ஒரே மட்டமாய் இருந்தால்தானே ஒப்ப செப்பமாய் இருக்கும்"

" ஒப்ப செப்பமாய் இருந்தால் பார்க்க வடிவாய்த்தான் இருக்கும் .ஆனால் கடும் மழையின்போது பசளையுள்ள மேல்மண் அரிபட்டு அடுத்த காணிக்குப் போகிடும் ."

"வெள்ளம் பள்ளத்தை நாடி போகும் எண்டு என்ரை அப்பு சொல்லுவார்"

" அந்த பள்ளம் உங்கடை தறேக்கை இருந்தால் அடுத்த காணிக்கை போற வெள்ளம் உங்கடை காணிக்கை நிக்குமெல்லே ."

" என்னமோ புதுப் பூராயம் பறையிறாய் . எனக்கு ஒண்டுமாய் விளங்கேலை. கொஞ்சம் விளப்பமாய் சொல்லு"

" தென்னம் தோப்புகளில் இடைக்கிடை இப்படித் துரவுகளை வெட்டி விடவேணுமண்ணை .
இதைப் பொசிவு நீர்க் குட்டை எண்டு சொல்லுறது"

" இதென்ன கோதாரி ? பொசிவு, கசிப்பு எண்டெல்லாம் பறையிறாய் "

"பத்தடி நீளத்தில் ஐந்தடி அகலத்தில் மூன்றடி ஆழத்தில் (10 x 5 x 3 ) அரை ஏக்கருக்கு ஒரு பொசிவு நீர்க் குட்டை அமைத்து விட்டால் உங்கடை தென்னம் தோப்பு பச்சை பசேல் எண்டு இருக்குமண்ணை"

" இதாலை என்ன பிரயோசனம் விதானையார்? " எனக் கேட்டார் பார்வதம் மாமி .

" பெய்யிற மழை வாரடிச்சு ஓடிக் கடலுக்கை போகாமல் உங்கடை காணிக்கையே நிக்குமெல்லே"

"அது சரிதான் விதானையார் , இதாலை என்ன நன்மை?" வெயிலுக்காக தலைக்குப் போட்ட மொட்டாக்கை எடுத்து முகத்தைத் துடைத்தபடி பார்வதம்மாமி கேட்டார் .



" பசளையுள்ள வளமான மேல் மண் அரித்து அடுத்த காணிக்குப் போகாமல் இந்த பொசிவு நீர்க் குட்டைகளுக்கு எடுத்து வரப்படுகிறது .
அத்தோடை இந்தக் குட்டைகளில் தேங்குகிற நீர் நிலக்கீழ் நீர்மட்டத்தை உயர்த்தி உங்கடை கிணறுகளை வற்றிப் போகாமல் செய்கிறது ."

" ஓமடா தம்பி கடும் கோடையிலை கிணத்திலை தண்ணி நல்லாய் கீழை போகுது"

" அதுமட்டுமே , இந்த பொசிவு நீர்க் குட்டைகளிலை இருக்கிற நீர், பக்கவாட்டாகபொசிஞ்சு உங்கடை தென்னை மரங்களை பசுமையாய் வைச்சிருக்குது "

" பொசிஞ்சு போறதாலைதான் பொசிவு நீர்க்குட்டை எண்டு நல்ல ஒரு பெயர் வைச்சிருக்கிறியள் விதானையார்."

"மழை முடிந்தும் சில மாதங்களுக்கு இந்தக் குட்டைகளில் நீர் இருப்பதால் உங்கடை தோப்பு பசுமையாக இருக்கும் ."

" இதை விட வேறை பிரயோசனங்களும் இருக்கோ விதானையார்?"

"இந்த குட்டைகளில் 'அசோலா' எண்ட பாசியை கொண்டுவந்து வளரவிட்டால் உங்கட கால்நடைகளுக்கு புரதச்சத்து நிறைஞ்ச உணவும் கிடைக்குது. மேலதிகமாக விளையுறதை எடுத்து தென்னமரங்களுக்குத் தாட்டால், அது நைதரசன் நிறைந்த பசளையாகும் ."

" கனவிஷயம் எல்லாம் சொல்லுறீங்கள் விதானையார்"

" இன்னும் இருக்கு . நீங்கள் தோப்புக்குள் கொஞ்ச தாராக்களை வேண்டி விட்டால் , தாராக்கள் புல் பூண்டுகளை மேய்ஞ்சு , பூச்சி புழுக்களை உண்டு , இந்தத் துரவுகளில் குளித்து செழிப்பாய் வளரும் . இதாலை உங்களுக்கு மேலதிக வருமானமாக இயற்கையான தாரா முட்டைகளும் தாரா இறைச்சியும் கிடைக்கும் "




"கடும் கோடையிலை இந்தக் குட்டைகள் வத்திப் போனால் தாராக்களை என்ன செய்யிறது விதானையார்?"

"அதுக்கும் ஒரு வழி இருக்குது. தோப்பில்ஒண்டு அல்லது ரெண்டு குட்டைகளை களிமண் அல்லது சீமெந்துகொண்டு அமைக்க வேணும் . கடும் கோடையில் இதற்குள் கிணத்து நீரை இறைக்க வேணும் . இப்போ கடும் கோடையிலும் தாராக்களுக்கு தண்ணியும் இருக்கும் .
அசோலாவும் அழியாமல் வளர்ந்து பெருகும்."

"நல்ல விசயம் எல்லாம் சொல்லுறாய் .
ஆனால் உந்தப் பி.எச்.ஐ காரன் வந்து, நுளம்பு பெருகுது எண்டு வழக்கெல்லே எழுதிப் போடுவான் " என்றார் செல்லையர்"

"உது விசயம் தெரியாதவை கதைக்கிற கதையண்ணை.
இந்தக் குட்டைகளில் தவளை வந்து முட்டை போட்டு , வால்பேத்தைகள் உருவாகி இருக்கும் .
இந்த வால்பேத்தைகள் நுளம்புக் குடம்பிகளைப் பிடித்து தின்று விடும்.
அதோடை தும்பியின் அணங்குப் புழு , நீர்ப் படகோட்டி , நீர் பூச்சி என்று கனக்க நீர் வாழ் பூச்சிகள் இந்த குட்டையில் வசிக்க வரும் . இவை எல்லாம் நுளம்புக் குடம்பிகளை அழித்து விடும் ."

" உதை பி.எச்.ஐ நம்ப வேணும் எல்லே"

" அது அவங்களில்லை பிழையிலையண்ணை. அவர்களுக்கு நீர் தேங்கி இருந்தால் நுளம்பு பெருகும் எண்டது தான் சொல்லிக் கொடுக்கப் பட்டிருக்கு. கன பி.எச்.ஐ. மாருக்கு இந்த சூழல் அறிவு இருக்கிறேல்லை
நீங்கள் ஒண்டு செய்யலாம். இந்த குட்டைகளில் நாட்டு மீன் குஞ்சுகளைக் கொண்டு வந்து விட்டுவிடலாம் . பி. எச்.ஐ.மாருக்கு மீன்களை காட்டினால் அவை வழக்கு எழுதாமல் போய் விடுவினம்"

" எல்லாம் நல்ல முறையள் தான் சொல்லி இருக்கிறாய்.
கொஞ்ச கசிப்புக் குட்டை வெட்டத்தான் வேணும்"

"கசிப்புக் குட்டையில்லை அண்ணை .பொசிவுக் குட்டை"

" கசிப்போ, பொசிப்போ. ஒருநாளைக்கு உந்த யானை மிஷினைக் கொண்டுவந்து கொஞ்ச குட்டைகள் வெட்டத்தான் வேணும்"

யானை மிஷின் எது எனப் புரியாமல் நான் குழம்பி பிடரியைச் சொறிந்தேன் . விழுந்து விழுந்து சிரித்த பார்வதம்மாமி " இவருக்கு 'புல்டோசர்' எண்டு சொல்லத்தெரியாது விதானையார் .அதைத்தான் யானை மிஷின் எண்டு சொல்லுறார்" என்று கூறி மீண்டும் குலுங்கிச் சிரித்தார் .

• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்

நீங்களும் எழுதலாம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.


அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

sanjeevi@uthayan.com

தொடர்புகளுக்கு
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 41



அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. இலங்கையின் புனித நகரம் 6. ஒரு திசையின் சுருக்கம் 7. வெட்டி வீழ்த்து 8. இரு பாலாரில் ஒரு பாலர் 9. பாண், பிட்டு என்பவற்றை இதனுடன் உண்ணலாம். 11. ஒரு காட்டு மிருகம். 12. அலறல் ஓசை. 13. பனை ஓலையால் பின்னிய ஏதனம் 15. சாதுவான மிருகம் எனப் பெயர் பெற்றது. 17. பெரியவர்/பெருமை பெற்றவர் 18. ஒரு வகை அரிசி 19. ஒரு நுட்பமான நேரம்/ ஒரு விநாடி அளவு 20. பன்மையைக் குறிப்பது. 21. உண்ணுமாறான ஏவல் 22. மக்கள் கூட்டத்தின் சிறிய அடிப்படைத் தொகுதி.

## மேலிருந்து கீழ்

1. பாதுகாப்பாக இருக்க எடுக்கும் எத்தனம். 2. உறுதியான. 3. அன்பின் ஒரு வடிவம். 4. தடுத்து நிறுத்து. 5. அரசனுக்கு எதிர்ச் சொல் 8. தொடக்கம் 10. நகரம் 11. சேர் 12. இணக்கச் சொல்/ பிரணவம் 13. கிருஷ்ணன்/ வெண்ணெய் உண்டவன். 14. படிக்குமாறான ஏவல் 16. (ஒருவரின்) குணாம்சம்/ பண்பு. 17. நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டவன். 18. சிறுநீர். 20. தூங்கச் செல்லுமாறான ஏவல்.

### சொற்சிலம்பம் போட்டி 39 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஒபாமா 4. சந்ததி 7. சாவித்திரி 9. கசை 10. மாத்தறை 11 . கன 12. தளை 13. வரம்பு 15. நில் 16. உளம் 17. கடம் 18. ஏர் 19. மகுடம் 21. மாந்த 22. திரு 23. புணர்தல்

**மேலிருந்து கீழ்**

1. ஒசாமா 2. பாவித்தல் 3. மாத்தளை 4. சரி 5. தகனம் 6. திசை. 8. திறை 11. கரம் 13. வளம் 14. புலர்தல் 15. நிம்மதி 16. உடம்பு 17. கட. 18. ஏந்த 20. குரு. 21. மார்.

சொற்சிலம்பம் போட்டி இல.41
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
10.04.2021 அந்த முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**போட்டி இலக்கம் 39 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**செ.நவராசா**
மயிலிட்டி, வடக்கு முலவை.

**2 ஆம் பரிசு**
**ஆ.கஜவிந்தன்**
அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு,

**3 ஆம் பரிசு**
**சி.பானுராஜா**
சிதம்பராக் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

**4 ஆம் பரிசு**
**பொ.சற்குணநாதன்**
வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

**5 ஆம் பரிசு**
[illegible]
உபதபாலகம், திருக்கேதீஸ்வரம்,
மன்னார்.


## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.



○ கோகுலராகவன்

வீடு!

உங்களுக்கு மிகவும் பிடித்தமான இடம் எதுவென்றால் அதன் பதில் இதுதான். எவ்வளவு தூரம் இனிதாகப் பயணம் போனாலும், அதில் எவ்வளவு ஆனந்தம் அனுபவித்தாலும் முடிவில் வீடு திரும்புவதில் உள்ள ஆர்வம் அதிகமாகவே இருக்கும்.

நான் நிறையத் தடவைகள் இதனை அனுபவித்திருக்கிறேன்.

"எப்படா வீட்டை போவம்" என்ற எண்ணம் இடைநடுவிலேயே தோன்றிவிடும். வீட்டுக்கு வந்து குளித்தோ ,முகம் கழுவி விட்டோ ஒரு தேநீர் குடித்து விட்டு ஆறுதலாக அமர்ந்தால் அது ஒரு தனிச் சுகம்தான்.

மேய்ச்சலுக்கு விட்ட மாடுகள் மேய்ச்சலுக்குப் போகும்போது தளர்வாகவே போகும். ஆனால் மாலை வீடு நோக்கி சாய்க்கும் போது அவற்றின் நடை வேகமாகவே இருக்கும். கட்டும் கட்டையில் அல்லது கொட்டிலில் நின்று அவை அசை போடும் அழகே தனிதான்.

மனிதன் எப்போது வீட்டை அமைக்கத் தொடங்கி இருப்பான்? மிக மிக மிக நீண்ட காலத்துக்கு முன்னராகவே மனிதன் வீட்டு விலங்காகிவிட்டான். குகைகளிலும், மரப் பொந்துகளிலும் வாழத் தொடங்கியவன் மெதுவாக தன் உயர்ந்த படைப்பான கை எனும் அங்கத்தால் வீடு கட்டப் பழகிக் கொண்டான். கொட்டில்களே ஆரம்பகால மனித வாழிடம். இவை இலை, குழைகளால் வேயப்பட்டிருக்கலாம். நாட்கள் நகர வைக்கோல், புற்கள், தென்னோலை, கிடுகு, வாழை இலை எனப் பல வகைப்பொருட்கள் வீடு வேய பயன்பட்டிருக்கின்றது. இதில் கிடுகு முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டது. அது நீண்ட காலம் தாக்குப் பிடிக்கக்கூடியதாகவும், எளிதாக எந்தக் காலத்திலும் கிடைக்கக்கூடியதாகவும்அமைந்தது.




வீடு என்பது ஒரு அமைப்பை குறிப்பதாக அமைந்தது. அது ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் இடமாகவும் காலப்போக்கில் மாறிவிட்டது. மண் வீடுகள் அமைக்கப்பட்ட காலத்தில் அவை தனி அறை கொண்டவையாகவும், முன்னால் திண்ணை எனும் ஓய்விடம் உள்ளவையாகவும் அமைக்கப்பட்டன.

'அடுப்படி' தனியாக அமைக்கப்பட்டது. இது சமையலுக்கு மட்டுமே உபயோகிக்கப்பட்டது. மண் சுவர் வைக்கப்பட்டு பனம் மட்டையால் சுற்றி வரியப்பட்டு மேலே கிடுகால் வேயப்பட்டிருக்கும்.நாலு பேர் வரிசையாக இதனுள் இருந்து சாப்பிட முடியும்.

"கத்தியைக் காணேல்ல"

"பெரிய வீட்டுக்க பார்"

இப்படி ஒரு வீட்டையே இரண்டாகப் பிரித்துச் சொல்லும் பழக்கம் எம்மிடமுண்டு.

இந்தப் பெரிய வீடு படுக்கை அறையாகவும் நெல் வைக்கவும், சாமிப்படம் வைப்பதற்கும், உடுப்புக்கள் வைக்கவும் பயன்பட்டது. சிலர் இதனை இரண்டு அறையாகவும் அமைப்பர். இதுவும் மண் வீடுதான். சுற்றி கிடுகால் பின்னப்பட்ட தட்டிகள் சாத்திக் கட்டப்பட்டிருக்கும். மேலே கிடுகு தான் இதற்கும். மழைகாலத்தில் இந்த வீட்டுக்குள் படுத்தால் குளிரே தெரியாது. அப்படிக் குளிர்ந்தால் அம்மாவின் சேலை ஒன்றை எடுத்து போர்த்திக் கொண்டால் போதும்.



கோடை காலத்திலும் இதனுள் படுத்தால் வெக்கையே தெரியாது. வீட்டை எப்பவும் கிடுகு குளிர்மையாக வைத்திருக்கும். இதனுள் "கோர்க்காலி' என்ற ஒரு அமைப்பு இருக்கும்.நெல்மூடைகளை அடுக்க உயரமாக மேடை மாதிரி அமைத்திருப்பார்கள்.

மூன்றாவதாக ஒரு வீடு இருக்கும். அதுதான் தலைவாசல். இதுவும் கிடுகு வேய்ச்சல்தான். சில வேளை வசதியாளவர்கள் கீழே சிமெந்து போட்டிருப்பார்கள். இதுதான் வரவேற்பறை. யாராவது வீட்டுக்கு விசேடமாக வந்தால் இந்த வீட்டில் இருந்துதான் கதைப்பார்கள்.

"பிள்ளை மாமாவுக்கு பாயை விரி"

முந்தின காலம் கதிரை எல்லாம் கிடையாது. வீட்டுக்கு வருபவர் பாயில்தான் அமர வேண்டும்.

"பிள்ளை தண்ணீர் செம்பை கொண்டா"

அந்தக் காலங்களிலை வீட்டுக்கு வருபவர்களுக்கு தேநீர் கொடுத்து சலரோகம் வரப்பண்ணும் பழக்கம் குறைவு. பிறகு வெற்றிலைத் தட்டம் கொடுபடும். வருபவர் களைப்பாறிவிட்டுப் புறப்படுவார்.வேலை கிடைத்த புதிதில் நானும் ஜீவரத்தினம் மாஸ்ரரும் புலோப்பளையில் இருந்து சோரன்பற்றுக்கு சைக்கிளில் போவோம். ஒருநாள் வழியில் ஒரு முதியவர் எம்மை வழிமறித்தார். அவர் மாசார் பக்கம் குடியிருப்பவர். ஜீவரத்தினம் மாஸ்ரரின் உறவினர்.

"தம்பி உங்கடை வீட்டைப் பிடுங்கிறாங்கள்.

தலைவாசலை நேற்று பிடுங்கினவங்கள். இண்டைக்கு பெரிய வீட்டைப் பிடுங்கிறாங்கள்" சொல்லிவிட்டு அழத் தொடங்கினார். பிடுங்கப்படும் வீடு ஜீவரத்தினம் மாஸ்ரரின் தாய் மனை.

"எத்தனை பேர் வாழ்ந்த மனை"

விக்கி விக்கி அழத் தொடங்கினார். ஜீவரத்தினம் மாஸ்ரருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பள்ளிக் கூடத்துக்கும் தாமதம் ஆகிறது.

"சரி சரி கந்தையா மாமா அழாதேயுங்கோ. நானே அழேல்லை. நீங்கள் ஏன் அழுகிறியள் ?ஒண்டும் செய்யேலாது"


அந்த மனிதர் அழுதபடி சைக்கிளில் ஏறிப் போய்விட்டார். வீடு எப்போதும் மனிதர்களின் நேசத்துக்கு உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓட்டிசம் என்பது என்ன வகையான நோய்? அது ஏன் ஏற்படுகிறது? அதனைக் குணப்படுத்த இயலாதா? ஓட்டிசத்தால் எனது அயல் வீட்டிலுள்ள சிறுவன் பாதிக்கப்பட்டுள்ளான். அவனது எதிர்காலம், கல்விச் செயற்பாடுகள் எவ்வாறிருக்கும் தயவு செய்து விளக்கமளியுங்கள் டாக்டர்.**

ப.கீர்த்தனா, யாழ்ப்பாணம்.

# ஓட்டிசம் (Autism)







## ஆட்டிசம் உள்ள சிறார்களை வீட்டில் கையாளுவது எப்படி?

1. உறுக்கி, அதட்டி இவர்களை நீங்கள் வெளிக் கொண்டு வர இயலாது.
2. 80 வீதமான குழந்தைகளுக்கு உணவு உண்பதில் நிறைய சிக்கல்கள் இருக்கும் இத னையும் புரிந்து கொள்ளவேண்டும்.
3. அல்பேர் ஐன்ஸ்டீன், பில்கேட்ஸ் போன்றவர்கள் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட மேதை கள். (அறிவுக்கூர்மைக்கும் இக்குறைபர்டடுக்கும் சம்பந்தமில்லை) ஆனால் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட எல்லாக் குழந்தைகளும் மேதைகளல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள்.!!!!
4. இவர்களை நூறு வீதம் முற்றுமுழுதாகக் குணப்படுத்த இயலாது.
5. ஆனால் நடத்தை சீராக்கல் பயிற்சி, வளர்ச்சி மேம்பாட்டு பயிற்சி, கல்வி வளர்ச்சிக்கான பயிற்சி, பேச்சுப் பயிற்சி மூலம் ஓரளவு சரி செய்ய முடியும்.
6. பொதுவிடங்களில் குழந்தையால் அவமானம் என்று நினைப்பதை அறவே தவிர்க்க வேண்டும்.
7. வித்தியாசமான குழந்தைகள் என்பதை புரிந்து கொண்டு தகுந்த பாதுகாப்பும் பாசமும் அளித்து, எவ்வளவு நேரம் இவர்களுக்காக கூடுதலாக நேரம் செலவிட இயலுமோ செலவிடின் முக்கியமாக இடைவிடாது தொடர்ந்து முயற்சித்து வந்தால் இவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும்.

"மதியிறுக்கம்" அல்லது "புற உலக சிந்தனைக் குறைபாடு" என்பதே autism spectrum condition என்பதன் சரியான தமிழாக்கம் என்று கருதுகிறேன்.
இது ஒரு நோயல்ல; குறைபாடு என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

மூளையானது சுற்றுப்புறச் சூழலிலிருந்து பெறப்படும் தகவல்களை பயன்படுத்தி அவற்றைப் புரிந்து கொண்டு அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளவியலாது, பார்த்தல், கேட்டல் என உணரும் விடயங்களை சரியாக பயன்படுத்த முடியாமல் இருப்பதே ஓட்டிசம் எனப்படுகிறது. அடிப்படையில், இது மூளையின் நரம்புமண்டலத்தில் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாடாகும். பெரும்பாலும் இக்குறைபாடு குழந்தை பிறந்து 3 ஆண்டுகள் நிறைவடைய முன்னர் ஏற்படும்.
ஒப்பீட்டளவில் ஆண் குழந்தைகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். (80வீதம்).

அதாவது சாதாரண வாழ்க்கையிலிருந்து வேறுபட்ட நிலை என இதை இலகுவாக வரையறுக்கலாம்.
இது ஒரு தொற்று நோய் அல்ல. சமூகத்தில் மற்ற வர்களுடன் தொடர்பு கொள்ளும் திறன் (Communication) பழகும் திறன் (Socialization) போன்றவற்றில் மட்டுமே பின் தங்கிய நிலை காணப்படும் நிலையாகும். பெரும்பாலானவர்களுக்கு பேசும் திறன் இருக்காது, சில குழந்தைகள் பேசினாலும் அது தெளிவாக புரியும்படி இருக்காது.

## வகைகள்

**1.அஸ்பெர்ஜர் சின்டோம் Asperger syndrome**
இவ்வகை குழந்தைகள் முதலில் சாதாரணமாக இருந்து பருவ வயதில் ஓட்டிசத்துக்குரிய அனைத்து இயல்புகளையும் வெளிப்ப டுத்தும்.

**2.ரெட்சின்ரோம்: Rett syndrome**
பெண் குழந்தைகளுக்கு மட்டும் ஏற்படும். தலை வளர்ச்சி மெதுவாக இருக்கும். கை, கால்களை முழுமையாக பயன்படுத்த முடியாது போன்றவை இதன் அறிகுறிகள்.

**3. சைல்ட் டிஸ்இன்டர்கிரேடிவ் டிஸ்ஆர்டர் Childhood disintegrative disorder (CDD),**
முதலில் சாதாரணமாக இருந்து பின்னர் பேச்சுத்திறன், பழகும் திறனை இழப்பார்கள்.

## ஓட்டிசம் ஏற்படுவதற்கான காரணம்

தெளிவாக வரையறுக்கப்படவில்லை.
வளர்சிதை மாற்றக் குறைபாடு, மரபு வழியாக ஏற்படலாம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## இனங்காண்பது எப்படி?

குழந்தை பிறந்து 10-18 மாதங்களுள் அறிகுறிகளைக் கண்டறிய முடியும். பிரத்தியேக பரிசோதனைகள் இல்லை . பெற்றோர், குழந்தை நல மருத்துவர், ஆசிரியர்கள் போன்றவர்களின் அவதானிப்பின் மூலமே கண்டறியலாம். நரம்பியல் சிக்கலால் ஏற்படும் ஓட்டிசத்தை CT Scan, MRI மூலம் கண்டறியலாம்.

**மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்**
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)






## 1.ஆரம்ப அறிகுறிகள்

- பிறந்த குழந்தைகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விதமான வளர்ச்சி இருக்கும் தாயின் முகம் பார்த்துச் சிரிப்பது, பேசுவது என குறிப்பிட்ட மாதங்களில் இந்த வளர்ச்சி தானாக இருக்கவேண்டும்.
- இதையும் மீறி சில குழந்தைகள் பேசத் தெரியாமல் இருப்பார்கள்.
- தவிர ஆறு மாதங்களாகியும் தாய் முகம் பார்த்து சிரிக்காமல் குழந்தை இருத்தல், தாயின் கண்களை நேருக்கு நேர் பார்க்காமல் இருத்தல்,
- 12 மாதங்களான பின்பும் மழலைச் சப்தங்கள் செய்யாமலிருந்தல்,
- ஒரே இடத்தில் அமர்ந்திருத்தல்
- 18 மாதங்களில் பேசினாலும் ஒரே சப்தத்தையோ, சொல்லையோ திரும்ப திரும்பச் சொல்லுதல்

என்பவை இத்தகைய குறைபாடுகளாகும்.

## 2.விளையாடுவதில் சிக்கல்

- 18 - 24 மாதங்களில் மற்றக் குழந்தைகளோடு சேர்ந்து விளையாடாமல்,
- தனியாகவே இருத்தல்,
- கைகளை உதறிக் கொண்டே இருத்தல், ஒரு பொருளையோ, நபரையோ சுட்டிக் காட்ட இயலாத தன்மை,
- கதை கேட்பதில் விருப்பமின்மை தூக்கமின்மை,
- தூங்கும் நேரம் குறைவடைதல், கீழே விழுந்து காயம் ஏற்பட்டாலும் வலியை உணராதிருத்தல் போன்றவையும் இத்தகைய குறைபாட்டுக்குக் காரணங்களாகும்.

## பொதுவானவை

1. ஒதுங்கி இருப்பது
2. கண்களைப் பார்த்து பேசாமல் இருத்தல், ஆள் காட்டி விரலால் சுட்டிக்காட்டா மல் இருத்தல்
3. சமூகப் புரிதல்கள் இல்லாமல் இருப்பது,
4. பயம், ஆபத்து ஆகியவற்றை உணராமல் இருப்பது
5. பாவனை, விளையாட்டுகள் இல்லாமல் இருப்பது
6. வித்தியாசமான நடவடிக்கைகளை ஒரே மாதிரியாகத் திரும்பத் திரும்ப செய்வது. காரணம் இல்லாமல் அழுகை, சோகம் ஆகியவற்றை வெளிப்படுத்துவது, வலியை உணராமல் இருப்பது, மாற்றங்களை அசௌகரியமாக உணர்வது, பொருளற்ற சொற்களைத் திரும்பத்-திரும்ப சொல்வது.

ஓட்டிசம் குழந்தைப் பருவத்தில் மட்டுமே இருக்கும் பிரச்சினை; பெரியவர்களானதும் இது குணமாகிவிடும் என்பது மூடநம்பிக்கை.

## இக் குறைபாட்டின் படிநிலைகள்

இதனைக் கண்டறிய Spectrum என்ற சொல் பயன்படுகிறது

1. **மிதமான நிலை: பெரும்பாலான துறைகளில் சராசரி செயற்பாடு காணப்படும்.**
2. **தீவிரமான நிலை - சமூக நடத்தைகளில் பெரும் பாதிப்பு நிலை காணப்படும்.**

இவ்விரு படிநிலைகளிலும் அடிப்படையான பாதிப்பு 3 விடயங்களில் ஏற்படும்.
1. சமுதாயத்துடனான தொடர்பாடல்
2. தகவல் பரிமாற்றம்
3. சிந்திக்கும் ஆற்றலும் நடத்தையும்.


மேலதிகமாக ஐம்புலன்களின் ஒருங்கிணைப்பிலும் பிரச்சினை ஏற்படலாம்.
இக்குறைபாட்டின் தீவிரத்தன்மை எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது. பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் திறனும் சிக்கல்களும் தனித்துவமானவை.

## சமூதாயத் தொடர்பாடல்

| | |
|---|---|
| குழந்தை | இக் குறைபாடற்ற குழந்தை தன்னுடன் பேசுகின்றவர்களை நோக்கி அவர்களைப் பார்த்து சிரிக்கும். ஓட்டிசம் உள்ள குழந்தை முகங்களையும் மனிதர்களையும் விட பொருள்களில் ஈர்க்கப்படுவர். ஒரு வினாடி முகம் பார்ப்பர். மறுநொடி முகத்தை திருப்பிக் கொள்வர். புன்னகை புரியாது. அல்லது தாம் விரும்பும் பொருள்ட்களைப் பார்த்து புன்னகைப்பர். |
| 3-5 வயது | மற்றவர்களை தன்னிச்சையாக அணுக மாட்டார்கள். செய்கை தொடர்பாடல் இல்லாதிருப்பர். ஆனால் தங்களை கவனிக்கும் நபர்களுடன் பாசமாகவிருப்பர். நண்பர்களை உருவாக்கி கொள்வதில் ஆர்வமிருக்காது. |
| 5-15 வயது | முகமாற்றம்/ உணர்ச்சிகளை அடையாளம் காணவியலாமை. உதாரணம்: நீங்கள் சந்தோசமாகவோ சோகமாகவோ இருக்கிறீர்கள் என்பதை உங்கள் முகபாவத்திலி ருந்து இனங்காணமாட்டார்கள். தவறான நேரங்களில் சிரிப்பது அல்லது அழுவது. |
| 15 வயதுக்கு மேல் | மேற்கூடிய அனைத்து அறிகுறிகளுடனும் தனித்திறமை ஒன்று இருக்கும். அதை இனங்கண்டு சுயதொழில் வாய்ப்பை உருவாக்கலாம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் செவிப்புலன் கருவிகளை மறுசுழற்சி செய்து வாழ்க்கையை மாற்றவும்



இந்த புதுவருட பருவத்தில் கேட்குந்திறனை பரிசாக கொடுங்கள்.

செவிப்புலன் கருவி ஒரு நபரின் வாழ்க்கைத் தரத்தில் மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். இந்த செவிப்புலன் கருவி அதிகூடிய தேவை இருப்பினும் அதனை பெற்றுக்கொள்ள முடியாது பலர் உள்ளனர். உங்கள் பழைய செவிப்புலன் கருவிகளை நன்கொடையாக அளித்து அவர்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள். அவற்றை புதுப்பித்து இலவசமாக பொருத்த நாங்கள் தயாராக உள்ளோம்.

விஷன் கெயார் செவிப்புலன் கருவி நன்கொடையாளராகி, ஆண்டு முழுவதும் சிறப்பு சலுகைகளுக்கு உரிமை பெறுங்கள்!

இந்த திட்டத்திற்கு பதிவு செய்ய ஏப்ரல் 30 க்கு முன் எங்களை அழைக்கவும்

076 7 727 131

VISION CARE HEARING SOLUTIONS

விஷன் கெயா ஒப்டிகல்ஸ் சேவிசஸ் (வரை) தனியார நிறுவனம்

கிளைகள் : கொழும்பு, கொழும்பு ரேஸ்கோஸ், மகரகம, களுத்துறை, கம்பஹா, பாணந்துறை, காலி, மாலபே, குருநாகல், நீர்கொழும்பு, குளியாப்பிட்டி, இரத்தினபுரி, பண்டாரவளை, கண்டி, மாத்தளை, தம்புள்ளை, அநுராதபுரம், திருகோணமலை, மொனராகலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், பொலன்னறுவை, கேகாலை, பதுளை

oticon life-changing technology

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நம்பிக்கையை காப்பாற்றுமா பொலிஸ்?

"சதீஸ்வரன் உயிரிழந்தது மின்சாரம் தாக்கியதில் தான். அதில் எந்தச் சந்தேகமுமில்லை. ஆனால் அவர் சட்டவிரோத மின்சார இணைப்பில் சிக்குண்டே இறந்திருக்கலாம் என்பதே ஊரவர்களின் சந்தேகம். பல விடயங்களை சம்பவம் இடம்பெற்ற வீட்டார் திட்டமிட்டு மறைத்து விட்டனர் என்றும் ஊரவர்கள் சொல்கிறார்கள். கிளிநொச்சி பொலிஸாரும் பல தடயங்களை அவதானித்துள்ளனர். தடயங்களை அகற்றி பொலிஸாரை ஏமாற்றி விடலாம் என்று சிலர் நினைக்கின்றனர். தடயங்களை மறைப்பதால், அதில் ஏமாறுவதற்கு கிளிநொச்சி பொலிஸார் ஒன்றும் முட்டாள்கள் இல்லை. என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடித்து பெற்றோரை இழந்து , பேர்த்தியாரோடு வாழ்ந்து வந்த ஏழை இளைஞனின் பரிதாபச் சாவுக்கு கிளிநொச்சி பொலிஸார் நீதியை பெற்றுத் தருவார்கள்" என்று சதீஷின் உறவினர்கள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவார்களா கிளிநொச்சி பொலிஸார்?

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாணத்துறையில் பிரசித்தி பெற்ற நிறுவகம் ஒன்றினால் திறமை வாய்ந்த மேசன், தச்சன் மற்றும், வேலையாட்கள் கிளிநொச்சி, மாங்குளம் வவுனியா, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள வைத்திய சாலைகளிற்கு கோரப்படுகின்றது. ஆர்வம் உள்ள திறமையுள்ள வேலையாட்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களிற்கு தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்**

**கர்சன் (தமிழ்) 077 084 0692**
**மகேசிகா (சிங்களம்) 077 519 1873**

**Foresight Engineering (PVT) Ltd,**
**Access tower (North),**
**27th Floor,**
**278/4 Union Place, Colombo - 02**

## வேலை வாய்ப்பு

**எமது நிறுவனத்திற்கு கீழ் காணும் வேலையாட்கள் தேவை**

01. முகாமையாளர் (வங்கியிலிருந்து ஓய்வு பெற்றவர் விரும்பதக்கது. வயதெல்லை 60 வயதிற்குட்பட்டவர்)
02. கணக்காளர் (A/L Commerce இல் சித்தியடைந்தவர்கள் அனுபவம் உள்ளவர்கள் விரும்பதக்கது) ஆண்/பெண் இருபாலாரும்.
03. Graphic Designer (ஆண், பெண் இருபாலாரும்)
04. சாரதிகள் (AD அனுமதி பத்திரம் உள்ளவர்கள்)
05. காரியாலய உதவியாளர் (20 வயதிற்குட்பட்டவர்கள்)

**தங்குமிட வசதி உண்டு.**

முக்கிய அறிவிப்பு : 05.02.2021 (திங்கட்கிழமை) ஆவணங்களுடன் முற்பகல் 11.00 - 2.00 மணி வரைக்கும் நேரில் சமுகமளிக்கவும்.

**தொடர்பு : Sunjeysholdings**
**32, மஞ்சவனப் பதி வீதி, கொக்குவில்.**
**077 747 4111**

உ
சிவமயம்



வெள்ளவத்தை மயூரபதி
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
மஹாகும்பாபிஷேகம் - 2021

இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை மஹா கும்பாபிஷேகம் காணும் வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வினை சிறப்புற வாழ்த்தி வணங்குகின்றோம்.

ABI Fashion World

அபி பஷன் வேல்ட் இன்
தமிழ் சிங்கள புதுவருட மாபெரும் விலைக்கழிவுகள்...





'திருமணப் பட்டுப் புடைவைகளுக்கு பிரத்தியேக காட்சியறை'
அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய டிசைன்களுடன் சிறுவர் முதல் பெரியவர்கள் வரையான அனைவருக்கும் ஏற்ற உடைகள் ஒரே இடத்தில்


அபி ரேடர்ஸ்
Abi Traders
Colombo
011 242 1521

அபி பஷன் வேல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3738

அல்ப்னா ரேடர்ஸ்
Alpna Traders
Colombo
011 233 7521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வித்தைகள் ஓய்ந்தன

○ மயூ

தமிழகத்தில் சட்ட மன்றத் தேர்தலுக்கான பரப்புரைகள் இன்று (ஏப்ரல் = 04) இரவு 7 மணியுடன் நிறைவுக்கு வருகின்றன. தேர்தல் அறிவிப்பு வெளியானது முதல் "தீயாக வேலை செய்த" வேட்பாளர்கள் இப்போது ஒய்வெடுக்க ஆரம்பித்திருப்பார்கள். இனிமேல் எல்லாம் மக்களின் கையில்தான்.

தமிழக சட்ட மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து வேட்பாளர்கள் அனைவரும் தீயாக வேலை செய்தனர். தேநீர் கடையில் தேநீர் போடுவது, தெருவோரக் கடைகளில் தேநீர் குடிப்பது, உணவு உண்பது, வயதானவர்களைக் கண்டால் காலில் விழுவது, குழுந்தைகளைக் கண்டால் தூக்கிக் கொஞ்சுவது என்று தங்களுக்குத் தெரிந்த மொத்த வித்தைகளையும் இறங்கியிருந்தனர் அவர்கள். (இதைக் கடந்தவாரம் விலாவாரியா அலசியிருந்தோம்) தேர்தலுக்காக தமிழகக் கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகளை அள்ளி வீசியிருக்கின்றன. ஆனால் என்ன குரங்கு வித்தை காட்டினாலும் முடிவு மக்களின் கைகளில்தானே இருக்கிறது. இப்போது தேர்தல் கள நிலவரம் எப்படி இருக்கின்றது என்று பார்ப்போம்.

தமிழகத்தில் ஏப்ரல் 6 ஆம் திகதி ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடக்கவிருக்கிறது. இப்போது மக்கள் அலை தி.மு.கவின் பக்கம்தான் இருக்கின்றது என்று தெரிகின்றது. பல்வேறு தரப்பினரால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் தி.மு.க. முன்னிலையில் இருக்கின்றது. தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு உள்ள தொகுதிகள் 151. அ.தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு உள்ள தொகுதிகள்75. அதில் 50 தொகுதிகளில் இழுபறி நிலை உள்ளா. இப்படி இழுபறி நிலையில் உள்ள தொகுதிகளில் தி.மு.கவே முன்னணியில் இருக்கின்றது. இதுதான் இன்றுள்ள நிலைமை.

ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் ஆளும் அ.தி.மு.கவின் போக்குக் குறித்து மக்கள் மத்தியில் சிறிது அதிருப்தி ஏற்பட்டிருக்கின்றது.

மத்தியில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலையாட்டும் பொம்மையாக அ.தி.மு.க. செயற்படுகின்றது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. நீட் தேர்வு, ஹிந்தி மொழித் திணிப்பு என்று பா.ஜ. கவின் மீது மக்களுக்கு உள்ள கோபம், அதன் கூட்டணிக் கட்சியான அ.தி.மு. கவின் மீதும் பாய்கின்றது. அதுமட்டும் தான் தி.மு.கவின் பக்கம் காற்று அடிக்கக் காரணம் என்று கூறப்படு கின்றது. தி.மு.கவின் மீதான மக்கள் ஆதரவுக்குச் சொல்லும்படியான காரணம் எதும் இல்லை, அ.தி.மு.கவின் மீதான கோபத்தால் தி.மு.கவின் வாக்கு வங்கி அதிகரிக்கலாம் என்பது எதிர்பார்ப்பு. அதற்கேற்றால் போல் தி.மு.கவும் தங்கள் பரப்புரையில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டுக் காலத்தில் நடந்தவற்றை அள்ளித் தெளித்து வந்தனர். அதுவும் நல்ல பலனைத் தருகின்றது போலவே தெரிகின்றது.

ஜெயலலிதாவின் நெருங்கிய தோழி சசிகலா சொத்துக் குவிப்பு வழக்கில் சிறை சென்று மீண்டிருக்கிறார். அவர் இப்போது அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கிறார். அவரது இந்த அறிவிப்புக்கு அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.கவின் அழுத்தமே காரணம் என்று பேசப்படுகின்றது. இது அ.தி.மு.கவின் ஒரு பகுதியினருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியிருப்பதும், தி.மு.க. அலைக்கு காரணம் என்றும் சொல்லலாம்.

இந்தப் பிரதான கட்சிகள் இரண்டைவிடவும், தமிழகத்தில் இன்னும் இரு கட்சிகள் இந்தத் தேர்தலில் எதிர்பார்ப்பைக் கிளறிவிட்டுள்ளன. ஒன்று சீமானின் நாம் தமிழர் கட்சி, மற்றையது கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி. இந்த இரு கட்சிகளின் பரப்புரைக் கூட்டங்களில் திரண்ட மக்கள் கூட்டம், இந்த இரு கட்சிகளுக்கும் தேர்தலில் ஒரு மாற்றம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. மூன்றாவது இடத்துக்கு இந்த இரு கட்சிகளுக்கு இடையில் கடும் போட்டி இருக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி நாம் தமிழர் கட்சி பரப்புரைகளை மேற்கொண்டிருந்த நிலையில், ஒரு சினிமா நட்சத்திரம் என்ற முத்திரையுடன் கமல்ஹாசன் மக்கள் ஆதரவைத் திரட்டியிருந்தார். தற்போதைய நிலைமையைப் பார்த்தால் மக்கள் நீதி மய்யம், நாம் தமிழரை ஓரம் கட்டினாலும் ஆச்சரியமில்லை. இந்தச் சட்ட மன்றத் தேர்தலில் இளம் வாக்காளர்களின் 18 முதல் 19 வயது வரம்பிலான வாக்காளர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒன்பது லட்சம். அவர்களில் பெரும்பாலானவர்கள் மாணவர்கள் அல்லது வேலை செய்பவர்கள் அல்லது வேலை தேடிக் கொண்டி ருப்பவர்கள்.



பெரும்பாலான இளைஞர்கள் வேலை வாய்ப்பு உருவாக்கத்துக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். வேலைக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதை தவிர்க்க வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் தொழில் வளர்ச்சி முக்கியம் என நகர்ப்புற இளைஞர்கள் கருதுகின்றனர். கிராமப்புற இளைஞர்களோ விவசாயிகளின் வாழ்வாதாரம், கிராம அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். சில இளைஞர்கள் கட்சியின் கொள்கைகளையே நம்புகின்றனர். கொள்கையின் அடிப்படையில் வாக்குச் செலுத்துவது சிறந்தது என இவர்கள் கருதுகின்றனர். இவர்கள் ஒப்பீட்டளவில் புதிய கட்சிகளுக்கும், புதிய வேட்பாளர்களுக்கும் வாய்ப்பளிக்க விரும்புகின்றனர். இந்தத் தகவல்கள் அங்கு நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளில் வெளிவந்தவை. இவர்களின் இந்த முடிவும் தேர்தலில் தாக்கத்தைச் செலுத்தும்.

கருத்துக் கணிப்புகள் எதைச்சொன்னாலும், இறுதிக் கணத்தில் மக்கள் எடுக்கும் முடிவுதான் முடிவு. நாம் கணிக்கும் எதையும் மக்கள் தூக்கியெறியலாம். என்னதான் குத்துக்கரணம் அடித்து வேட்பாளர்கள் குரங்குவித்தை காட்டினாலும் மக்கள் ஏமாளிகள் இல்லைத்தானே? மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. மே மாதம் 2 ஆம் திகதி அது என்னவென்று தெரிந்துவிடும். ■




○ மௌனா

அந்தக் கிராமத்தின் ஒதுக்குப்புறமாக இருந்தது வற்றாக்குளம். அது அந்தக் கிராமத்தினதும் அயல் கிராமத்தினதும் வறிய மக்களின் வாழ்வாதாரத்துக்கான மூலாதாரமாக விளங்கியது.

அந்தக் குளத்தடி மண்ணின் களித்தன்மையின் உயர்தரம் பல கைவினைக் கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வியல் தேவைக்கான மூலப் பொருளான களி மண் தேவையை நிவர்த்தி செய்துகொண்டிருந்தது.

மக்களின் அன்றாடப் பாவனைக்குத் தேவையானதும் விசேட தேவைகளின் போது பயன்படுத்தக்கூடியதுமான பல்வேறு வடிவங்களிலான பானைசட்டி வகைகளையும் ஏனைய பாத்திரங்களையும் உற்பத்தி களிமண் கைவினைஞர்கள் செய்தார்கள் செய் நேர்த்தி, கலை நேர்த்தி இரண்டும் அமைந்த அந்தப் பொருள்களுக்கு மக்களிடையே மிகுந்த வரவேற்பு இருந்தது.

அதே ஊரில் மற்றொரு கைவினைக் கலைஞன் அதே களி மண்ணைப் பயன்படுத்தி பல்வேறு தெய்வ உருவங்களை உருவாக்கினான். அந்தச் சிலைகள் மக்களின் வணக்கத்துக்குரியவை ஆகின.

இன்னொருவன் அதே மண்ணைப் பயன்படுத்தி செங்கற்களை உருவாக்கும் ஆலை ஒன்றை அமைத்தான். அவனது உற்பத்திகள் கட்டடங்களாயின.

வேறொருவனும் பானைகளை வேறுதரத்தில் செய்தான். அவை கடம் என்ற பெயரில் தாள இசை வாத்தியக் கருவிகள் ஆயின. பலர் அதனை வாங்கிச் சென்று நாட்டின் வெவ்வேறு இடங்களில் தம் விரல்களின் வித்தகத் தன்மையை பயன்படுத்தி இசைக் கோலமிட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஒரே குளத்து மண் எத்தனை வடிவங்களில் மாயா வித்தை காட்டுகின்றது?

இது மண்ணின் தன்மையா? மனிதனின் தகைமையா? எல்லாமே வியப்பாக இருந்தது.

குளத்தங்கரை ஓரமாக நின்ற ஒரு பெருமரத்தில் கூடுகட்டியிருந்த பறவை ஒன்று இவற்றை வியப்புடன் அவதானித்த வண்ணம் தன் இணையிடம் கூறியது.

# வெறும் மண்



"என்ன அதிசயம் ஒரே மண்ணில் இருந்து இத்தனை வடிவங்களும், தன்மைகளும், அவற்றுக்கான பெறுமதியும்.. இது எப்படி சாத்தியமாகிறது...?

இணைக்கும் இது விடை கூற முடியாத வியப்பான கேள்வியாகவே இருந்தது.

அந்த வியப்பு மௌனமான சூழ்நிலையைத் தோற்றுவித்தது. மரத்தின் நிழலில் படுத்திருந்த ஒரு தேசாந்திரியான துறவி எதையோ மனதிற் கொண்டவராக ...

"மண் தான் எல்லாமே...! மண்ணில் தான் எல்லாமே...! மண்ணாவதும் எல்லாமே! வாழ்வது மாயம்! மண்ணாவது திண்ணம் ...." என நெடுமூச்சுடன் சொன்னார்

பறவைகளுக்கு அது புரிந்திருக்க நியாயமில்லை.

சிலவேளைகளில் குளத்து மண்ணுக்கு அது தெரிந்திருக்கக்கூடும். போர் நடந்து முடிந்த நாளொன்றின் பின் குளத்தடியில் அள்ளிவந்து கொட்டப்பட்ட இடிபாடுகளின் குவியலுள் பானை, சட்டி, தெய்வச் சிலைகள், செங்கல், கடம் என அனைத்துமே தூளாகி மண்ணுக்குள் கிடந்தன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்கு வந்தாலும் ஓயவில்லை ஒடுக்குதல்

சந்திப்பும் தொகுப்பும்: ப. பவதாரணி

உலக அரசியலில் பெண்களின் தலைமைத்துவம் வலுப்பெற்று வருகின்றது. சிறந்த ஆட்சியாளர்களாக பல பெண்கள் தம்மை முன்னிறுத்தி வருகின்றனர். ஆனால் இலங்கையில் குறிப்பாக ஈழத்து அரசியல் பரப்பில் பெண்களில் அரசியல் பிரதிநிதித்துவம் வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. கடந்த பொதுத் தேர்தல் முடிவுகளும் அதற்கு சான்று பகர்கின்றன.

அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் பொருட்டு 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அப்போதைய அரசு 25சதவீதமான இட ஒதுக்கீட்டை பெண்களுக்கு வழங்கியது. இதன் பெறுபேறாக பெண்கள் அரசியலில் உள்வாங்கப்படுவதற்கு அதிக சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆனால் மூன்று வருடங்கள் கடந்தும் உள்ளூராட்சி சபைகளில் உள்ள பெண்கள் பெரிய அளவில் சமூகத்துக்கு அறிமுகமானவர்களாக இல்லை. அவர்களது குரல்கள் சமூகத்தில் பலமான ஒலிக்கவில்லை. இதற்கு என்ன காரணம்?

கடந்து வந்த அவர்களுடைய பாதையில் அவர்கள் எதிர்கொண்டுள்ள சவால்கள் எவை என்பதை அறியும் பொருட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் அங்கம் வகிக்கும் பெண் உறுப்பினர்கள் பலருடனும் உதயன் - சஞ்சீவி நடத்திய கலந்துரையாடல் இங்கு வாசகர்களுக்காகத் தொகுத்துத் தரப்படுகின்றது.



" பெண்கள் வந்து என்ன செய்யப் போகிறார்கள் ஆண்களால் தான் எல்லாம் செய்ய முடியும் என்ற நிலை ஆதி காலத்திலிருந்தே உள்ளது. நாங்கள் அதை மாற்ற வேண்டும்.

### பெண் பிள்ளைகள் அரசியலில் ஈடுபட...

"நான் என்னுடைய பெண்பிள்ளையைத் திருமணத்துக்கு முன்னர் அரசியலில் ஈடுபட அனுமதிக்க மாட்டேன். அரசியலில் ஈடுபடும் போது பலருடன் பழக வேண்டி வரும். இது அவர்களின் பிற்கால வாழ்க்கையைப் பாதிக்கும். திருமணத்துக்கு பின் அது அவருடைய கணவரைப் பொறுத்தது. ஆண் பிள்ளைகளை வேண்டுமென்றால் அனுமதிக்கலாம்" என்கிறார் ஒரு உறுப்பினர்.

"நான் என்னுடைய பெண் பிள்ளையை சிறு வயதிலிருந்தே வெளி உலகத்துக்கு கொண்டு வந்து வளர்ப்பேன். நாங்கள் பிள்ளையைப் பொத்திப் பொத்தி வைத்திருந்து வளர்த்தால் பிள்ளைக்கு நன்மை எது தீமை எது என்று தெரியாது.

என்னுடைய பிள்ளை வளர்ந்த பின் தான் அரசியலில் ஈடுபட விரும்பினால் நான் நிச்சயம் அனுமதிப்பேன். நான் அரசியலுக்கு வந்த பின்பு என்னுடைய மகள் என்னைப் பார்த்து இப்போது துணிந்து செயற்படுகிறார்" என்று இன்னொரு உறுப்பினர் நம்பிக்கையோடு சொல்கிறார்.

### ஒதுக்கீட்டாலேயே சந்தர்ப்பம்

"இந்த முறை பெண்களுக்கு 25சதவீத ஒதுக்கீடு இருந்ததால் எங்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. பொதுவாக போனஸ் ஆசனங்களை பெண்களுக்கு கொடுக்க ஆண்கள் விட மாட்டார்கள். ஆனால் இந்த முறை போனஸ் ஆசனங்களை பெண்களுக்கு வழங்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்ததால் எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் சபையின் நிதிப் பங்கீடுகளின் போது, "போனஸ் சீட்காரர் வென்று வரவில்லை தானே? அதனால் அவர்களுக்கு கொடுக்கக்கூடாது" என்ற பிரச்சினைகளும் சபையில் உள்ளன. அதேபோல நாம் பெண்களுக்கு நிதி ஒதுக்க முயற்சித்தால் அல்லது ஏதும் குழுவொன்றைத் தொடங்க முயற்சித்தால் "இருங்கோ இருங்கோ இதெல்லாம் பிறகு பார்ப்பம்" என்று அடித்து அமத்தும் போக்கு சபையின் ஆண் உறுப்பினர்களிடம் உள்ளது"

### 50 வீத ஒதுக்கீடு தேவை

" பெண்கள் வந்து என்ன செய்யப் போகிறார் கள் ஆண்களால் தான் எல்லாம் செய்ய முடியும் என்ற நிலை ஆதி காலத்திலிருந்தே உள்ளது. நாங்கள் அதை மாற்ற வேண்டும். மக்களின் மத்தியில் தான் மாற்றம் வர வேண்டும். இந்தத் தேர்தல் முறை திரும்பவும் வந்தால் நல்லம். ஆனால் 50 வீதமாவது பெண்களுக்கான ஒதுக்கீடு இருக்க வேண்டும். நாங்கள் இதற்கு முன்னர் அரசியலில் ஈடுபடவில்லை.

இதனால் மக்களுக்கு எங்களைப் பற்றித் தெரியாது. இதனால் வாக்குகள் குறைந்ததைப் பற்றி நாங்கள் கவலைப் படக் கூடாது"

### பேசக்கூட விடமாட்டார்கள்

" நாங்கள் கதைக்க வெளிக்கிட்டால் எங்களுடைய கருத்தை ஏனைய ஆண் உறுப்பினர்கள் செவிமடுக்க மாட்டார்கள். நாங்கள் கதைக்கும் போது அவர்கள் தங்களுடைய பாட்டில் கதைத்துக் கொண்டிருப்பினம். அப்படிக்கூடக் கதைத்தால் இருங்கோ இருங்கோ காணும் காணும்என்று சொல்லி இருத்தி விடுவார்கள். இது தான் நடக்கும். சபையில் கதைப்பதை மீடியாவுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற விடயமும் எங்களுக்குத் தெரியாது. நாங்கள் அரசியலுக்கு புதுசு. நாங்கள் சபையில் கதைத்தால் சரி என்று இருப்போம். ஆண்கள் சிறிய விடயத்தைச் செய்தாலும் அதைப் பெரிதுபடுத்திக் காட்டுவார்கள். ஆனால் நாங்கள் பெரிய விடத்தைச் செய்தாலும் அதை வெளிப்படுத்தாமல் இருக்கிறோம். அரசியலில் எங்களை இறக்கிய பின்னர் எங்களுக்கான எந்த ஆலோசனைகளும் எங்களுக்கு தரப்படுவதில்லை. 25 சதவீத ஒதுக்கீட்டில் பெண்களைப் போட வேண்டும் என்ற கட்டாயத்திலேயே நாங்கள் உள்வாங்கப்பட்டோம் "


### பயந்தால் முன்னேற முடியாது

"என்னைப் பொறுத்தவரையில் நான் அரசியலுக்கு வருவதற்கு தயாரானபோது என்னுடைய ஒரு சகோதரரைத் தவிர ஏனையோர் போக வேண்டாம் என்றே சொன்னார்கள். நான் அரசியலிலும், சமூக சேவையிலும் இருந்த ஈடுபாட்டால் என்னுடைய தற்துணிவிலேயே நான் அரசியலுக்கு வந்தேன். ஆனால் தற்போது என்னுடைய கணவர் எனக்கு ஆதரவு தருகின்றார்.

தற்போது பெண்கள் எங்களைப் பார்த்து ஆசைப்பட்டு அரசியலுக்கு வர விரும்புகின்றனர். நாங்கள் எதிர்ப்புகள் சவால்களுக்கு பயந்தால் முன்னேற முடியாது. அதேவேளை நாம் தேர்தலில் போட்டியிட பெயர் கொடுத்ததன் பின்னர் எம்முடைய உறவினர்கள் உங்களுக்கு வேற வேலை இல்லையோ என்றே எம்மைக் கேட்டனர்"

"பெண்கள் என்ற ரீதியில் எங்களுக்கு தேவையில்லாத பிரச்சினைகள் வரலாம் என்ற பயத்தில் நாங்கள் சமூக ஊடகங்களையும் பயன்படுத்துவதில்லை. எங்களுக்கு அவை தொடர்பான பூரணமான அறிவும் இல்லை. நாங்கள் வீட்டுப் பொறுப்பிலிருந்து சமூகம் வரை எல்லாவற்றையும் சேர்த்து பார்க்க வேண்டிய தேவை உள்ளதால் இவற்றில் நேரத்தை செலவிடவும் முடியாதுள்ளது. பெண்கள் என்பதால் எங்களுக்கு எங்கு அடித்தால் வலிக்கும் என்பது தெரியும். இதை வைத்தே எங்களை விழுத்த முடியும். ஆண்களுக்கு அப்படியில்லை. எவ்வளவு விமர்சனங்கள் இருந்தாலும் அவர்கள் எதிர்கொள்ளுவார்கள். இவை தொடர்பில் எங்களுக்கு பயிற்சிகள் தரும் போது நாங்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த முடியும்.

### மாற்றம் வருமா?



எதிர்காலத்தின் பெண்கள் அதிகம் அரசியலில் ஈடுபட வேண்டும் என்றால் முதலில் அரசியல் பயம் இல்லாமல் போக வேண்டும். பெண் பிள்ளைகளைப் பெற்றால் திருமணம் செய்து கொடுத்து கரை சேர்க்கும் வரை சுமையாகப் பார்க்கும் மனநிலை மாற வேண்டும்.

பெண்களுக்கு தற்றுணிவை ஏற்படுத்தி வந்தால் அவர்களுக்கு எதையும் சமாளிக்கும் திறன் வரும். ஆண்களுக்கு பெண்கள் தொடர்பில் இருக்கும் மனநிலை மாற வேண்டும்" என்று எல்லோரும் ஒரே குரலில் சொல்லி முடித்தார்கள். அவர்கள் எதிர்பார்க்கும் மாற்றம் வருமா?

" எதிர்காலத்தின் பெண்கள் அதிகம் அரசியலில் ஈடுபட வேண்டும் என்றால் முதலில் அரசியல் பயம் இல்லாமல் போக வேண்டும். பெண் பிள்ளை களைப் பெற்றால் திருமணம் செய்து கொடுத்து கரை சேர்க்கும் வரை சுமையாகப் பார்க்கும் மனநிலை மாற வேண்டும். "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தாராளவாதி’



○ ம.பா. மகாலிங்கசிவம்

ஒரு குடும்பத்திலே கணவன் - மனைவி ஆகிய இருவரும் சண்டைசச்சரவின்றி மிகவும் ஒற்றுமையாக இருந்தனர். அந்த ஒற்றுமைக்கான காரணத்தைக் கணவரின் நண்பர் கணவரிடம் கேட்டார். அதற்குக் கணவர் “எங்கள் குடும்பத்தில் யார் எதைக் கவனிப்பது என்பது தொடர்பாகத் தெளிவான வரையறை உள்ளது அதுவே ஒற்றுமைக்குக் காரணம் என்றார். நண்பருக்கு எதுவும் விளங்கவில்லை. “ உங்கள் வரையறை பற்றி ஓர் உதாரணம் சொல் பார்ப்போம்” என்று நண்பர் கேட்டார். கணவர் சொன்னார் என் மனைவி கல்வித் தகைமை என்னினும் குறைந்தவள். அதனால் சிறிய விடயங்க ளில் அவள் முடிவெடுப்பாள். நான் கலாநிதிப்பட்டம் பெற்றவன். அதனாற் பெரிய விடயங்களில் நான் முடிவெடுப்பேன்” என்றார்.

நண்பன் மீண்டும் சிறிய விடயம் என்றால் என்ன? பெரிய விடயம் என்றால் என்ன? என்று கேட்டான். நண்பர் “சிறிய விடயம் என்பது எனது சம்பளத்தில் எனது பெற்றோருக்கு எவ்வளவு கொடுப்பது? அவளது பெற்றோருக்கு எவ்வளவு கொடுப்பது? எனக்கு எவ்வளவு பணத்திற்கு உடை எடுப்பது? அவளுக்கு எவ்வளவு பணத்துக்கு உடை எடுப்பது? போன்றவை.

பெரிய விடயம் என்றால், அமெரிக்கா ஈராக் மீது படையெடுத்தால் அமெரிக்காவையா ஈராக்கையா ஆதரிப்பது? அமெரிக்கத் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பையா, ஜோ பைடனையா ஆதரிப்பது முதலியவை” என்றார். இக்கதை குடும்பத்திற் கணவரைவிட மனைவியின் கை ஓங்கியுள்ள நிலையை நகைச்சுவையாகப் பதிவு செய்கிறது.

இதேவேளை தம்மைச் சிறந்த கல்வியாளர்களாகவும், அரசியல் வாதிகளாகவும் காட்டிக் கொள்ளும் மேட்டுக்குடி மனப்பாங்குள்ள சிலர் உள்ளூர் விட யங்களில் அக்கறை செலுத்தாது, உலக விடயங்களில் அக்கறை செலுத்தாது உலக விடயங்கள் பற்றிக் கதைத்துக் கதைத்தே காலங் கடத்தும் நிலையைக் குறியீட்டுப் பாங்கில் உணர்த்துவதாகவும் இக்கதை உள்ளது.

இவ் விடயம் தொடர்பான சி.சிவசேகரத்தின் ‘ஏகலைவ பூமி’ என்ற கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற ‘தாராளவாதி’ என்ற கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகிறது.

## தேன் கூடு

ஓய்வாகத் தொந்தி சரியக்
கதிரையிலே சாய்ந்து புதைந்து
சாப்பிட்டது செமிக்கப்
பேசுவீர் உலக விவகாரம்
இடையிடையில்
ஏப்பம் விடுவீர்
நெருப்பெடுத்து ஊதுவீர்
புகையிடையே அனல் உமிழ்வீர்
வாய் வெந்து போகாமற்
கிண்ணத்தில் ஊற்றி
உறிஞ்சித் தணிப்பீர்
மறுபடியுந் தீமூட்டி
நெருப்பாய்க் கொதிப்பீர்
சாய்ந்த உடம்பு
கதிரையிலே பெயராமல்
கண்களால் மின்னி
இடியாய் முழக்குவீர்

சீமைச் சிறைகளிலே
ஓரறைக்கு நாலுபேர்
அதிகம் என அறிவீர்
சீனச் சிறைகளிலே
சிற்றெறும்புத் தொல்லையென
ரஷ்யச் சுரங்கத்தில்
காற்றோட்டம் இல்லையென
வியட்னாம் அகதிகளை
மந்தைகள் போல் கப்பலிலே
ஏற்றுவது கொடுமையெனச்
சீறிச் சினப்பீர்
பிரேஸிலிலே பிள்ளைகட்குப்
பள்ளிப் படிப்பின்றிக்
கூலி உழைப்பில்
இறக்குகிற கொடுமைக்கு
எதிராகக் குரல் கொடுப்பீர்

தோட்டம் உமது
தேயிலையில் லாபமென
ஈட்டும் பொருள் உமது எனவே
மலையகத்துத் தொழிலாளி
வீட்டு வசதி
தோட்டத்துப் பள்ளிகளில்
கல்வித்தரம் உயர்தல்
குறைந்தபட்சக் கூலியெனக்
கேட்டாற் பிசகு
கேளாதீர் விடியுவரை
நீளமாய்ப் பேசுவோம்
உலக விவகாரம்



சி.சிவசேகரம்

சி.சிவசேகரம் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீட முதுநிலை விரிவுரையாளர். இமயவரம்பன் என்ற புனைபெயரிற் கவிதைகளை எழுதியதோடு அறிவியல், இயந்திரப் பொறியியல், எழுத்துச் சீர்திருத்தம், நிறுத்தக் குறிகள், அரசியல் தொடர்பான துறைகளிற் பெருமளவான கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியவர். செப்பனிட்ட படிமங்கள், இன்னொன்றைப்பற்றி, நதிக்கரைமூங்கில், பாலை முதலியகவிதை நூல்கள்; பாட்டும் கூத்தும், சமூக விரோதி, இட்கிந்தை முதலிய நாடகத்துறை நூல்கள், குழந்தையும் தேசமும் என்றும் சிறுகதைத் தொகுப்பு என்பவற்றை வெளியிட்டவர்.



அவரது ‘தாராளவாதி’ என்னும் கவிதை உள்ளூரில் மக்கள், பிரச்சினைகளை எதிர்கொண்டு துன்புற்றுக் கொண்டிருக்க, அது பற்றிக் கவனம் செலுத்தாது உலக நாடுகள் பற்றி ‘வாய்புசத்தும்’ அரசியல் வாதி ஒருவரின் மேதாவித் தனத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது. அரசியல் வாதியாகவும் அதேவேளை தேயிலைத் தோட்டச் சொந்தக்காரராகவும் இருக்கும் ஒருவரைக் குறியீடாகக் கொண்டு இன்றைய அரசியலரங்கில் உழல்கின்ற பலரின் நிலையைப் படம் பிடிக்கின்றது.

**“ஓய்வாகத் தொந்தி சரியக்**
**கதிரையிலே சாய்ந்து புதைந்து**
**சாப்பிட்டது செமிக்கப்**
**பேசுவீர் உலக விவகாரம்”** என்ற கவிதைத் தொடக்கம் இத்தகையவர்களுக்கு அரசியல் ஈடுபாடு என்பது செமியாப் பாட்டு முயற்சியாகவே உள்ளதைக் காட்டு கிறது. அதுமட்டுமன்றித் தொழிலாளர்கள் பட்டினியால் வாடத் தாம் தாராளமாக உண்டும் குடித்தும் ஏப்பமிட்டும் மகிழ்கின்ற தோட்டத் தொழிலாளித் தலைவர்களின் செயற்பாடுகள் வாசகர் மனதிற் பதியும் வண்ணம் மிக நுட்பமாக வருணிக்கப்படுகின்றன.

**“இடையிடையே ஏப்பம் விடுவீர்**
**நெருப்பெடுத்து ஊதுவீர்**
**புகையிடையே அனல் உமிழ்வீர்**
**வாய்வெந்து போகாமற்**
**கிண்ணத்தில் ஊற்றி**
**உறிஞ்சித் தணிப்பீர்**
**மறுபடியும் தீமூட்டி**
**நெருப்பாய்க் கொதிப்பீர்”**


சிகரெட் புகைப்பதை நெருப்பெடுத்து ஊதுவீர் என்றும் நெருப்பை ஊதிய வாய் வெந்துபோகாமல் தடுக்கவே மதுவை அருந்துவீர் என்றும் கூறும் கவிஞரின் கற்பனை நயக்கத்தக்கதாகும்.

இவற்றுடன் மட்டும் அவர்களின் செயற்பாடுகள் நின்றுவிடவில்லை. உலக மக்களின் துன்பங்களுக்காகவும் மலையகத் தலைவர்களான தோட்ட முதலாளிகள் ஓங்கிக் குரல் கொடுக்கின்றனர். சிறிய லயன் அறைகளில் துன்புறும் தம்மக்களைக் கண்டுகொள்ளாத இவர்கள் சீமைச் சிறைகளில் வாடுபவர்களுக்காக வருந்துகின்றனர். ரஷ்யச் சுரங்கத் தொழிலாளர் காற்றோட்டம் அற்ற நிலையில் வேலை செய்தல், வியட்னாம் அகதிகள் மந்தைகள் போல் கப்பலில் ஏற்றப்படுதல், பிரேஸில் நாட்டுப் பிள்ளைகள் கல்வி வசதியற்றுக் கூலித்தொழிலில் ஈடுபடுத்தப்படுதல் என எல்லாவற்றுக்காகவும் பொங்குகின்றனர். ஆனால்,

**“மலையகத் தொழிலாளி**
**வீட்டு வசதி**
**தோட்டத்துப் பள்ளிகளில்**
**கல்வித்தரம் உயர்தல்**
**குறைந்த பட்சக் கூலியெனக்**
**கேட்டாற் பிசகு”** ஆகக் கொள்ளப்படும் அவல நிலை கவிஞராற் சுட்டப்படுகிறது.

**“விடியும் வரை**
**நீளமாய்ப் பேசுவோம்**
**உலக விவகாரம்”** என்றும் கவிதையின் இறுதிப் பகுதி மீண்டும் மலையகத் தலைவர்களின் போலித் தனங்களை வாசகர் முன்வைத்து மலையகத் தொழிலாளரின் துயரங்கள் தீர்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதே முதன்மையான தேவையாகும் எனக் குறிப்பாக உணர்த்துகிறது.

## என் தீராக் காதல்!



அமர்ந்திருக்கும் இருளுக்கு
தோளிடுக்கில் வாசம்
கிளையிலிருந்து மலர் விழுந்து
உதிர்வது கடக்கும் காலத்தில்
நிகழ்ந்து விடுவதுண்டு

என் பறவைகளுக்கு
நீ கூடு தருகிறாய்...
பிரக்ஞையற்ற என் ரோமக்கால்கள்
உன் தொடுதலில் சிலிர்த்தடங்கும்
சலங்கைப் பரல்கள்
வலுக்கட்டாயமாக திருப்பி
அனுப்பப்பட்ட சொற்களெங்கும்
பரவிக் கிடக்கும்

இந்த தீராக் காதலின் மோகம்
தை விழுங்கிச் செரித்து
மோட்சமடையப்போகிறது
கருநீல அலைகளின் உப்புச்செறிவு
என் மீன்களின் தாகம் தீர்க்கும்.

கயூரி புவிராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மௌன மொழி

41

இற்கான

# கவிதைகள்

மூடப்பட்ட முகங்கள்
முடக்கப்பட்ட வீதிகள்
நிறுத்தப்பட்ட கல்வியகங்கள்
நிலை குலைத்த கற்றல் செயல்முறைகள்
பாழாகிப் போனது பள்ளிக்காலம் வாழ
பழகிக் கொள்ளுங்கள் இதனுடன் எனப்பல ஓலம்
கொடுவாக் கத்தி கொண்டு
கொல்லைப் புறத்தில் மீன் வெட்டி
கொஞ்சம் கொஞ்சம் சமையல் பழகுகிறேன்
கொரோனா எனும் கொடியவனால்

**ஆர்.சுகிர்தா**, மானிப்பாய்

எதிர்கால
இல்லத்து அரசி இவள் இன்று
இல்லத்து இளவரசியாய்
நாளைய
இல்லற இராச்சியத்தில்
அனைவரையும் ஈர்ந்திழுக்கும்
சமையல் கலையதில்
ஒவ்வொன்றாய்க்...
கற்பிக்கப் படுகிறதோ...?

**த.சிவா**
அல்வாய்.

**அசையஅசையும் கூந்தல் அள்ளி முடிந்து**
**உலையும் வேகும் கறியும் ஆக்க**
**சமையல் செய்யும் வளையல் கரங்கள்**
**விலையும் இல்லை உந்தன் பாசம்**
**விளையும் பயிரே துயரம் எதற்கு**
**அறிவின் சிகரம் விண்ணில் உயர்த்தும்**
**அடுப்படி தாண்டு படிப்பதில் தேடு**
**ஆணுக்கு நிகராய் அண்டம் போற்றும்**

**ஆர்.கார்த்திகாயினி**
வற்றாப்பளை

அருவாள் முனையில் காய்நறுக்கும்
சிறுமியே உன் அறிவால்
அறுக்கும் கனியை ருசிக்க காத்திருக்கிறது இவ் உலகு
வெள்ளி தட்டில் காய்கறி போல
உன் திறமை உனக்குள் இருக்கிறது
அதனை அறுத்தெறி வரும் துன்பத்தை
நீ. நீர் கொண்ட பாத்திரத்தில் அறிவு மூலம்
அலசி கண்டறி

**லோ.கம்சனா**
யாழ்ப்பாணம்

**பரிசு பெறும் கவிதை**

மருளும் விழிகள் குழி விழும் கன்னம்
ஒளிரும் நிலவாய் எழிலாய் வதனம்
தாயார் வழியில் தவழும் மகளாய்
வளையல் கொஞ்சும் பிஞ்சுக் கரத்தாள்
சமையல் கலையில் அறுசுவை படைப்பாள்
வீட்டுப் பணிபோல் நாட்டின் பணியும்
கனவாய் கொண்டு கடமையாற்று
பெண்ணே நீ தான் புவனத்தின் ஊற்று

**ர.மதுசுதன்**
வற்றாப்பளை

மீன்வெட்டும் மின்மினியே
வறுமையினால் பொறுமையுடன்
பொறுப்புடனே பணி செய்யும்
சுட்டித்தனமிழந்து
சுமை தாங்கியானாயோ
கெட்டித்தனமிருந்தும்
கிட்டவில்லை வாய்ப்புக்கள்
ஏழ்மை என்பதனால்
உன் விதி இது தானோ?

**வி.பி சிவேஸ்**
தண்ணீரூற்று

கண்ணம்மா எங்கே
உன் புன்னகை?
கூர் அரிவாள் கொடுத்தோர் யார் ?
யார் அறிவார் .
மனிதம் மரத்து போனது
ஆனால் நீ உயிர்த்து போனாய்
நீ தான் உலகத்தின் புதிய விதை
முளைத்து வா !
பாவையே உனக்காக
இந்த உலகம் காத்திருக்கிறது .

**அபிஷாயினி கிருஷாந்**
கொக்குவில்

பாவையவள் விரல்களில்
பக்குவமான கைவண்ணம்
பழக்கத்தில் வந்த கலையோ
பண்பாடு தந்த பாடமோ
படித்தால் மட்டும் போதாது
பலதிறன்கள் பயின்றிடவே
பருவத்து வாழ்வு வளமாகும்.

**ஔவை.**
கொடிகாமம்.

அக்கினி குஞ்சு கையில்
அரிவாள் மனை கொடுந்துயர்
பிஞ்சின் நெஞ்சின்
சுமையேற்றியது யார்
முள்ளிவாய்க்கால்
தந்த முடிவோ இது.....
கள்ளமற்ற நெஞ்சில்
எத்தனை கனதியோ
காலம் கடத்தும் தந்திரத்தில்....
கருகிப் போகுமோ இக் குருத்து.....

விழிகள் பேசும் அழகின் வதனம்
விடியல் பூவாய் மலர்ந்த மகளாய்
கருமை கூந்தல் அள்ளி முடித்து
இனிமை இதழ்கள் கோலம் காட்டும்
தாயாள் தோளில் படரும் கொடியாய்
சமையல் செய்யும் வளையல் கரங்கள்
மாந்தர் குலத்து மகுடத்து மணியாய்
மாண்புடன் வாழ்வாய் பல்கலை பயின்று

**ர.கவிதா**
வற்றாப்பளை

# பதுங்கியிருக்கும்...

(தொடர்ச்சி)

**வெடிபொருள்கள் எவ்வாறு வெடிக்கின்றன?**

மர்மப்பொருட்களைசிறுவர்களோ, பெரியோரோ அதனைச் சோதித்துப் பார்க்க முயல்வர். அதனால் ஏற்படும் ஆபத்தை அத்தருணத்தில் அவர்கள் சிந்திப்பது இல்லை. அவ்வகையில் அவர்கள் மர்மப் பொருள்களை,

- எறிந்து பார்த்தல்
- உடைத்துப் பார்த்தல்
- உருட்டி விடுதல்
- தீயில் போட்டுப் பார்த்தல்
- வயர்கள் அல்லது கம்பிகளில் பிடித்து இழுத்தல்
- மின்சாரத்தைச் செலுத்திப் பார்த்தல்
- அடித்தல்
- குத்துதல்
- பரிமாறி விளையாடுதல்
- பாகங்களைக் கழற்ற முனைதல்
- பாரமான பொருளை ஏற்றுதல்

என்பவற்றை செய்யும் போது அவை வெடிக்கக்கூடும்.

**வெடிபொருள்கள் வெடிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்களாக,**



- பல்வேறுபட்ட காயங்கள்
- சிறுகாயங்கள்
- பெருங்காயங்கள்
- எரிகாயங்கள்
- கிழித்துச் செல்லல்
- துளைத்துச் செல்லப்படல்
- அவயவங்கள் துண்டிக்கப்படல்
- உம் : கால் இழப்பு
- பாதத்துடன்;
- கெண்டைக்கால்;
- முழங்கால் உடன்;
- கை இழப்பு
- விரல்கள்
- மணிக்கட்டுடன்;
- முழங்கையுடன்;
- முழுமையாக
- புலன் உறுப்புக்கள் பாதிக்கப்படல், செயல் இழத்தல்
- அதிகளவு இரத்தப்போக்கு
- உள ரீதியான பல்வேறு பாதிப்புக்கள்
- சொத்து இழப்பு
- கோமா நிலையை அடைதல்
- மரணம் சம்பவித்தல்

என்பவற்றைச் சொல்லலாம்.

இவ்வாறு யுத்தம் நிறைவடைந்த பின்பும் வீழ்ந்தும், புதையுண்டும் காணப்படும் வெடிபொருள்களால் ஏற்படும் அபாயம் பற்றி அறிந்த நாம் எதிர்காலத்தில் ஏனையவர்களும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு உரிய விழிப்புணர்வு பெற்று இந்தத்தினத்தில் இருந்து வெடிபொருள்களை தயாரித்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல், புதைத்தல் போன்றசெயற்பாடுகளில் ஈடுபடாது அழகிய பூமித்தாயின் மடியில்மகிழ்வோடு வாழ்ந்திருப்போம். ■

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**

**09.04.2021**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
**0773165555**

**கவிதைக்கு பரிசு 1000/=**

**42**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் திணைக்களப் பேச்சாளர்
# அஜித் ரோஹணவுக்கு....



ஆயுபோவன் மாத்தயா!

இடது கன்னத்திலை ஆரும் அடிச்சால் பயப்பிடாமல் வலது கன்னத்தையும் காட்டு
எண்டு யேசு பிரான் சொன்னதா பைபிளிலை இருக்கு. ஆனால் யேசுபிரான் சொல்
லிப்போட்டார் எண்டதுக்காக எல்லாரும் அப்பிடி நடக்க முடியுமோ? அடி
வாங்கிக்கொண்டு சும்மா நிக்கேலுமோ? அடிச்சால் திருப்பி அடிக்கலாம். சந்தர்ப்ப
சூழ்நிலைக்கு ஏற்றமாதிரி நாங்கள் நடக்க வேணும் எண்டதை வலு அடக்கமாயும்
ஆழமாயும் நீங்கள் இப்ப சொல்லி இருக்கிறியள். உங்கடை உயிருக்கு ஆபத்துவாற
மாதிரி பொலிஸ்காரர் அடிக்கினமோ? பயப்பிடாதையுங்கோ, திருப்பி அடி
யுங்கோ எண்டு தைரியமாச் சொன்னதுக்காக, உங்களுக்கு பொது மக்கள் சார்பிலை
முதலிலை ஒரு நன்றி.

இப்ப ரண்டு நாளுக்கு முன்னம் பன்னிப்பிட்டியவிலை ஒரு பொலிஸ்காரர் ,ஒரு
றைவரைப் பிடிச்சு அடிச்சு, அந்தாளைத் தள்ளி விழுத்தி அவருக்கு மேலை துள்ளிக்
குதிச்சு விளையாடின விளையாட்டை முழு இலங்கையும் வீடியோவில பார்த்து
அதிர்ந்து போச்சுது.

" என்னதான் அந்த றைவர் மோட்டுத்தனமா லொறியை ஓட்டினாலும் இப்பிடி
ஈன இரக்கமில்லாமல் போட்டு மிதிக்கிறதோ" எண்டு அந்த வீடியோவைப் பார்த்த
எல்லாருக்கும் கடும் கோபம்.

அந்தப் பிரச்சினைக்குப் பிறகுதான் " பொலிஸ்காரர் கைவைச்சால் பொதுமக்கள்
தங்களை தற்காத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க உரிமை இருக்கு" எண்டு சொல்
லியிருக்கிறியள். ஒரு பொறுப்புள்ள அதிகாரி இப்பிடித்தான் இருக்க வேணும்.
கண்டவனையும் கண்டபடி சட்டத்தைத் தன்ரை கையிலை எடுக்க அனுமதிக்கக்
கூடாது. விட்டால் தனக்குள்ள தனியான கோபதாபத்தை பொலிஸ்காரர் அப்பா
வியளிலை தாளிக்க வெளிக்கிட்டு விடுவினம்.

சும்மா ஒரு கதைக்குச் சொல்லுறன். நடு றோட்டில 'புட் போல்' அடிச்சு
விளையாடுற பொலிஸ்காரரிட்டை சட்டத்தைக் குடுக்கிறது எவ்வளவு
ஆபத்து எண்டதை அந்த வீடியோவைப் பாத்தால் தெரியுதெல்லோ?
குரங்கின்ரை கையில பூமாலை எண்டுறது இதைத்தான் போல. அப்ப
உவையளே சட்டத்தையும் கையில எடுத்துத் தண்டனையையும் குடுத்
தால் என்ன நடக்கும் எண்டு நினைக்க, ஈரல்குலை நடுங்குது. றோட்
டிலை தனியாய்ப் போகப் பயமாக்கிடக்கு. நல்லவேளை இனி அப்பிடி
பொலிஸ்காரர் சேட்டை விட்டால், அதில வைச்சே திருப்பிக் குடுக்க
லாம்..அந்தப் பயத்தில பொலிஸ்காரரும் இனி தேவையில்லாமல்
சனத்தோட மிண்ட மாட்டினம். இப்ப எங்கடை ஊருலகத்திலை
நடக்கிற மண் கொள்ளையும், கஞ்சாக் கடத்தலும், மரம் வெட்டுறதும்
ஒரு தனியாளாச் செய்யிற குற்றங்கள் இல்லை. கனபேர் சேர்ந்து ஒரு குழுவாவும்
ஒரு சமூகமாகவும் அந்தக் குற்றங்களைச் செய்யிறதாத்தான் பேப்பரைப் பாக்க
விளங்கிது. அப்பிடியான குற்றவாளியளை இப்பிடி குஸ்தி போட்டு பிடியுங்கோ..
ஒருத்தரும் வேண்டாமெண்டாயினம். ஆனா அப்பாவியள் மேலை கோபத்தைக்
காட்டி சனத்திட்ட சாபத்தை வாங்காதையுங்கோ.

அன்புடன்,
அப்பாவி அன்னமுத்து

**அவசரமா ஒரு கடுதாசி**

அகமது ஃபைசல்

# கனவு தான் மூதற்பிறவி



தரையில் பாய் விரித்து உறங்குகிறேன். என்னுடன் வந்த கனவின் மேனியும் அருகிலே விழித்திருக்கிறது. யாரும் தனியே உறங்குவதில்லை. உறங்குகின்ற எல்லோருடனும் கனவின் மேனி துணைக்கு இருந்தே தீரும். "விர் விர்ரென பறந்து வந்து, எனது கனவின் மேனியெங்கும் தங்கிவிட்டன காட்டுத் தும்பிகள். உதட்டைக் கடித்துக்கொண்டும், கண்களை இறுக மூடிக்கொண்டும், முகத்தைச் சுழித்துக்கொண்டும் உறங்கிக் கிடந்தேன். கனவின் மேனி என் உடலைத் தடவிக்கொடுத்தது.

வானம் கீழே இறங்கி, கனவின் மேனியை மூடி, காட்டுத் தும்பிகளின் அடாவடித்தனங்களிலிருந்து என்னைக் காப்பாற்றியது. கனவின் மேனியழகைக் கண்ட ஆகாயம் நட்சத்திரங்களையும், மேகங்களையும் என் கண்கள் மீது பரப்பி கனவின் மேனியழகைக் கூடிக் கதைக்கத் தொடங்கிற்று. உறக்கம் கலைந்து சாமத்தில் கண்களைத் திறந்து பாயிலே எழுந்து அமர்ந்து விடுகிறேன். ஆகாயம் தலையில் தட்டுகிறது. நட்சத்திரங்கள் என் மடியில் விழுகின்றன. மேகங்கள் பாயிலே மிதக்கின்றன.

ஆகாயத்தில் பறந்து வந்த ஒரு வெள்ளைப் பறவை கனவின் மேனியைக் கொத்திச் செல்கிறது. எனது அறையில் இருக்கும் எல்லாத் தளபாடங்களின் மீதும் மற்றும் சுவரில் தொங்கும் இலை ஓவியங்கள் மீதும் அமர்ந்த காட்டுத் தும்பிகள் தங்கள் கூத்தைக் காட்டுகின்றன. எங்கோ இருந்து அறைக்கு வந்த குளிர் காற்று என்னுடல் மீது முளைத்துப் படருகிறது. எந்த நாட்டு விமானமோ எனது நாட்டுக்குள் வந்து தரையிறங்கும் சத்தம், காட்டுத் தும்பிகளின் ராக்கூத்து என் காதுகளை வெடிக்கச் செய்கிறது. காதுகளை இறுகக் கைகளால் பொத்துகிறேன். ஆகாயம் மேலே எழுகிறது.

என் மடியில் ஒரு நட்சத்திரம் பெரும் ஒளியைச் சிந்தியவாறு கிடக்கிறது. இனி நான் உறங்கலாமா? விழித்திருக்கலாமா? நட்சத்திரத்தைக் கேட்கிறேன். அது மேகங்கள் கரைவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. என்னைச் சுற்றிலும் நீலம் சிந்திக் கிடக்கிறது. அது கனவின் மேனியின் காயங்களில் இருந்து வந்த நீலம்தான் என்று நம்பினேன். அதுவுமில்லை. வானத்தின் நீலம்தான் என நம்பினேன். அதுவுமில்லை. காலையில்தான் கண்டேன் வாசலில் ஒரு நீல ரோஜா பூத்திருப்பதை.

என் முதற்பிறவி கனவுதான். நான் என் தாயின் கனவு. நீங்களும் உங்கள் தாயின் கனவே. ■

# வித்துவான் பதில்கள்!



சம்சாரத்தின் ஆழத்தை அறிய முடியவில்லை என்கின்றானே என் நண்பன்...?

கவிதரன், கோப்பாய்.

**தலையணை மந்திரத்தின் அடியாக அறிய முயலுங்கள்.**

கட்டாக்காலிகளைத் திருத்துவதற்கு என்ன வழி வித்தூ?

கனகாம்பிகை, முள்ளியவளை.

**கட்டாக்காலி நாம்பன்களுக்கு நாணயம் பூட்டுவதை விட வேறும் ஏதோ செய்கிறார்களே?.**



வித்தூஸ்... எனக்கு உதவி செய்வதாய் நடிக்கும் எனது தோழனே எனக்கு வில்லனாக மாறிவிடுவான் போலிருக்கின்றதே?

முரளி, உடுப்பிட்டி

**நீங்கள் இன்னும் கடிதம் கொடுக்கும் காலத்திலேயே இருக்கிறீர்களா? நீங்கள் எழுதிய கடிதத்தை அவனே வாசித்துவிடுவான் கவனம்.**

**வித்தூ... மெலிந்த தோற்றமுடைய எனக்கு ஆனைக்குட்டிசைஸில்பெண்பார்க்கின்றாரே என் அப்பா...!**

டினோஜன், உப்புக்குளம்.

நீங்கள் ஆண் என்பதால் பாதிப்பு குறைவு.





இந்தக் காலத்தில் இருபதை நம்பினாலும், அறுபதை நம்பக்கூடாது என்கிறார்களே வித்து ஐயா?

தாட்சா, திருகோணமலை

**சில சந்தர்ப்பங்களில் உண்மை போலவும் இருக்கிறது. முன்னைய காலங்களில் அறுபதைத் தள்ளாத வயது என்பார்கள். இப்போது அப்படிச் சொல்ல முடியாது போலுள்ளதே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘துளி அல்லது துகள்’

இராகவன்




அலறியின் கவிதைத் தொகுப்பை முன்வைத்து சில குறிப்புகள்

வானவில் வந்தமரும் வண்ணத்துப்பூச்சி வடிவிலான வார்த்தைகள் மௌனத்துக்கும் தியானத்துக்கும் இடையில் சமுத்திரப் பரப்பென மிதந்த வார்த்தைகளில் கலந்ததுதான் இந்தத் துளி அல்லது துகள். முன்பொருநாள் பறவையைப் போல சிறகடித்தது அலறியின் கடல். இப்போது துளி அல்லது துகளாக. முதலில் பூமிக்கடியில் வானம். வானத்திற்கடியில் கடல். மழையை மொழிதலின் முன்பாக அலறி எல்லாம் பூக்களும் உதிர்ந்துவிடும் என்றார். இவர் நீள்வழியில் பயணிக்கிறார். நோட்டமிடல் திட்டமிடல் எதுவும் இவருக்குச் சாத்தியமில்லை. நடக்கும் வழியென்பது முட்களாலும், கற்களாலும், முகடுகளாலும் ஆனது தான். ஒவ்வொரு அடியையும் பெயர்த்து வைக்கிறார். இடியையும் தாங்கிக்கொள்கிறார். கற்கொண்டு கூரிய சொற்கொண்டு தாக்குகிறார்கள். பூங்கொத்தோடும் புன்னகைக்கி றார்கள். எனினும் விடியும் நம்பிக்கையோடும் வெல்லும் வேண்டுதலோடும் பயணிக்கிறார்.

எப்போதும் இனிமை சிந்தும் குரலில் பாடும் இரு குருவிகளில் ஒன்று பெருங்குரலெடுத்துக் கத்தியது ஏனென்று தெரியவில்லை. புரியவுமில்லை. தொழில்களற்ற தேசத்தில் பிறந்திருந்தால், நிறங்களற்ற வானத்தில் பறந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். பறவைகளின் பரிபாஷைகளை நன்கு அறிந்திருக்க முடியும் என்றெல்லாம் ஏங்கிக்கொண்டே ஓட்டு வீடுகளுக்கும் மாடங்களுக்கும் முதிர் மரங்களுக்கும் அப்பால் இந்தக் குருவிகளின் பெருங்குரலுக்கு பதிலுரைத்த அந்தக் குருவி அப்படி என்னதான் சொல்லியிருக்குமெனத் துயருற்று அந்தக் குருவியின் துயரத்தைத் தூக்கியபடி கூடடைகிறார்.

இவர் வெளவால், பாம்பு, பன்றி இறைச்சி, கரப்பான் பூச்சி புசிக்காத பூமி செல்ல விளைகிறார். காவி, கரன்சி, கம்யூனிசத் தாராளவாதம், தப்லீக், தவ்ஹீத் தலைக்கேறிய நிலம் தாண்ட முனைகிறார். அகல்விளக்கு, அறியாமை, மடமை, முகக்கவசம், ஊரடங்கு, தனிமை அற்ற கண்டம் காண விரும்புகிறார். எரிப்பு, புதைப்பு வாதங்கள், ஆறடி நிலம், அகிம்சை புத்தன் போதனைகள், அர்த்தம் புரியாத மண் அகன்றிடத் துடிக்கிறார். ஆனால் இவரது இருப்பிடமோ நடுக்கடல், நூற்றாண்டுத்துயர், பிணவாடை, கொரோனா வைரஸ் கோடிக்கணக்கில் குடிகொண்ட தீவு. எனினும் குதூகலித்துச் செல்கிறார்.

அடுத்த கட்டமாக சூரியன் சுட்டெரிக்கும்போது கானல் நீரினைப் பாவியபடியே வாக்குத் தேடி வலம் வருகிறார். உப்பு நீர் ஊற்று பிரவாகமெடுக்கிறது. உடல் முழுவதும் நமைச்சல். இரு விழிகளின் ஈர்ப்பில் அலையடிக்கிறது மனம். இயல்பு குழம்பிச் சலனம். இருந்தும் ஒலி பெருக்கி இவர் கையில் பேச வேண்டும். அல்லது ஏச வேண்டும்.

காகம் கொத்தித் தீர்த்த கோதெனவும் வெளவால் கடித்துறிஞ்சிய சாறெனவும் உச்சிக் கந்தில் தொங்குகிற பாதியைக் கண்டு கிளைகளில் ஏறியும், இறங்கியும் ஏமாற்றத்துடன் திகைக்கும் தனது சாயலையொத்த அணிலிடம் கண் கொத்திப் பாம்பென காகம் கொத்திப் போன கனியின் கதையை எப்படிச் சொல்வதென்ற தவிப்புடன், மாசிப் பனியில் நனைவது போல, பொற் சுரங்கத்துள் புகுவது போல, நீர்ப்பறவையின் நிழலைப் போல, வாவிக்கரைபோல இன்னும் மரணத்தை நெருங்கிச் செல்வது போல மயானத்தைக் கடிந்து செல்கிறார்.

சொர்க்கத்தின் எழிற்சோலை நெற்குருவியின் கண்களில் விரியக் காண்கிறார். நோன்பிருத்தலால் ,பசித்திருத்தலால் ஏழுவானம், முக்கடல் இருள்குகை, இறை வேதம் அருளிய மாதத்தின் பிரவாகமாகக் காண்கிறார். இப்போது அவரால் தரமுடிந்திருப்பது ஒரு சிறங்கை பேரீச் சம்பழமும் ஒரு கோப்பை கஞ்சியுமென வருந்தும் மனதுடையவராக இருக்கிறார்.

இவர் பறவைகளின் காதலர் . இவரின் கவிதைகளுக்குள் எங்காவது ஒரு பறவை பறந்துகொண்டுதானிருக்கிறது. சில மந்திரப் பொழுதுகளில் திளைக்கிறது பறவைகளின் வசீகரம். மென் இறகின் நிறங்களே காட்டுப் பூக்களாக தேன் குரலின் ஒலியே மலையருவியாக விரியக் கண்டு நித்தியத்திலும் நிறைகிறது இவரது பறவை. கால்களில் காற்றை அள்ளிக் கொண்டும், தலையில் சூரியனை சுமந்து கொண்டும், ஒற்றை மரமாவது தட்டுப்படாமல் அலைந்து கொண்டிருப்பதும் அதுவே தான்.

இயல்புடைத்து நீலவானை நெய்துகொண்டே கவிதைக்காகக் காத்திருக்கும் சொற்தெறிப்பில் பிறக்கும் புதுயுகம் கதிரின் ஒளி தாங்கிக் காற்றுடைத்து கடுகதியாய் செல்லும் .... நிலம் தாங்கிய நிழலின் நிதானம். மூங்கில் பூக்கும் இலைகளில் மயிலிறகின் வருடல். அலையின் நர்த்தனம். கலவி உச்சத்தில் புடைக்கும் கழுத்து நரம்பென கரும் பச்சைக் கோடுகள் மஞ்சள் மேனியெங்கும் நீளும் ரம்மியம். நெடுப்பமாக, நேராக வளரும் தண்டுகளில் தங்க மோதிரமென மினுங்கும் மொழிகள். காற்று இறைக்கும் ஓசையில் புல்லாங்குழலாகிறது. அரிவையர் நீராடும் ஆற்றோரம் பூரித்தாடுகிறது. மழுக்கென மானுடன் கால்களைத் தறிக்கையில் பெருகிக்கொடுக்கிறது குருதி காடெங்குமென இயற்கையைக் கொண்டு தனது கவிதைகளை அழகாக்கிக் கொள்கிறார். இயற்கை மீதான வன்முறையை அதே இயல்புடன் துயரம் படரப் பதிவிடுகிறார்.

இவருக்கு மலைகள் வாசலாகத் திறந்திருக்கின்றன. நிலவின் விரல்கள் தீண்ட, அல்லி ஆம்பல் முல்லை மொட்டரும்பி முகிழ்ந்து பொய்கை நிரம்பிப் பூக்கும் கருணையின் ருசியோடு வசந்த காலத்தின் இசையைக் கோர்க்கிறது. காற்றின் தோகை வருட, மல்லிகை செவ்வரளித் தாமரை மலர்ந்து விரிந்து தோரணத்தில் தொங்கி அசையும் மோகனக் கண்களோடு கோடை காலத்தின் ஒளியைச் சிந்துகிறது . பனியின் ஊடுபாவ அந்தூரியம், ரோஜா ஓர்க்கிட் பூத்துக் குலுங்கி பள்ளத்தாக்கின் சரிந்து சொரியும் கனவின் நிறத்தோடு இலையுதிர் காலத்தின் குளிரைப் பருகுகின்றன. இறுதியில் ஒருநாள் உடலின்று பிரியும் உயிரென எல்லாம் உதிர்ந்து போகுமெனத் தத்துவ விளிம்பைக் காட்டுகிறார்.

இயந்திரப் படகுகள், நீள் கயிறு, கட்டுமரம், நூற்றாண்டு காலம் வனைந்தும் இழுத்தும் வலைக்குள் சிக்காத கடல், ஒட்டகங்கள், நெடுவழிப்போக்கர், தீக்காற்று ஓயாமல் பயணித்தும் திசையெங்கும் விரியும் பாலை, வெட்டுவான், பேட்டை, விலங்குகள், கொடுந்தீ, அரிந்தும் எரிந்தும் சாம்பலாகியும் விதைக்குள் உயிர்க்கும் காடு, செங்கால் நாரை, ராட்சதக் கழுகு, கரிச்சான் குருவிகள், ஏகமாய் விரித்துப் பறந்தும் சிறகுகள் சுருங்காதவனம் எனும் ஐம்பூதங்களின் அண்டத்தில் துளி அல்லது துகள் என்ற இவரது முடிவுதான் கவிதைகளை இன்னுமின்னும் அழகுபடுத்தியிருக்கிறது. மேலும் மேலும் புதிதாக்குகின்றது.

**குறிப்பு :** கவிதை மீது தீராக் காதலுடையோர் இத் தொகுப்பிலுள்ள றியாஸ் குரனாவின் பின்னுரையை தயவு செய்து வாசிக்கவும்.



## திருவள்ளுவரின் தேநீர்க்கடை

இ.சு.முரளிதரன்

பற்றீரியா, பங்கசு முதலான நுண்ணங்கிகள் நோயாக்கிகளாக அமைகின்றன. மருத்துவத்துறையில் முகிழ்ந்த அறிகை முறையில் நுண்ணங்கியைக் கொண்டே நுண்ணங்கியை அழிக்கக் கூடிய நுட்பமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஒரு நுண்ணங்கியின் உடலிலிருந்தே, மற்றொரு நுண்ணங்கியை அழிக்கக் கூடிய பதார்த்தமான நுண்ணுயிர் கொல்லி (Antibiotics) தயாரிக்கப்படுகின்றது.

அலெக்ஸ்சாண்டர் பிளேமிங் என்பவரே முதலாவது, நுண்ணுயிர் கொல்லியான பென்சிலின் மருந்தைக் கண்டறிந்தார். பூஞ்சைக் காளான்களில் காணப்பட்ட *penicillium notatum* என்னும் நுண்ணங்கியினால் இன்னொரு நுண்ணங்கியை அழிக்கமுடியுமென நிரூபித்தார். இதன் நீட்சியாகவே நுண்ணங்கிகளைக் கொண்டே நுண்ணங்கிகளை அழிக்கும் நுட்பத்தை அடியொற்றித் தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

திருவள்ளுவர் 678 ஆவது குறட்பாவிலே “ஒரு வினையைக் கொண்டு பிறிதொரு வினையினை நிகழ்த்தல், மதநீர் [illegible]ன்ற யானை ஒன்றினைக் கொண்டே பிறிதொரு யானையைக் கட்டுப்படுத்தல் போன்[illegible]கும்” என்னும் கருத்தினை வெளிப்படுத்துகிறார். யானை ஒன்றினைக் கொண்டு பிறிதொரு யானையை அடக்குகின்ற செல்நெறியில், மருத்துவமானது நுண்ணங்கியைக் கொண்டே பிறிதொரு நுண்ணங்கி[illegible]ய அடக்கியாளும் தடுப்பு மருந்தைக் கண்டறிகின்றது.

**“வினையால் வினையாக்கிக்கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று”**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்பேசா சாட்சிகள்!



ஆர்.பிரகாஷ்

கொரோனாப் பெருந்தொற்று எங்கிருந்து தோன்றியது என்பது தொடர்பாக உலக சுகாதாரஸ்தாபனம்மேற்கொண்ட ஆய்வுகளின் அறிக்கைகள் மெல்லக் கசிந்துள்ளன. ஆனால் அந்த ஆய்வறிக்கைகள் ஒன்றும் புதிதானவற்றை நிறுவவில்லை. சீனா ஏற்கனவே தெரிவித்த கருத்துக்களைத்தான் உலக சுகாதார நிறுவனமும் தன் நிலைப்பாடாக ஒரு சில மாறுதல்களுடன் முன்வைத்துள்ளது.

2019 டிசெம்பரில் கொரோனா சீனாவின் வுகானில் தோற்றம் பெற்றது. 2020 ஜனவரியில் இது ஓர் உலகப் பேரிடராக மாறியது. இதையடுத்து 2020 மார்ச் ஏப்ரலில் ஒட்டுமொத்த உலகமும் இந்தப் பெருந்தொற்றால் முடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. சீனா மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக 'சைனீஸ் வைரஸ்' என்ற பெயரை 'கொவிட் 19' என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தினார் அமெரிக்காவின் அப்போதைய அதிபரான ட்ரம்ப். அத்துடன் நின்றுவிடாமல் 'சீனா திட்டமிட்டு இந்த வைரஸைப் பரப்பியுள்ளது. உலகப் பொருளாதாரத்தைதான் தீர்மானிக்க வேண்டும் என்பதற்காக சீனா மேற்கொண்ட மோசடி இது' என்றும் தெரிவித்தார். கொரோனாப் பெருந்தொற்றுக்கான தோற்றுவாய் என்ன? என்பதைக் கண்டறிய உலக சுகாதார நிறுவனம் சீனா வுக்குள் நுழைய வேண்டும் என்று வலியுறுத்தினார். அந்த அமைப்புக்கான நிதிகளை நிறுத்தினார்.

எனினும் சீனா உலக சுகாதார நிறுவனத்தை தனதெல்லைக்குள் ஆரம்பத்தில் அனுமதிக்கவில்லை. வௌவாலில் இருந்துதான் குறித்த வைரஸ் பரவியது என்பது சீனாவின் கருத்தாக இருந்தது. நீண்ட அழுத்தங்களுக்குப் பின்னர் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் சீனாவின் வுகானுக்குள் நுழைந்தது உலக சுகாதார நிறுவனம். அந்த அமைப்பின் ஆய்வறிக்கைகளின் முடிவுகள் தற்போது மெல்லக் கசிந்துள்ளன. சீனாவின் கருத்து என்னவோ அதையே உலக சுகாதார நிறுவனமும் தனது கருத்தாக முன்வைத்துள்ளது.

கொரோனா ஆய்வகத்தில் உருவானது என்ற குற்றச்சாட்டையும் மனிதர்களுக்குத் திட்டமிட்டுப் பரப்பப்பட்டது என்ற குற்றச்சாட்டையும் உலக சுகாதார நிறுவனம் திட்டவட்டமாக மறுத்துள்ளது. குறித்த வைரஸ் விலங்குகளிடம் இருந்தே மனிதர்களுக்குப் பரவியது என்பதை ஆணித்தரமாக இந்தப் புதிய அறிக்கை எடுத்தியம்புகின்றது. ஆனால் வௌவாலில் இருந்து நேரடியாக மனிதர்களுக்குப் பரவவில்லை என்றதொரு புதிரையும் அது போட்டுள்ளது.

> நீண்ட அழுத்தங்களுக்குப் பின்னர் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் சீனாவின் வுகானுக்குள் நுழைந்தது உலக சுகாதார நிறுவனம். அந்த அமைப்பின் ஆய்வறிக்கைகளின் முடிவுகள் தற்போது மெல்லக் கசிந்துள்ளன.

அப்படியானால் கொரோனா எவ்வாறு மனிதர்களுக்குப் பரவியது? என்ற கேள்வி இங்கே எழுகின்றது. வௌவால், மனிதனுக்கு இடையே பிறிதொரு உயிரினம் கொரோனாக் காவியாக உள்ளது என்கின்றது உலக சுகாதார நிறுவனம். இந்தப் புதிய உயிரினம் வளர்ப்புக் கீரியாக அல்லது பூனையாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

ஆக, புதிதாக உட்புகுத்தப்பட்டுள்ள இந்த இரு விலங்குகள் கொரோனாவின் தோற்றம் பற்றிய தேடலை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளன. சில வேளைகளில் பதிலற்ற சம்பிரதாயபூர்வத் தேடலுக்குரிய தோற்றுவாயாகவும் இந்தப் புதிய அணிச் சேர்க்கைகள் அமையலாம். பழிபோடுவதற்கு வாய்பேசாத் தரப்பொன்று தேவைப்படுகின்றது என்பதற்கு கொரோனாவும் தக்க சான்று.









ஆர்.லயனல்

## ஐ.பி.எல். ஆரம்பம்

அடுத்த மாதம், இந்த மாதம் என்று கடைசியில் ஐ.பி.எல். தொடருக்குரிய வாரத்தில் நாம் நிற்கின்றோம். வழக்கம்போல எண்ணற்ற எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இந்தத் தொடர் ஆரம்பிக்கின்றது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் கடந்த வருடம் பிளேஓவ் செல்லாமல் வெளியேற்றப்பட்டது சென்னை. இதனால் அந்தத் தோல்விக்கு இம்முறை பதிலடி கொடுக்கும் முனைப்பில் சென்னை உள்ளது. ரெய்னாவின் வருகையும் மொயின் அலியின் இணைப்பும் சென்னைக்குப் பலம் சேர்க்கும். மும்பை நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்தில் களமிறங்குகின்றது. வழக்கம்போல் அந்த அணி பலமாகவே உள்ளது. கடந்த வருடத்தைப்போன்று பெரும் சவாலை இந்த வருடமும் மும்பை வழங்கும்.

ஆர்.சி.பி. அணிக்கு மக்ஸ்வெலின் இணைவு பலமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் கடந்த வருடம் பஞ்சாப் அணிக்காக மக்ஸ்வெல் ஒரு சிக்ஸரையேனும் அடிக்கவில்லை. மிகமிக மந்தமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினார். எனவே மக்ஸ்வெல் ஆர்.சி.பி.க்கு இம்முறை எந்தளவு பங்களிப்பை வழங்கப்போகின்றார் என்றதொரு கேள்வி இருக்கத்தான் செய்கின்றது.

அணித்தலைவர் ஸ்ரேயாஸ் காயமடைந்து வெளியேறியமை டெல்லிக்குப் பின்னடைவைக் கொடுத்துள்ளது. பண்ட் டெல்லிக்குத் தலைமை தாங்குகின்றார். பண்ட்டிடம் தலைமை கொடுக்கப்பட்டமைக்கு இருவேறு கருத்துக்களும் இருக்கத்தான் செய்கின்றன.

பஞ்சாப், ராஜஸ்தான், கொல்கத்தா மற்றும் ஹைதராபாத் அணிகள் வழக்கம்போல் மிக அமைதியான முறையில் இருக்கும் இடம் தெரியாமல் இம்முறையும் திட்டங்களை வகுத்து வருகின்றன. தொடர் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகின்றது. பார்க்கலாம் எந்த அணி சாதிக்கப்போகின்றது என்பதை.

"ஆட்டம் ஆரம்பம்"

## ஓடி மறைந்தது ஒரு தசாப்தம்!

2011ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக்கிண்ணத்தின் ஒரு தசாப்த நிறைவுநாள் கடந்த வெள்ளியன்று கொண்டாடப்பட்டுள்ளது.

இந்திய இலங்கை வீரர்களும் ரசிகர்களும் கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன்னர் இடம்பெற்ற அந்த ஒப்பற்ற நினைவுகளை மீண்டும் ஒருதடவை நினைத்துப் பார்த்துள்ளனர். குறிப்பாக டோனியின் இறுதி சிக்சர், அந்த சிக்சரின் பின்னர் சங்கா வெளிப்படுத்திய புன்னகை என்பன அனேகராலும் நினைந்து பாராட்டப்பட்டுள்ளது. சச்சின், சங்கா, கம்பீர், யூசொப் பதான், சேவாக் என பலரும் அந்த நினைவுகளைப் பகிரும் வகையில் தம் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பதிவுசெய்திருந்தனர்.

"அதுவொரு அழகிய நிலாக்காலம்"



## லெஜன்ட்ஸ் கிரிக்கெட்டில் கொரோனா கொத்தணியா?

ஓய்வு பெற்ற முன்னாள் வீரர்களை வைத்து அண்மையில் 'லெஜன்ட்ஸ் றோட் சீரிஸ்' நடத்தப்பட்டிருந்த நிலையில், இந்தத் தொடர் கொரோனா கொத்தணியை உண்டு பண்ணிவிட்டதா? என்ற கலக்கம் தற்போது கிரிக்கெட் ரசிகர்களிடையே ஏற்பட்டுள்ளது.

இந்தத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்திய - இலங்கை அணிகள் மோதின. இந்திய அணி கிண்ணம் வென்றது. இந்திய அணியை வழிநடத்திய சச்சினுக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை கடந்த 7 தினங்களுக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டது. தற்போது அவர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சச்சினுக்குக் கொரோனா உறுதிப்படுத்தப்பட்ட அடுத்த சில தினங்களில் அவருடன் இணைந்து விளையாடிய யூசுப் பதான், இர்பான் பதான் ஆகியோருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து குறித்த தொடரில் கலந்துகொண்ட வீரர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறுதியாட்டத்தில் விளையாடிய இலங்கை வீரர்கள் எவருக்கும் கொரோனா அறிகுறிகள் தென்படவில்லை. எனினும் இரு வாரங்களாலும் கொரோனா உறுதிப்படுத்தப்படலாம் என்பது மருத்துவத்துறையின் கருத்தாக உள்ளமையால் இலங்கை அணியின் வீரர்களும் அச்சத்துடன்தான் உள்ளனர்.

"இதென்னடா லெஜன்ட்ஸுக்கு வந்த சோதனை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
Registered as a Newspaper

ஆரும் குரல் கொடுக்க மறந்தாலும் எப்போதும்
சீறும் மொழியோடு நமக்காய் நீதி கேட்டு— வேரின்
காயாத ஈரமாக கருணை செய்து காத்திட்ட
ஆயராம் இராயப்பு ஜோசப் போல் ஆர் இனி நமக்கு?

ஒட்டுக்குழு சுவாமிகள்

மலை 33: | வள்ளுவர் ஆண்டு : 2051 | பங்குனி 22 | ஞாயிற்றுக்கிழமை (04.04.2021) | சிகரம் : 42





ஆயர் இராயப்பு ஜோசப்பின் மறைவு சொல்லும் செய்தி

# வடக்குக் கிழக்கின் எல்லையை தீர்மானித்த தமிழ்த் திருச்சபை

அ.நிக்ஸன்

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் ஆயர் இராயப்பு ஜோசப் மரணிக்கும் வரையும் அதன் பின்னரான சூழலிலும் தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபையின் பங்களிப்பு முக்கியமானதொன்று என்பதில் மாற்றுக்கருத்தில்லை. சமய அடிப்படையில் வடக்குக் கிழக்குத் தமிழ்ச் சமூகத்துக்குள் சிங்கள ஆட்சியாளர்களினால் உருவாக்க முற்பட்ட பிரித்தாளும் தந்திரங்களை அறிந்து, அதனைப் புறம்தள்ளிச் சமயங்களைக் கடந்து ஈழத்தமிழ்ச் சமூகமாக வடக்குக் கிழக்கில் கத்தோலிக்கத் திருச்சபையும் ஏனைய கிறிஸ்த்தவ சபைகளும் செயற்பட்டிருந்தன.

இன்றுவரைகூட அந்த ஒற்றுமை தொடர்கின்றது. சைவ சமயம் (இந்து சமயம் அல்ல) தமிழர்களின் அடிப்படைப் பண்பாட்டு மரபு என்று தமிழ்க் கத்தோலிக்க மக்கள் ஏற்றுக் கொண்டதொரு பின்புலத்தை உணர்ந்து கொண்ட ஆயர் இராயப்பு யோசப்பின் மறைவையடுத்து, சைவ சமய வரலாற்றை ஆய்வு செய்த அருட்தந்தை மரிய சேவியர் அடிகளாரும் இயற்கையெய்தியமை பெரும் துயரமாகும்.

1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இராயப்பு ஜோசப் மன்னார் மறை மாவட்டத்தின் ஆயராகப் பதவியேற்றபோது இரண்டாவது ஈழப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. போரின் மத்தியிலும் பதவியேற்பு வைபவம் அப்போதைய யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை மற்றும் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் மன்னார் மடு தேவாலயத்தில் நடைபெற்றது. பதவியேற்பின்னர் மக்களுடன் பேசிய ஆயர் இராயப்பு ஜோசப் நிரந்தர அரசியல் தீர்வின் அவசியம் தொடர்பான தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

யாழ். மறை மாவட்டத்துடன் இணைந்திருந்த மன்னார் பிரதேசம் 1981 ஆம் ஆண்டு தனி மறை மாவட்டமாக உருவாக்கப்பட்டதன் நோக்கத்தைச் சரியான முறையில் நெறிப்படுத்தியவர் ஆயர் இராயப்பு ஜோசப். அப்போதைய யாழ். ஆயர் தியோகுப்பிள்ளையின் கடுமையான முயற்சியின் காரணமாகவே மன்னார் தனித் தமிழ் மறைமாவட்டமாக உருவானது.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்களினால் அப்போது கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயராக இருந்த மார்க்கஸ் பெர்னாண்டோ, யாழ்.ஆயர் தியோ குப்பிள்ளையுடன் கடுமையாக முரண்பட்டிருந்தார்.

இதன் பின்புலங்களை தர்க்கரீதியாக உணர்ந்து செயற்பட்டவர்தான் ஆயர் இராயப்பு ஜோசப். இலங்கைத் தீவில் பிரித்தானியரின் ஆட்சியின்போதே கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மறை மாவட்டம் தனித்துச் செயற்பட்டிருந்தது. அப்போது அது முற்று முழுதாகத் தமிழ் மாவட்டமாகவே இருந்தது. 1893 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் திருகோணமலை மறை மாவட்டம் உருவானது. ஆயர் இக்னேசியசு கிளெனி திருகோணமலை மறைமாவட்டத்தின் பெயரை மாற்றினார். அதன்படி, 1967 ஒக்ரோபர் 23 ஆம் திகதி திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டம் எனப் பெயரிடப்பட்டது. 1975 டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி திருகோணமாலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் சில பகுதிகள் பிரிக்கப்பட்டுப் புதிதாக அமைக்கப்பட்ட அநுராதபுரம் மறைமாவட்டத்தில் சேர்க்கப்பட்டன.



இங்கேதான் அப்போது யாழ் .ஆயராக இருந்த தியோகுப்பிள்ளை இராஜதந்திரமாகச் செயற்பட்டு 1981 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டத்தை உருவாக்கினார். தனது கட்டுப்பாட்டில் இருந்த மன்னார் மறை மாவட்டப் பகுதியை தனியான மறைமாவட்டமாக உருவாக்க முற்பட்ட போது ஆயர் தியோகுப்பிள்ளை கடும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தார். அதாவது இன ரீதியாக, தியோகுப்பிள்ளை செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டுக்கள் கொழும்பை மையமாகக் கொண்ட கத்தோலிக்கத் திருச்சபையினால் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனாலும் அது சமயப்

**முள்ளிவாய்க்காலில் நடந்தது தமிழ் இன அழிப்பு என்று 2012 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் பகிரங்கமாகவே கூறியவர் ஆயர் இராஜயப்பு யோசப்.**


07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தும் அறியாமலும்

சுழியன்

# கலப்பு முறையில் மாகாணத் தேர்தல்?




இந்த வருடத்துக்குள் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக தேர்தலை நடத்துவதற்கு சட்டரீதியாக தடையாக உள்ள விடயங்களை தகர்ப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

மறுபுறத்தில் மாகாணசபைத் தேர்தலுக்கு , பௌத்த தேரர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர். அரசுக்கு ஆதரவு வழங்கும் கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதனால் மாகாணசபைத் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவருவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இதன்படி தொகுதி (70 வீதம்) மற்றும் விகிதாசாரம் (30 வீதம்) எனக் கலப்பு முறையில் தேர்தலை நடத்துவதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், போனஸ் ஆசனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவுள்ளது. இதுவரை மாகாணமொன்றில் கூடுதல் வாக்குகளைப்பெறும் கட்சிக்கு 2 போனஸ் ஆசனங்கள் வழங்கப்படும். புதிய யோசனையின் பிரகாரம் மாவட்டமொன்றுக்கு இரு ஆசனங்கள் வழங்கப்படவுள்ளன. மேல் மாகாணத்தில் மூன்று மாவட்டங்கள் உள்ளன. அப்படியானால் 6 போனஸ் ஆசனங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு தேர்தலுக்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதால் அரசியல் கட்சிகளும் அது தொடர்பில் கழுகுப்பார்வையை செலுத்தி பூர்வாங்கப் பணிகளை முன்னெடுத்துவருகின்றன. தற்போதைய நிலைவரப்படி மாகாணசபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவதற்கு முக்கியமான சில கட்சிகள் ஆலோசனை நடத்திவருகின்றன.

# அதிரடிக்கு தயாராகும் மங்கள!

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சம்பந்தமாக இன்றளவிலும் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. ஜெனிவாவில் 2015 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங்கியமை பாரதூரமான காட்டிக்கொடுப்பாகும் என தற்போதைய அரசும், தேசிய வாத அமைப்புகளும் குற்றஞ்சாட்டுவதுடன், அப்போது வெளிவிவகார அமைச்சராக செயற்பட்ட மங்கள சமரவீரமீதும் சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்துவருகின்றனர். இந்நிலையில் இவற்றுக்கு பதிலடி கொடுப்பதற்கும், உண்மையிலேயே என்ன நடந்தது என்பதை விபரிக்கவும் மங்கள சமரவீர கடந்த புதன்கிழமை விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினார்.



இணை அனுசரணை வழங்கியதாலேயே இலங்கைமீதான சர்வதேச விசாரணை தடுக்கப்பட்டது எனவும், குறித்த பிரேரணையில் இருந்த உள்ளடக்கங்களை மைத்திரிபால சிறிசேன அறிந்தே வைத்திருந்தார் எனவும் மங்கள சமரவீர குறிப்பிட்டார். அத்துடன், ஜெனிவாவில் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் அரசுக்கு பல வழிகளிலும் நெருக்கடியாகவே அமையும் என்ற எச்சரிக்கையையும் விடுத்தார்.

தெற்கு அரசியலில் திடீர் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஒருகால கட்டத்தில் பேர்போன புகழ்பெற்ற மங்கள சமரவீர, சந்திரிக்கா அம்மையாருடன் இணைந்து முன்னெடுக்கவுள்ள புதிய பயணம் சிலரை கிலிகொள்ள வைத்துள்ளது எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

# கறுப்பாடுகளுக்கு எச்சரிக்கை



மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் கடந்த 30 ஆம் திகதி கண்டிக்குப் பயணம் மேற்கொண்டு தலதாமாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசிபெற்றனர். சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

மேற்படி சந்திப்புகளுக்கு பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டிருந்த மைத்திரிபால சிறிசேன, எதிர்காலத்தில் சுதந்திரக்கட்சி ஆட்சியமைப்பதே தனது எதிர்பார்ப்பு என குறிப்பிட்டு அதற்கேற்ற வகையில் கட்சி கட்டியெழுப்பப்படும் எனவும் அறிவித்தார்.

மைத்திரியின் இந்த அறிவிப்பானது மொட்டு கட்சி உறுப்பினர்கள் சிலரை சினம்கொள்ள வைத்துள்ளது. இது தொடர்பில் ஆளுங்கட்சியின் உயர் மட்ட தலைவர்களிடமும் அது தொடர்பில் முறையிட்டுள்ளனர். இதற்கிடையில் கண்டிப் பயணத்துக்கு முன்னர் கட்சி சகாக்களுடன் மைத்திரிபால சிறிசேன, மந்திராலோசனை நடத்தியுள்ளார். எப்படியாவது சுதந்திரக்கட்சியை மீட்டெடுக்க வேண்டும் எனவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அதேபோல கட்சியில் அங்கம் வகித்துக்கொண்டு மொட்டு கட்சிக்கு சார்பாக செயற்படுபவர்கள் வெளியேறினால்கூட பரவாயில்லை, நாம் எமது பயணத்தில் தெளிவாக இருக்க வேண்டும் என்று கடியில் உள்ள கறுப்பாடுகளையும் அவர் எச்சரித்துள்ளார்.

# கிரியெல்லவின் மகள் களத்தில்




மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவின் மகளான ஷாமி கிரியெல்ல போட்டியிடவுள்ளார் என தெரியவருகின்றது.

மத்திய மாகாணசபைக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அவர் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்பத்தை அவர் ஏற்கனவே வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேனவின் மகள் வடமத்திய மாகாணத்தில் போட்டியிடுவார் என முன்னதாக தகவல் வெளியிடப்பட்டிருந்தாலும் தற்போது அது கேள்விக்குறியாகியுள்ளது.

தேசிய மட்டத்திலான தேர்தலொன்றில் போட்டியிடவே அவர் உத்தேசித்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.



# நடவடிக்கை விரைவில்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் அங்கம் வகிக்கும் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இது தொடர்பான உள்ளக கலந்துரையாடல் தற்போது இடம்பெற்றுவருகின்றது. கட்சி தலைமைக்கு எதிராக கருத்து வெளியிட்டமை, கூட்டு பொறுப்பைமீறும் விதத்தில் இரகசியத் தகவல்களை வெளியிட்டமை உள்ளிட்ட விடயங்களை அடிப்படை யாகக் கொண்டே இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. புத்தாண்டுக்கு முன்னர் அல்லது பின்னர் கட்சியின் உயர்பீடம் கூடவுள்ளது. அதன்போது இது பற்றி கலந்துரையாடி இறுதி முடிவெடுக்கப்படலாம்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் எம்.பிக்கள் வரிசையில் இவரும் அங்கம் வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும் ஆட்டுக்குட்டியும்

சிறுகதை

O தபின்



ஆட்டுக் குட்டியள் ரண்டும் ஒண்டையொண்டு தள்ளிக் கொண்டு தாயாட்டின்ரை மடியில பால் குடிக்கிறதைப் பாக்கேக்க ஒரு சந்தோசமாகத்தான் கிடக்குது. எப்பவும் மணி (கிடாய்க்குட்டி) வலப்பக்க மடியிலையும் செல்வி (மறிக்குட்டி) இடப்பக்க மடியிலையும்தான் பால் குடிக்குங்கள். ஒருநாள் கூட அதுகள் மடி மாறிக் குடிச்சதை நான் காணேல்லை. நான் ஆடுகளைப் பிராக்குப் பார்த்துக் கொண்டு நிக்கேக்க, வாசல்ல ஆரோ வாற மாதிரிக் கிடந்திது. எட்டிப் பாத்தன்.

அம்மாதான்!

வேர்த்து, விறுவிறுத்து, கையில உடுப்பு 'பாக்கோட' வாறவாவைப் பாக்கப் பாவமாத்தான் கிடக்குது. ''பாக்கை'' ஒரு பக்கமாப் போட்டிட்டு அம்மா தொப்பெண்டு ஈசிச் சேருக்குள்ள சாஞ்சிட்டா.

கழுகுக்கு மூக்கில வேர்க்கிற மாதிரி அம்மா உடுப்போட வந்தது பக்கத்து வீட்டில விளையாடிக் கொண்டு நிண்ட செந்தூருக்கு எவ்வெண்டுதான் தெரிஞ்சுதோ, தெரியேல்லை. விளையாடின களைப்போட ஓடி வந்து உடுப்பு 'பாக்கை' எடுத்து பிய்ச்சு அதுக்குள்ள என்னென்ன கிடக்குதெண்டு நோண்டத் துடங்கிட்டான். அம்மாவின்ரை வெள்ளைச்சீலை ரண்டு, ரவுசர்த்துணி ரண்டு, சேர்ட், பிளவுஸ் அண்டஸ்கேர்ட் எண்டு உள்ளுக்க இருந்ததை எல்லாம் எடுத்து வெளியில போட்டான். நான் என்ரை சட்டையையும் ஸ்கேர்ட்டையும் எடுத்துக் கொண்டு அறைக்குள் போய் அளவு சரியாய் இருக்குதோ எண்டு போட்டுப் பார்க்கத் துடங்கேக்க, அம்மாவும் தம்பியும் கதைக்கிறது என்ரை காதில விழுந்தது.

"எனேய் அம்மா! இந்த இரண்டு ரவுசர்த் துணியையும் கொண்டுபோய் ரெயிலரிட்டக் குடுத்திட்டு வாரட்டே?"

"உனக்கு எல்லாத்துக்கும் அவசரம். ரெயிலரிட்ட தைக்கக் குடுக்கேக்க அளவைச் சரியாய் குடு .பேந்து போனமுறை மாதிரி அங்க இழுக்குது இஞ்சை இழுக்குது எண்டு என்ரை உயிரை வாங்காதை"

ரண்டு பேரும் கதைச்சு முடிக்கிறதுக்குள்ள நான் சட்டையையும் பாவாடையையும் போட்டுக் கொண்டு வெளியால வந்தன். அப்ப அம்மாவுக்கு என்னத்துக்கு எண்டு தெரியாமல் ரண்டு கண்ணும் கலங்கிப் போட்டுது.

"எனேய் இப்ப என்ன நடந்திட்டுது? ஏனணை ,ஏன் இப்படி அழுகிறாய்?"

"ஒண்டுமில்லையடி பிள்ளை"

எண்டாலும் அம்மான்ர மனசுக்குள்ள இன்னமும் அந்தக் கவலை இருக்கிற மாதிரி எனக்குப் பட்டுது. எப்பிடித்தான் கெஞ்சிக் கேட்டாலும் எங்கட அம்மாட்டயிருந்து ஒரு விசயமும் அறியேலாது. அம்மா நழுவி குசினிப் பக்கம் போறதைப் பாத்தும் பார்க்காத மாதிரி நான் கண்ணாடிக்கு முன்னால் நிண்டு கொண்டு சட்டையை வடிவு பாத்தன். கொஞ்ச நேரம் சென்றிருக்கும் அம்மா இறுக்கி அழுகிற சத்தம் கேட்டுது. ஜன்னலுக்குள்ளால மெல்ல எட்டிப் பாத்தன். அம்மா விக்கி விக்கி அழுது கொண்டிருந்தா. அம்மா ஒரு அஞ்சு வருசமா இப்படித்தான். ஒரு நல்ல நாள் பெரிய நாள் எண்டால் காணும். உடனே குசினிக்க போய் அழத் தொடங்கிவிடுவா. அம்மாவை அவவின்ர பாட்டில் அழ விட்டுவிட்டு நான் முத்தத்திலே காயப்போட்ட புழுக் கொடியலை எடுத்துக் கொண்டு வந்து , உள்ளுக்குள்ள வைச்சுப் போட்டு நிமிரேக்க அண்ணையின்ர படம் கண்ணிலை பட்டுது.

"அண்ணை!"

அவன் இப்ப எங்க இருக்கிறான்?
களுத்துறையிலயா?
மகசினிலையா?
இல்லாட்டிச் சிலவேளை....??

சீச்சீ! அப்படியொண்டுமிருக்காது. அண்ணாவுக்கொண்டும் நடந்திருக்காது.

அம்மா ஒரு மாதிரி அழுகையை நிப்பாட்டிப் போட்டு கிணத்தடிக்குப் போய் முகம் கழுவிப் போட்டு வந்து றோட்டை உத்துப் பாத்துக் கொண்டு வாசலில் இருந்தா.

அவவைப் பார்க்க எனக்குப் பாவமாய் கிடந்திச்சு. கிட்டப்போய் அவாவின்ரை தோளில கையை வைச்சன். என்ன? எண்டு கேக்கிற மாதிரி அவா என்னைத் திரும்பிப் பார்த்தா!

"அம்மா ! அழாதையணை, எண்டைக்கோ ஒரு நாளைக்கு அண்ணை கட்டாயம் திரும்பி வருவான்! "

அம்மா ஒண்டும் சொல்லேலை. என்னைக் கொஞ்ச நேரம் உத்துப் பார்த்துக் கொண்டு நிண்டா. பேந்து தன்ரை பாட்டில

" ஓ! அவன் வருவான். அம்மாவைத் தேடி வருவான்.." எண்டு முணுமுணுத்தா.

நான் இனியும் அண்ணையைப்பற்றி ஏதும் கதைச்சா அம்மா அழுது போடுவா எண்டு சொல்லாமலே எனக்கு தெரிஞ்சுது.

போசாமல் அங்காலிப்பக்கமாப் பார்க்கத் தொடங்கினன்.

திரும்பவும் ஆட்டுக் குட்டியள் பால் குடிக்கிறது கண்ணிலை பட்டுது.

அம்மாவோடை அண்ணையைப் பற்றிக் கதைக்காமல் இருக்கிறதுக்காண்டி கொஞ்ச நேரம் அதுகளைப் பிராக்குப் பார்த்துக் கொண்டிருந்தன்.

தாயாடு வரண்டு போன நாக்காலையும் முகத்தாலையும் குட்டியளின்ர முகத்தோட தேய்ச்சு தேய்ச்சு அதுகளுக்கு தன்ரை அன்பைக் காட்டிக் கொண்டிருந்திச்சு. இப்பவும் மணி வலப்பக்க மடியிலையும் செல்வி இடப்பக்க மடியிலையும் தான் பால் குடிச்சுக் கொண்டிருக்கினம்.

எப்படி இதுகள் ரண்டும் இப்பிடி வலப்பக்கம் உனக்கு, இடப்பக்கம் எனக்கு எண்டு பிரிச்சு வைச்சுக் குடிக்குதுகள்? அப்படிப் பிரிச்சுப் பாக்கிறதைத்தானே ஆறாவது அறிவு எண்டு சொல்லுகினம்.

அப்படியெண்டால் ஆடுகளுக்கும் ஆறறிவு இருக்குதோ ? இப்படி நான் கண்டபடி யோசிச்சுக் கொண்டிருக்கேக்க தான்

நான் கனவிலையும் நினைச்சுப் பாக்காத அது நடந்தது. செல்வி தாயிட்ட பாலைக் குடிச்சிட்டு ஓட

செல்வியைத் துரத்திக் கொண்டு சந்தோசத்தில் பின்னால மணி ஓட

செல்வி இன்னும் இறுக்கி ஓட

இதுவும் துள்ளிக் கலைக்க

அது கிணத்துக் கட்டைத் தாண்டிப் பாய மணியும் பாய

"டமார்" இடையில் கட்டுத் தடுக்கி மணி "பொத்" எண்டு கிணத்துக்குள்ள விழுந்துட்டுது.!

> "எனேய் இப்ப என்ன நடந்திட்டுது? எனணை , என் இப்படி அழுகிறாய்?" "ஒண்டுமில்லையடி பிள்ளை" எண்டாலும் அம்மான்ர மனசுக்குள்ள இன்னமும் அந்தக் கவலை இருக்கிற மாதிரி எனக்குப் பட்டுது.



"ஐயோ!"

கத்திக் கொண்டு கிணத்தடிக்கு ஓடினன். எனக்குப் பின்னால அம்மாவும் ஆத்துப் பதைச்சுக் கொண்டு ஓடி வந்தா. கிணத்துக்குள்ள மணி கொஞ்சநேரம் நீந்த வெளிக்கிட்டு பேந்து ஏலாமல் போக தண்ணிக்குள்ள கீழ போறதும் பேந்து மேல வாறதுமாய் இருந்திச்சுது. எனக்கெண்டால் ஒரே அந்தமாப் போட்டுது. என்னெண்டு மணியைக் காப்பாத்துறதெண்டு தெரியேலை. துலாவை நல்லாய்த் தாட்டு, மணி ஏறி வரட்டுமெண்டு வாளியை அதுக்கு கிட்ட விட்டன். ஆனால் தண்ணிக்கை கனநேரம் நிண்டதால அதின்ர உடம்பு விறைச்சுப் போட்டுது போல. அது வாளிக்கை ஏறவேயில்லை. இந்த நேரம் பாத்து செந்தூரும் ரெயிலர்கடைக்கு போட்டான். இல்லாட்டிக்கு இத்தறிக்கு கிணத்துக்க குதிச்சு மணியைத் தூக்கி யிருப்பான்.

கொஞ்சம் கொஞ்சமா மணி சோர்ந்து போற மாதிரி தெரியுது!

"ஐயோ ! அம்மா அது...... கிணத்துக்கை தாழுது! "

அப்பாடா! பிறகு ஒரு மாதிரி தன்னால ஏலு மட்டும் காலை அடிச்சு அடிச்சு மேலே வரப் பாக்குது. பேந்து கிணத்துக் கட்டில கத்திக் கொண்டு நிண்ட தன்ர தாயையும், செல்வியையும், அம்மாவையும் என்னையும் வடிவாய்ப் பார்த்திட்டு ¡ 'ப்ளுக்'! மணி தண்ணிக்குள்ள தாண்டு கீழே போட்டுது. திரும்ப வரும் என்று பார்த்தன் .

வரேலை!

"மம் மேய்யங் ... ...... மம் மேய்யங் ... ... ... " மணிக்குட்டி சாக தாயாடு கத்திக் கொண்டே கிணத்தைச் சுத்திச் சுத்தி வந்து கொண்டிருந் திச்சுது. எனக்கு அதைப் பாக்க "டப்' பெண்டு அம்மாவின்ர ஞாபகந்தான் வந்திது. அவாவும் இப்படித்தானே.. ..!

அண்ணாவை அவங்கள் பிடிச்சுக் கொண்டு போகேக்கை கத்தியழுதவா! அம்மாக்கும் தாயாடு கத்துறதைப் பார்த்தவுடன அண்ணையின்ர ஞாபகம் வந்துட்டுது போல கிடக்குது! அவவும் அழுது கொண்டு தாயாட்டின் முதுகில,

மெல்லத் தடவி விட்டா. அது அவவின்ர முகத்தோட தன்ரமுகத்தை தேய்ச்சு தேய்ச்சு இன்னமும் இறுக்கி கத்த தொடங்கி விட்டுது.

அதுக்குள்ள செந்தூரும் வந்திட்டான்.

"என்னணையக்கா! எல்லாரும் கிணத்தடியில நிண்டு ஒப்பாரி வைக்கிறியள்?"

" மணி கிணத்துக்கை தவறி விழுந்துட்டுதடா"

"மணியோ? கிணத்துக்கையோ ?"

'அவ்வளவுதான்'!

கிணத்துக்கை செந்தூர் குதிச்சிட்டான். கொஞ்ச நேரத்தால துலாக் கொடியில் மணியைக் கட்டி ஒரு மாதிரி மேலே கொண்டு வந்திட்டான். மணியைக் கண்டவுடன் தாயாடும் செல்வியும் ஓடிவந்து அதை மூசி மூசி மணந்து பாத்திட்டு பேந்து திரும்பவும் பழையபடி கத்தத் தொடங்கிட்டுதுகள். மணி செத்துப் போச்செண்டு எனக்கு விளங்கிட்டுது. நானும் அழத் தொடங்கிட்டன்.

◘ ◘ ◘ ◘

மணி செத்துப்போய் மூண்டாம் நாள் பின்னேரம். இஞ்சி தின்ட குரங்கு மாதிரி ஒரு மாதிரியாய் முகத்தைக் வைச்சுக் கொண்டு செந்தூர் எனக்குக் கிட்ட வந்து நிண்டான். என்னவோ ஒரு பிழை செய்து போட்டானெண்டு வடிவாய் விளங்கிட்டுது.

"என்னடா?"

"ஒண்டுமில்லையக்கா!"

சொல்லிக்கொண்டே, ஒளிச்சு வைச்சிருந்த தன்ரை ஜீன்ஸை எனக்கு முன்னால நீட்டினான். ஜீன்சின் பின் பக்கம் "எல்" வடிவில் கிழிந்து தொங்கியது.

"ஏனடா இப்படிக் கிழிஞ்சது?"

"அது வந்தக்கா . .... ஜீன்ஸை ஆணியில் கொழுவியிருந்தனான் . இண்டைக்கு ரூபன் மாஸ்ரரின்ரை கலியாண வீட்டு ரிசப்சனுக்கு போறதுக்காண்டி அவசரத்தில எடுக்கேக்க ஆணியில் கொழுவுப்பட்டு....."

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பதுங்கியிருக்கும் அரக்கர்கள்

க. சுவாமிநாதன்
பொறுப்பாசிரியர்,சுகாதாரக் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

முன்னர் அடிக்கடி பத்திரிகைகளில் 'மிதிவெடி வெடித்து ஒருவர் கால் இழப்பு' என்றோ, 'இனம் தெரியாத பொருளை எடுத்து விளையாடிய சிறுவன் பலி' என்றோ செய்திகள் வரும். ஆனால் இப்போது பரவலாக எங்கள் மண்ணில் பதுங்கியிருந்த அரக்கர்களான வெடிபொருள்கள் பெருமளவில் அகற்றப்பட்டு விட்டதனால், அத்தகைய துர்ச்செய்திகள் மெல்ல மெல்ல இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலையில் இன்றைய நாள் எமக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இன்றுத்தான் ( ஏப்ரல் 4 ஆம் திகதி ) சர்வதேச நிலக் கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வு தினம்.

நிலக்கண்ணிவெடி தொடர்பான அபாயத்தில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதன் மூலம் உற்பத்தியைத் தடுக்கவும், விநியோகம், விற்பனை, நிலக்கண்ணிவெடிகளைப் புதைத்தல் போன்றவற்றைத் தடுக்கவுமான விழிப்புணர்வை வலியுறுத்தும் விதத்தில் இத்தினம் முக்கியத்துவம் பெறுகின்றது. பல்வேறு காரணங்களுக்காக உள்நாட்டிலும், நாட்டின் எல்லைப்புறப் பகுதியிலும் வெடிபொருட்கள் புதைக்கப்படு கின்றன. யுத்தத்தின் போது ஆயுதம் தாங்கிய நபர்கள் ஆயுதம் தாங்கிய மற்றொரு தரப்பினரை எதிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் வெடிபொருள்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அவை முழுமையாக அகற்ற முடியாது பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றினால் அதிகளவில் சிறுவர்களே பாதிக்கப்படுகின்றனர். இதற்கு பல காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன.





### முழுதாக அகற்றுவது கடினமே

பெரும்பாலான நாடுகளில் யுத்தத்தின் போது புதைக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் வெடிபொருட்களை எங்கே எங்கே புதைத்தனர், அவை எங்கே காணப்படுகின்றன என அவர்கள் முறையாக ஆவணங்கள்,பட வரைபு பேணுவது குறைவு. அப்படி பட வரைபு இருப்பினும் அவை துல்லியமாக குறித்த இடத்தில் காணப்படாது போகலாம். பல்வேறு காரணங்களினால் புதைக்கப்பட்ட அல்லது காணப்படும் வெடிபொருள்கள் மனித செயற்பாட்டினாலும், மோப்ப நாய்களின் துணை கொண்டு, நவீன தொழிநுட்ப சாதனங்களைக் கொண்டும் வெடிபொருட்கள் அகற்றப்படுகின்றன. எப்படி எவ்வாறு அகற்றும் போது குறித்த பிரதேசத்தில் வெடிபொருள்கள் இல்லை என 100 சதவீதம் ஒருவரினால் உறுதிப்படுத்திக் கூறமுடியாது . ஏனெனில் யுத்தத்தின் போது புதைக்கப்ப டும் வெடிபொருட்கள் சராசரியாக நிலமேற்பரப்பில் இருந்து 15 செ.மீ வரை (சுமார் அரை அடி) வரையே இருக்கும் என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே மீட்புப்பணிகள் இடம்பெறுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களினால் வெள்ளப்பெருக்கு, குழி உருவாதல் காரணமாக அவை குறித்த பகுதியை விட கூடிய ஆழத்துக்கு சென்றுவிடும். இதனால் வெடிபொருள் உள்ளது என கண்டறியவே சில சந்தர்ப்பத்தில் இயலாமல் போய்விடும். பின்பு நிலத்தை உழவு இயந்திரம் கொண்டு உழும் போதோ அல்லது குழி தோண்டும் போது அவை கண்டுபிடிக்கப்படலாம் அல்லது வெடிக்கலாம். இவை தனிநபர் எதிர்ப்பு மிதிவெடிகள், வாகனங்களை இலக்கு வைக்கும் வெடிபொருள், அமுக்க வெடி அல்லது வாகன நிலக்கண்ணிவெடி என அழைக்கப்படுகின்றன.

### காலம் கடந்தும் காத்திருக்கும்

இவைதவிர தரைப்பகுதியில் இருந்து சுடுகலன்கள், ஆகாய போர் கலங்களினாலும் போடப்படும். அதே போல் கடல் பிராந்தியத்தில் பயன்படுத்தப்படும் கடல்கலங்களில் இருந்து ஏவப்படும் வெடிபொருட்கள், கடல்கண்ணிகள் வெடிக்காது தரையில் வீழ்ந்து அவை அசைவு, அதிர்வு காரணமாக வெடிக்கத்தக்க நிலை ஏற்படும் போது வெடிக்கிறது. உரிய காலத்தின் பின்பும் வெடிக்கின்றன. இவை பல தசாப்தங்களுக்கு தமது கோரச் செயற்பாட்டை நிறுத்தாது விழிப்புடன் உயிர் குடிக்கக் காத்திருக்கும் குறித்த வெடிபொருள் ஒன்றின் விலை உதாரணமாக பத்து டொலர் எனில் அவை நிலத்தில் இருந்து அவ் ஒரு வெடிபொருளை அப்புறப்படுத்த நூறு டொலர் செலவிடப்படும் என அறிக்கைகளில் குறிப்பிடப்படுகின்றது.

குண்டு மழை பொழிந்த எம்தேசத்தில் இதன் பாதிப்பை வடக்கு, கிழக்கு மக்கள் அதிகளவில் அனுபவித்தவர்கள், அனுபவித்து வருகின்றனர்.

2009 ஆம் ஆண்டுடன் யுத்தம் நிறைவடைந்து ஒரு தசாப்தம் ஆகிவிட்ட போதும் நிலத்தில் புதையுண்ட வெடிபொருள், மர்மப் பொருட்கள் மக்களின் அன்றாட செயற்பாட்டில் தனது அச்சுறுத்தல் செயற்பாட்டை வெளிப்படுத்தியவாறு உள்ளது.

ஏன் இன்றுகூட உலகமகா யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட வெடிபொருள்கள் வெடிக்கும் நிலையில் மீட்கப்படுவது குறிப்பி டத்தக்கது.

### பொறுப்போடு செயலாற்றுக

இன்று வெடிபொருள்களின் அபாயகரத் தன்மையைக் கருத்திற்கொண்டு அப்பாவி மக்களைப் பாதுகாக்க பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்னின்று செயற்படுவதை எம்மால் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு விழிப்புணர்வு சுவரொட்டிகள், வீதி நாடகம், கூத்துக்கள், சித்திரப் போட்டிகள் நடாத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. நிலக்கண்ணிவெடிகளுக்கு எதிராக செயற்படும் ஒப்பந்தத்தில் உலகின் பல முக்கிய நாடுகள் கையெழுத்திடாமல் இருப்பது பெரும் வேதனைக்குரிய விடயமாகும். 2021 ஆம் ஆண்டின் தொனிப்பொருளாக Persevernace, partnersiup and progress" அதாவது தொடர்முயற்சி பங்காண்மை மற்றும் முன்னேற்றம்" என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை எதிர்கொண்ட சவால்கள், எதிர்நோக்கப்போகும் சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என ஆராய்ந்து பொறுப்புடன் செயற்படவேண்டியது அவசியமாகிறது.

### விழிப்புணர்வு பெற்றும்....

வெடிபொருள் விழிப்புணர்வு பெற்றவர்களும் தவறுவிடும் துன்பியல் சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. வெடிபொருள்கள், மர்மப்பொருள்கள் தொடர்பான விழிப்புணர்வு நன்கு பெற்ற பலர் விழிப்புணர்வு இன்றி செயற்பட்டு பாதிப்படைந்த வரலாறும் நிறைய நடைபெற்ற சம்பவங்கள் உள்ளன. எமது பகுதியில் மலசலகூடக் குழியின் கொங்கிறீற் மூடியின் மீது காணப்பட்ட மர்மப் பொருளைக் கையாண்டவரின் காது சோனை துண்டாடப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. இதில் பாதிக்கப்பட்டவர் விழிப்புணர்வு செயற்பாட்டில் நல்ல ஆர்வத்தோடு பங்குபற்றியவர். அப்போது குறித்த நபரிடம் தகவல் திரட்டச் சென்ற அரச சார்பற்ற மிதிவெடி விழிப்புணர்வு செயற்பாட்டில் ஈடுபட்ட அதிகாரி அதிர்ச்சியடைந்தார். ஏன் தம்பி என்ன நடந்தது என வினாவிய போது அவர் "அந்தப்பொருள் வெடிக்காது என்று நினைத்தேன்" என்று சொன்னார்.

அப்போது தம்பி ஏன் இடது விரலால் காதைப்பொத்தி வலது கையை உயர்த்தி அமத்தினீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர் குறிப்பிட்டார் தற்செயலாக வெடித்தால்" என்று குறிப்பிட்டார்.

அப்போது அவர் நீங்கள் விழிப்புணர்வு பெற்ற பின் இவ்வாறு செய்தது முறையா எனக் கேட்க தலையை சரித்தவாறு பிழை என்று மௌனமாக நின்றார். இவ்வாறான பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

### அதிகளவில் வெடிபொருள்கள் காணக்கூடிய இடங்கள்

யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களில் பரவலாகக் காணப்படும்.

1. பதுங்குகுழிகள் (பங்கர்) அமைந்திருந்த பகுதி
2. காவலரண்கள் அமைந்திருந்த பகுதி
3. படைமுகாம்கள் அமைந்திருந்த பகுதிகள்
4. மண் அணை (பண்ட்) போடப்பட்ட பகுதிகள்
5. இராணுவ முட்கம்பி வேலிகள் போடப்பட்ட பகுதிகள்
6. யுத்தம் நடைபெற்ற பிரதேசத்தில் பாரிய மரத்தின் அடிப்பகுதி
7. யுத்தம் நடைபெற்ற பிரதேசத்தில் கிணற்றடி, மலசலகூடப் பகுதி
8. பழமரங்கள், தென்னை மரம், மரப்பொந்துகள்
9. குளம், கடல் பகுதியில் இறங்கக்கூடிய பகுதியில் புதைக்கப்பட்டிருக்கும்
10. புற்கள், புதர் நிறைந்த பகுதி
11. அபாய எச்சரிக்கை விளம்பரப் பலகை போடப்பட்ட இடங்கள்

### வெடிபொருள்களைக் கண்டால் நாம் என்ன செய்ய வேண்டும்?

நாம் செல்லும் இடத்தில் மர்மப்பொருளைக் (வெடிபொருளை) கண்டால் என்ன செய்ய வேண்டும்? உடனே குறித்த இடத்திலே நில்லுங்கள். சற்று சிந்தியுங்கள்.

அந்த மர்மப்பொருளை அடையாளம் காணக்கூடியதாக எம்மிடம் அல்லது சூழலில் இருக்கும் பொருளைக் கொண்டு அடையாளப்படுத்துங்கள் (பொருத்தமான முறையில்). பெரிய சத்தத்தில் கூப்பிட்டு பெரியோருக்குத் தெரியப்படுத்தி அடையாளப்படுத்துங்கள்.

நாம் சென்ற பாதச்சுவடு வழியே மீண்டும் திரும்புதல். குறித்த பொருள் தொடர்பாக பெற்றோர்/ கிராம சேவகர்/ பொலிஸார்/ இராணுவத்தினருக்கு உடனடியாகத் தெரியப்படுத்துங்கள். குறித்த பொருளுக்கு அண்மையில் சிறுவர்கள், விலங்குகள், வாகனங்கள், மனித நடமாட்டம் இடம்பெறுவதனைத் தவிர்த்தல். குறித்த சம்பவம் தொடர்பாக ஏனையவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும்....

(தொடர்ச்சி)

"சரி ! அப்படியெண்டால் மற்ற ஜீன்ஸைப் போட்டுக் கொண்டு போவன்"

"மற்ற 'ஜீன்ஸை ' நேற்றுத்தான் லோன்றியில குடுத்த னான் .

அண்டைக்கு அம்மா வாங்கிக் கொண்டு வந்த துணியையும் ரெயிலர் இன்னும் தைக்கேல்லையாம். இல்லாட்டி அதையாவது போட்டுக் கொண்டு போகலாம்"

"இப்ப என்னெண்டா ரிசப்சனுக்கு போகப்போறாய்?"

"அதுதானக்கா எனக்கும் தெரியேல்லை "

அவனைப் பார்க்கப் பாவமாய் கிடந்திது. என்ன செய்யிறதெண்டு ஒரு நிமிசம் யோசிச்சன். என்ரை கஷ்ட காலத்துக்கு அப்பதான் எனக்கு அந்த யோசனை வந்தது.

"செந்துார் ! அம்மா எங்களுக்கு உடுப்பெடுக்கேக்க அண்ணைக்கும் சேர்த்து எடுத்து அலுமாரிக்குள்ள வைச்சிருக்கிறாவெல்லோ. அதில் ஒரு ஜீன்ஸை நைசாய் எடுத்து தாறன். நீ இண்டைக்கு மட்டும் அம்மாவு க்கு தெரியாமல் போட்டுக் கொண்டு போட்டு திருப்பிக் கொண்டுவந்து வைச்சுப்போடு!"

என்ரை யோசினைக்கு "ஓ"மெண்டு செந்தூர் தலையாட்டினான்.

பிறகு செந்தூர் அலுமாரித் துறப்பை வீடு முழுக்க தடவி குசினிக்க கிடந்து எடுத்துக் கொண்டு வந்து என்னட்டை தந்தான். நான் அம்மா எங்க எண்டு நோட்டமிட்டன். கிணத்தடியில் அம்மா உடுப்புத் தோய்ச்சுக் கொண்டு நிக்கிறது எனக்கு கிறிலுக்குள்ளால தெரிஞ்சுது . எனக்கு நெஞ்சு படபடவெண்டு அடிச்சுது. 'நான் அலுமாரியைத் திறந்து அண்ணைக்கெண்டு அவா சேர்த்து வைச்சிருக்கின்ற உடுப்பை எடுத்தனான் எண்டு தெரிஞ்சால்.. பேந்து மனிசி என்னைச் "சிப்பிலி" ஆட்டிப் போடும்'

இதுதான் சரியான நேரமெண்டிட்டு சாமியறைக்க போய் துறப்பைப் போட்டு அலுமாரியைத் திறந்தன்.

அந்த அலுமாரிக்குள்ள "என்லார்ஜ்" பண்ணின பெரிய படத்தில அண்ணை சிரிச்சுக் கொண்டு இருந்தான். அவன்ரை படத்துக்கு கீழ சேர்ட்டுகளும், ரவுசர்களும் அவனுக்குப் பிடிச்ச பலகார பைக் கற்றுக்களும், அவன்ரை சங்கிலி, மோதிரம் மணிக்கூடு எண்டு ஊரிப்பட்ட சாமான்கள்.. ... ... !

எனக்கு ஒரு பக்கம் அண்ணையை நினைச்சு அழுகையும், மற்றப்பக்கம் அம்மா இப்பிடி காசைக்கொட்டி இதுகளை வாங்கி வீணாப்பூட்டி வைச்சு அநியாயமாக்கிறதைப் பாத்து ஆத்திரமும் வந்தது.

"ஏனடி அலுமாரியைத் திறந் தனீ? "

எனக்குப்பின்னால அம்மாவின்ர ஆத்திரக் குரல். பயத்தோடதிரும்பினன். அம்மாவைப் பாக்க எனக்குப் பத்திரகாளியின்ர ஞாபகம் வந்தது.

"அது வந்தணை உவன் செந்துார்தான் ஜீன்ஸ் ஒண்டு இதுக்குள்ள எடுத்துத் தரச் சொன்னவன். அதுதான் .... ...." "பளார்!" அம்மா அடிச்ச அடியில என்ரை வலப் பக்க கன்னம் ரத்தம் மாதிரிச் சிவத்துப் போட்டுது.

"உந்த அலுமாரிக்கை இருக்கிறதெல்லாம் கொண்ணை க்கல்லோ ! அதை எப்பிடியடி நீ எடுப்பாய்?. அவன் செந்துார்தான் சின்னப்பொடியன். ஜீன்ஸை எடுத்துத் தா எண்டு கேட்டா உடன நீயும் இது தான் சாட்டெண்டு அலுமாரிக்கை என்ன கிடக்கு தெண்டு தோண்டிப் பாக்கிறதோ?"

அம்மான்ரை இந்த "தோண்டிப் பக் பார்க்கிறதோ" எண்ட சொல்லைக் கேட்டவுடன எனக்கு .இனிமேல் இல்லையெண்டளவுக்கு கோபம் வந்திட்டுது.

"ஓமோம்! தோண்டிப்பாக்கிறதுக்கு உதுக்குள்ள பெரிய பொக்கிசமோ வைச்சிருக்கிறியள்?

இது எப்பவோ அவங்கள் பிடிச்சுக் கொண்டு போனவனுக்கு, உடுப்பும், நகையும் சாப்பாடும்தானே வைச்சிருக்கிறாய். உனக்கு விசர் முத்திப் போச்சுது. இல்லாட்டி இப்பிடிக் காசை அநியாயம் பண்ணி அண்ணனுக்குப் பிடிச்சதை எல்லாம் வாங்கிப் பொத்திப் பொத்தி அலுமாரிக்கை வைச்ச ருப்பியோ?. ஊரில் எத்தினை பேர் காணாமல் போட்டினம். அவையின்ரை தாய் தேப்பனெல்லாம் இப்படியோ தங்கட காணாமல் போன பிள்ளையளுக்கு உடுப்புகள் வாங்கிக் குவிக்குதுகள்?. உன்ரை பிள்ளையில பாசமெண்டு ஊர் உலகத்துக்குக் காட்டுறதுக்கு தானே இப்படியெல்லாம் சேர்த்து வைச்சிருக்கிறாய்?"

ஆத்திரத்தில் மரியாதையில்லாமல் அம்மாவைப் பேசிப் போட்டன். இன்னும் கனக்க கதைச்சிருப்பன் அதுக்குள்ள அம்மா "ஓ" வெண்டு அழத் தொடங்கிட்டா. இனியும் நிண்டெனென்டால் வீண்சோலி தான் வருமெண்டிட்டு வெளியில போட்டன்.

'அண்ணனில் பாசமெண்டு மற்றவைக்கு காட்டத்தான் இப்பிடி அம்மா ,அண்ணனுக்குத் தேவையான எல்லாத்தையும் வாங்கி வைச்சி ருக்க வேணும். அப்படியில்லாட்டி அம்மாவுக்கு விசராயிருக்க வேணும். நான் அம்மாவைப் பேசினதில் என்ன பிழை.?'

"ம்மேய் ய்ய் ய்ங்! "

என்ரை கவனத்தை செல்வியின் முனகல் சத்தம் திசை திருப்பிப் போட்டுது. என்னெண்டு பார்த்தன்.

தாயாடு செல்வியை தலையால இடிச்சுத்தள்ளிக் கொண்டு நிண்டுது. தாயாட்டின்ர இடப்பக்க மடியில பால் எப்பனும் இல்லை. வலப்பக்க மடி பெரிசாய் பலுான் மாதிரி ஊதிப்போய்

நிரம்பிக் கிடந்திச்சுது. அதைக் குடிக்கிற துக்கு செல்வி எவ்வளவோ பாடுபட்டும் தாயாடு விடவே யில்லை. சிலவேளை .. .. .. .

எங்கட அம்மா மாதிரித்தான் தாயாடும் தன்ரை மகன் மணிக்காண்டித்தான் அது குடிச்ச மடியில பாலைச் சேர்த்து வைச்சிரு க்குதோ? । அப்படி மணிக்கெண்டு சேத்து வைச்சிருந்தால் அதைச் செல்வி குடிக்கவிடாமல் தாயாடு இடிக்கிறதுக்கு என்ன காரணம்? செல்வியும் அதின்ரை குட்டிதானே! அதுக்கு விசரோ?! இல்லாட்டி மணி திரும்பி வந்து குடிக்குமெண்ட நம்பிக்கையோ?. அப்ப

அம்மாவும் அப்படி அண்ணா கட்டாயம் திரும்பி வருவான் எண்ட நம்பிக்கையிலதானோ அந்த உடுப்புகளையெல்லாம் சேத்து 'வைச்சிருக்கிறா? '

மனம் தெளிஞ்ச மாதிரி ஒரு உணர்வு.

சாமியறைக்க சத்தம் போடாமல் போனன். இன்னமும் அம்மா அழுது கொண்டிருந்தா.

நான் ஒண்டும் கதைக்காமல் கீழே விழுந்து கிடந்த அண்ணையின்ரை உடுப்புக்களை எடுத்து அலுமாரிக்க அடுக்கி வைச்சன். அம்மா இப்ப எழும்பி என்னையும் கட்டிப் பிடிச்சுக் கொண்டு அழத் தொடங்கிட்டா. வெளியில தாயாட்டிட்ட செல்வி அடி வாங்கி அலறும் சத்தம் இன்னமும் கேட்டுக் கொண்டு இருந்தது.

*2002 ஜூலை*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ வடகோவை வரதராஜன்



# தென்னம் தோப்புகளில் பொசிவு நீர்க்குட்டைகள்

செல்லையரின் தென்னம் தோப்பில் உள்ள ஓர் குழியை சிங்கம் மூடி நிரவிக்கொண்டிருந்தார்.

"ஏன் அண்ணை அதை மூடுறீங்கள்?" என்று கேட்டேன் நான் .

" முந்தி, கிடுகு பின்னுறதுக்காண்டி தென்னோலையளை ஊறப்போட வெட்டின துரவு. இப்ப ஆர் கிடுகு வேண்டு கினம் ? அதுதான் மூடுவம் எண்டு சிங்கத்தை வரச்சொன்னானான் "

"தென்னம் தோப்புகளில் இப்படி துரவுகள் இடைக்கிடை இருப்பது நல்லம் அண்ணை"

"உதென்ன விளல் கதை பறையிறாய். தரையெண்டால் ஒரே மட்டமாய் இருந்தால்தானே ஒப்ப செப்பமாய் இருக்கும்"

" ஒப்ப செப்பமாய் இருந்தால் பார்க்க வடிவாய்த்தான் இருக்கும் .ஆனால் கடும் மழையின்போது பசளையுள்ள மேல்மண் அரிபட்டு அடுத்த காணிக்குப் போகிடும் ."

" வெள்ளம் பள்ளத்தை நாடி போகும் எண்டு என்ரை அப்பு சொல்லுவார்"

" அந்த பள்ளம் உங்கடை தறேக்கை இருந்தால் அடுத்த காணிக்கை போற வெள்ளம் உங்கடை காணிக்கை நிக்குமெல்லே ."

" என்னமோ புதுப் பூராயம் பறையிறாய் . எனக்கு ஒண்டுமாய் விளங்கேலை. கொஞ்சம் விளப்பமாய் சொல்லு"

" தென்னம் தோப்புகளில் இடைக்கிடை இப்படித் துரவுகளை வெட்டி விடவேணுமண்ணை .
இதைப் பொசிவு நீர்க் குட்டை எண்டு சொல்லுறது"

" இதென்ன கோதாரி ? பொசிவு, கசிப்பு எண்டெல்லாம் பறையிறாய் "

"பத்தடி நீளத்தில் ஐந்தடி அகலத்தில் மூன்றடி ஆழத்தில் (10 x 5 x 3 ) அரை ஏக்கருக்கு ஒரு பொசிவு நீர்க் குட்டை அமைத்து விட்டால் உங்கடை தென்னம் தோப்பு பச்சை பசேல் எண்டு இருக்குமண்ணை"

" இதாலை என்ன பிரயோசனம் விதானையார்? " எனக் கேட்டார் பார்வதம் மாமி .

" பெய்யிற மழை வாரடிச்சு ஓடிக் கடலுக்கை போகாமல் உங்கடை காணிக்கையே நிக்குமெல்லே"

"அது சரிதான் விதானையார் , இதாலை என்ன நன்மை?" வெயிலுக்காக தலைக்குப் போட்ட மொட்டாக்கை எடுத்து முகத்தைத் துடைத்தபடி பார்வதம்மாமி கேட்டார் .

" பசளையுள்ள வளமான மேல் மண் அரித்து அடுத்த காணிக்குப் போகாமல் இந்த பொசிவு நீர்க் குட்டைகளுக்கு எடுத்து வரப்படுகிறது .
அத்தோடை இந்தக் குட்டைகளில் தேங்குகிற நீர் நிலக்கீழ் நீர்மட்டத்தை உயர்த்தி உங்கடை கிணறுகளை வற்றிப் போகாமல் செய்கிறது ."

" ஓமடா தம்பி கடும் கோடையிலை கிணத்திலை தண்ணி நல்லாய் கீழை போகுது"

" அதுமட்டுமே , இந்த பொசிவு நீர்க் குட்டைகளிலை இருக்கிற நீர், பக்கவாட்டாகபொசிஞ்சு உங்கடை தென்னை மரங்களை பசுமையாய் வைச்சிருக்குது "

" பொசிஞ்சு போறதாலைதான் பொசிவு நீர்க்குட்டை எண்டு நல்ல ஒரு பெயர் வைச்சிருக்கிறியள் விதானையார்."

"மழை முடிந்தும் சில மாதங்களுக்கு இந்தக் குட்டைகளில் நீர் இருப்பதால் உங்கடை தோப்பு பசுமையாக இருக்கும் ."

" இதை விட வேறை பிரயோசனங்களும் இருக்கோ விதானையார்?"

"இந்த குட்டைகளில் 'அசோலா' எண்ட பாசியை கொண்டுவந்து வளரவிட்டால் உங்கட கால்நடைகளுக்கு புரதச்சத்து நிறைஞ்ச உணவும் கிடைக்குது. மேலதிகமாக விளையுறதை எடுத்து தென்னமரங்களுக்குத் தாட்டால், அது நைதரசன் நிறைந்த பசளையாகும் ."

" கனவிஷயம் எல்லாம் சொல்லுறீங்கள் விதானையார்"

" இன்னும் இருக்கு . நீங்கள் தோப்புக்குள் கொஞ்ச தாராக்களை வேண்டி விட்டால் , தாராக்கள் புல் பூண்டுகளை மேய்ஞ்சு , பூச்சி புழுக்களை உண்டு , இந்தத் துரவுகளில் குளித்து செழிப்பாய் வளரும் . இதாலை உங்களுக்கு மேலதிக வருமானமாக இயற்கையான தாரா முட்டைகளும் தாரா இறைச்சியும் கிடைக்கும் "

"கடும் கோடையிலை இந்தக் குட்டைகள் வத்திப் போனால் தாராக்களை என்ன செய்யிறது விதானையார்?"

"அதுக்கும் ஒரு வழி இருக்குது. தோப்பில்ஒண்டு அல்லது ரெண்டு குட்டைகளை களிமண் அல்லது சீமெந்து கொண்டு அமைக்க வேணும் . கடும் கோடையில் இதற்குள் கிணத்து நீரை இறைக்க வேணும் . இப்போ கடும் கோடையிலும் தாராக்களுக்கு தண்ணியும் இருக்கும் . அசோலாவும் அழியாமல் வளர்ந்து பெருகும்."

"நல்ல விசயம் எல்லாம் சொல்லுறாய் .
ஆனால் உந்தப் பி.எச்.ஐ காரன் வந்து, நுளம்பு பெருகுது எண்டு .வழக்கெல்லே எழுதிப் போடுவான் " என்றார் செல்லையர்"

"உது விசயம் தெரியாதவை கதைக்கிற கதையண்ணை. இந்தக் குட்டைகளில் தவளை வந்து முட்டை போட்டு , வால்பேத்தைகள் உருவாகி இருக்கும் . இந்த வால்பேத்தைகள் நுளம்புக் குடம்பிகளைப் பிடித்து தின்று விடும்.
அதோடை தும்பியின் அணங்குப் புழு , நீர்ப் படகோட்டி , நீர் பூச்சி என்று கனக்க நீர் வாழ் பூச்சிகள் இந்த குட்டையில் வசிக்க வரும் . இவை எல்லாம் நுளம்புக் குடம்பிகளை அழித்து விடும் ."

" உதை பி.எச்.ஐ நம்ப வேணும் எல்லே"




" அது அவங்களில்லை பிழையிலையண்ணை. அவர்களுக்கு நீர் தேங்கி இருந்தால் நுளம்பு பெருகும் எண்டது தான் சொல்லிக் கொடுக்கப் பட்டிருக்கு. கன பி.எச்.ஐ. மாருக்கு இந்த சூழல் அறிவு இருக்கிறேல்லை
நீங்கள் ஒண்டு செய்யலாம். இந்த குட்டைகளில் நாட்டு மீன் குஞ்சுகளைக் கொண்டு வந்து விட்டுவிடலாம் . பி. எச்.ஐ.மாருக்கு மீன்களை காட்டினால் அவை வழக்கு எழுதாமல் போய் விடுவினம்"

" எல்லாம் நல்ல முறையள் தான் சொல்லி இருக்கிறாய். கொஞ்ச கசிப்புக் குட்டை வெட்டத்தான் வேணும்"

"கசிப்புக் குட்டையில்லை அண்ணை .பொசிவுக் குட்டை"

" கசிப்போ, பொசிப்போ. ஒருநாளைக்கு உந்த யானை மிஷினைக் கொண்டுவந்து கொஞ்ச குட்டைகள் வெட்டத்தான் வேணும்"

யானை மிஷின் எது எனப் புரியாமல் நான் குழம்பி பிடரியைச் சொறிந்தேன் . விழுந்து விழுந்து சிரித்த பார்வதம்மாமி " இவருக்கு 'புல்டோசர்' எண்டு சொல்லத்தெரியாது விதானையார் .அதைத்தான் யானை மிஷின் எண்டு சொல்லுறார்" என்று கூறி மீண்டும் குலுங்கிச் சிரித்தார் .



• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்

நீங்களும் எழுதலாம்


எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com

தொடர்புகளுக்கு
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 41



அனுப்புபவர் பெயர்:..............................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..............................................................
கையொப்பம்:.......................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. இலங்கையின் புனித நகரம் 6. ஒரு திசையின் சுருக்கம் 7. வெட்டி வீழ்த்து 8. இரு பாலாரில் ஒரு பாலர் 9. பாண், பிட்டு என்பவற்றை இதனுடன் உண்ணலாம். 11. ஒரு காட்டு மிருகம். 12. அலறல் ஓசை. 13. பனை ஓலையால் பின்னிய ஏதனம் 15. சாதுவான மிருகம் எனப் பெயர் பெற்றது. 17. பெரியவர்/பெருமை பெற்றவர் 18. ஒரு வகை அரிசி 19. ஒரு நுட்பமான நேரம்/ ஒரு விநாடி அளவு 20. பன்மையைக் குறிப்பது. 21. உண்ணுமாறான ஏவல் 22. மக்கள் கூட்டத்தின் சிறிய அடிப்படைத் தொகுதி.

## மேலிருந்து கீழ்

1. பாதுகாப்பாக இருக்க எடுக்கும் எத்தனம். 2. உறுதியான. 3. அன்பின் ஒரு வடிவம். 4. தடுத்து நிறுத்து. 5. அரசனுக்கு எதிர்ச் சொல் 8. தொடக்கம் 10. நகரம் 11. சேர் 12. இணக்கச் சொல்/ பிரணவம் 13. கிருஷ்ணன்/ வெண்ணெய் உண்டவன். 14. படிக்குமாறான ஏவல் 16. (ஒருவரின்) குணாம்சம்/ பண்பு. 17. நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டவன். 18. சிறுநீர். 20. தூங்கச் செல்லுமாறான ஏவல்.

### சொற்சிலம்பம் போட்டி 39 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஒபாமா 4. சந்ததி 7. சாவித்திரி 9. கசை 10. மாத்தறை 11 . கன 12. தளை 13. வரம்பு 15. நில் 16. உளம் 17. கடம் 18. ஏர் 19. மகுடம் 21. மாந்த 22. திரு 23. புணர்தல்

**மேலிருந்து கீழ்**

1. ஒசாமா 2. பாவித்தல் 3. மாத்தளை 4. சரி 5. தகனம் 6. திசை. 8. திறை 11. கரம் 13. வளம் 14. புலர்தல் 15. நிம்மதி 16. உடம்பு 17. கட. 18. ஏந்த 20. குரு. 21. மார்.

சொற்சிலம்பம் போட்டி இல.41
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
10.04.2021 அந்த முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 25[illegible]
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 39 இல் வெற்றி பெற்றோர் விபரம்


**1 ஆம் பரிசு**
**செ.நவராசா**
மயிலிட்டி, வடக்கு முலவை.

**2 ஆம் பரிசு**
**ஆ.கஜவிந்தன்**
அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு,

**3 ஆம் பரிசு**
**சி.பானுராஜா**
சிதம்பராக் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

**4 ஆம் பரிசு**
**பொ.சற்குணநாதன்**
வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

**5 ஆம் பரிசு**
[illegible]
உபதபாலகம், [illegible],
மன்னார்.






○ கோகுலராகவன்

வீடு!

உங்களுக்கு மிகவும் பிடித்தமான இடம் எதுவென்றால் அதன் பதில் இதுதான். எவ்வளவு தூரம் இனிதாகப் பயணம் போனாலும், அதில் எவ்வளவு ஆனந்தம் அனுபவித்தாலும் முடிவில் வீடு திரும்புவதில் உள்ள ஆர்வம் அதிகமாகவே இருக்கும்.

நான் நிறையத் தடவைகள் இதனை அனுபவித்திருக்கிறேன்.

"எப்படா வீட்டை போவம்" என்ற எண்ணம் இடைநடுவிலேயே தோன்றிவிடும். வீட்டுக்கு வந்து குளித்தோ ,முகம் கழுவி விட்டோ ஒரு தேநீர் குடித்து விட்டு ஆறுதலாக அமர்ந்தால் அது ஒரு தனிச் சுகம்தான்.

மேய்ச்சலுக்கு விட்ட மாடுகள் மேய்ச்சலுக்குப் போகும்போது தளர்வாகவே போகும். ஆனால் மாலை வீடு நோக்கி சாய்க்கும் போது அவற்றின் நடை வேகமாகவே இருக்கும். கட்டும் கட்டையில் அல்லது கொட்டிலில் நின்று அவை அசை போடும் அழகே தனிதான்.

மனிதன் எப்போது வீட்டை அமைக்கத் தொடங்கி இருப்பான்? மிக மிக மிக நீண்ட காலத்துக்கு முன்னராகவே மனிதன் வீட்டு விலங்காகிவிட்டான். குகைகளிலும், மரப் பொந்துகளிலும் வாழத் தொடங்கியவன் மெதுவாக தன் உயர்ந்த படைப்பான கை எனும் அங்கத்தால் வீடு கட்டப் பழகிக் கொண்டான். கொட்டில்களே ஆரம்பகால மனித வாழிடம். இவை இலை, குழைகளால் வேயப்பட்டிருக்கலாம். நாட்கள் நகர வைக்கோல், புற்கள், தென்னோலை, கிடுகு, வாழை இலை எனப் பல வகைப்பொருட்கள் வீடு வேய பயன்பட்டிருக்கின்றது. இதில் கிடுகு முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டது. அது நீண்ட காலம் தாக்குப் பிடிக்கக்கூடியதாகவும், எளிதாக எந்தக் காலத்திலும் கிடைக்கக்கூடியதாகவும்அமைந்தது.

வீடு என்பது ஒரு அமைப்பை குறிப்பதாக அமைந்தது. அது ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் இடமாகவும் காலப்போக்கில் மாறிவிட்டது. மண் வீடுகள் அமைக்கப்பட்ட காலத்தில் அவை தனி அறை கொண்டவையாகவும், முன்னால் திண்ணை எனும் ஓய்விடம் உள்ளவையாகவும் அமைக்கப்பட்டன.

'அடுப்படி' தனியாக அமைக்கப்பட்டது. இது சமையலுக்கு மட்டுமே உபயோகிக்கப்பட்டது. மண் சுவர் வைக்கப்பட்டு பனம் மட்டையால் சுற்றி வரியப்பட்டு மேலே கிடுகால் வேயப்பட்டிருக்கும். நாலு பேர் வரிசையாக இதனுள் இருந்து சாப்பிட முடியும்.

"கத்தியைக் காணேல்ல"

"பெரிய வீட்டுக்க பார்"

இப்படி ஒரு வீட்டையே இரண்டாகப் பிரித்துச் சொல்லும் பழக்கம் எம்மிடமுண்டு.

இந்தப் பெரிய வீடு படுக்கை அறையாகவும் நெல் வைக்கவும், சாமிப்படம் வைப்பதற்கும், உடுப்புக்கள் வைக்கவும் பயன்பட்டது. சிலர் இதனை இரண்டு அறையாகவும் அமைப்பர். இதுவும் மண் வீடுதான். சுற்றி கிடுகால் பின்னப்பட்ட தட்டிகள் சாத்திக் கட்டப்பட்டிருக்கும். மேலே கிடுகுதான் இதற்கும். மழைகாலத்தில் இந்த வீட்டுக்குள் படுத்தால் குளிரே தெரியாது. அப்படிக் குளிர்ந்தால் அம்மாவின் சேலை ஒன்றை எடுத்து போர்த்திக் கொண்டால் போதும்.



கோடைகாலத்திலும் இதனுள் படுத்தால் வெக்கையே தெரியாது. வீட்டை எப்பவும் கிடுகு குளிர்மையாக வைத்திருக்கும். இதனுள் "கோர்க்காலி' என்ற ஒரு அமைப்பு இருக்கும். நெல்மூடைகளை அடுக்க உயரமாக மேடை மாதிரி அமைத்திருப்பார்கள்.

மூன்றாவதாக ஒரு வீடு இருக்கும். அதுதான் தலைவாசல். இதுவும் கிடுகு வேய்ச்சல்தான். சில வேளை வசதியாளவர்கள் கீழே சிமெந்து போட்டிருப்பார்கள். இதுதான் வரவேற்பறை. யாராவது வீட்டுக்கு விசேடமாக வந்தால் இந்த வீட்டில் இருந்துதான் கதைப்பார்கள்.

"பிள்ளை மாமாவுக்கு பாயை விரி"

முந்தின காலம் கதிரை எல்லாம் கிடையாது. வீட்டுக்கு வருபவர் பாயில்தான் அமர வேண்டும்.

"பிள்ளை தண்ணீர் செம்பை கொண்டா"

அந்தக் காலங்களிலை வீட்டுக்கு வருபவர்களுக்கு தேநீர் கொடுத்து சலரோகம் வரப்பண்ணும் பழக்கம் குறைவு. பிறகு வெற்றிலைத் தட்டம் கொடுபடும். வருபவர் களைப்பாறிவிட்டுப் புறப்படுவார். வேலை கிடைத்த புதிதில் நானும் ஜீவரத்தினம் மாஸ்ரரும் புலோப்பளையில் இருந்து சோரன்பற்றுக்கு சைக்கிளில் போவோம். ஒருநாள் வழியில் ஒரு முதியவர் எம்மை வழிமறித்தார். அவர் மாசார் பக்கம் குடியிருப்பவர். ஜீவரத்தினம் மாஸ்ரரின் உறவினர்.

"தம்பி உங்கடை வீட்டைப் பிடுங்கிறாங்கள்.

தலைவாசலை நேற்று பிடுங்கினவங்கள். இண்டைக்கு பெரிய வீட்டைப் பிடுங்கிறாங்கள்" சொல்லிவிட்டு அழத் தொடங்கினார். பிடுங்கப்படும் வீடு ஜீவரத்தினம் மாஸ்ரரின் தாய் மனை.

"எத்தனை பேர் வாழ்ந்த மனை"

விக்கி விக்கி அழத் தொடங்கினார். ஜீவரத்தினம் மாஸ்ரருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பள்ளிக் கூடத்துக்கும் தாமதம் ஆகிறது.

"சரி சரி கந்தையா மாமா அழாதேயுங்கோ. நானே அழேல்லை. நீங்கள் ஏன் அழுகிறியள் ?ஒண்டுஞ் செய்யேலாது"


அந்த மனிதர் அழுதபடி சைக்கிளில் ஏறிப் போய்விட்டார். வீடு எப்போதும் மனிதர்களின் நேசத்துக்கு உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓட்டிசம் என்பது என்ன வகையான நோய்? அது ஏன் ஏற்படுகிறது? அதனைக் குணப்படுத்த இயலாதா? ஓட்டிசத்தால் எனது அயல் வீட்டிலுள்ள சிறுவன் பாதிக்கப்பட்டுள்ளான். அவனது எதிர்காலம், கல்விச் செயற்பாடுகள் எவ்வாறிருக்கும் தயவு செய்து விளக்கமளியுங்கள் டாக்டர்.**

ப.கீர்த்தனா, யாழ்ப்பாணம்.

# ஓட்டிசம் (Autism)






### ஆட்டிசம் உள்ள சிறார்களை வீட்டில் கையாளுவது எப்படி?

1. உறுக்கி, அதட்டி இவர்களை நீங்கள் வெளிக் கொண்டு வர இயலாது.
2. 80 வீதமான குழந்தைகளுக்கு உணவு உண்பதில் நிறைய சிக்கல்கள் இருக்கும் இத னையும் புரிந்து கொள்ளவேண்டும்.
3. அல்பேர் ஜன்ஸ்டீன், பில்கேட்ஸ் போன்றவர்கள் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட மேதை கள். (அறிவுக்கூர்மைக்கும் இக்குறைபர்டுக்கும் சம்பந்தமில்லை) ஆனால் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட எல்லாக் குழந்தைகளும் மேதைகளல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள்.!!!!
4. இவர்களை நூறு வீதம் முற்றுமுழுதாகக் குணப்படுத்த இயலாது.
5. ஆனால் நடத்தை சீராக்கல் பயிற்சி, வளர்ச்சி மேம்பாட்டு பயிற்சி, கல்வி வளர்ச்சிக்கான பயிற்சி, பேச்சுப் பயிற்சி மூலம் ஓரளவு சரி செய்ய முடியும்.
6. பொதுவிடங்களில் குழந்தையால் அவமானம் என்று நினைப்பதை அறவே தவிர்க்க வேண்டும்.
7. வித்தியாசமான குழந்தைகள் என்பதை புரிந்து கொண்டு தகுந்த பாதுகாப்பும் பாசமும் அளித்து, எவ்வளவு நேரம் இவர்களுக்காக கூடுதலாக நேரம் செலவிட இயலுமோ செலவிடின் முக்கியமாக இடைவிடாது தொடர்ந்து முயற்சித்து வந்தால் இவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும்.

"மதியிறுக்கம்" அல்லது "புற உலக சிந்தனைக் குறைபாடு" என்பதே autism spectrum condition என்பதன் சரியான தமிழாக்கம் என்று கருதுகிறேன்.
இது ஒரு நோயல்ல; குறைபாடு என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

மூளையானது சுற்றுப்புறச் சூழலிலிருந்து பெறப்படும் தகவல்களை பயன்படுத்தி அவற்றைப் புரிந்து கொண்டு அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளவியலாது, பார்த்தல், கேட்டல் என உணரும் விடயங்களை சரியாக பயன்படுத்த முடியாமல் இருப்பதே ஓட்டிசம் எனப்படுகிறது. அடிப்படையில், இது மூளையின் நரம்புமண்டலத்தில் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாடாகும். பெரும்பாலும் இக்குறைபாடு குழந்தை பிறந்து 3 ஆண்டுகள் நிறைவடைய முன்னர் ஏற்படும்.
ஒப்பீட்டளவில் ஆண் குழந்தைகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். (80வீதம்).

அதாவது சாதாரண வாழ்க்கையிலிருந்து வேறுபட்ட நிலை என இதை இலகுவாக வரையறுக்கலாம்.
இது ஒரு தொற்று நோய் அல்ல. சமூகத்தில் மற்ற வர்களுடன் தொடர்பு கொள்ளும் திறன் (Communication) பழகும் திறன் (Socialization)
போன்றவற்றில் மட்டுமே பின் தங்கிய நிலை காணப்படும் நிலையாகும். பெரும்பாலானவர்களுக்கு பேசும் திறன் இருக்காது, சில குழந்தைகள் பேசினாலும் அது தெளிவாக புரியும்படி இருக்காது.

## வகைகள்

**1.அஸ்பெர்ஜர் சின்டோம் Asperger syndrome**
இவ்வகை குழந்தைகள் முதலில் சாதாரணமாக இருந்து பருவ வயதில் ஓட்டிசத்துக்குரிய அனைத்து இயல்புகளையும் வெளிப்ப டுத்தும்.
**2.றெட்சின்றோம்: Rett syndrome**
பெண் குழந்தைகளுக்கு மட்டும் ஏற்படும். தலை வளர்ச்சி மெதுவாக இருக்கும். கை, கால்களை முழுமையாக பயன்படுத்த முடியாது போன்றவை இதன் அறிகுறிகள்.
**3. சைல்ட் டிஸ்இன்டர்கிரேடிவ் டிஸ்ஆர்டர் Childhood disintegrative disorder (CDD),**
முதலில் சாதாரணமாக இருந்து பின்னர் பேச்சுத்திறன், பழகும் திறனை இழப்பார்கள்.

### ஓட்டிசம் ஏற்படுவதற்கான காரணம்

தெளிவாக வரையறுக்கப்படவில்லை.
வளர்சிதை மாற்றக் குறைபாடு, மரபு வழியாக ஏற்படலாம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)




### இனங்காண்பது எப்படி?

குழந்தை பிறந்து 10-18 மாதங்களுள் அறிகுறிகளைக் கண்டறிய முடியும். பிரத்தியேக பரிசோதனைகள் இல்லை . பெற்றோர், குழந்தை நல மருத்துவர், ஆசிரியர்கள் போன்றவர்களின் அவதானிப்பின் மூலமே கண்டறியலாம். நரம்பியல் சிக்கலால் ஏற்படும் ஓட்டிசத்தை CT Scan, MRI மூலம் கண்டறியலாம்.

### 1.ஆரம்ப அறிகுறிகள்

- பிறந்த குழந்தைகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விதமான வளர்ச்சி இருக்கும் தாயின் முகம் பார்த்துச் சிரிப்பது, பேசுவது என குறிப்பிட்ட மாதங்களில் இந்த வளர்ச்சி தானாக இருக்கவேண்டும்.
- இதையும் மீறி சில குழந்தைகள் பேசத் தெரியாமல் இருப்பார்கள்.
- தவிர ஆறு மாதங்களாகியும் தாய் முகம் பார்த்து சிரிக்காமல் குழந்தை இருத்தல், தாயின் கண்களை நேருக்கு நேர் பார்க்காமல் இருத்தல்,
- 12 மாதங்களான பின்பும் மழலைச் சப்தங்கள் செய்யாமலிருந்தல்,
- ஒரே இடத்தில் அமர்ந்திருத்தல்
- 18 மாதங்களில் பேசினாலும் ஒரே சப்தத்தையோ, சொல்லையோ திரும்ப திரும்பச் சொல்லுதல்

என்பவை இத்தகைய குறைபாடுகளாகும்.

### 2.விளையாடுவதில் சிக்கல்

- 18-24 மாதங்களில் மற்றக் குழந்தைகளோடு சேர்ந்து விளையாடாமல்,
- தனியாகவே இருத்தல்,
- கைகளை உதறிக் கொண்டே இருத்தல், ஒரு பொருளையோ, நபரையோ சுட்டிக் காட்ட இயலாத தன்மை,
- கதை கேட்பதில் விருப்பமின்மை தூக்கமின்மை,
- தூங்கும் நேரம் குறைவடைதல், கீழே விழுந்து காயம் ஏற்பட்டாலும் வலியை உணராதிருத்தல் போன்றவையும் இத்தகைய குறைபாட்டுக்குக் காரணங்களாகும்.

### பொதுவானவை

1. ஒதுங்கி இருப்பது
2. கண்களைப் பார்த்து பேசாமல் இருத்தல், ஆள் காட்டி விரலால் சுட்டிக்காட்டா மல் இருத்தல்
3. சமூகப் புரிதல்கள் இல்லாமல் இருப்பது,
4. பயம், ஆபத்து ஆகியவற்றை உணராமல் இருப்பது
5. பாவனை, விளையாட்டுகள் இல்லாமல் இருப்பது
6. வித்தியாசமான நடவடிக்கைகளை ஒரே மாதிரியாகத் திரும்பத் திரும்ப செய்வது, காரணம் இல்லாமல் அழுகை, சோகம் ஆகியவற்றை வெளிப்படுத்துவது, வலியை உணராமல் இருப்பது, மாற்றங்களை அசௌகரியமாக உணர்வது, பொருளற்ற சொற்களைத் திரும்பத்-திரும்ப சொல்வது.

**ஓட்டிசம் குழந்தைப் பருவத்தில் மட்டுமே இருக்கும் பிரச்சினை: பெரியவர்களானதும் இது குணமாகிவிடும் என்பது மூடநம்பிக்கை.**

### இக் குறைபாட்டின் படிநிலைகள்

இதனைக் கண்டறிய Spectrum என்ற சொல் பயன்படுகிறது

1. **மிதமான நிலை: பெரும்பாலான துறைகளில் சராசரி செயற்பாடு காணப்படும்.**
2. **தீவிரமான நிலை - சமூக நடத்தைகளில் பெரும் பாதிப்பு நிலை காணப்படும்.**

இவ்விரு படிநிலைகளிலும் அடிப்படையான பாதிப்பு 3 விடயங்களில் ஏற்படும்.
1. சமுதாயத்துடனான தொடர்பாடல்
2. தகவல் பரிமாற்றம்
3. சிந்திக்கும் ஆற்றலும் நடத்தையும்.

மேலதிகமாக ஐம்புலன்களின் ஒருங்கிணைப்பிலும் பிரச்சினை ஏற்படலாம்.
இக்குறைபாட்டின் தீவிரத்தன்மை எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது. பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் திறனும் சிக்கல்களும் தனித்துவமானவை.

### சமுதாயத் தொடர்பாடல்

| | |
|---|---|
| குழந்தை | இக் குறைபாடற்ற குழந்தை தன்னுடன் பேசுகின்றவர்களை நோக்கி அவர்களைப் பார்த்து சிரிக்கும். ஓட்டிசம் உள்ள குழந்தை முகங்களையும் மனிதர்களையும் விட பொருள்களில் ஈர்க்கப்படுவர். ஒரு வினாடி முகம் பார்ப்பர். மறுநொடி முகத்தை திருப்பிக் கொள்வர். புன்னகை புரியாது. அல்லது தாம் விரும்பும் பொருள்ட்களைப் பார்த்து புன்னகைப்பர். |
| 3–5 வயது | மற்றவர்களை தன்னிச்சையாக அணுக மாட்டார்கள். செய்கை தொடர்பாடல் இல்லாதிருப்பர். ஆனால் தங்களை கவனிக்கும் நபர்களுடன் பாசமாகவிருப்பர். நண்பர்களை உருவாக்கி கொள்வதில் ஆர்வமிருக்காது. |
| 5–15 வயது | முகமாற்றம்/ உணர்ச்சிகளை அடையாளம் காணவியலாமை. உதாரணம்: நீங்கள் சந்தோசமாகவோ சோகமாகவோ இருக்கிறீர்கள் என்பதை உங்கள் முகபாவத்திலி ருந்து இனங்காணமாட்டார்கள். தவறான நேரங்களில் சிரிப்பது அல்லது அழுவது. |
| 15 வயதுக்கு மேல் | மேற்கூடிய அனைத்து அறிகுறிகளுடனும் தனித்திறமை ஒன்று இருக்கும். அதை இனங்கண்டு சுயதொழில் வாய்ப்பை உருவாக்கலாம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நம்பிக்கையை காப்பாற்றுமா பொலிஸ்?

"சதீஸ்வரன் உயிரிழந்தது மின்சாரம் தாக்கியதில் தான். அதில் எந்தச் சந்தேகமுமில்லை. ஆனால் அவர் சட்டவிரோத மின்சார இணைப்பில் சிக்குண்டே இறந்திருக்கலாம் என்பதே ஊரவர்களின் சந்தேகம். பல விடயங்களை சம்பவம் இடம்பெற்ற வீட்டார் திட்டமிட்டு மறைத்து விட்டனர் என்றும் ஊரவர்கள் சொல்கிறார்கள். கிளிநொச்சி பொலிஸாரும் பல தடயங்களை அவதானித்துள்ளனர். தடயங்களை அகற்றி பொலிஸாரை ஏமாற்றி விடலாம் என்று சிலர் நினைக்கின்றனர். தடயங்களை மறைப்பதால், அதில் ஏமாறுவதற்கு கிளிநொச்சி பொலிஸார் ஒன்றும் முட்டாள்கள் இல்லை. என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடித்து பெற்றோரை இழந்து, பேர்த்தியாரோடு வாழ்ந்து வந்த ஏழை இளைஞனின் பரிதாபச் சாவுக்கு கிளிநொச்சி பொலிஸார் நீதியை பெற்றுத் தருவார்கள்" என்று சதீஷின் உறவினர்கள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவார்களா கிளிநொச்சி பொலிஸார்?

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாணத்துறையில் பிரசித்தி பெற்ற நிறுவகம் ஒன்றினால் திறமை வாய்ந்த மேசன், தச்சன் மற்றும், வேலையாட்கள் கிளிநொச்சி, மாங்குளம் வவுனியா, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள வைத்திய சாலைகளிற்கு கோரப்படுகின்றது. ஆர்வம் உள்ள திறமையுள்ள வேலையாட்கள் பின்வரும் தொலை பேசி இலக்கங்களிற்கு தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்**

**கர்சன் (தமிழ்) 077 084 0692**
**மகேசிகா (சிங்களம்) 077 519 1873**

**Foresight Engineering (PVT) Ltd,**
**Access tower (North),**
**27th Floor,**
**278/4 Union Place, Colombo - 02**

## வேலை வாய்ப்பு

**எமது நிறுவனத்திற்கு கீழ் காணும் வேலையாட்கள் தேவை**

01. முகாமையாளர் (வங்கியிலிருந்து ஓய்வு பெற்றவர் விரும்பத்தக்கது. வயதெல்லை 60 வயதிற்குட்பட்டவர்)
02. கணக்காளர் (A/L Commerce இல் சித்தியடைந்தவர்கள் அனுபவம் உள்ளவர்கள் விரும்பதக்கது) ஆண்/பெண் இருபாலாரும்.
03. Graphic Designer (ஆண், பெண் இருபாலாரும்)
04. சாரதிகள் (AD அனுமதி பத்திரம் உள்ளவர்கள்)
05. காரியாலய உதவியாளர் (20 வயதிற்குட்பட்டவர்கள்)

**தங்குமிட வசதி உண்டு.**

முக்கிய அறிவிப்பு : 05.02.2021 (திங்கட்கிழமை) ஆவணங்களுடன் முற்பகல் 11.00 - 2.00 மணி வரைக்கும் நேரில் சமுகமளிக்கவும்.

**தொடர்பு : Sunjeysholdings**
**32, மஞ்சவனப் பதி வீதி, கொக்குவில்.**
**077 747 4111**

உங்கள் செவிப்புலன் கருவிகளை மறுசுழற்சி செய்து வாழ்க்கையை மாற்றவும்



இந்த புதுவருட பருவத்தில் கேட்குந்திறனை பரிசாக கொடுங்கள்.

செவிப்புலன் கருவி ஒரு நபரின் வாழ்க்கைத் தரத்தில் மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். இந்த செவிப்புலன் கருவி அதிகூடிய தேவை இருப்பினும் அதனை பெற்றுக்கொள்ள முடியாது பலர் உள்ளனர். உங்கள் பழைய செவிப்புலன் கருவிகளை நன்கொடையாக அளித்து அவர்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள். அவற்றை புதுப்பித்து இலவசமாக பொருத்த நாங்கள் தயாராக உள்ளோம்.

விஷன் கெயார் செவிப்புலன் கருவி நன்கொடையாளராகி, ஆண்டு முழுவதும் சிறப்பு சலுகைகளுக்கு உரிமை பெறுங்கள்!

இந்த திட்டத்திற்கு பதிவு செய்ய ஏப்ரல் 30 க்கு முன் எங்களை அழைக்கவும்

076 7 727 131

VISION CARE HEARING SOLUTIONS

விஷன் கெயா ஒப்டிகல்ஸ் சேவிசஸ் (வரை) தனியார நிறுவனம்

கிளைகள் : கொழும்பு, கொழும்பு ரேஸ்கோஸ், மகரகம, களுத்துறை, கம்பஹா, பாணந்துறை, காலி, மாலபே, குருநாகல், நீர்கொழும்பு, குளியாப்பிட்டி, இரத்தினபுரி, பண்டாரவளை, கண்டி, மாத்தளை, தம்புள்ளை, அநுராதபுரம், திருகோணமலை, மொனராகலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், பொலன்னறுவை, கேகாலை, பதுளை


oticon life-changing technology

உ
சிவமயம்

வெள்ளவத்தை மயூரபதி

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்

மஹாகும்பாபிஷேகம் - 2021



இன்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை மஹா கும்பாபிஷேகம் காணும் வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வினை சிறப்புற வாழ்த்தி வணங்குகின்றோம்.

ABI Fashion World

அபி பஷன் வேல்ட் இன்

தமிழ் சிங்கள புதுவருட மாபெரும் விலைக்கழிவுகள்...





'திருமணப் பட்டுப் புடைவைகளுக்கு பிரத்தியேக காட்சியறை'

அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய டிசைன்களுடன் சிறுவர் முதல் பெரியவர்கள் வரையான அனைவருக்கும் ஏற்ற உடைகள் ஒரே இடத்தில்

அபி ரேடர்ஸ்
Abi Traders
Colombo
011 242 1521

அபி பஷன் வேல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3738

அல்பனா ரேடர்ஸ்
Alpna Traders
Colombo
011 233 7521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வித்தைகள் ஓய்ந்தன

O மயூ

தமிழகத்தில் சட்ட மன்றத் தேர்தலுக்கான பரப்புரைகள் இன்று (ஏப்ரல் = 04) இரவு 7 மணியுடன் நிறைவுக்கு வருகின்றன. தேர்தல் அறிவிப்பு வெளியானது முதல் "தீயாக வேலை செய்த" வேட்பாளர்கள் இப்போது ஓய்வெடுக்க ஆரம்பித்திருப்பார்கள். இனிமேல் எல்லாம் மக்களின் கையில்தான்.

தமிழக சட்ட மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து வேட்பாளர்கள் அனைவரும் தீயாக வேலை செய்தனர். தேநீர் கடையில் தேநீர் போடுவது, தெருவோரக் கடைகளில் தேநீர் குடிப்பது, உணவு உண்பது, வயதானவர்களைக் கண்டால் காலில் விழுவது, குழந்தைகளைக் கண்டால் தூக்கிக் கொஞ்சுவது என்று தங்களுக்குத் தெரிந்த மொத்த வித்தைகளையும் இறங்கியிருந்தனர் அவர்கள். (இதைக் கடந்தவாரம் விலாவாரியா அலசியிருந்தோம்) தேர்தலுக்காக தமிழகக் கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகளை அள்ளி வீசியிருக்கின்றன. ஆனால் என்ன குரங்கு வித்தை காட்டினாலும் முடிவு மக்களின் கைகளில்தானே இருக்கிறது. இப்போது தேர்தல் கள நிலவரம் எப்படி இருக்கின்றது என்று பார்ப்போம்.

தமிழகத்தில் ஏப்ரல் 6 ஆம் திகதி ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடக்கவிருக்கிறது. இப்போது மக்கள் அலை தி.மு.கவின் பக்கம்தான் இருக்கின்றது என்று தெரிகின்றது. பல்வேறு தரப்பினரால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் தி.மு.க. முன்னிலையில் இருக்கின்றது. தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு உள்ள தொகுதிகள் 151. அ.தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு உள்ள தொகுதிகள்75. அதில் 50 தொகுதிகளில் இழுபறி நிலை உள்ளாு. இப்படி இழுபறி நிலையில் உள்ள தொகுதிகளில் தி.மு.கவே முன்னணியில் இருக்கின்றது. இதுதான் இன்றுள்ள நிலைமை.

ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் ஆளும் அ.தி.மு.கவின் போக்குக் குறித்து மக்கள் மத்தியில் சிறிது அதிருப்தி ஏற்பட்டிருக்கின்றது.

மத்தியில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலையாட்டும் பொம்மையாக அ.தி.மு.க. செயற்படுகின்றது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. நீட் தேர்வு, ஹிந்தி மொழித் திணிப்பு என்று பா.ஜ. கவின் மீது மக்களுக்கு உள்ள கோபம், அதன் கூட்டணிக் கட்சியான அ.தி.மு. கவின் மீதும் பாய்கின்றது. அதுமட்டும் தான் தி.மு.கவின் பக்கம் காற்று அடிக்கக் காரணம் என்று கூறப்படு கின்றது. தி.மு.கவின் மீதான மக்கள் ஆதரவுக்குச் சொல்லும்படியான காரணம் எதும் இல்லை, அ.தி.மு.கவின் மீதான கோபத்தால் தி.மு.கவின் வாக்கு வங்கி அதிகரிக்கலாம் என்பது எதிர்பார்ப்பு. அதற்கேற்றால் போல் தி.மு.கவும் தங்கள் பரப்புரையில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டுக் காலத்தில் நடந்தவற்றை அள்ளித் தெளித்து வந்தனர். அதுவும் நல்ல பலனைத் தருகின்றது போலவே தெரிகின்றது.

ஜெயலலிதாவின் நெருங்கிய தோழி சசிகலா சொத்துக் குவிப்பு வழக்கில் சிறை சென்று மீண்டிருக்கிறார். அவர் இப்போது அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கிறார். அவரது இந்த அறிவிப்புக்கு அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.கவின் அழுத்தமே காரணம் என்று பேசப்படுகின்றது. இது அ.தி.மு.கவின் ஒரு பகுதியினருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியிருப்பதும், தி.மு.க. அலைக்கு காரணம் என்றும் சொல்லலாம்.

இந்தப் பிரதான கட்சிகள் இரண்டைவிடவும், தமிழகத்தில் இன்னும் இரு கட்சிகள் இந்தத் தேர்தலில் எதிர்பார்ப்பைக் கிளறிவிட்டுள்ளன. ஒன்று சீமானின் நாம் தமிழர் கட்சி, மற்றையது கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி. இந்த இரு கட்சிகளின் பரப்புரைக் கூட்டங்களில் திரண்ட மக்கள் கூட்டம், இந்த இரு கட்சிகளுக்கும் தேர்தலில் ஒரு மாற்றம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. மூன்றாவது இடத்துக்கு இந்த இரு கட்சிகளுக்கு இடையில் கடும் போட்டி இருக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி நாம் தமிழர் கட்சி பரப்புரைகளை மேற்கொண்டிருந்த நிலையில், ஒரு சினிமா நட்சத்திரம் என்ற முத்திரையுடன் கமல்ஹாசன் மக்கள் ஆதரவைத் திரட்டியிருந்தார். தற்போதைய நிலைமையைப் பார்த்தால் மக்கள் நீதி மய்யம், நாம் தமிழரை ஓரம் கட்டினாலும் ஆச்சரியமில்லை. இந்தச் சட்ட மன்றத் தேர்தலில் இளம் வாக்காளர்களின் 18 முதல் 19 வயது வரம்பிலான வாக்காளர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒன்பது லட்சம். அவர்களில் பெரும்பாலானவர்கள் மாணவர்கள் அல்லது வேலை செய்பவர்கள் அல்லது வேலை தேடிக் கொண்டி ருப்பவர்கள்.



பெரும்பாலான இளைஞர்கள் வேலை வாய்ப்பு உருவாக்கத்துக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். வேலைக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதை தவிர்க்க வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் தொழில் வளர்ச்சி முக்கியம் என நகர்ப்புற இளைஞர்கள் கருதுகின்றனர். கிராமப்புற இளைஞர்களோ விவசாயிகளின் வாழ்வாதாரம், கிராம அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். சில இளைஞர்கள் கட்சியின் கொள்கைகளையே நம்புகின்றனர். கொள்கையின் அடிப்படையில் வாக்குச் செலுத்துவது சிறந்தது என இவர்கள் கருதுகின்றனர். இவர்கள் ஒப்பீட்டளவில் புதிய கட்சிகளுக்கும், புதிய வேட்பாளர்களுக்கும் வாய்ப்பளிக்க விரும்புகின்றனர். இந்தத் தகவல்கள் அங்கு நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளில் வெளிவந்தவை. இவர்களின் இந்த முடிவும் தேர்தலில் தாக்கத்தைச் செலுத்தும்.

கருத்துக் கணிப்புகள் எதைச்சொன்னாலும், இறுதிக் கணத்தில் மக்கள் எடுக்கும் முடிவுதான் முடிவு. நாம் கணிக்கும் எதையும் மக்கள் தூக்கியெறியலாம். என்னதான் குத்துக்கரணம் அடித்து வேட்பாளர்கள் குரங்குவித்தை காட்டினாலும் மக்கள் ஏமாளிகள் இல்லைத்தானே? மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. மே மாதம் 2 ஆம் திகதி அது என்னவென்று தெரிந்துவிடும்.



# மணிக்கதை

O மௌனா

# வெறும் மண்

அந்தக் கிராமத்தின் ஒதுக்குப்புறமாக இருந்தது வற்றாக்குளம். அது அந்தக் கிராமத்தினதும் அயல் கிராமத்தினதும் வறிய மக்களின் வாழ்வாதாரத்துக்கான மூலாதாரமாக விளங்கியது.

அந்தக் குளத்தடி மண்ணின் களித்தன்மையின் உயர்தரம் பல கைவினைக் கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வியல் தேவைக்கான மூலப் பொருளான களி மண் தேவையை நிவர்த்தி செய்துகொண்டிருந்தது.

மக்களின் அன்றாடப் பாவனைக்குத் தேவையானதும் விசேட தேவைகளின் போது பயன்படுத்தக்கூடியதுமான பல்வேறு வடிவங்களிலான பானைசட்டி வகைகளையும் ஏனைய பாத்திரங்களையும் உற்பத்தி களிமண் கைவினைஞர்கள் செய்தார்கள்

செய் நேர்த்தி, கலை நேர்த்தி இரண்டும் அமைந்த அந்தப் பொருள்களுக்கு மக்களிடையே மிகுந்த வரவேற்பு இருந்தது.

அதே ஊரில் மற்றொரு கைவினைக் கலைஞன் அதே களி மண்ணைப் பயன்படுத்தி பல்வேறு தெய்வ உருவங்களை உருவாக்கினான். அந்தச் சிலைகள் மக்களின் வணக்கத்துக்குரியவை ஆகின.

இன்னொருவன் அதே மண்ணைப் பயன்படுத்தி செங்கற்களை உருவாக்கும் ஆலை ஒன்றை அமைத்தான். அவனது உற்பத்திகள் கட்டடங்களாயின.

வேறொருவனும் பானைகளை வேறுதரத்தில் செய்தான். அவை கடம் என்ற பெயரில் தாள இசை வாத்தியக் கருவிகள் ஆயின. பலர் அதனை வாங்கிச் சென்று நாட்டின் வெவ்வேறு இடங்களில் தம் விரல்களின் வித்தகத் தன்மையை பயன்படுத்தி இசைக் கோலமிட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஒரே குளத்து மண் எத்தனை வடிவங்களில் மாயா வித்தை காட்டுகின்றது?

இது மண்ணின் தன்மையா? மனிதனின் தகைமையா? எல்லாமே வியப்பாக இருந்தது.

குளத்தங்கரை ஓரமாக நின்ற ஒரு பெருமரத்தில் கூடுகட்டியிருந்த பறவை ஒன்று இவற்றை வியப்புடன் அவதானித்த வண்ணம் தன் இணையிடம் கூறியது.

"என்ன அதிசயம் ஒரே மண்ணில் இருந்து இத்தனை வடிவங்களும், தன்மைகளும், அவற்றுக்கான பெறுமதியும்.. இது எப்படி சாத்தியமாகிறது...?



இணைக்கும் இது விடை கூற முடியாத வியப்பான கேள்வியாகவே இருந்தது.

அந்த வியப்பு மௌனமான சூழ்நிலையைத் தோற்றுவித்தது. மரத்தின் நிழலில் படுத்திருந்த ஒரு தேசாந்திரியான துறவி எதையோ மனதிற் கொண்டவராக ...

"மண் தான் எல்லாமே...! மண்ணில் தான் எல்லாமே...! மண்ணாவதும் எல்லாமே! வாழ்வது மாயம்! மண்ணாவது திண்ணம் ...." என நெடுமூச்சுடன் சொன்னார்

பறவைகளுக்கு அது புரிந்திருக்க நியாயமில்லை.

சிலவேளைகளில் குளத்து மண்ணுக்கு அது தெரிந்திருக்கக்கூடும். போர் நடந்து முடிந்த நாளொன்றின் பின் குளத்தடியில் அள்ளிவந்து கொட்டப்பட்ட இடிபாடுகளின் குவியலுள் பானை, சட்டி, தெய்வச் சிலைகள், செங்கல், கடம் என அனைத்துமே தூளாகி மண்ணுக்குள் கிடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்கு வந்தாலும் ஓயவில்லை ஒடுக்குதல்

○ சந்திப்பும் தொகுப்பும்: ப. பவதாரணி

உலக அரசியலில் பெண்களின் தலைமைத்துவம் வலுப்பெற்று வருகின்றது. சிறந்த ஆட்சியாளர்களாக பல பெண்கள் தம்மை முன்னிறுத்தி வருகின்றனர். ஆனால் இலங்கையில் குறிப்பாக ஈழத்து அரசியல் பரப்பில் பெண்களில் அரசியல் பிரதிநிதித்துவம் வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. கடந்த பொதுத் தேர்தல் முடிவுகளும் அதற்கு சான்று பகர்கின்றன.

அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் பொருட்டு 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அப்போதைய அரசு 25சதவீதமான இட ஒதுக்கீட்டை பெண்களுக்கு வழங்கியது. இதன் பெறுபேறாக பெண்கள் அரசியலில் உள்வாங்கப்படுவதற்கு அதிக சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆனால் மூன்று வருடங்கள் கடந்தும் உள்ளூராட்சி சபைகளில் உள்ள பெண்கள் பெரிய அளவில் சமூகத்துக்கு அறிமுகமானவர்களாக இல்லை. அவர்களது குரல்கள் சமூகத்தில் பலமான ஒலிக்கவில்லை. இதற்கு என்ன காரணம்?

கடந்து வந்த அவர்களுடைய பாதையில் அவர்கள் எதிர்கொண்டுள்ள சவால்கள் எவை என்பதை அறியும் பொருட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் அங்கம் வகிக்கும் பெண் உறுப்பினர்கள் பலருடனும் உதயன் - சஞ்சீவி நடத்திய கலந்துரையாடல் இங்கு வாசகர்களுக்காகத் தொகுத்துத் தரப்படுகின்றது.

### ஒதுக்கீட்டாலேயே சந்தர்ப்பம்

"இந்த முறை பெண்களுக்கு 25சதவீத ஒதுக்கீடு இருந்ததால் எங்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. பொதுவாக போனஸ் ஆசனங்களை பெண்களுக்கு கொடுக்க ஆண்கள் விட மாட்டார்கள். ஆனால் இந்த முறை போனஸ் ஆசனங்களை பெண்களுக்கு வழங்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்ததால் எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் சபையின் நிதிப் பங்கீடுகளின் போது, "போனஸ் சீட்காரர் வென்று வரவில்லை தானே? அதனால் அவர்களுக்கு கொடுக்கக்கூடாது" என்ற பிரச்சினைகளும் சபையில் உள்ளன. அதேபோல நாம் பெண்களுக்கு நிதி ஒதுக்க முயற்சித்தால் அல்லது ஏதும் குழுவொன்றைத் தொடங்க முயற்சித்தால் "இருங்கோ இருங்கோ இதெல்லாம் பிறகு பார்ப்பம்" என்று அடித்து அமத்தும் போக்கு சபையின் ஆண் உறுப்பினர்களிடம் உள்ளது"

### 50 வீத ஒதுக்கீடு தேவை

" பெண்கள் வந்து என்ன செய்யப் போகிறார் கள் ஆண்களால் தான் எல்லாம் செய்ய முடியும் என்ற நிலை ஆதி காலத்திலிருந்தே உள்ளது. நாங்கள் அதை மாற்ற வேண்டும். மக்களின் மத்தியில் தான் மாற்றம் வர வேண்டும். இந்தத் தேர்தல் முறை திரும்பவும் வந்தால் நல்லம். ஆனால் 50 வீதமாவது பெண்களுக்கான ஒதுக்கீடு இருக்க வேண்டும். நாங்கள் இதற்கு முன்னர் அரசியலில் ஈடுபடவில்லை.

இதனால் மக்களுக்கு எங்களைப் பற்றித் தெரியாது. இதனால் வாக்குகள் குறைந்ததைப் பற்றி நாங்கள் கவலைப் படக் கூடாது"

### பேசக்கூட விடமாட்டார்கள்

" நாங்கள் கதைக்க வெளிக்கிட்டால் எங்களுடைய கருத்தை ஏனைய ஆண் உறுப்பினர்கள் செவிமடுக்க மாட்டார்கள். நாங்கள் கதைக்கும் போது அவர்கள் தங்களுடைய பாட்டில் கதைத்துக் கொண்டிருப்பினம். அப்படிக்கூடக் கதைத்தால் இருங்கோ இருங்கோ காணும் காணும்என்று சொல்லி இருத்தி விடுவார்கள். இது தான் நடக்கும். சபையில் கதைப்பதை மீடியாவுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற விடயமும் எங்களுக்குத் தெரியாது. நாங்கள் அரசியலுக்கு புதுசு. நாங்கள் சபையில் கதைத்தால் சரி என்று இருப்போம். ஆண்கள் சிறிய விடயத்தைச் செய்தாலும் அதைப் பெரிதுபடுத்திக் காட்டுவார்கள். ஆனால் நாங்கள் பெரிய விடத்தைச் செய்தாலும் அதை வெளிப்படுத்தாமல் இருக்கிறோம். அரசியலில் எங்களை இறக்கிய பின்னர் எங்களுக்கான எந்த ஆலோசனைகளும் எங்களுக்கு தரப்படுவதில்லை. 25 சதவீத ஒதுக்கீட்டில் பெண்களைப் போட வேண்டும் என்ற கட்டாயத்திலேயே நாங்கள் உள்வாங்கப்பட்டோம் "




### பயந்தால் முன்னேற முடியாது

"என்னைப் பொறுத்தவரையில் நான் அரசியலுக்கு வருவதற்கு தயாரானபோது என்னுடைய ஒரு சகோதரரைத் தவிர ஏனையோர் போக வேண்டாம் என்றே சொன்னார்கள். நான் அரசியலிலும், சமூக சேவையிலும் இருந்த ஈடுபாட்டால் என்னுடைய தற்துணிவிலேயே நான் அரசியலுக்கு வந்தேன். ஆனால் தற்போது என்னுடைய கணவர் எனக்கு ஆதரவு தருகின்றார்.

தற்போது பெண்கள் எங்களைப் பார்த்து ஆசைப் பட்டு அரசியலுக்கு வர விரும்புகின்றனர். நாங்கள் எதிர்ப்புகள் சவால்களுக்கு பயந்தால் முன்னேற முடியாது. அதேவேளை நாம் தேர்தலில் போட்டியிட பெயர் கொடுத்ததன் பின்னர் எம்முடைய உறவினர்கள் உங்களுக்கு வேற வேலை இல்லையோ என்றே எம்மைக் கேட்டனர்"

"பெண்கள் என்ற ரீதியில் எங்களுக்கு தேவையில்லாத பிரச்சினைகள் வரலாம் என்ற பயத்தில் நாங்கள் சமூக ஊடகங்களையும் பயன்படுத்துவதில்லை. எங்களுக்கு அவை தொடர்பான பூரணமான அறிவும் இல்லை. நாங்கள் வீட்டுப் பொறுப்பிலிருந்து சமூகம் வரை எல்லாவற்றையும் சேர்த்து பார்க்க வேண்டிய தேவை உள்ளதால் இவற்றில் நேரத்தை செலவிடவும் முடியாதுள்ளது. பெண்கள் என்பதால் எங்களுக்கு எங்கு அடித்தால் வலிக்கும் என்பது தெரியும். இதை வைத்தே எங்களை விழுத்த முடியும். ஆண்களுக்கு அப்படியில்லை. எவ்வளவு விமர்சனங்கள் இருந்தாலும் அவர்கள் எதிர்கொள்ளுவார்கள். இவை தொடர்பில் எங்களுக்கு பயிற்சிகள் தரும் போது நாங்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த முடியும்.

### பெண் பிள்ளைகள் அரசியலில் ஈடுபட...

"நான் என்னுடைய பெண்பிள்ளையைத் திருமணத்துக்கு முன்னர் அரசியலில் ஈடுபட அனுமதிக்க மாட்டேன். அரசியலில் ஈடுபடும் போது பலருடன் பழக வேண்டி வரும். இது அவர்களின் பிற்கால வாழ்க்கையைப் பாதிக்கும். திருமணத்துக்கு பின் அது அவருடைய கணவரைப் பொறுத்தது. ஆண் பிள்ளைகளை வேண்டுமென்றால் அனுமதிக்கலாம்" என்கிறார் ஒரு உறுப்பினர்.

"நான் என்னுடைய பெண் பிள்ளையை சிறு வயதிலிருந்தே வெளி உலகத்துக்கு கொண்டு வந்து வளர்ப்பேன். நாங்கள் பிள்ளையைப் பொத்திப் பொத்தி வைத்திருந்து வளர்த்தால் பிள்ளைக்கு நன்மை எது தீமை எது என்று தெரியாது.

என்னுடைய பிள்ளை வளர்ந்த பின் தான் அரசியலில் ஈடுபட விரும்பினால் நான் நிச்சயம் அனுமதிப்பேன். நான் அரசியலுக்கு வந்த பின்பு என்னுடைய மகள் என்னைப் பார்த்து இப்போது துணிந்து செயற்படுகிறார்" என்று இன்னொரு உறுப்பினர் நம்பிக்கையோடு சொல்கிறார்.

### மாற்றம் வருமா?




எதிர்காலத்தின் பெண்கள் அதிகம் அரசியலில் ஈடுபட வேண்டும் என்றால் முதலில் அரசியல் பயம் இல்லாமல் போக வேண்டும். பெண் பிள்ளைகளைப் பெற்றால் திருமணம் செய்து கொடுத்து கரை சேர்க்கும் வரை சுமையாகப் பார்க்கும் மனநிலை மாற வேண்டும்.

பெண்களுக்கு தற்துணிவை ஏற்படுத்தி வந்தால் அவர்களுக்கு எதையும் சமாளிக்கும் திறன் வரும். ஆண்களுக்கு பெண்கள் தொடர்பில் இருக்கும் மனநிலை மாற வேண்டும்" என்று எல்லோரும் ஒரே குரலில் சொல்லி முடித்தார்கள். அவர்கள் எதிர்பார்க்கும் மாற்றம் வருமா?

**எதிர்காலத்தின் பெண்கள் அதிகம் அரசியலில் ஈடுபட வேண்டும் என்றால் முதலில் அரசியல் பயம் இல்லாமல் போக வேண்டும். பெண் பிள்ளை களைப் பெற்றால் திருமணம் செய்து கொடுத்து கரை சேர்க்கும் வரை சுமையாகப் பார்க்கும் மனநிலை மாற வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெனிவாத் தீர்மானமும் பின்னும்..!

○ நிலாந்தன்

**2009** ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் வலைஞர்மடம் தேவாலயத்தை மையமாகக் கொண்டு மருத்துவர்களும் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் இயங்கிக் கொண்டிருந்த ஒரு காலகட்டம். மாதா கோயிலின் பங்குத்தந்தையாக அமரர் அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் இருந்தார். மாதா கோயில் வளாகத்தில் ஒரு பெரிய பதுங்குகுழி இருந்தது.அதைத்தான் மருத்துவர்களும் மதகுருமார்களும் கன்னியாஸ்திரிகளின் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்தி வந்தார்கள்.கடைசிக்கட்டப் போரில் கட்டாய ஆட்சேர்ப்பில் இருந்து தப்பி வந்தவர்களுக்கு வலைஞர் மடம் தேவாலயம் ஒரு புகலிடமாகவும் இருந்தது. அந்நாட்களில் அந்தத்தேவாலயம் ஓர் ஊழிக் காலத்தின் சமூக இடையூடாட்ட மையமாகச் செயல்பட்டது.மாத்தளன் துறைமுகமும் வைத்தியசாலைகளும் அந்த மக்களுக்கான அனைத்துலக வாசலாகக் காணப்பட்டன.

அக்கால கட்டத்தில் வலைஞர்மடம் தேவாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த 'மோற்றலோ' தொலைபேசியில் இருந்து சில சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் வெளி உலகத்தோடு தொடர்பு கொண்டார்கள். வன்னியில் இருந்து வரும் தொலைபேசி அழைப்புகளை வன்னிக்கு வெளியே இருந்தவர்கள் எடுப்பதற்கு தயங்கிய ஒரு காலகட்டம் அது. அப்பொழுது மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக இருந்த இராயப்பு ஜோசப் ஆண்டகை வன்னியிலிருந்து வந்த அழைப்புக்களை ஆர்வத்தோடு செவிமடுத்தார். அப்படியொரு தொலைபேசி உரையாடலின்போது ஒரு சிவில் சமூகப் பிரதிநிதி அவரிடம் பின்வருமாறு கூறினார்..."இந்த யுத்தம் ஓர் இனப்படுகொலையில் முடியப்போகிறது. மீனைப் பிடிப்பதற்கு கடலை வடிக்கும் உத்தியை இந்த அரசாங்கம் கையாண்டு வருகிறது. எனவே மீனைப் பிடிப்பதற்காக கடலைப் பிழியும்பொழுது அது நிச்சயமாக ஒரு பேரழிவாகவே முடியும். அதைத் தடுக்க வேண்டும்"என்று..அப்பொழுது ஆயர் திரும்பி கேட்டார் "அப்படிஒரு நிலைமை வந்தால் பெருந்தொகையான மக்கள் இறப்பார்களா?"என்று. "ஆம் குறைந்தது 30 ஆயிரம் பேராவது உயிரிழக்கும் ஒரு நிலைமை ஏற்படலாம் "என்று அந்த செயற்பாட்டாளர் சொன்னார். ஆயர் "ஆண்டவரே" என்றார்." அதை எப்படி தடுப்பது?" என்று கேட்டார்.

அப்பொழுது "நடைமுறையில் இருக்கும் ஒருதலைப்பட்சமான பாதுகாப்பு வலயத்துக்குப் பதிலாக இரு தரப்பு பாதுகாப்பு வலயத்தை உருவாக்கவேண்டும். அதை மூன்றாவது தரப்பு மேற்பார்வை செய்ய வேண்டும்.அப்படி ஒரு முத்தரப்பு உடன்படிக்கை உருவாக்கப்பட்டால் பேரழிவை தடுக்கலாம்" என்றும் அந்த செயற்பாட்டாளர் சொன்னார்.அப்பொழுது உயர் பாதுகாப்பு வலயங்கள் மரணப்பொறிகளாக மாறிக்கொண்டிருந்தன. அந்த உயர் பாதுகாப்பு வலயங்களை அரசாங்கமே ஒரு தலைப்பட்சமாக அறிவித்திருந்தது. அந்தப் பாதுகாப்பு வலயங்கள் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்ல. அதிலும் குறிப்பாக மூன்றாவது தரப்பு ஒன்றின் கண்காணிப்பு அல்லது மேற்பார்வை அந்தப்பாதுகாப்பு வலையங்களுக்கு இருக்கவில்லை. இதுதான் இறுதிக்கட்ட போரில் நிகழ்ந்த அழிவுக்கு முக்கிய காரணம்.


எனவே "இரண்டு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்றாவது தரப்பின் மேற்பார்வையோடு கூடிய ஒரு பாதுகாப்பு வலயத்தை அமைக்குமாறு நீங்கள் கேளுங்கள் "என்று அந்தச் செயற்பாட்டாளர் ஆயரிடம் கேட்டார். "அந்த வேண்டுகோளை நான் கொழும்பில் உள்ள தூதரகங்கள் மற்றும் சம்பந்தபட்டஅதிகாரிகளிடம் முன்வைக்கிறேன். நானே நேரடியாக சென்று சம்பந்தப்பட்டவர்களை சந்தித்து அப்படியொரு முத்தரப்பு உடன்படிக்கைக்குரிய சாத்தியப்பாடுகள் குறித்து உரையாடுகிறேன்" என்று ஆயர் சொன்னார்.வாக்குறுதி அளித்தபடி அவர் கொழும்புக்கு போய் தூதரக அதிகாரிகளையும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளையும் சந்தித்தார். ஆனால் அவர் எதிர்பார்த்ததைப்போன்றதொரு பாதுகாப்பு வலயத்தைபோரின் இறுதிக்கட்டம் வரையிலும் உருவாக்க முடியவில்லை.

அப்பொழுது மட்டுமல்ல அதற்குப்பின்னரும் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு பாதுகாப்பும் இல்லை, நீதியும் கிடைக்கவில்லை.

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக தமிழ் மக்கள் பொருத்தமான வெற்றிகள் எதையும் பெறவும் இல்லை. தான் நேசித்த மக்கள் கடந்த 12 ஆண்டுகளாக தொடர்ந்தும் பொருத்தமான வெற்றிகளை பெறவில்லையே என்ற கவலையோடுதான் ஆயர் இராயப்பு ஜோசப் கடந்த புதன்கிழமை உயிர் நீத்திருப்பாரா?

கடைசியாக நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானமும் அதன் உடனடி விளைவுகளும் தமிழ் மக்கள் வெற்றிபெறத் தவறியதைக் காட்டுகின்றன. உள்நாட்டில் கூட்டமைப்பும் புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பில் சில அமைப்புகளும் கூறுவதுபோல அது ஒரு மகத்தான வெற்றியா?

குறிப்பாக புதிய தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கும் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான பொறிமுறை குறித்து மிகையான நம்பிக்கைகள் கட்டி எழுப்பப்படுகின்றன.அது சிரியாவில் உருவாக்கப்பட்ட ஒரு பொறிமுறை போன்றது அல்ல. சிரியாவில் அவ்வாறு உருவாக்கப்பட்ட பொறிமுறை ஐ நா பொதுச்சபையின் கீழ் உருவாக்கப்பட்டது. எனினும் அது கூட ஒரு கட்டத்துக்கு மேல் தேங்கி நின்றுவிட்டதாக இப்பொழுது சுட்டிக் காட்டப்படுகிறது. அதே சமயம் புதிய ஐ நா தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கும் பொறிமுறை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குட்பட்டதாகவே இயங்கும். அப்படி என்றால் மனித உரிமைகள் பேரவைக்குள்ள அத்தனை வரையறைகளையும் அது கொண்டிருக்கும். அதன்படி ஒரு நாட்டுக்குள் அந்த நாட்டின் அனுமதியின்றி இந்த விசாரணைப் பொறிமுறை செயற்பட முடியாது. எனவே இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் நாட்டுக்குள் இறங்கி ஆதாரங்களை திரட்ட அந்தப்பொறிமுறையால் முடியாது. நாட்டுக்கு வெளியே இருந்தபடிதான் அதைச் செய்யமுடியும்.



இப்பொறிமுறை மூலம் திரட்டப்படும் சான்றுகளும் சாட்சிகளும் இலங்கைத்தீவின் அரச படை களுக்கு எதிராக ஒரு நீதி விசாரணையின்போது பயன்படுத்தத்தக்கவை . இலங்கை அரசபடைகளுக்கு எதிரானது என்பது அதன் இறுதி விளைவை கருதிக்கூறின் இப்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துக்கு எதிரானது தான். அப்படிப்பார்த்தால் தன்னை விசாரிப்பதற்காக ஆதாரங்களை திரட்டும் ஒரு பொறிமுறையை எந்த அரசாங்கமாவது தனது நாட்டின் எல்லைக்குள் நுழைய அனுமதிக்குமா? இதுதான் கேள்வி.

எனவே மேற்படி பொறிமுறை இலங்கைக்குள் இறங்கி வேலை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்கப்போவதில்லை. அப்படியென்றால் நாட்டுக்கு வெளியே இருந்தபடிதான் தகவல்களைத் திரட்ட வேண்டியிருக்கும். அப்படித்தான் இதற்கு முன்னரும் சில ஆவணங்கள் நாட்டுக்கு வெளியில் இருந்து தொகுக்கப்பட்டன. அவ்வாறு நாட்டுக்கு வெளியே இருந்து தகவல்களைத் தொகுக்கும் பொழுது அதுவிடயத்தில் புலம்பெயர் தமிழ் சமூகம் தான் அதிகம் வேலை செய்ய வேண்டியிருக்கும். இதற்குமுன் தொகுக்கப்பட்ட ஆவணங்களுக்காகவும் புலம்பெயர்ந்த தமிழர்களே அதிகம் உழைத்தனர். எனவே புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் ஒத்துழைப்பின்றி அந்தப் பொறிமுறையை முன்னெடுக்க முடியாது. இதை சரியாக ஊகித்த காரணத்தால்தான் இலங்கை அரசாங்கம் ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டகையோடு சில நகர்வுகளை முன்னெடுத்திருக்கிறது.

புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்பில் உள்ள சில அமைப்புகளையும் தனி நபர்களையும் பட்டியலிட்டு தடை செய்திருக்கிறது . இப்பட்டியலில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்கள் பல ஏற்கனவே தடை செய்யப்பட்ட பட்டியலில் இருந்து 2015 இல் தடைநீக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது. இதில் தற்பொழுது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 27 பேரின்பெயர்களும் உண்டு.தடை செய்யப்பட்ட உலகத் தமிழர் பேரவையின் தலைவரான கத்தோலிக்க மதகுரு இப்பொழுது யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார். அரசியல் மற்றும் திருச்சபை நடவடிக்கைகளிலிருந்து பெருமளவுக்கு ஓய்வுபெற்று விட்ட அவரை யாழ்ப்பாணத்தின் சாலைகளில் சைக்கிளில் திரியக் காணலாம்.

கடந்த மைத்திரி- ரணில் அரசாங்கத்தில் ஒரு தொகுதி புலம்பெயர்ந்த அமைப்புக்கள் மற்றும் நபர்கள் மீதான தடைகள்அகற்றப்பட்டன. இவ்வாறு தடை நீக்கப்பட்ட அமைப்புகளில் பெரும்பாலானவை 30/1 ஐ.நா. தீர்மானத்துக்குஆதரவானவை என்றும் ஒரு அவதானிப்பு உண்டு. இதன் மூலம் புலம்பெயர்ந்த தமிழர்களை பிரித்தாள முடியும். அதோடு அவர்களை தாயகத்துக்கு வர அனுமதித்து இங்குள்ள கள யதார்த்தத்தோடு தொடர்புற வைப்பதன் மூலம் நாட்டுக்கு வெளியே பிரிவேக்கத்தோடு அவர்கள் முன்னெடுக்கும் அரசியலின் தீவிரத்தை தணிக்கலாம் என்றும் மேற்கு நாடுகளும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் சிந்தித்தன. அதைத்தான் கஜேந்திரகுமார் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.அதில் அவர் சில அமைப்புகளின் பெயர்களை குறிப்பிட்டு இந்த அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்தின் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்பவை என்றும் சுட்டிக்காட்டினார். இந்த அமைப்புகளில் சில இம்முறையும்ஜெனிவா தீர்மானத்தை உருவாக்க கருக்குழுநாடுகளோடு சேர்ந்து உழைத்திருக்கின்றன என்பதைத்தான் அவை நடத்திய பத்திரிகையாளர் மாநாடுகள் வெளிப்படுத்துகின்றன. ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் மேற்படி அமைப்புகள் ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலில் தீர்மானத்தை ஒரு வெற்றியாக காட்டுவதையும் அதிலுள்ள சில விடயங்களை முக்கிய முன்னேற்றங்களாக காட்டுவதையும் காணமுடிகிறது.13 ஆவது திருத்தம் வடக்கு கிழக்கில் மாகாணசபை தேர்தல் தீர்மானத்தில் தமிழ் என்ற வார்த்தை இணைக்கப்பட்டமை; சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான ஒரு பொறிமுறை போன்றவையே அவர்கள் சுட்டிக்காட்டும் முன்னேற்றங்கள் .

(09ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தாராளவாதி’



○ ம.பா. மகாலிங்கசிவம்

ஒரு குடும்பத்திலே கணவன் - மனைவி ஆகிய இருவரும் சண்டைசச்சரவின்றி மிகவும் ஒற்றுமையாக இருந்தனர். அந்த ஒற்றுமைக்கான காரணத்தைக் கணவரின் நண்பர் கணவரிடம் கேட்டார். அதற்குக் கணவர் “எங்கள் குடும்பத்தில் யார் எதைக் கவனிப்பது என்பது தொடர்பாகத் தெளிவான வரையறை உள்ளது அதுவே ஒற்றுமைக்குக் காரணம் என்றார். நண்பருக்கு எதுவும் விளங்கவில்லை. “ உங்கள் வரையறை பற்றி ஓர் உதாரணம் சொல் பார்ப்போம்” என்று நண்பர் கேட்டார். கணவர் சொன்னார் என் மனைவி கல்வித் தகைமை என்னினும் குறைந்தவள். அதனால் சிறிய விடயங்க ளில் அவள் முடிவெடுப்பாள். நான் கலாநிதிப்பட்டம் பெற்றவன். அதனாற் பெரிய விடயங்களில் நான் முடிவெடுப்பேன்” என்றார்.

நண்பன் மீண்டும் சிறிய விடயம் என்றால் என்ன? பெரிய விடயம் என்றால் என்ன? என்று கேட்டான். நண்பர் “சிறிய விடயம் என்பது எனது சம்பளத்தில் எனது பெற்றோருக்கு எவ்வளவு கொடுப்பது? அவளது பெற்றோருக்கு எவ்வளவு கொடுப்பது? எனக்கு எவ்வளவு பணத்திற்கு உடை எடுப்பது? அவளுக்கு எவ்வளவு பணத்துக்கு உடை எடுப்பது? போன்றவை.

பெரிய விடயம் என்றால், அமெரிக்கா ஈராக் மீது படையெடுத்தால் அமெரிக்காவையா ஈராக்கையா ஆதரிப்பது? அமெரிக்கத் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பையா, ஜோ பைடனையா ஆதரிப்பது முதலியவை” என்றார். இக்கதை குடும்பத்திற் கணவரைவிட மனைவியின் கை ஓங்கியுள்ள நிலையை நகைச்சுவையாகப் பதிவு செய்கிறது.

இதேவேளை தம்மைச் சிறந்த கல்வியாளர்களாகவும், அரசியல் வாதிகளாகவும் காட்டிக் கொள்ளும் மேட்டுக்குடி மனப்பாங்குள்ள சிலர் உள்ளூர் விட யங்களில் அக்கறை செலுத்தாது, உலக விடயங்களில் அக்கறை செலுத்தாது உலக விடயங்கள் பற்றிக் கதைத்துக் கதைத்தே காலங் கடத்தும் நிலையைக் குறியீட்டுப் பாங்கில் உணர்த்துவதாகவும் இக்கதை உள்ளது.

இவ் விடயம் தொடர்பான சி.சிவசேகரத்தின் ‘ஏகலைவ பூமி’ என்ற கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற ‘தாராளவாதி’ என்ற கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகிறது.



சி.சிவசேகரம்

சி.சிவசேகரம் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீட முதுநிலை விரிவுரையாளர். இமயவரம்பன் என்ற புனைபெயரிற் கவிதைகளை எழுதியதோடு அறிவியல், இயந்திரப் பொறியியல், எழுத்துச் சீர்திருத்தம், நிறுத்தக் குறிகள், அரசியல் தொடர்பான துறைகளிற் பெருமளவான கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியவர். செப்பனிட்ட படிமங்கள், இன்னொன்றைப்பற்றி, நதிக்கரைமூங்கில், பாலை முதலியகவிதை நூல்கள்; பாட்டும் கூத்தும், சமூக விரோதி, இட்கிந்தை முதலிய நாடகத்துறை நூல்கள், குழந்தையும் தேசமும் என்றும் சிறுகதைத் தொகுப்பு என்பவற்றை வெளியிட்டவர்.



அவரது ‘தாராளவாதி’ என்னும் கவிதை உள்ளூரில் மக்கள், பிரச்சினைகளை எதிர்கொண்டு துன்புற்றுக் கொண்டிருக்க, அது பற்றிக் கவனம் செலுத்தாது உலக நாடுகள் பற்றி ‘வாய்புசத்தும்’ அரசியல் வாதி ஒருவரின் மேதாவித் தனத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது. அரசியல் வாதியாகவும் அதேவேளை தேயிலைத் தோட்டச் சொந்தக்காரராகவும் இருக்கும் ஒருவரைக் குறியீடாகக் கொண்டு இன்றைய அரசியலரங்கில் உழல்கின்ற பலரின் நிலையைப் படம் பிடிக்கின்றது.

**“ஓய்வாகத் தொந்தி சரியக்**
**கதிரையிலே சாய்ந்து புதைந்து**
**சாப்பிட்டது செமிக்கப்**
**பேசுவீர் உலக விவகாரம்”** என்ற கவிதைத் தொடக்கம் இத்தகையவர்களுக்கு அரசியல் ஈடுபாடு என்பது செமியாப் பாட்டு முயற்சியாகவே உள்ளதைக் காட்டு கிறது. அதுமட்டுமன்றித் தொழிலாளர்கள் பட்டினியால் வாடத் தாம் தாராளமாக உண்டும் குடித்தும் ஏப்பமிட்டும் மகிழ்கின்ற தோட்டத் தொழிலாளித் தலைவர்களின் செயற்பாடுகள் வாசகர் மனதிற் பதியும் வண்ணம் மிக நுட்பமாக வருணிக்கப்படுகின்றன.

**“இடையிடையே ஏப்பம் விடுவீர்**
**நெருப்பெடுத்து ஊதுவீர்**
**புகையிடையே அனல் உமிழ்வீர்**
**வாய்வெந்து போகாமற்**
**கிண்ணத்தில் ஊற்றி**
**உறிஞ்சித் தணிப்பீர்**
**மறுபடியும் தீமூட்டி**
**நெருப்பாய்க் கொதிப்பீர்”**

சிகரெட் புகைப்பதை நெருப்பெடுத்து ஊதுவீர் என்றும் நெருப்பை ஊதிய வாய் வெந்துபோகாமல் தடுக்கவே மதுவை அருந்துவீர் என்றும் கூறும் கவிஞரின் கற்பனை நயக்கத்தக்கதாகும்.

இவற்றுடன் மட்டும் அவர்களின் செயற்பாடுகள் நின்றுவிடவில்லை. உலக மக்களின் துன்பங்களுக்காகவும் மலையகத் தலைவர்களான தோட்ட முதலாளிகள் ஓங்கிக் குரல் கொடுக்கின்றனர். சிறிய லயன் அறைகளில் துன்புறும் தம்மக்களைக் கண்டுகொள்ளாத இவர்கள் சீமைச் சிறைகளில் வாடுபவர்களுக்காக வருந்துகின்றனர். ரஷ்யச் சுரங்கத் தொழிலாளர் காற்றோட்டம் அற்ற நிலையில் வேலை செய்தல், வியட்னாம் அகதிகள் மந்தைகள் போல் கப்பலில் ஏற்றப்படுதல், பிரேஸில் நாட்டுப் பிள்ளைகள் கல்வி வசதியற்றுக் கூலித்தொழிலில் ஈடுபடுத்தப்படுதல் என எல்லாவற்றுக்காகவும் பொங்குகின்றனர். ஆனால்,

**“மலையகத் தொழிலாளி**
**வீட்டு வசதி**
**தோட்டத்துப் பள்ளிகளில்**
**கல்வித்தரம் உயர்தல்**
**குறைந்த பட்சக் கூலியெனக்**
**கேட்டாற் பிசகு”** ஆகக் கொள்ளப்படும் அவல நிலை கவிஞராற் சுட்டப்படுகிறது.

**“விடியும் வரை**
**நீளமாய்ப் பேசுவோம்**
**உலக விவகாரம்”** என்றும் கவிதையின் இறுதிப் பகுதி மீண்டும் மலையகத் தலைவர்களின் போலித் தனங்களை வாசகர் முன்வைத்து மலையகத் தொழிலாளரின் துயரங்கள் தீர்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதே முதன்மையான தேவையாகும் எனக் குறிப்பாக உணர்த்துகிறது.

## தேன் கூடு

ஓய்வாகத் தொந்தி சரியக்
கதிரையிலே சாய்ந்து புதைந்து
சாப்பிட்டது செமிக்கப்
பேசுவீர் உலக விவகாரம்
இடையிடையில்
ஏப்பம் விடுவீர்
நெருப்பெடுத்து ஊதுவீர்
புகையிடையே அனல் உமிழ்வீர்
வாய் வெந்து போகாமற்
கிண்ணத்தில் ஊற்றி
உறிஞ்சித் தணிப்பீர்
மறுபடியுந் தீமூட்டி
நெருப்பாய்க் கொதிப்பீர்
சாய்ந்த உடம்பு
கதிரையிலே பெயராமல்
கண்களால் மின்னி
இடியாய் முழக்குவீர்

சீமைச் சிறைகளிலே
ஓரறைக்கு நாலுபேர்
அதிகம் என அறிவீர்
சீனச் சிறைகளிலே
சிற்றெறும்புத் தொல்லையென
ரஷ்யச் சுரங்கத்தில்
காற்றோட்டம் இல்லையென
வியட்னாம் அகதிகளை
மந்தைகள் போல் கப்பலிலே
ஏற்றுவது கொடுமையெனச்
சீறிச் சினப்பீர்
பிரேஸிலிலே பிள்ளைகட்குப்
பள்ளிப் படிப்பின்றிக்
கூலி உழைப்பில்
இறக்குகிற கொடுமைக்கு
எதிராகக் குரல் கொடுப்பீர்

தோட்டம் உமது
தேயிலையில் லாபமென
ஈட்டும் பொருள் உமது எனவே
மலையகத்துத் தொழிலாளி
வீட்டு வசதி
தோட்டத்துப் பள்ளிகளில்
கல்வித்தரம் உயர்தல்
குறைந்தபட்சக் கூலியெனக்
கேட்டாற் பிசகு
கேளாதீர் விடியுவரை
நீளமாய்ப் பேசுவோம்
உலக விவகாரம்

## என் தீராக் காதல்!



அமர்ந்திருக்கும் இருளுக்கு
தோளிடுக்கில் வாசம்
கிளையிலிருந்து மலர் விழுந்து
உதிர்வது கடக்கும் காலத்தில்
நிகழ்ந்து விடுவதுண்டு

என் பறவைகளுக்கு
நீ கூடு தருகிறாய்...
பிரக்ஞையற்ற என் ரோமக்கால்கள்
உன் தொடுதலில் சிலிர்த்தடங்கும்
சலங்கைப் பரல்கள்
வலுக்கட்டாயமாக திருப்பி
அனுப்பப்பட்ட சொற்களெங்கும்
பரவிக் கிடக்கும்

இந்த தீராக் காதலின் மோகம்
எதை விழுங்கிச் செரித்து
மோட்சமடையப்போகிறது
கருநீல அலைகளின் உப்புச்செறிவு
என் மீன்களின் தாகம் தீர்க்கும்.

கயூரி புவிராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மௌன மொழி 41 இற்கான கவிதைகள்

மூடப்பட்ட முகங்கள்
முடக்கப்பட்ட வீதிகள்
நிறுத்தப்பட்ட கல்வியகங்கள்
நிலை குலைத்த கற்றல் செயல்முறைகள்
பாழாகிப் போனது பள்ளிக்காலம் வாழ
பழகிக் கொள்ளுங்கள் இதனுடன் எனப்பல ஓலம்
கொடுவாக் கத்தி கொண்டு
கொல்லைப் புறத்தில் மீன் வெட்டி
கொஞ்சம் கொஞ்சம் சமையல் பழகுகிறேன்
கொரோனா எனும் கொடியவனால்

**ஆர்.சுகிர்தா**, மானிப்பாய்

எதிர்கால
இல்லத்து அரசி இவள் இன்று
இல்லத்து இளவரசியாய்
நாளைய
இல்லற இராச்சியத்தில்
அனைவரையும் ஈர்ந்திழுக்கும்
சமையல் கலையதில்
ஒவ்வொன்றாய்க்...
கற்பிக்கப் படுகிறதோ...?

**த.சிவா**
அல்வாய்.

**அசையசையும் கூந்தல் அள்ளி முடிந்து**
**உலையும் வேகும் கறியும் ஆக்க**
**சமையல் செய்யும் வளையல் கரங்கள்**
**விலையும் இல்லை உந்தன் பாசம்**
**விளையும் பயிரே துயரம் எதற்கு**
**அறிவின் சிகரம் விண்ணில் உயர்த்தும்**
**அடுப்படி தாண்டு படிப்பதில் தேடு**
**ஆணுக்கு நிகராய் அண்டம் போற்றும்**

**ஆர்.கார்த்திகாயினி**
வற்றாப்பளை

அருவாள் முனையில் காய்நறுக்கும்
சிறுமியே உன் அறிவால்
அறுக்கும் கனியை ருசிக்க காத்திருக்கிறது இவ் உலகு
வெள்ளி தட்டில் காய்கறி போல
உன் திறமை உனக்குள் இருக்கிறது
அதனை அறுத்தெறி வரும் துன்பத்தை
நீ. நீர் கொண்ட பாத்திரத்தில் அறிவு மூலம்
அலசி கண்டறி

**லோ.கம்சனா**
யாழ்ப்பாணம்

**பரிசு பெறும் கவிதை**

மருளும் விழிகள் குழி விழும் கன்னம்
ஒளிரும் நிலவாய் எழிலாய் வதனம்
தாயார் வழியில் தவழும் மகளாய்
வளையல் கொஞ்சும் பிஞ்சுக் கரத்தாள்
சமையல் கலையில் அறுசுவை படைப்பாள்
வீட்டுப் பணிபோல் நாட்டின் பணியும்
கனவாய் கொண்டு கடமையாற்று
பெண்ணே நீ தான் புவனத்தின் ஊற்று

**ர.மதுசுதன்**
வற்றாப்பளை

மீன்வெட்டும் மின்மினியே
வறுமையினால் பொறுமையுடன்
பொறுப்புடனே பணி செய்யும்
சுட்டித்தனமிழந்து
சுமை தாங்கியானாயோ
கெட்டித்தனமிருந்தும்
கிட்டவில்லை வாய்ப்புக்கள்
ஏழ்மை என்பதனால்
உன் விதி இது தானோ?

**வி.பி சிவேஸ்**
தண்ணீரூற்று

கண்ணம்மா எங்கே
உன் புன்னகை?
கூர் அரிவாள் கொடுத்தோர் யார் ?
யார் அறிவார் .
மனிதம் மரத்து போனது
ஆனால் நீ உயிர்த்து போனாய்
நீ தான் உலகத்தின் புதிய விதை
முளைத்து வா !
பாவையே உனக்காக
இந்த உலகம் காத்திருக்கிறது .

**அபிஷாயினி கிருஷாந்**
கொக்குவில்

பாவையவள் விரல்களில்
பக்குவமான கைவண்ணம்
பழகத்தில் வந்த கலையோ
பண்பாடு தந்த பாடமோ
படித்தால் மட்டும் போதாது
பலதிறன்கள் பயின்றிடவே
பருவத்து வாழ்வு வளமாகும்.

**ஔவை.**
கொடிகாமம்.

அக்கினி குஞ்சு கையில்
அரிவாள் மனை கொடுந்துயர்
பிஞ்சின் நெஞ்சின்
சுமையேற்றியது யார்
முள்ளிவாய்க்கால்
தந்த முடிவோ இது.....
கள்ளமற்ற நெஞ்சில்
எத்தனை கனதியோ
காலம் கடத்தும் தந்திரத்தில்....
கருகிப் போகுமோ இக் குருத்து.....

விழிகள் பேசும் அழகின் வதனம்
விடியல் பூவாய் மலர்ந்த மகளாய்
கருமை கூந்தல் அள்ளி முடித்து
இனிமை இதழ்கள் கோலம் காட்டும்
தாயாள் தோளில் படரும் கொடியாய்
சமையல் செய்யும் வளையல் கரங்கள்
மாந்தர் குலத்து மகுடத்து மணியாய்
மாண்புடன் வாழ்வாய் பல்கலை பயின்று

**ர.கவிதா**
வற்றாப்பளை

# பதுங்கியிருக்கும்...

(தொடர்ச்சி)

**வெடிபொருள்கள் எவ்வாறு வெடிக்கின்றன?**

மர்மப்பொருட்களை சிறுவர்களோ, பெரியோரோ அதனைச் சோதித்துப் பார்க்க முயல்வர். அதனால் ஏற்படும் ஆபத்தை அத்தருணத்தில் அவர்கள் சிந்திப்பது இல்லை. அவ்வகையில் அவர்கள் மர்மப் பொருள்களை,

- எறிந்து பார்த்தல்
- உடைத்துப் பார்த்தல்
- உருட்டி விடுதல்
- தீயில் போட்டுப் பார்த்தல்
- வயர்கள் அல்லது கம்பிகளில் பிடித்து இழுத்தல்
- மின்சாரத்தைச் செலுத்திப் பார்த்தல்
- அடித்தல்
- குத்துதல்
- பரிமாறி விளையாடுதல்
- பாகங்களைக் கழற்ற முனைதல்
- பாரமான பொருளை ஏற்றுதல்

என்பவற்றை செய்யும் போது அவை வெடிக்கக்கூடும்.

**வெடிபொருள்கள் வெடிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்களாக,**

- பல்வேறுபட்ட காயங்கள்
- சிறுகாயங்கள்
- பெருங்காயங்கள்
- எரிகாயங்கள்
- கிழித்துச் செல்லல்
- துளைத்துச் செல்லப்படல்
- அவயவங்கள் துண்டிக்கப்படல்
- உம் : கால் இழப்பு
- பாதத்துடன்;
- கெண்டைக்கால்;
- முழங்கால் உடன்;
- கை இழப்பு
- விரல்கள்
- மணிக்கட்டுடன்;
- முழங்கையுடன்;
- முழுமையாக
- புலன் உறுப்புக்கள் பாதிக்கப்படல், செயல் இழத்தல்
- அதிகளவு இரத்தப்போக்கு
- உள ரீதியான பல்வேறு பாதிப்புக்கள்
- சொத்து இழப்பு
- கோமா நிலையை அடைதல்
- மரணம் சம்பவித்தல்



என்பவற்றைச் சொல்லலாம்.

இவ்வாறு யுத்தம் நிறைவடைந்த பின்பும் வீழ்ந்தும், புதையுண்டும் காணப்படும் வெடிபொருள்களால் ஏற்படும் அபாயம் பற்றி அறிந்த நாம் எதிர்காலத்தில் ஏனையவர்களும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு உரிய விழிப்புணர்வு பெற்று இந்தத்தினத்தில் இருந்து வெடிபொருள்கள் தயாரித்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல், புதைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடாது அழகிய பூமித்தாயின் மடியில்மகிழ்வோடு வாழ்ந்திருப்போம்.

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**
**09.04.2021**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
**0773165555**

**கவிதைக்கு பரிசு 1000/-**

**42**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் திணைக்களப் பேச்சாளர் அஜித் ரோஹணவுக்கு....



ஆயுபோவன் மாத்தயா!

இடது கன்னத்திலை ஆரும் அடிச்சால் பயப்பிடாமல் வலது கன்னத்தையும் காட்டு எண்டு யேசு பிரான் சொன்னதா பைபிளிலை இருக்கு. ஆனால் யேசுபிரான் சொல லிப்போட்டார் எண்டதுக்காக எல்லாரும் அப்பிடி நடக்க முடியுமோ? அடி வாங்கிக்கொண்டு சும்மா நிக்கேலுமோ? அடிச்சால் திருப்பி அடிக்கலாம். சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றமாதிரி நாங்கள் நடக்க வேணும் எண்டதை வலு அடக்கமாயும் ஆழமாயும் நீங்கள் இப்ப சொல்லி இருக்கிறியள். உங்கடை உயிருக்கு ஆபத்துவாற மாதிரி பொலிஸ்காரர் அடிக்கினமோ? பயப்பிடாதையுங்கோ, திருப்பி அடி யுங்கோ எண்டு தைரியமாச் சொன்னதுக்காக உங்களுக்கு பொது மக்கள் சார்பிலை முதலிலை ஒரு நன்றி.

இப்ப ரண்டு நாளுக்கு முன்னம் பன்னிப்பிட்டியவிலை ஒரு பொலிஸ்காரர் ,ஒரு றைவரைப் பிடிச்சு அடிச்சு, அந்தாளைத் தள்ளி விழுத்தி அவருக்கு மேலை துள்ளிக் குதிச்சு விளையாடின விளையாட்டை முழு இலங்கையும் வீடியோவில பார்த்து அதிர்ந்து போச்சுது.

" என்னதான் அந்த றைவர் மோட்டுத்தனமா லொறியை ஓட்டினாலும் இப்பிடி ஈன இரக்கமில்லாமல் போட்டு மிதிக்கிறதோ" எண்டு அந்த வீடியோவைப் பார்த்த எல்லாருக்கும் கடும் கோபம்.

அந்தப் பிரச்சினைக்குப் பிறகுதான் " பொலிஸ்காரர் கைவைச்சால் பொதுமக்கள் தங்களை தற்காத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க உரிமை இருக்கு" எண்டு சொல லியிருக்கிறியள். ஒரு பொறுப்புள்ள அதிகாரி இப்பிடித்தான் இருக்க வேணும். கண்டவனையும் கண்டபடி சட்டத்தைத் தன்ரை கையிலை எடுக்க அனுமதிக்கக் கூடாது. விட்டால் தனக்குள்ள தனியான கோபதாபத்தை பொலிஸ்காரர் அப்பா வியளிலை தாளிக்க வெளிக்கிட்டு விடுவினம்.

சும்மா ஒரு கதைக்குச் சொல்லுறன். நடு றோட்டில 'புட் போல்' அடிச்சு விளையாடுற பொலிஸ்காரரிட்டை சட்டத்தைக் குடுக்கிறது எவ்வளவு ஆபத்து எண்டதை அந்த வீடியோவைப் பாத்தால் தெரியுதெல்லோ? குரங்கின்ரை கையில பூமாலை எண்டுறது இதைத்தான் போல. அப்ப உவையளே சட்டத்தையும் கையில எடுத்துத் தண்டனையையும் குடுத் தால் என்ன நடக்கும் எண்டு நினைக்க, ஈரல்குலை நடுங்குது. றோட் டிலை தனியாய்ப் போகப் பயமாக்கிடக்கு. நல்லவேளை இனி அப்பிடி பொலிஸ்காரர் சேட்டை விட்டால், அதில வைச்சே திருப்பிக் குடுக்க லாம்..அந்தப் பயத்தில பொலிஸ்காரரும் இனி தேவையில்லாமல் சனத்தோட மிண்ட மாட்டினம். இப்ப எங்கடை ஊருலகத்திலை நடக்கிற மண் கொள்ளையும், கஞ்சாக் கடத்தலும், மரம் வெட்டுறதும் ஒரு தனியாளாச் செய்யிற குற்றங்கள் இல்லை. கனபேர் சேர்ந்து ஒரு குழுவாவும் ஒரு சமூகமாகவும் அந்தக் குற்றங்களைச் செய்யிறதாத்தான் பேப்பரைப் பாக்க விளங்கிது. அப்பிடியான குற்றவாளியளை இப்பிடி குஸ்தி போட்டு பிடியுங்கோ.. ஒருத்தரும் வேண்டாமெண்டாயினம். ஆனா அப்பாவியள் மேலை கோபத்தைக் காட்டி சனத்திட்ட சாபத்தை வாங்காதையுங்கோ.

அன்புடன்,
அப்பாவி அன்னமுத்து

அவசரமா ஒரு கடுதாசி

---

அகமது ஃபைசல்

## கனவு தான் மூதற்பிறவி



தரையில் பாய் விரித்து உறங்குகிறேன். என்னுடன் வந்த கனவின் மேனியும் அருகிலே விழித்திருக்கிறது. யாரும் தனியே உறங்குவ தில்லை. உறங்குகின்ற எல்லோருடனும் கனவின் மேனி துணைக்கு இருந்தே தீரும். "விர் விர்ரென பறந்து வந்து, எனது கனவின் மேனி யெங்கும் தங்கிவிட்டன காட்டுத் தும்பிகள். உதட்டைக் கடித்துக்கொண் டும், கண்களை இறுக மூடிக்கொண்டும், முகத்தைச் சுழித்துக்கொண்டும் உறங்கிக் கிடந்தேன். கனவின் மேனி என் உடலைத் தடவிக்கொடுத் தது.

வானம் கீழே இறங்கி, கனவின் மேனியை மூடி, காட்டுத் தும் பிகளின் அடாவடித்தனங்களிலிருந்து என்னைக் காப்பாற்றியது. கனவின் மேனியழகைக் கண்ட ஆகாயம் நட்சத்திரங்களையும், மேகங்களையும் என் கண்கள் மீது பரப்பி கனவின் மேனியழகைக் கூடிக் கதைக்கத் தொடங்கிற்று. உறக்கம் கலைந்து சாமத்தில் கண்க ளைத் திறந்து பாயிலே எழுந்து அமர்ந்து விடுகிறேன்.

ஆகாயம் தலையில் தட்டுகிறது. நட்சத்திரங்கள் என் மடியில் விழுகின்றன. மேகங்கள் பாயிலே மிதக்கின்றன.

ஆகாயத்தில் பறந்து வந்த ஒரு வெள்ளைப் பறவை கனவின் மேனியைக் கொத்திச் செல்கிறது. எனது அறையில் இருக்கும் எல்லாத் தளபாடங்களின் மீதும் மற்றும் சுவரில் தொங்கும் இலை ஓவியங்கள் மீதும் அமர்ந்த காட்டுத் தும்பிகள் தங்கள் கூத் தைக் காட்டுகின்றன. எங்கோ இருந்து அறைக்கு வந்த குளிர் காற்று என்னுடல் மீது முளைத்துப் படரு கிறது. எந்த நாட்டு விமானமோ எனது நாட்டுக்குள் வந்து தரையிறங்கும் சத்தம், காட்டுத் தும்பிகளின் ராக்கூத்து என் காதுகளை வெடிக்கச் செய்கிறது. காதுகளை இறுகக் கைகளால் பொத்துகிறேன். ஆகாயம் மேலே எழுகிறது.

என் மடியில் ஒரு நட்சத்திரம் பெரும் ஒளியைச் சிந்தியவாறு கிடக்கிறது. இனி நான் உறங்கலாமா? விழித்திருக்கலாமா? நட்சத்தி ரத்தைக் கேட்கிறேன். அது மேகங்கள் கரைவதைப் பார்த்துக்கொண் டிருக்கிறது. என்னைச் சுற்றிலும் நீலம் சிந்திக் கிடக்கிறது. அது கன வின் மேனியின் காயங்களில் இருந்து வந்த நீலம்தான் என்று நம்பி னேன். அதுவுமில்லை. வானத்தின் நீலம்தான் என நம்பினேன். அதுவுமில்லை. காலையில்தான் கண்டேன் வாசலில் ஒரு நீல ரோஜா பூத்திருப்பதை.

என் முதற்பிறவி கனவுதான். நான் என் தாயின் கனவு. நீங் களும் உங்கள் தாயின் கனவே. ■

---

## வித்துவான் பதில்கள்!



சம்சாரத்தின் ஆழத்தை அறிய முடியவில்லை என்கின்றானே என் நண்பன்...?

கவிதரன், கோப்பாய்.

**தலையணை மந்திரத்தின் அடியாக அறிய முயலுங்கள்.**

கட்டாக்காலிகளைத் திருத்துவதற்கு என்ன வழி வித்தூ?

கனகாம்பிகை, முள்ளியவளை.

**கட்டாக்காலி நாம்பன்களுக்கு நாணயம் பூட்டுவதை விட வேறும் ஏதோ செய்கிறார்களே?.**



வித்தூ... மெலிந்த தோற்றமுடைய எனக்கு ஆனைக்குட்டிசைஸில்பெண்பார்க்கின்றாரே என் அப்பா...!

டினோஜன், உப்புக்குளம்.

நீங்கள் ஆண் என்பதால் பாதிப்பு குறைவு.



வித்தூஸ்... எனக்கு உதவி செய்வதாய் நடிக்கும் எனது தோழனே எனக்கு வில்லனாக மாறிவிடுவான் போலிருக்கின்றதே?

முரளி, உடுப்பிட்டி

**நீங்கள் இன்னும் கடிதம் கொடுக்கும் காலத்திலேயே இருக்கிறீர்களா? நீங்கள் எழுதிய கடிதத்தை அவனே வாசித்துவிடுவான் கவனம்.**

இந்தக் காலத்தில் இருபதை நம்பினாலும், அறுபதை நம்பக்கூடாது என்கி றார்களே வித்து ஐயா?

தாட்சா, திருகோணமலை

**சில சந்தர்ப்பங்களில் உண்மை போலவும் இருக்கிறது. முன்னைய காலங்க ளில் அறுபதைத் தள்ளாத வயது என்பார்கள். இப்போது அப்படிச் சொல்ல முடியாது போலுள்ளதே.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘துளி அல்லது துகள்’

○ இராகவன்




அலறியின் கவிதைத் தொகுப்பை முன்வைத்து சில குறிப்புகள்

வானவில் வந்தமரும் வண்ணத்துப்பூச்சி வடிவிலான வார்த்தைகள் மௌனத்துக்கும் தியானத்துக்கும் இடையில் சமுத்திரப் பரப்பென மிதந்த வார்த்தைகளில் கலந்ததுதான் இந்தத் துளி அல்லது துகள். முன்பொருநாள் பறவையைப் போல சிறகடித்தது அலறியின் கடல். இப்போது துளி அல்லது துகளாக. முதலில் பூமிக்கடியில் வானம். வானத்திற்கடியில் கடல். மழையை மொழிதலின் முன்பாக அலறி எல்லாம் பூக்களும் உதிர்ந்துவிடும் என்றார். இவர் நீள்வழியில் பயணிக்கிறார். நோட்டமிடல் திட்டமிடல் எதுவும் இவருக்குச் சாத்தியமில்லை. நடக்கும் வழியென்பது முட்களாலும், கற்களாலும், முகடுகளாலும் ஆனதுதான். ஒவ்வொரு அடியையும் பெயர்த்து வைக்கிறார். இடியையும் தாங்கிக்கொள்கிறார். கற்கொண்டு கூரிய சொற்கொண்டு தாக்குகிறார்கள். பூங்கொத்தோடும் புன்னகைக்கி றார்கள். எனினும் விடியும் நம்பிக்கையோடும் வெல்லும் வேண்டுதலோடும் பயணிக்கிறார்.

எப்போதும் இனிமை சிந்தும் குரலில் பாடும் இரு குருவிகளில் ஒன்று பெருங்குரலெடுத்துக் கத்தியது ஏனென்று தெரியவில்லை. புரியவுமில்லை. தொழில்களற்ற தேசத்தில் பிறந்திருந்தால், நிறங்களற்ற வானத்தில் பறந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். பறவைகளின் பரிபாஷைகளை நன்கு அறிந்திருக்க முடியும் என்றெல்லாம் ஏங்கிக்கொண்டே ஓட்டு வீடுகளுக்கும் மாடங்களுக்கும் முதிர் மரங்களுக்கும் அப்பால் இந்தக் குருவிகளின் பெருங்குரலுக்கு பதிலுரைத்த அந்தக் குருவி அப்படி என்னதான் சொல்லியிருக்குமெனத் துயருற்று அந்தக் குருவியின் துயரத்தைத் தூக்கியபடி கூடடைகிறார்.

இவர் வெளவால், பாம்பு, பன்றி இறைச்சி, கரப்பான் பூச்சி புசிக்காத பூமி செல்ல விளைகிறார். காவி, கரன்சி, கம்யூனிசத் தாராளவாதம், தப்லீக், தவ்ஹீத் தலைக்கேறிய நிலம் தாண்ட முனைகிறார். அகல்விளக்கு, அறியாமை, மடமை, முகக்கவசம், ஊரடங்கு, தனிமை அற்ற கண்டம் காண விரும்புகிறார். எரிப்பு, புதைப்பு வாதங்கள், ஆறடி நிலம், அகிம்சை புத்தன் போதனைகள், அர்த்தம் புரியாத மண் அகன்றிடத் துடிக்கிறார். ஆனால் இவரது இருப்பிடமோ நடுக்கடல், நூற்றாண்டுத்துயர், பிணவாடை, கொரோனா வைரஸ் கோடிக்கணக்கில் குடிகொண்ட தீவு. எனினும் குதூகலித்துச் செல்கிறார்.

அடுத்த கட்டமாக சூரியன் சுட்டெரிக்கும்போது கானல் நீரினைப் பாவியபடியே வாக்குத் தேடி வலம் வருகிறார். உப்பு நீர் ஊற்று பிரவாகமெடுக்கிறது. உடல் முழுவதும் நமைச்சல். இரு விழிகளின் ஈர்ப்பில் அலையடிக்கிறது மனம். இயல்பு குழம்பிச் சலனம். இருந்தும் ஒலி பெருக்கி இவர் கையில் பேச வேண்டும். அல்லது ஏச வேண்டும்.

காகம் கொத்தித் தீர்த்த கோதெனவும் வெளவால் கடித்துறிஞ்சிய சாறெனவும் உச்சிக் கந்தில் தொங்குகிற பாதியைக் கண்டு கிளைகளில் ஏறியும், இறங்கியும் ஏமாற்றத்துடன் திகைக்கும் தனது சாயலையொத்த அணிலிடம் கண் கொத்திப் பாம்பென காகம் கொத்திப் போன கனியின் கதையை எப்படிச் சொல்வதென்ற தவிப்புடன், மாசிப் பனியில் நனைவது போல, பொற் சுரங்கத்துள் புகுவது போல, நீர்ப்பறவையின் நிழலைப் போல, வாவிக்கரைபோல இன்னும் மரணத்தை நெருங்கிச் செல்வது போல மயானத்தைக் கடிந்து செல்கிறார்.

சொர்க்கத்தின் எழிற்சோலை நெற்குருவியின் கண்களில் விரியக் காண்கிறார். நோன்பிருத்தலால் ,பசித்திருத்தலால் ஏழுவானம், முக்கடல் இருள்குகை, இறை வேதம் அருளிய மாதத்தின் பிரவாகமாகக் காண்கிறார். இப்போது அவரால் தரமுடிந்திருப்பது ஒரு சிறங்கை பேரீச்சம்பழமும் ஒரு கோப்பை கஞ்சியுமென வருந்தும் மனதுடையவராக இருக்கிறார்.

இவர் பறவைகளின் காதலர் . இவரின் கவிதைகளுக்குள் எங்காவது ஒரு பறவை பறந்துகொண்டுதானிருக்கிறது. சில மந்திரப் பொழுதுகளில் திளைக்கிறது பறவைகளின் வசீகரம். மென் இறகின் நிறங்களே காட்டுப் பூக்களாக தேன் குரலின் ஒலியே மலையருவியாக விரியக் கண்டு நித்தியத்திலும் நிறைகிறது இவரது பறவை. கால்களில் காற்றை அள்ளிக் கொண்டும், தலையில் சூரியனை சுமந்து கொண்டும், ஒற்றை மரமாவது தட்டுப்படாமல் அலைந்து கொண்டிருப்பதும் அதுவே தான்.

இயல்புடைத்து நீலவானை நெய்துகொண்டே கவிதைக்காகக் காத்திருக்கும் சொற்தெறிப்பில் பிறக்கும் புதுயுகம் கதிரின் ஒளி தாங்கிக் காற்றுடைத்து கடுகதியாய் செல்லும் .... நிலம் தாங்கிய நிழலின் நிதானம். மூங்கில் பூக்கும் இலைகளில் மயிலிறகின் வருடல். அலையின் நர்த்தனம். கலவி உச்சத்தில் புடைக்கும் கழுத்து நரம்பென கரும் பச்சைக் கோடுகள் மஞ்சள் மேனியெங்கும் நீளும் ரம்மியம். நெடுப்பமாக, நேராக வளரும் தண்டுகளில் தங்க மோதிரமென மினுங்கும் மொழிகள். காற்று இறைக்கும் ஓசையில் புல்லாங்குழலாகிறது. அரிவையர் நீராடும் ஆற்றோரம் பூரித்தாடுகிறது. மழுக்கென மானுடன் கால்களைத் தறிக்கையில் பெருகிக்கொடுக்கிறது குருதி காடெங்குமென இயற்கையைக் கொண்டு தனது கவிதைகளை அழகாக்கிக் கொள்கிறார். இயற்கை மீதான வன்முறையை அதே இயல்புடன் துயரம் படரப் பதிவிடுகிறார்.

இவருக்கு மலைகள் வாசலாகத் திறந்திருக்கின்றன. நிலவின் விரல்கள் தீண்ட, அல்லி ஆம்பல் முல்லை மொட்டரும்பி முகிழ்ந்து பொய்கை நிரம்பிப் பூக்கும் கருணையின் ருசியோடு வசந்த காலத்தின் இசையைக் கோர்க்கிறது. காற்றின் தோகை வருட, மல்லிகை செவ்வரளித் தாமரை மலர்ந்து விரிந்து தோரணத்தில் தொங்கி அசையும் மோகனக் கண்களோடு கோடை காலத்தின் ஒளியைச் சிந்துகிறது . பனியின் ஊடுபாவ அந்தூரியம், ரோஜா ஒர்க்கிட் பூத்துக் குலுங்கி பள்ளத்தாக்கின் சரிந்து சொரியும் கனவின் நிறத்தோடு இலையுதிர் காலத்தின் குளிரைப் பருகுகின்றன. இறுதியில் ஒருநாள் உடலின்று பிரியும் உயிரென எல்லாம் உதிர்ந்து போகுமெனத் தத்துவ விளிம்பைக் காட்டுகிறார்.

இயந்திரப் படகுகள், நீள் கயிறு, கட்டுமரம், நூற்றாண்டு காலம் வனைந்தும் இழுத்தும் வலைக்குள் சிக்காத கடல், ஒட்டகங்கள், நெடுவழிப்போக்கர், தீக்காற்று ஓயாமல் பயணித்தும் திசையெங்கும் விரியும் பாலை, வெட்டுவான், பேட்டை, விலங்குகள், கொடுந்தீ, அரிந்தும் எரிந்தும் சாம்பலாகியும் விதைக்குள் உயிர்க்கும் காடு, செங்கால் நாரை, ராட்சதக் கழுகு, கரிச்சான் குருவிகள், ஏகமாய் விரித்துப் பறந்தும் சிறகுகள் சுருங்காதவனம் எனும் ஐம்பூதங்களின் அண்டத்தில் துளி அல்லது துகள் என்ற இவரது முடிவுதான் கவிதைகளை இன்னுமின்னும் அழகுபடுத்தியிருக்கிறது. மேலும் மேலும் புதிதாக்குகின்றது.

**குறிப்பு :** கவிதை மீது தீராக் காதலுடையோர் இத் தொகுப்பிலுள்ள றியாஸ் குரனாவின் பின்னுரையை தயவு செய்து வாசிக்கவும்.



## திருவள்ளுவரின் தேநீர்க்கடை

○ இ.சு.முரளிதரன்



பற்றீரியா, பங்கசு முதலான நுண்ணங்கிகள் நோயாக்கிகளாக அமைகின்றன. மருத்துவத்துறையில் முகிழ்ந்த அறிகை முறையில் நுண்ணங்கியைக் கொண்டே நுண்ணங்கியை அழிக்கக் கூடிய நுட்பமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஒரு நுண்ணங்கியின் உடலிலிருந்தே, மற்றொரு நுண்ணங்கியை அழிக்கக் கூடிய பதார்த்தமான நுண்ணுயிர் கொல்லி (Antibiotics) தயாரிக்கப்படுகின்றது.

அலெக்ஸ்சாண்டர் பிளேமிங் என்பவரே முதலாவது, நுண்ணுயிர் கொல்லியான பென்சிலின் மருந்தைக் கண்டறிந்தார். பூஞ்சைக் காளான்களில் காணப்பட்ட *penicillium notatum* என்னும் நுண்ணங்கியினால் இன்னொரு நுண்ணங்கியை அழிக்கமுடியுமென நிருபித்தார். இதன் நீட்சியாகவே நுண்ணங்கிகளைக் கொண்டே நுண்ணங்கிகளை அழிக்கும் நுட்பத்தை அடியொற்றித் தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

திருவள்ளுவர் 678 ஆவது குறட்பாவிலே “ஒரு வினையைக் கொண்டு பிறிதொரு வினையினை நிகழ்த்தல், மதநீர் [illegible]ன்ற யானை ஒன்றினைக் கொண்டே பிறிதொரு யானையைக் கட்டுப்படுத்தல் போன்[illegible]கும்” என்னும் கருத்தினை வெளிப்படுத்துகிறார். யானை ஒன்றினைக் கொண்டு பிறிதொரு யானையை அடக்குகின்ற செல்நெறியில், மருத்துவமானது நுண்ணங்கியைக் கொண்டே பிறிதொரு நுண்ணங்கியை அடக்கியாளும் தடுப்பு மருந்தைக் கண்டறிகின்றது.

**“வினையால் வினையாக்கிக்கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத்தற்று”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்பேசா சாட்சிகள்!



> நீண்ட அழுத்தங்களுக்குப் பின்னர் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் சீனாவின் வுகானுக்குள் நுழைந்தது உலக சுகாதார நிறுவனம். அந்த அமைப்பின் ஆய்வறிக்கைகளின் முடிவுகள் தற்போது மெல்லக் கசிந்துள்ளன.

ஆர்.பிரகாஷ்

கொரோனாப் பெருந்தொற்று எங்கிருந்து தோன்றியது என்பது தொடர்பாக உலக சுகாதாரஸ்தாபனம்மேற்கொண்ட ஆய்வுகளின் அறிக்கைகள் மெல்லக் கசிந்துள்ளன. ஆனால் அந்த ஆய்வறிக்கைகள் ஒன்றும் புதிதானவற்றை நிறுவவில்லை. சீனா ஏற்கனவே தெரிவித்த கருத்துக்களைத் தான் உலக சுகாதார நிறுவனமும் தன் நிலைப்பாடாக ஒரு சில மாறுதல்களுடன் முன்வைத்துள்ளது.

2019 டிசெம்பரில் கொரோனா சீனாவின் வுகானில் தோற்றம் பெற்றது. 2020 ஜனவரியில் இது ஓர் உலகப் பேரிடராக மாறியது. இதையடுத்து 2020 மார்ச் ஏப்ரலில் ஒட்டுமொத்த உலகமும் இந்தப் பெருந்தொற்றால் முடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. சீனா மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக 'சைனீஸ் வைரஸ்' என்ற பெயரை 'கொவிட் 19' என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தினார் அமெரிக்காவின் அப்போதைய அதிபரான ட்ரம்ப். அத்துடன் நின்றுவிடாமல் 'சீனா திட்டமிட்டு இந்த வைரஸைப் பரப்பியுள்ளது. உலகப் பொருளாதாரத்தை தான் தீர்மானிக்க வேண்டும் என்பதற்காக சீனா மேற்கொண்ட மோசடி இது' என்றும் தெரிவித்தார். கொரோனாப் பெருந்தொற்றுக்கான தோற்றுவாய் என்ன? என்பதைக் கண்டறிய உலக சுகாதார நிறுவனம் சீனா வுக்குள் நுழைய வேண்டும் என்று வலியுறுத்தினார். அந்த அமைப்புக்கான நிதிகளை நிறுத்தினார்.

எனினும் சீனா உலக சுகாதார நிறுவனத்தை தனதெல்லைக்குள் ஆரம்பத்தில் அனுமதிக்கவில்லை. வௌவாலில் இருந்துதான் குறித்த வைரஸ் பரவியது என்பது சீனாவின் கருத்தாக இருந்தது. நீண்ட அழுத்தங்களுக்குப் பின்னர் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் சீனாவின் வுகானுக்குள் நுழைந்தது உலக சுகாதார நிறுவனம். அந்த அமைப்பின் ஆய்வறிக்கைகளின் முடிவுகள் தற்போது மெல்லக் கசிந்துள்ளன. சீனாவின் கருத்து என்னவோ அதையே உலக சுகாதார நிறுவனமும் தனது கருத்தாக முன்வைத்துள்ளது.

கொரோனா ஆய்வகத்தில் உருவானது என்ற குற்றச்சாட்டையும் மனிதர்களுக்குத் திட்டமிட்டுப் பரப்பப்பட்டது என்ற குற்றச்சாட்டையும் உலக சுகாதார நிறுவனம் திட்டவட்டமாக மறுத்துள்ளது. குறித்த வைரஸ் விலங்குகளிடம் இருந்தே மனிதர்களுக்குப் பரவியது என்பதை ஆணித்தரமாக இந்தப் புதிய அறிக்கை எடுத்தியம்புகின்றது. ஆனால் வௌவாலில் இருந்து நேரடியாக மனிதர்களுக்குப் பரவவில்லை என்றதொரு புதிரையும் அது போட்டுள்ளது.

அப்படியானால் கொரோனா எவ்வாறு மனிதர்களுக்குப் பரவியது? என்ற கேள்வி இங்கே எழுகின்றது. வௌவால், மனிதனுக்கு இடையே பிறிதொரு உயிரினம் கொரோனாக் காவியாக உள்ளது என்கின்றது உலக சுகாதார நிறுவனம். இந்தப் புதிய உயிரினம் வளர்ப்புக் கீரியாக அல்லது பூனையாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

ஆக, புதிதாக உட்புகுத்தப்பட்டுள்ள இந்த இரு விலங்குகள் கொரோனாவின் தோற்றம் பற்றிய தேடலை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளன. சில வேளைகளில் பதிலற்ற சம்பிரதாயபூர்வத் தேடலுக்குரிய தோற்றுவாயாகவும் இந்தப் புதிய அணிச் சேர்க்கைகள் அமையலாம். பழிபோடுவதற்கு வாய்பேசாத் தரப்பொன்று தேவைப்படுகின்றது என்பதற்கு கொரோனாவும் தக்க சான்று.









## ஒழி மறைந்தது ஒரு தசாப்தம்!

2011ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக்கிண்ணத்தின் ஒரு தசாப்த நிறைவுநாள் கடந்த வெள்ளியன்று கொண்டாடப்பட்டுள்ளது.

இந்திய இலங்கை வீரர்களும் ரசிகர்களும் கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன்னர் இடம்பெற்ற அந்த ஒப்பற்ற நினைவுகளை மீண்டும் ஒருதடவை நினைத்துப் பார்த்துள்ளனர். குறிப்பாக டோனியின் இறுதி சிக்சர், அந்த சிக்சரின் பின்னர் சங்கா வெளிப்படுத்திய புன்னகை என்பன அனேகராலும் நினைந்து பாராட்டப்பட்டுள்ளது. சச்சின், சங்கா, கம்பீர், யூசொப் பதான், சேவாக் என பலரும் அந்த நினைவுகளைப் பகிரும் வகையில் தம் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பதிவுசெய்திருந்தனர்.

"அதுவொரு அழகிய நிலாக்காலம்"

## ஐ.பி.எல். ஆரம்பம்

ஆர்.லயனல்

அடுத்த மாதம், இந்த மாதம் என்று கடைசியில் ஐ.பி.எல். தொடருக்குரிய வாரத்தில் நாம் நிற்கின்றோம். வழக்கம்போல எண்ணற்ற எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இந்தத் தொடர் ஆரம்பிக்கின்றது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் கடந்த வருடம் பிளேஓவ் செல்லாமல் வெளியேற்றப்பட்டது சென்னை. இதனால் அந்தத் தோல்விக்கு இம்முறை பதிலடி கொடுக்கும் முனைப்பில் சென்னை உள்ளது. ரெய்னாவின் வருகையும் மொயின் அலியின் இணைப்பும் சென்னைக்குப் பலம் சேர்க்கும். மும்பை நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்தில் களமிறங்குகின்றது. வழக்கம்போல் அந்த அணி பலமாகவே உள்ளது. கடந்த வருடத்தைப்போன்று பெரும் சவாலை இந்த வருடமும் மும்பை வழங்கும்.

ஆர்.சி.பி. அணிக்கு மக்ஸ்வெலின் இணைவு பலமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் கடந்த வருடம் பஞ்சாப் அணிக்காக மக்ஸ்வெல் ஒரு சிக்ஸரையேனும் அடிக்கவில்லை. மிகமிக மந்தமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினார். எனவே மக்ஸ்வெல் ஆர்.சி.பி.க்கு இம்முறை எந்தளவு பங்களிப்பை வழங்கப்போகின்றார் என்றதொரு கேள்வி இருக்கத்தான் செய்கின்றது.

அணித்தலைவர் ஸ்ரேயாஸ் காயமடைந்து வெளியேறியமை டெல்லிக்குப் பின்னடைவைக் கொடுத்துள்ளது. பன்ட் டெல்லிக்குத் தலைமை தாங்குகின்றார். பன்டிடம் தலைமை கொடுக்கப்பட்டமைக்கு இருவேறு கருத்துக்களும் இருக்கத்தான் செய்கின்றன.

பஞ்சாப், ராஜஸ்தான், கொல்கத்தா மற்றும் ஹைதராபாத் அணிகள் வழக்கம்போல் மிக அமைதியான முறையில் இருக்கும் இடம் தெரியாமல் இம்முறையும் திட்டங்களை வகுத்து வருகின்றன. தொடர் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகின்றது. பார்க்கலாம் எந்த அணி சாதிக்கப்போகின்றது என்பதை.

"ஆட்டம் ஆரம்பம்"



## லெஜன்ட்ஸ் கிரிக்கெட்டில் கொரோனா கொத்தணியா?

ஓய்வு பெற்ற முன்னாள் வீரர்களை வைத்து அண்மையில் 'லெஜன்ட்ஸ் றோட் சீரிஸ்' நடத்தப்பட்டிருந்த நிலையில், இந்தத் தொடர் கொரோனா கொத்தணியை உண்டு பண்ணிவிட்டதா? என்ற கலக்கம் தற்போது கிரிக்கெட் ரசிகர்களிடையே ஏற்பட்டுள்ளது.

இந்தத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்திய – இலங்கை அணிகள் மோதின. இந்திய அணி கிண்ணம் வென்றது. இந்திய அணியை வழிநடத்திய சச்சினுக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை கடந்த 7 தினங்களுக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டது. தற்போது அவர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சச்சினுக்குக் கொரோனா உறுதிப்படுத்தப்பட்ட அடுத்த சில தினங்களில் அவருடன் இணைந்து விளையாடிய யூசுப் பதான், இர்பான் பதான் ஆகியோருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து குறித்த தொடரில் கலந்துகொண்ட வீரர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறுதியாட்டத்தில் விளையாடிய இலங்கை வீரர்கள் எவருக்கும் கொரோனா அறிகுறிகள் தென்படவில்லை. எனினும் இரு வாரங்களாலும் கொரோனா உறுதிப்படுத்தப்படாலாம் என்பது மருத்துவத்துறையின் கருத்தாக உள்ளமையால் இலங்கை அணியின் வீரர்களும் அச்சத்துடன்தான் உள்ளனர்.

"இதென்னடா லெஜண்ட்ஸுக்கு வந்த சோதனை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.3. 2021 அன்று பத்திரிகையில் ரங்க ஜய சூரிய UNHCRC RESOLUTION IS A TRAGEDY THE GOVERNMENT REACTION IS A TRAGIC COMEDY என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு சுருக்க வடிவில் தரப்படுகிறது.



# இக்கட்டில் இலங்கை

தமிழில்: ந.பரமேஸ்வரன்

கடந்த வாரம், இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் என்பவற்றை ஊக்குவிக்கும் முகமாக ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஜோ பைடன் நிர்வாகமும் இணைந்து ராஜபக்ச அரசாங்கத்துக்கு கொடுத்த ஒரு எச்சரிக்கை .இந்தத் தீர்மானத்தின் பின்னணியில் புலம்பெயர் புலி ஆதரவு அமைப்புகள் செயற்பட்டுள்ளன. இது அவர்களுக்கு கிடைத்த ஆறுதல் பரிசு என்று சொல்லலாம்.

ஐ.நா.மனித உரிமைகள் சபை ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாரின் தீர்மானம் யாஸ்மின் சூக்காவின்'உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பின்'அறிக்கையை சாராம்சமாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இது ஒரு பிரயோசனமான வரைதான். சிவில்கட்டமைப்புக்கள் இராணுவமயப்படுத்தப்படல், சுயாதீனக் கட்டமைப்புகள் அரசியல்மயப்படுத்தப்படல், இருபதாவது சட்டத்தின் கீழ் நீதித்துறை உட்பட, சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்சங்கள் உட்பட உயர் அதிகாரிகளையும் சமூகசெயற்பாட்டாளர்களையும் கண்காணித்தல் போன்ற விடயங்கள் ஒரு ஜனநாயக இடைவெளியை ஏற்படுத்தியுள்ளன. இவை யாவும் பெரும் தாக்கத்தை உலக அளவில் ஏற்படுத்தவில்லை. மோடியின் இந்தியா, ட்ரம்பின் அமெரிக்கா,போல் சணரோவின் பிரேஸில் போன்ற நிர்வாகங்களில் ஜனநாயகம் மேலும் கீழுமாக இருந்துள்ளது. அத்துடன் .ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் இந்தத் தீர்மானம் ஒரு பிடியாணையுமல்ல.

இந்த ஆவணம் இறுதியுத்தத்தில் இடம்பெற்றவை எனக்கூறப்படும் விடயங்கள் ,( ஏனைய பயங்கரவாத இயக்கங்களிலிருந்து வேறுபட்ட புலிகளை வெல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட) மருத்துவமனைகள் மீதான ஷெல் தாக்குதல்களில் காயமடைந்த பொதுமக்கள் பற்றிய தருஸ்மான் அறிக்கையை அடிப்படையாக கொண்டவை தருஸ்மான் அறிக்கை, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பதற்கு அந்தக் குழுவுக்கு விசா வழங்கப்படாத நிலையில், புலிகளின் ஊதுகுழலான மேற்குலகத்தால் உயிரிழப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் காட்டி தயாரிக்கப்பட்டது. யுத்தக் குற்றங்களில் ஈடு பட்டதாகக் கருதப்படும் படையினரைத் தண்டிப்பதற்கான ஒரு முன்னெச்சரிக்கை ஆவணமாகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது. இலங்கை அரசாங்கம் இதனை நிராகரித்திருந்தது. ஆனால் மஹிந்த ராஜபக்ச18 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் றப்பர் முத்திரை நாடாளுமன்றத்தையும் அரசியல்மயப்படுத்தப்பட்ட நீதித்துறையையும் உருவாக்கி நாட்டை கேவலப்படுத்தி நீதித்துறை மீது நம்பிக்கையிழக்கச் செய்துவிட்டார்.

மஹிந்தவின் இளைய சகோதரர் கோத்தாபய ராஜபக்சவும் 20 வதுதிருத்தத்தின் மூலம் அதே பாதையில் நாட்டைக் கொண்டு செல்கிறார். ஆனாலும் மிச்செல் பச்லெட் அம்மையார் சர்வதேச அரங்கில் இலங்கையின் பலவீனமான கட்டமைப்பை இல்லாமல் செய்துவிட்டார்.




**இந்தத் தீர்மானத்தால் இலங்கையில் ஏற்படப்போகும் பொருளாதார வீழ்ச்சியை இனி சர்வதேசம் கண்டுகொள்ளாது. பொருளாதார சிக்கலில் இருந்து மீள்வதற்காக இனிமேல் ஒருவரும் உதவமுன்வரமாட்டார்கள். இவர்களது இனவாத ஊளையிடல்கள் தொடந்தும் சிறுபான்மையினரை வன்முறைப் பாதையை நாடவே வழிகோலும்.**

இதேவேளை, ஐ.நா.மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் கடினமானது. துன்பகரமானது. இந்தத் தீர்மானத்தால் ஒருவருக்கும் ஒரு பிரயோசனமு மில்லை. இந்த தீர்மானத்தை கொண்டு வந்த நாடுகளுக்குக்கூட புவிசார் அரசியல் ரீதியாகக் கூட ஒரு பிரயோசனமுமில்லை. அத்துடன் இந்தத் தீர்மானம் தொடர்பாக அரசும் பாரதூரமாக, ஒரு துன்பியலான விடயமாகக் கருதவில்லை.

" இந்தத் தீர்மானம் சட்டவிரோதமானது. வாக்கெடுப்பு எமக்கு பெருவெற்றி . 47 நாடுகளில் 22 நாடு கள்ஆதரவாக வாக்களித்துள்ளன; 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்துள்ளன; 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை; வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத நாடுகள் இலங்கைக்கு ஆதரவளித்துள்ளன" என்று வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்த்தன சொல்லியிருந்தார்.

அரசாங்கத்துடன் இணைந்து ஆங்கில பத்திரிகையொன்றை நடத்திவரும் வர்த்தகர் ஒருவரின் பத்திரிகை சர்வதேசத்திடமிருந்து படையினரைப் பாதுகாக்கும் நோக்குடன் சட்டமியற்றப் போவதாகவும் செய்தியொன்றை வெளியிட்டது.

இலங்கை ஏனைய நாடுகளை தனது சட்டத்தை ஏற்குமாறு எப்படி வலியுறுத்தலாம் என்பதைப் பற்றி விளக்கமளிக்க வில்லை. உள்நாட்டுச் சட்டங்கள் சர்வதேச நீதியை பெற்றுக்கொடுப்பதற்குப் போதுமானவையல்ல. குற்றமிழைத்ததாக கருதப்படுபவர்களை வெளிநாடுகளில் தண்டிக்காமல் பாதுகாப்பதற்காக உள்நாட்டில் சட்டமியற்றுவதென்பது ஒரு மோசமான செயற்பாடே.


இந்தத் தீர்மானம் அரசங்கத்தின் வெளியுறவுக் கொள்கையின் தொடர்ச்சியான தோல்வியை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் இந்தத் தீர்மானம் துரிதப்படுத்தும் விடயத்தில் இன்னமும் அடிமட்டத்திலேயே உள்ளது.

முன்னைய அரசு வழங்கிய இணை அனுசரணையிலிருந்து இப்போது விலகியதால் தற்போதைய அரசு இலங்கையை ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது. முன்னைய அரசு பிரச்சினை களை திசை திருப்பாமல் வெற்றிகரமாக உலகத்துடன் தொடர்பாடலை மேற்கொண்டது. கோத்தாபயவின் தீர்மானம் இராணுவத்தினரும் சிவில் தலைவர்களும் சில நாடுகளில் நீதி விசாரணையை எதிர்கொள்ள வேண்டிய சூழலை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினையிலிருந்து அரசாங்கம் எவ்வாறு விடு படப் போகிறது என்று தெரியவில்லை.

ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது வெளியுறவுக் கொள்கை பற்றிய புரிதல் இல்லாமல் வீதியில் நிற்பவர்கள் போல் சம்பந்தப்பட்டவர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இவர்களது அதிகப் பிரசங்கித்தன மான கருத்துக்கள் ஒரு கட்டத்தில் இந்தியாவையும் மேற்குலகத்தையும் சினம் கொள்ளச் செய்யும்.

இந்தத் தீர்மானத்தால் இலங்கையில் ஏற்படப்போகும் பொருளாதார வீழ்ச்சியை இனி சர்வதேசம் கண்டுகொள்ளாது. பொருளாதாரச் சிக்கலில் இருந்து மீள்வதற்காக இனிமேல் ஒருவரும் உதவ முன்வரமாட்டார்கள். இவர்களது இனவாத ஊளையிடல்கள் தொடந்தும் சிறுபான்மையினரை வன்முறைப் பாதையை நாடவே வழிகோலும். சிங்கள பௌத்த மேலாதிக்கக் கோட்பாடு நாட்டின் மீது மேற்குலகத்துக் கு எரிச்சலை உண்டாக்கும். இதன் விளைவுகள் பாரதூரமானவையாகவே இருக்கும். ஒட்டுமொத்தத்தில் இந்த அரசாங்கம் இலங்கையை ஒரு இக்கட்டான, தர்மசங்கடமான நிலைக்குக் கொண்டு சென்றுகொண்டிருக்கிறது.





# உன் காலடி ஓசை

- மிஸ்ரா ஜப்பார்

தியானிக்கப்பட்ட பிரார்த்தனையின்
மோகன வெறுமையின் ஜீவான்மா
இரவின் நிசப்த கொந்தளிப்புக்கள்
ஓர் பட்சியின் தூவலென
அடியாழமற்று மெல்ல
கசிந்து கொண்டிருக்கிறது

இலக்கற்று அலைந்து திரியும்
ஆழ் கடலின் இரகசிய தாழ்வாரங்களாய்
கொதிக்கிறது பனி மூட்டம்

நீ என்னுள் சுகந்தமேறி
கிரகிக் கிடக்கிறாய்
ஓர் அழிந்து போன
நதியின் சீற்றமாய்
நீ தீட்டிக் கொண்டிருக்கும் ஓவியம்
குருதி படிந்த ஓர் அத்தியாயத்தின்
பெரும் சாப மீட்சியடா
என் அத்தனை சோகமும்
உன் ஒற்றைப் புன்னகையில்
காணும் அமைதியது காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சதீஷின் உயிரைப் பறித்தது சட்டவிரோத மின்சாரமா?

## இன்னும் வெளிவராத மர்மங்கள்

○ உளவாளி

அம்மம்மா! இண்டைக்கு வெள்ளிக்கிழமை , வேலை இல்லை. வாகனத்தை கழுவிப் போட்டு முதலாளி வீட்டில விட்டிட்டு வாறன்' என்று சொல்லிவிட்டு வாகனத்தோடு புறப்பட்டான் சதீஷ். அவனை வழியனுப்பி விட்டு வந்த அம்மம்மாவுக்கு சில மணித்தியாலங்களில் இடியாக வந்து தலையில் இறங்கியது அந்தச் செய்தி.

" சதிஷுக்கு கறண்ட் அடிச்சு சீரியஸாம்"

அம்மம்மாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை, தலையிலும் வயிற்றிலும் அடித்து அழத் தொடங்கிவிட்டாள்.

ஓட்டோ ஒன்றில் உடனடியாகவே மருத்துவமனைக்கு ஓடிச் சென்ற அம்மம்மா தன் பேரனின் உயிரற்ற உடலையே காணமுடிந்தது. சதீஷ் அவர்களை விட்டு பிரிந்து போயிருந்தான்.

### துயரின் முன்கதை

சுந்தரலிங்கம் சதீஷ்வரன்.

கிருஷ்ணபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த 25 வயதேயான சதீஷ்வரன் துயரங்களின் பிள்ளையாகவே பிறந்தவன். சதீஷ்வரன் தாயின் வயிற்றில் 8 மாத சிசுவாக இருந்தபோது அவர்கள் தங்கள் சொந்த இடத்தை விட்டு இடம்பெயர்ந்து, அக்கராயனில் வசிக்க நேரிட்டது. இடையிடையே சில இரகசியப்பாதைகள் வழியே, கிளிநொச்சிக்கு சிலர் சென்று வந்ததை அறிந்த சதீஷின் தந்தை தானும் அப்படிச் சென்று, வீட்டில் உள்ள கிடுகுகளை எடுத்துவரப் புறப்பட்டார். அந்தக் கிடுகுகளைக் கொண்டுவந்தால், தறப்பாள் கொட்டில் வெம்மைக்குள் தகிக்கும் வாழ்வுக்கு ஒரு முடிவுகட்டலாமென எண்ணியிருந்தார். ஆனால் அவருடைய துரதிர்ஷ்டம், கிடுகு எடுக்கக் கிளிநொச்சிக்குப் போனவர் அங்கு இராணுவத்தினரது கண்களில் சிக்கி விட, அவர் அதற்குப் பிறகு திரும்பி வரவேயில்லை.

கணவனை இழந்த துயரத்தில் சதீஷின் தாயார் நோய்வாய்ப்பட்டார். சதீஷ் பிறந்து ஒரு வயதான போது, தாயும் நோயின் பிடியில் சிக்கி உயிரிழக்க, சதீஷ் பெற்றோரை இழந்த பாலகனானான். அவனும், அவனது அக்காவும், அண்ணனும் பெற்றோரை இழந்து நிர்க்கதியான போது, அவர்களைக் காக்கும் பொறுப்பை அம்மம்மாவும், மாமாவும் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகு கிளிநொச்சி பாரதிபுரம் மகாவித்தியாயலத்தில் தரம் 10 வரை கற்றுவிட்டு, அப்படியே வேலைக்குப் போகத் தொடங்கினான் சதீஷ். அப்படியே கண்டியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்து அங்கிருந்தபடியே மேசன் வேலை செய்பவர்களுக்குத் துணையாளாக சதீஷ் வேலைக்குப் போய்வந்தான். அந்தப் பணத்தை முதலிட்டு, லீசிங்கில் ஒரு மோட்டார் சைக்கிளும் எடுத்திருந்தான். கண்டியில் தங்கி வேலை செய்ததால், மாதத்துக்கு ஒரு தடவையே கிளிநொச்சிக்கு வந்துபோவான். அவனது அக்கா திருமணம் முடித்து யாழ் சாவகச்சேரி பகுதியில் வசித்து வருகிறார். அக்காவுக்கென வழங்கப்பட்ட வீட்டில் தான் அண்ணனோடும், அம்மம்மாவோடு சதீஷ் வசித்து வந்தான். சதீஷின் அண்ணனுக்கு இறுதி யுத்தத்தின் போது, முள்ளிவாய்க்காலில் காயமேற்பட்டதால், அவரால் வேலைக்கு போக முடியாது, சதீஷின் உழைப்பிலேயே அந்தக் குடும்பம் சீவித்தது.

இப்படியே போய்க்கொண்டிருந்த சதீஷின் வாழ்க்கையில் குறுக்கிட்டது கொரோனா. கண்டியில் தங்கி நின்று வேலை செய்வதெல்லாம் கொரோனாவால் சிக்கலாகிப் போக, மீண்டும் கிளி நொச்சிக்கே வந்தான். வந்தவன் சும்மா இருக்கவில்லை. கிளிநொச்சி சந்தையில் மீனைக் கொள்வனவு செய்து அதனை வாகனத்தில் வைத்து விற்கும் தொழிலுக்குச் சென்றான். விற்று முடிந்ததும் வாகனத்தை முதலாளியின் வீட்டிலேயே விட்டு வருவான். ஆனால் என்னவோ முதல் நாள் வாகனத்தை வீட்டில் கொண்டு வந்து விட்டவன், காலையில் அந்த வாகனத்தோடு புறப்பட்டான். அப்படிக் கிளம்பியவன் பின்னர் திரும்பி வரவே முடியாத இடத்துக்குப் போய்விட்டான்.



## மின்சாரம் இல்லாத வீட்டில் சிக்கிய தடயங்கள்

## கடைசிக் கணங்களில் என்ன நடந்தது?

### போனவன் வரவில்லை

" வழக்கமாக மாலை மீன் வியாபாரம் முடிந்ததும் வாகனத்தை எங்களது வீட்டில் விட்டுவிட்டு அருகிலுள்ள மைதானத்தில் விளையாடி விட்டேவீட்டுக்குச் செல்வான். ஆனால் சம்பவத்துக்கு முதல் நாள் வாகனத்தை வீட்டுக்கு கொண்டு சென்றுள்ளான். காலை தொலைபேசியில் அழைப்பெடுத்து "வாகனத்தை எடுக்க நான் வரவா?" எனக் கேட்டேன். அதற்கு அவன் " வேண்டாம். குளிச்சிட்டு நானே கொண்டு வாறன். வாகனத்தைக் கழுவவும் வேணும்" என்று சொல்லிவிட்டு, காலை 7.30 மணியளவில் கடைக்கு வந்தான்.

கடையில் இருந்து தளபாடம்(சோக்கேஸ்) ஒன்றை ஏற்றிக்கொண்டு எனது அம்மாவின் வீட்டில் கொண்டு போய் இறக்கினான். அபப்டியே வாகனத்தை அருகில் உள்ள சிறிய குளத்துக்கு ஓட்டிச் சென்று [illegible] என் அம்மாவின் வீட்டில் கொண்டுவந்து நிறுத்தி யுள்ளான். அங்கிருந்த என் அம்மாவிடம் " அம்மம்மாவுக்கு பச்சைப் பாக்கு பிடுங்க வேணும்" என்று கூறிக்கொண்டிருந்த போது, அவனுக்குத் போது தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அப்படியே சதீஷ்,வாகனத்தையும் எடுத்துக்கொண்டு கடையடிக்கு வந்து சேர்ந்தான். அவனும் வர, வேறு இருவரும் மோட்டார் சைக்கிளில் கடையடிக்கு வந்தனர். அவர்களோடு அவன் கதைத்துக் கொண்டிருந்த போது,

"இண்டைக்கு யாவாரம் இல்லைத்தானே . நீ வீட்டை போய் ரெஸ்ட் எடு" எனச் சதீஷிடம் கூறினேன். உடனேயே அவன் வாகனத்தை எடுத்துக் கொண்டு போக ஆயத்தமானான்.

"எங்கயடா போறாய்?" என்று நான் கேட்க, அவனிடம் வந்தவர்கள்

" அண்ணை ஒரு நாய்க்கூடு ஏத்தி இறக்க வேணும்" என்றனர். " இது என்ர சொந்தத் தேவைக்கு எடுத்தது. வாடகைக்கு விடுறேல்ல " என்று கொஞ்சம் இறுக்கமாக நான் சொன்னேன். உடனே,

"போற வழியில் தானே அண்ணை. பிரண்ட்ஸ் பெடியள் கேக்கிறாங்கள். மாட்டன் எண்டு சொல்லேலாமல் இருக்கு , கெதியா ஏத்தி இறக்கிட்டு வாகனத்தை உங்கட வீட்ட விட்டிட்டுப் போறேன்" எனச் சதீஷ் சொல்ல, நானும் வாகனத்தைக் கொண்டு செல்லச் சம்மதித்தேன்.

9.45 மணி போல அவன் வாகனத்தோடு போய்விட்டான். பத்தரை மணி போல வீட்டுக்கு போன் பண்ணி, " சதீஷ் வாகனத்தைக் கொண்டு வந்து விட்டிட்டானோ?" எனக் கேட்க, "இல்லை" என்ற பதிலே கிடைத்தது. சிறிது நேரத்தில் எனது தொலைபேசிக்கு புதிய இலக்கமொன்றில் இருந்து அழைப்பு வந்தது.

" அண்ணை, நாங்கள் அப்போதை நாய்க்கூடு ஏத்த சதீஷைக் கூட்டிக் கொண்டு போன ஆக்கள் கதைக்கிறம். சதீஷுக்கு கறண்ட் அடிச் சுட்டு. ஆளை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போறம்" எண்டு சொல்லிவிட்டு 'கட்' செய்துவிட்டார்கள்.


நான் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சென்ற போது அவர்களைக் காணவில்லை. அங்கிருந்த காவலாளி ஒருவரை விசாரித்தபோது "மின்சாரத்தால் தாக்குண்டு கொண்டுவரப்பட்டவர் இறந்துவிட்டார். அவர் வழியிலேயே உயிரிழந்து விட்டார் " என்று கூறினார். "என்று சதீஷின் இறுதிக்கணங்களில் என்ன நடந்தது என்பது பற்றி, அவன் பணிபுரிந்த முதலாளி விபரித்தார்.

(மறுபக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனம் பொய் சொல்லுது



நாய்க்கூடு ஏற்றப்போன இடத்தில் சதீஷுக்கு என்ன நடந்தது என்று , அந்த வீட்டினை சேர்ந்தவர் எம்மிடம் தெரிவித்த தகவல்கள் இவை.
“எங்களுக்கு இரண்டு வீடு. ஒண்டை மகளுக்கு சீதனமாக் கொடுத்துவிட்டோம்., முன் வீட்டில் நாங்கள் இருக்கிறோம் . மகளின் வீட்டில் தான் இந்த சம்பவம் நடந்தது. நங்கள் இருக்கும் வீட்டின் மின்சாரத்துக்கான பணத்தைச் செலுத்தாததால் 15 நாட்களுக்கு முன்னரே மின்சார சபையினரால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது.
இந்த நிலையில் சிலர் தவறான ஒரு தகவல் ஊரெல்லாம் பரப்பி வருகிறாகள், அதாவது எங்கள் வீட்டின் மின்னிணைப்புத் துண்டிக்கப்பட்டுவிட்டதால், மகளின் வீட்டில் இருந்தே நாங்கள் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றதாகவும், அந்த சட்டவிரோத மின்சாரத்தில் சிக்கியே சதீஷ்வரன் என்பவர் இறந்தார் என்றும் சிலர் சொல்கிறார்கள். ஆனால் அது அப்பட்டமான பொய். அதில் உண்மையில்லை.
ஆறு மாதங்களுக்கு முன்னர் இரண்டு டோமன் இன நாய்க்குட்டிகளை வாங்கி , வளர்த்து வந்தோம். தொடந்தும் அவற்றை வளர்ப்பது சிரமம் என்பதால் விற்பனை செய்ய முடிவெடுத்து ஒரு நாயை விற்றுவிட்டோம். மற்றைய நாயை எங்களூரில் வசிக்கும் ஒருவரே வாங்க இருந்தார்.அவர் வாகனம் ஒன்றைப் பிடித்து வந்திருந்தார்.(அதுவே சதீஷ் கொண்டுவந்த வாகனம்)

வாகனத்தை காணிக்குள் நிறுத்திவிட்டு, நாயோடு சேர்த்து கூட்டையும் வாகனத்தில் ஏற்றினோம். கூடு அரைவாசிக்கு மேல் ஏற்றப்பட்ட நிலையில் திடீரென நாய் குரைத்தது. இதனால் வாகனத்திலிருந்து கூட்டை ஏற்றிக்கொண்டிருந்த சதீஷ் தனது பிடியை தளரவிட, சரிந்த நாய்க் கூட்டின் கூரைத்தகரம் முன் பகுதியில் போடப்பட்டிருந்த ‘பல்ப்’பின் வயரில் வெட்டுப்பட்டு, மின்சாரம் நாய்க்கூட்டில் பாய்ந்தது. இதனால் கூட்டைத் தூக்கிய நான்கு பேரும் மின்சாரத்தால் தாக்குண்டனர். சதீஸ்வரன் பாட்டா அணிந்திருக்கவில்லை. மின்சாரத்தால் தாக்கப்பட்ட சதீஸ்வரன் கீழே விழுந்தார். வீழ்ந்தவர் “தண்ணீர் தண்ணீர்” எனக் கேட்டார். தண்ணீர் கொடுத்தபோது தண்ணீர் இறங்கவில்லை.
மகளின் கணவர் அப்போதுதான், யாழ்ப்பாணத்தில் இருந்து ஓட்டோவில் வந்திருந்தார் . நாய்க்கூடு ஏற்றிய வாகனத்தை எடுத்து வெளியில் விட்டுவிட்டு அவரை ஓட்டோவில் ஏற்றி, கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பரிசோதித்த மருத்துவர் சதீஷ் இறந்துவிட்டார் எனக் கூறினார். உண்மையில் இதுதான் நடந்தது.

- என்று அந்த வீட்டினைச் சேர்ந்தவர் சத்தியம் செய்யாத குறையாகச் சொல்கின்றார்.

## தண்ணீர் கேட்டார்

“வாகனத்தை வாடகைக்கு பிடித்து நாய்க்கூடு ஏற்றுவது பற்றி நான் சதீஸ்வரனோடு கதைக்கவில்லை. அவரது முதலாளியிடமே கதைத்தோம். அவர் தான் வாகன திறப்பைக் கொடுத்து ஏற்றி இறக்குமாறு கூறி சதீஸ்வரனை எம்மோடு அனுப்பிவைத்தார். வாகனத்தை வீட்டுக்குள் கொண்டுபோய், நாயோடு சேர்த்து கூட்டையும் தூக்கி ஏற்றினோம். அங்கே முன்பக்கத்திற்கு போடப்பட்டிருந்த பல்புக்கு கொடுக்கப்பட்டிருந்த மின்சார வயரில் நாய்க்கூடு சரிந்து தட்டுப்பட்டு , அதிலிருந்தே மின்சாரம் தாக்கியது. கீழே விழுந்த சதீஸ்வரன் தண்ணீர் கேட்டார். அவர் வாய்க்குள் வெற்றிலை இருந்ததால் வெற்றிலையை எடுத்துவிட்டு தண்ணீரைக் கொடுத்தோம். அம்புலன்ஸுக்கு அறிவித்த போது தாமதமாகும் எனக் கூறினர்.
அந்தச்சமயம் வீட்டு உரிமையாளர் கிளிநொச்சியிலிருந்து ஓட்டோவில் வந்திருந்தார் . அவரது ஓட்டோவில் ஏற்றிக் கொண்டுசென்று மருத்துவமனையில் அனுமதித்தோம் “ என்று தன்னுடைய கோணத்தில் சம்பவத்தை விபரிக்கிறார் சதீஷை வாகனத்தோடு அழைத்துச் சென்ற இளைஞர்.



மின் வயரில் உள்ள அடையாளம்

## மின்சாரம் இல்லாமல் எப்படி எரிந்தது பல்ப்?

ஆனால் சம்பவம் நடந்த வீட்டின் அயலவர்களும், ஊரவர்களும் சொல்லும் தகவல்கள் சந்தேகத்தைக் கிளற வைத்தன.
"அவர்கள் வீட்டின் மின் இணைப்பு பதினைந்து நாட்களுக்கு முன்பாக துண்டிக்கப்பட்டாலும், அந்த வீட்டில் மின்குமிழ் (பல்ப்) தொடர்ந்து ஒளிர்ந்ததை நாங்கள் கண்டோம். அப்படியானால் எங்கேயோ அவர்கள் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றிருக்க வேண்டும்.
ஒருவருக்கு மின்சாரம் தாக்கினால் வீட்டில் உள்ள பெண்களாவது சத்தமிடுவது வழக்கம் தானே. ஆனால் அன்றைக்குச் சம்பவம் நடந்த போது வீட்டில் நான்கு பெண்கள் இருந்தனர். ஆனால் ஒரு சிறு சத்தமேனும் வெளியில் கேட்கவில்லை. அந்த இளைஞன் மின்சாரத்தால் தாக்குண்டு, அபாயக் கட்டத்தில் இருந்தபோதும், அயலில் இருந்த எவரையும் உதவிக்கும் கூப்பிடவில்லை. ஓட்டோவில் இரண்டு கால்களும் வெளியே தெரிந்த நிலையில் கொண்டு ஒருவரைக் கொண்டு செல்வதைக் கண்டுவிட்டே அவர்களது வீட்டுக்கு நாம் ( அயலவர்கள்)சென்றோம். அப்போது தான் அவர்கள் அந்த இளைஞனுக்கு மின்சாரம் தாக்கியதைக் கூறினர். " என்று ஒரே மாதிரிச் சொல்கிறார்கள் ஊரவர்கள்.

### 1 சந்தேகம்

மருத்துவமனைக்கு கொண்டு சென்று அவரை அனுமதித்தவர்கள் பெயர் விபரங்களை கொடுத்து பதிவு எதனையும் செய்யவில்லை. மருத்துவமனையில் இருந்து சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்கு சதீஸ்வரனின் உறவினர்கள் வந்த போது, மின்சார சபை வாகனத்தில் இரண்டு ஊழியர்கள் வந்திருந்தனர். சதீஷின் உறவினர்களைக் கண்டதும் அவர்கள் நழுவிச் சென்றுவிட்டனர் எனக் கூறப்படுகிறது. மதியம் ஒரு மணியளவில் பொலிஸார் சகிதம் நீதிவான் வந்தபோதும், முன்பு வந்திருந்த மின்சார சபை ஊழியர்கள் அதிகாரி ஒருவரோடு வந்திருந்தனர். சம்பவ இடத்துக்கு பொலிஸார் வந்து அறிவிக்காமல் ஊழியர்கள் ஏன் வந்தனர் என கேட்டனர். அப்போது அயலில் உள்ள கடைக்காரர் அறிவித்தே தாம் வந்ததாக மின்சார சபை ஊழியர்கள் கூறியுள்ளனர். பக்கத்து வீட்டுக்கே மின்சாரம் தாக்கியது தெரியாத போது கடைக்காரருக்கு எவ்வாறு தெரிந்தது? அந்தக் கடைக்காரரும் தனக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்தது பின்னரே தெரியும் என்று கூறியுள்ளனர். அப்படியானால் மின்சார சபையினருக்கு அறிவித்தது யார்? அவர்கள் ஏன் கடைக்காரர் அறிவித்ததாகச் சொல்லவேண்டும்?

### 2 சந்தேகம்

மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் வீட்டில், சம்பவம் இடம்பெற்ற பின்னர் பொலிஸார் பரிசோதித்தபோது, அவர்களது வீட்டுத் தண்ணீர் தாங்கியில் தண்ணீர் முழுதுமாக நிறைக்கப்பட்டிருந்தது. இணையப் பாவனைக்கான ரவுட்டர் ஒன்று சில நிமிடங்களுக்கு முன்னர் வரை இயங்கியதால் உண்டான சூட்டுடன் இருந்துள்ளது. அத்தோடு சம்பவம் நடந்த வீட்டில் இருந்து , மின்சாரம் இல்லை என்று சொல்லப்படும் வீட்டுக்கு இடையில் உள்ள மரங்களில் மின்வயர் கட்டப்பட்டிருந்த அடையாளங்கள் காணப்பட்டுள்ளன. அப்படியானால் மின்சாரம் துண்டிக்கப்பட்ட வீட்டுக்கு எடுக்கப்பட்ட சட்டவிரோத மின்சாரத்தில் சிக்கியே சதீஷ் இறந்தாரா?

### 3 சந்தேகம்

குறித்த வீட்டின் உரிமையாளர் முன்பு மின்சார சபையில் பணிபுரிந்துவிட்டு, தற்போது பிரதேச சபையில் வேலை செய்கிறார் எனவும், ‘அந்த அறிமுகத்திலேயே மின்சார சபை ஊழியர்களை அழைத்துவந்து தடயங்களை அவர் அகற்றியிருக்கலாம் எனவும் இறந்தவர்களின் உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அது உண்மையா? சம்பவ இடத்துக்குச் சென்ற மின்சார சபை ஊழியர்களை விசாரணை செய்தால் பொலிஸார் இந்த விடயத்தை இலகுவாகக் கண்டுபிடிக்கலாமே.

### 4 சந்தேகம்

வாகனத்தில் ஏற்றப்பட்ட நாய்க்கூடு இரும்பினாலானது. எனவே அதனைத் தூக்கியவர்களுக்கு அடித்த மின்சாரம் கூட்டுக்குள் இருந்த நாயை தாக்காதது ஏன்? நாய்க்கூடு வாகனத்தில் ஏற்றி முடியும் நேரம் கூடு சரிந்து, ஒரு மின்சார வயரில் மட்டுமே வெட்டுப்பட்ட அடையாளம் இருக்கிறது. ஒரு வயரில் தகரம் முட்டினால் மின்சாரம் தாக்குமா? கூட்டினைத் தாக்கிய மின்சாரம் அதை ஏற்றிய வாகனத்தையும் தாக்கி, மின்னிணைப்புகளை எரித்து, ரயரையும் சேதப்படுத்தி இருக்கும். அப்படி எதுமில்லையே. அது எப்படி?

### 5 சந்தேகம்

வீட்டின் முன்பாக மின்சாரத் தூணில் பெரிய அளவிலான மின்குமிழ் உள்ள போது ஏன் பத்து மீற்றரில் இன்னொரு மின்குமிழ் பொருத்தினார்கள்? சம்பவம் இடம்பெற்ற வீட்டார் காட்டிய வயரில் சதீஷுக்கு மின்சாரம் தாக்கவில்லை எனவும் வேறொரு வயரிலேயே மின்சாரம் தாக்கியதாகவும், அதனை வீட்டார் உடனடியாக மறைத்து விட்டதாகவும் அந்தப்பகுதியைச் சேர்ந்தவர்கள் சொல்வது உண்மையா? சம்பவம் நடந்த இடத்துக்கு மின் அருகிலேயே சதிஷீன் உறவினர் வீடொன்று உள்ளது, அவர்களுக்கு ஏன் சம்பவம் இடம்பெற்ற வீட்டார் தகவல் சொல்லவில்லை?

### 6 சந்தேகம்

சதிஷின் இடது கையால் மின்சாரம் இறங்கி இடது காலால் மின்சாரம் வெளியேறியதாகவும் சம்பவம் நடந்த உடனேயே அவர் உயிரிழந்துவிட்டார் எனவும் பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. உயிரிழந்தவர் வலதுகைப் பழக்கம் உள்ளவர். ஒரு பொருளை தூக்கும் போது பழக்கமான கையால் தானே பற்றிப் பிடிப்பார். நாய்க்கூட்டையும் வலது கையால் தானே பலமாக பற்றிப் பிடித்திருப்பார். அப்படியானால் எப்படி இடது கையில் மின்சாரம் தாக்கியது? அவர் மின்சாரத்தால் தாக்குண்ட கணமே உயிரிழந்துவிட்டார் என பிரேத பரிசோதனையில் சொல்லப்படுகின்றது. ஆனல் அவர் மின்னால் தாக்குண்ட பின்னர் தண்ணீர் கேட்டார் என்று சொல்லப்படுவது பொய்யா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே செல்ல உத்தரவில்லை!

எஸ்.தர்சன்



மாலை 4.50 மணி .

பொலித்தீன் பைகளில் உணவுப் பண்டங்களை ஏந்தியவாறு ஒவ்வொருவராக உள் நுழைகின்றனர். அவர்களில் சிலர் தமது கையில் ஒரு துண்டு பேப்பரையும் கொண்டு வருகின்றனர். சிலர் தயக்கத்துடன் உள்ளே நுழைகின்றனர். உள்ளே வந்த அவர்கள் நிரலாகப் போடப்பட்டுள்ள வாங்குகளில் அமர்கின்றனர். போதியளவு வாங்குகள் இல்லாததால் பலர் இருக்க இடமின்றி நிற்கின்றனர். தலை நரைத்து ,தோல் சுருங்கி, நடக்க கூட இயலாதவர்கள் முதல், துள்ளிக் குதிக்கும் கன்றுக் குட்டிகளைப் போன்றவர்கள் வரை அங்கு திரண்டிருந்தனர். எல்லோருடைய கண்க ளும் ஒரே திசையையே நோக்கியிருந்தன. தொலைபேசிகளை எடுத்து அதில் அடிக்கடி நேரத்தைப் பார்ப்பதும், நிமிர்ந்து பார்ப்பதுமாக அவர்கள் நிற்கின்றனர்.

மாலை 5 மணி.

இப்போது இராணுவ உடையைப் போன்ற சீருடைகளை அணிந்தவாறு ஒரு கூட்டம் உள்ளே இருந்து இவர்களை நோக்கி வருகின்றது. சப்பாத்து, இடுப்பு பட்டி, தொப்பி உள்ளிட்டவற்றை அவர்கள் அணிந்திருக்கின்றனர். வந்தவர்கள் அதிகாரத் தொனியில் பெருத்த ஒலி ஒழுப்புகின்றனர்.

“எல்லாரும் லைன்ல வா”

“பாஸ் இருந்தா மட்டும்தான் உள்ள விடுவம்”

“ஒரு பாசில ஒராள்தான் போகலாம்..”

“மற்றாக்கள் எல்லாம் வெளியால போ”

இதுதான் அவர்களுடைய தாரக மந்திரமாக இருந்தது. கையில் ஒரு சிறு துரும்பு ஆயுதம் கூட இல்லாதபோதும் அவர்களுடைய அந்தச் சீருடை அதிகாரம் அங்கிருந்த மக்களை அடக்கி ஆண்டது. கையில் பேப்பர் துண்டுடன் (பாஸ்) வந்தவர்கள் உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். அந்த துண்டில் அன்றைய திகதி, நேரம் உள்ளிட்டவற்றை சீருடை அணிந்தவர்கள் அடையாளப்படுத்தி அவர்களை உள்ளே அனுமதிக்கின்றனர். இப்போது துண்டு இல்லாதவர்கள் வெளியே கால்கடுக்க காத்திருக்கின்றனர். அவர்களில் பலர் உள்ளே செல்வதற்கு அனுமதிக்குமாறு பிள்ளை பாலுக்கு அழுவதைப் போன்று கெஞ்சிக் கூத்தாடுகின்றனர்.

"ஒருக்காலெண்டாலும்உள்ளவிடுங்கோ. தூர இருந்து வாறன். நம்பிக்கை இல்லையெண்டா பேர்ஸை வைச்சிருங்கோ"

“உன்ன என்ர பிள்ளை போல பார்க்கிறன். ஒருக்கா உள்ளுக்க போகவிடு. உடன பாத்திட்டு ஓடிவாறன்” “துண்டு உள்ள இருக்கிற ஆளிட்டதான் இருக்கு. அவாவால கொண்டு வந்து தரமுடியாது நான் போய் வாங்கிக்கொண்டு வந்து காட்டிப்போட்டு போறன் விடுங்கோ”

"துண்டு இருக்கு. மறந்து போய் வந்திட்டன் . ஒருக்கா விடுங்கோ. இனி வரேக்க கொண்டு வாறன்"

"தங்கச்சியை இங்க தனிய விட்டுட்டு உள்ளுக்குள்ள போக ஏலாது, அவா சின்ன பிள்ள, ஒரு துண்டுதான் இருக்கு. ரண்டு பேரையும் விடுங்கோ"

இப்படி பலவாறாக அவர்கள் கெஞ்சுகின்றனர். ஆனாலும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. கால்கடுக்க காத்திருந்த அவர்கள் எதுவுமே செய்ய இயலாது கண்ணீருடன் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்.

இந்தச் சம்பவங்கள் எங்கோ இந்தியா, பாகிஸ்தான் எல்லைப்பரப்பிலே, இராணுவச் சோதனைச் சாவடியிலோ இடம்பெறவில்லை. நாம் பிறந்த எமது பண்பாட்டு மண்ணான யாழ்ப்பாணத்தின் போதனா வைத்தியசாலையிலேயே இடம்பெறுகின்றது. ஒவ்வொரு நாளும் இதுவே நடக்கின்றது.

பல்வேறு நோய்களுக்கும் உள்ளாகி மருத்துவமனை விடுதிகளில் படுத்த படுக்கையாக உள்ள தமது உறவுகளைப் பார்ப்பதற்காகவே அவர்கள் அங்கு வருகின்றனர். அங்கு வருபவர்கள் வேடிக்கை பார்க்கவோ, அல்லது களியாட்ட நிகழ்வுகளுக்கோ வருவதில்லையே. அப்படிப் பட்ட மக்களை அடக்கி ஆண்டு, அவர்களுடைய கோரிக்கையை தட்டிக் கழிப்பதானது அந்த மக்களுடைய உரிமையைப் பறிப்பதாகவே அமைகின்றது. எமது கல்வியியலாளர்களையும்,, அறிஞர்களையும், மதத் தலைவர்களையும் சாதாரண இராணுவச் சிப்பாய் முழந்தாளிட வைத்தால் நாம் பொங்கி எழுகின்றோம். ஆனால் அதே போன்றே மருத்துவமனையில் இராணுவத்தை ஒத்த சீருடை அணிந்தவர்கள் எமது கல்வியாளர்கள், அதிகாரிகள், ஏன் மக்கள் பிரதி நிதிகளைக் கூட ஒரு புழுவை விடவும் கீழாக நடத்துகின்றனர். அது குறித்து ஏன் யாரும் பொங்குவதில்லை? ஏன் அதற்கான தீர்வுக்கு முயற்சிப்பதில்லை?





**“ மருத்துவமனை பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு மனித உணர்வுகளை மதிக்கும் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும், உணர்வு ரீதியான சிறந்த பயிற்சிகளின் பின்னரே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வாயிற் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ”**

கொவிட் தொற்றுக் காரணமாக ஒரு பாஸ"க்கு ஒருவரே அனுமதிக்கப்படுவார் என்று மருத்துவமனை நிர்வாகம் அறிவித்திருந்தாலும், மருத்துவமனைக்கு உள்ளே கொவிட் சுகாதார நடைமுறையை அனைவரும் கடைப்பிடிக்கின்றனரா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஏனெனில் மருத்துவமனை விருந்தகத்துக்கு (கன்ரீன்) செல்பவர்கள் அங்கு குழுமியே உணவுப் பண்டங்களைக் கொள்வனவு செய்கின்றனர். சீருடை தரித்தவர்கள் கூட சமூக இடைவெளியை ஒருவருக்கு ஒருவர் பேணுவதில்லை. இவ்வாறு இருக்கும்போது தமது உறவுகளைப் பார்க்கச் செல்லும் மக்களை கொவிட் தொற்றைக் காட்டி அவர்களுடைய உரிமையை மறுப்பது ஏற்றுக்கொள்ளமுடியாததொன்று.

எமது உரிமைகளுக்காக ஐ.நா. வரை சென்றுள்ள எமது இனத்துக்கு, எமது இனத்தவராலேயே உரிமை மறுக்கப்படுவது இங்குள்ள எவருடைய கண்களுக்கும் புலப்படவில்லை போலும். அடக்கு முறை, அடக்கு முறை என்று கத்திக் கூச்சலிடும் நாமே எம் இனத்தவர்களை இரக்கமின்றி அடக்குவதும், அவர்களுடைய உரிமைகளைப் பறிப்பதும் தக்க செயல் அல்லவே.

### மருத்துவமனை நடைமுறை

நோயாளி ஒருவரை விடுதியில் தங்கவைத்து கிசிச்சை வழங்குவதன் நோக்கம், அவருக்கு வேறு எந்தக் கிருமிகளும் தொற்றுவதைத் தடுப்பது, படுக்கை வசதிக்காக, வீடுகளில் உள்ள சிரமங்களை தவிர்த்து நோயை விரைந்து குணமாக்குதல், மருத்துவர்களின் கண்காணிப்பு , நோயாளி என்ற மன அழுத்தத்தை குறைத்தல் போன்ற பல காரணங்கள் மருத்துவத்துறையினரால் விடுதியில் தங்க வைப்பதற்கு காரணங்களாகக் கூறப்படுகின்றன. மருத்துமனையில் உள்ள நோயாளியைப் பார்வையிடுவதற்காக வருபவரிடம் உள்ள கொவிட் வைரஸ் அந்த நோயாளருக்கு தொற்றும், அப்படியே அந்த நோயாயிடம் இருந்து அருகே உள்ள மற்றுமொரு நோயாளிக்கும் அந்தக் கிருமி தாவும், இதனால் அங்குள்ள நோயாளர்கள் அனைவருக்குமே பாதிப்பு ஏற்படுகிறது. மாறாக நோயாளி ஒருவரிடம் இருந்தும் சுகதேகி ஒருவருக்கு கிருமித் தொற்று ஏற்படும் அபாயமும் காணப்படுகின்றது என்றும் மருத்துவத்துறை கூறுகின்றது. குழந்தைகள், சிறுவர்களை மருத்துவமனைக்குள் அனுமதிக்காததற்கான காரணமும் அதுவே என்றும் கூறப்படுகிறது.

### ஊறிப்போன விடயம்

மருத்துவமனைகளில் உள்ள தங்களுடைய உறவினரான நோயாளர்களை வைத்தியசாலைக்குச் சென்று பார்த்தால் தான் திருப்தி என்பதும், அவர்களை நலன் விசாரிக்க வேண்டும் என்பதும் காலாதி காலமாக எமது மக்கள் மத்தியில் ஊறிப்போன ஒரு விடயம். மருத்துவமனைகளில் உள்ள நோயாளர்களும் அது போன்றே, உறவுகள்மருத்துவமனைக்கே வந்து தங்களைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். அவ்வாறு உறவுகள் சென்று நோயாளியைப் பார்ப்பதன் மூலமே அவர்களுடைய மனது ஆரோக்கியமடைகிறது என்றும், அதனால் பாதி நோய் குணமாகிவிடுகிறது என்றும் கூறப்படுகின்றது. அதனாலேயே யாராவது நோய்வாய்ப்பட்டு மருத்துவமனை விடுதியில் அனுமதிக்கப்பட்டால் முண்டியடித்து உறவுகள் அங்கேயே சென்று பார்த்துவிடுகின்றனர். எழுந்து நடக்க முடியாத பாட்டியோ, பாட்டனோ கூட மருத்துவமனைக்குச் சென்று உறவினரைப் பார்த்தால் தான் திருப்திப் படுவார்கள். இதை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாக மும் நன்கு அறியும்.

### தீர்வுதான் என்ன?


மருத்துவமனை பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு மனித உணர்வுகளை மதிக்கும் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும், உணர்வு ரீதியான சிறந்த பயிற்சிகளின் பின்னரே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வாயிற் கடமையில் ஈடுபடுத்தப்படவேண்டும். நோயாளர்களைப் பார்வையிட வரும் உறவினர்களுக்கும் போதியளவு விழிப்புணர்வுகள் மருத்துமனை நிர்வாகத்தால் ஏற்படுத்தப்படவேண்டும். பாஸ் நடைமுறைகளை மறுசீரமைக்கப்பட வேண்டும், அதாவது காலை, நண்பகல், மாலை என்ற அடிப்படையில் வர்ணங்களைக் கொண்ட "கார்ட்" வழங்கலாம். உதாரணமாக காலையில் வருபர் மஞ்சள் நிற கார்ட்டுடன் வந்தால் மாத்திரமே உள்ளே அனுமதிக்கப்படுவார் என்ற நடைமுறை இருந்தால் வேறு எந்த கார்ட்டுடனும் உறவினர்கள் வரமாட்டார்கள். ஏனைய நேரங்களில் வெவ்வேறு நிறங்களைக் கொண்ட கார்ட்களை வழங்கலாம். இப்படி புதிய வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் நோயாளர்களைப் பார்வையிடவரும் உறவுகளுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்ப்பதுடன், மருத்துவமனை கட்டமைப்புக்களையும் நேர்த்தியாகப் பின்ன முடியும் அத்தோடு, மக்கள் நலன் பேணும் அமைப்புக்களுடனும் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடலாம். இவற்றை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நிர்வாகம் கவனத்தில் எடுக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணி மாத்திரமே என்ற அடிப்படையில் அந்த விவகாரத்தைச் சாதூரியமாகச் செயற்படுத்தியவர் ஆயர் தியோகுப்பிள்ளை.

மன்னார் மறை மாவட்டத்தின் முதலாவது ஆயராக தோமஸ் சௌந்தரநாயகம் பதவியேற்றபோது கலந்துகொண்ட இராயப்பு யோசப் (அப்போது அருட்தந்தை) ஆயர் தியோகுப்பிள்ளையின் கனவுகளை தோமஸ் சௌந்தரநாயகம் நிறைவேற்றுவார் என்று நாசூக்காகக் கூறியதோடு, சமயங்களைக் கடந்து கத்தோலிக்கத் திருச்சபை, தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப்பாடுபடும் என்று கூறியிருந்தார். அந்தக்காலத்தில் ஈழவிடுதலையெனக் கூறிப் போராடிய சில இயங்கங்களின் செயற்பாடுகளையும் அவர் விமர்சிக்கத் தவறவில்லை.

1992 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டத்தின் ஆயராகப் பதவியேற்ற பின்னரான சூழலில் வடக்கு, கிழக்கை மையமாகக் கொண்டு தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபையின் செயற்பாடுகளைச் முன்னிலைப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த ஆயர் இராயப்பு ஜோசப், ஏனைய கிறிஸ்தவ சபைகளின் ஆயர்கள் மற்றும் தலைமைக் குருக்களுடன் உறவுகளைப் பேண ஆரம்பித்தார். அந்த அணுகுமுறை ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமை நோக்கிலானதெனலாம்.

இவ்வாறானதொரு நிலையில் திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தை 2005 ஆம் ஆண்டு பிரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளில் வடக்குக் கிழக்கு ஆயர்கள் மேற்கொண்ட கூட்டு முயற்சி வெற்றியடைந்தது. இதன்படி, 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3 ஆம் திகதி மட்டக்களப்பு மறை மாவட்டம் திருகோணமலை மறை மாவட்டத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுத் தனி மறை மாவட்டமாக பாப்பரசரினால் அறிவிக்கப்பட்டது. அதன் முதலாவது ஆயராக யோசப் பொன்னையா செப்ரெம்பர் மாதம் பதவியேற்றார்.

அதன்படி திருகோணமலை மறை மாவட்டம் தனி மாவட்டமாகச் செயற்பட ஆரம்பித்தது. திருகோணமலை மட்டக்களப்பு ஆயராகப் பதவி வகித்திருந்த கிங்ஸிலி சுவாம்பிள்ளை திருகோணமலை மறை மாவட்டத்தின் ஆயராகத் தொடர்ந்து பதவி வகித்தார். மட்டக்களப்பு தனி மறை மாவட்டமாகச் செயற்பட ஆரம்பித்ததும் ஆயர் இராயப்பு ஜோசப்," வடக்கு, கிழக்கில் தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபை தற்போது நான்கு மறை மாவட்டங்களைக் கொண்டிருக்கிறது" என்றார்.

அதாவது அவருடைய அந்தக் கருத்தின் தொனி, வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தின் எல்லை தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதையே மறைமுகமாக வெளிப்படுத்தியிருந்தது.

ஏனெனில் 1975 டிசம்பர் மாதம் திருகோணமாலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் சில பகுதிகள் பிரிக்கப்பட்டுப் புதிதாக அமைக்கப்பட்ட அனுராதபுரம் மறைமாவட்டத்துடன் சேர்க்கப்பட்ட போது, தமிழ்ப் பிரதேசங்கள் ஏன் சிங்கள மறை மாவட்டத்துடன் இணைய வேண்டுமென அப்போதைய ஆயர் தியோகுப்பிள்ளைக்கு ஏற்பட்டிருந்த உணர்வைப் புரிந்துகொண்டதன் அடிப்படையில், ஆயர் இராயப்பு ஜோசப் செயற்பட்டிருந்தமையே அந்தத் தொனியின் வெளிப்பாடு எனலாம்.

குறிப்பாக மடு தேவாலயத்தை அனுராதபுரம் மறை மாவட்டத்துடன் வைத்திருக்க வேண்டும் என்பதில் கொழும்பை மையமாகக் கொண்ட கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமை மறைமுகமாக விரும்பியிருந்தவொரு சூழலில் 1981 ஆம் ஆண்டு மன்னார் தனியான தமிழ் மறை மாவட்டமாகப் பிரிக்கப்படமையானது பெரும் வரப்பிரசாதமாகும்.

ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் ஆயர்களும் தமிழ் அருட் தந்தையர்களும் வெளிப்படையாகவும் அரசியல் ரீதியிலும் அது பற்றி வெளிப்படையாக உரிமைகோரவேயில்லை

ஏனெனில் சமயச் செயற்பாடுகளில் அரசியல் இருக்கக் கூடாதென்பது அவர்களின் அடிப்படைப் பண்பு. மன்னார், மட்டக்களப்பு மறை மாவட்டங்கள் தனிமறை மாவட்டங்களாக உருவாக்கப்பட்டமையானது கத்தோலிக்கத் திருச்சபையின் தமிழ் மக்களுக்கான அடுத்த கட்ட சமயச் செயற்பாடாக மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் சார்ந்து கொழும்பை மையமாகக் கொண்ட இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையோடு அவ்வப்போது கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தாலும், சமயப் பணிகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி அதன் மூலம் வடக்குக் கிழக்கு மக்களின் தனித்துவத்தையும் மேற்படுத்திய பெருமை தமிழ் ஆயர்களுக்கு உண்டு.

குறிப்பாக ஆயர் இராயப்பு ஜோசப் அந்தப் பணியைச் செவ்வனே நிறைவேற்றியிருந்தால் அவருடைய மரணச் செய்திக்குச் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்கில் உருவான அரசியல் நிலைமையைத் துணிவோடு கையாண்ட ஆயர் இராயப்பு ஜோசப். சமயப் பணியைக் கடந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றும் விடயத்தில் முன்நின்று செயற்பட்டிருந்தார். தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் தமிழ் இளைஞர், யுவதிகளின் நிலைமை பற்றி கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரங்களுக்கு எடுத்துக் கூறியதோடு இந்தச்செயற் பாடு தமிழ் இன அழிப்பு என்பதையும் வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

**வெளிநாட்டு இராஜதந்திரிகளைப் பகைத்துக் கொண்டு ஆயர் இராஜயப்பு ஜோசப் கருத்து வெளியிடுவர் அல்லர். மாறாக சிங்கள ஆட்சி யாளர்கள் கடந்த எழுபது ஆண்டுகளாக மேற் கொண்ட தமிழ் இன அழிப்புப் பற்றிய விபரங்களை பகிரங்கமாகவும் துணிவோடும் மன்னார் பிரதேசத்தில் இருந்தே வெளிப்படுத்தியிருந்தார்.**

முள்ளிவாய்க்காலில் நடந்தது தமிழ் இன அழிப்பு என்று 2012 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் பகிரங்கமாகவே கூறியவர் ஆயர் இராஜயப்பு யோசப், கொழும்பில் நடைபெற்ற கத்தோலிக்கத் திருச்பையின் ஆயர்கள் மாநாட்டில்கூட தமிழ் மக்களின் அவலங்களை வெளிப்படையாகக் கூறியதோடு, நிரந்தர அரசியல் தீர்வை அதாவது ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இயல்பாகவே விட்டு விடுவதற்கு என்ன பிரச்சினை ? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் ஆயர் இராயப்பு ஜோசப் சமயப் பணிகளைவிட பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டு வரும் முயற்சியிலேயே அதிகம் அக்கறை செலுத்தியிருந்தார்.

இந்திய மத்திய அரசு இனியாவது ஈழத்தமிழ் மக்களின் நலன்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென ஆயர் இராஜப்பு ஜோசப் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரிடம் கேட்டிருந்தார். பல கடிதங்களையும் அனுப்பியிருந்தார். இந்திய மத்திய அரசு மீது ஈழத்தமிழர்கள் தொடர்ந்தும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று நேர்காணல் ஒன்றில் ஆயர் கூறியிருந்தார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளைப் பகைத்துக் கொண்டு ஆயர் இராயப்பு ஜோசப் கருத்து வெளியிடுபவர் அல்லர். மாறாக சிங்கள ஆட்சியாளர்கள் கடந்த எழுபது ஆண்டுகளாக மேற்கொண்ட தமிழ் இன அழிப்புப் பற்றிய விபரங்களை பகிரங்கமாகவும் துணிவோடும் மன்னார் பிரதேசத்தில் இருந்தே வெளிப்படுத்தியிருந்தார்.

1981 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டம் உருவாக்கப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்திருந்த அப்போதை பிரதமர் ரணசிங்க பிரேமதாச, ஆயர் தியோகுப்பிள்ளையோடு முரண்பட்டிருந்தார். கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் மார்க்கஸ் பெர்ணாண்டோவுடன் தியோகுப்பிள்ளை எதுவுமே பேசாமல் அமைதியாக இருந்து தனித்துவமாகச் செயற்பட்டிருந்தார். அன்றைய இந்த வரலாறுகளை ஆழமாகப் புரிந்து கொண்டவர் ஆயர் இராயப்பு ஜோசப்.

சமயங்கள் வேறாக இருந்தாலும் தமிழர்களாக ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தில் ஆயர் ஜோசப் பலமான நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதை ஜெனிவா மனித உரிமைச் சபையின் அமர்வில் அவர் ஸ்கைப் மூலம் வெளியிட்ட கருத்துக்கள் கோடிட்டுக் காண்பித்திருக்கின்றன. நடந்தது போர் அல்ல தமிழ் இன அழிப்புத்தான் என்ற ஆயரின் குரல், சமயங்களைக் கடந்து ஈழத்தமிழர்கள் தனித்த ஒரு தேசிய இனம் என்பதையே அடையாளப்படுத்தியிருக்கிறது. அது சுயநிர்ணய உரிமைக்கும் வலுச் சேர்த்திருக்கிறது.

ஆயர் இராயப்பு ஜோசப் காலமாகவில்லை.

> “நடந்தது போர் அல்ல தமிழ் இன அழிப்புத்தான் என்ற ஆயரின் குரல், சமயங்களைக் கடந்து ஈழத்தமிழர்கள் தனித்த ஒரு தேசிய இனம் என்பதையே அடையாளப்படுததியிருக்கிறது. அது சுயநிர்ணய உரிமைக்கும் வலுச் சேர்த்திருக்கிறது.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## பிஞ்சு தூரிகைகள்



டெ.தேஜஸ்னி
தரம் 2,
அ.இல -214



ஜெ.பகீரதன்,
யாழ்.கோப்பாய்
கிறிஸ்தவக் கல்லூரி.
தரம்–12



B.விஷ்ணுகன்,
ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.
தரம்–09



கே.அக் ஷிதா
சுண்டுக்குழி மகளிர்
கல்லூரி.
தரம்–03A

# மனம் கொண்டது மாளிகை



ராமநாதபுரம் எனும் ஊரில் ரமேஷ் என்பவனும் அவனது மனைவியும் வாழ்ந்து வந்தனர். ரமேஷ் என்பவன் தற்காலிகமாக அரச வேலை ஒன்றில் பணியாற்றி வந்தான். இதனால் கிடைக்கும் பணத்தில் அவனும் அவனது மனைவியும் திருப்தி மிக்க வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர்.

இதேபோல் முகேஷ் என்பவனும் அவனது மனைவியும் அந்த ஊரில் தான் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் முகேஷ் நிரந்தர அரசாங்கம் வேலை ஒன்றில் பணியாற்றினான். அவன் நிரந்தர வேலையில் பணியாற்றுவதால் சேமிப்பு இல்லாமல் செலவழிப்பான். ஒரு நாள் உலக நாடுகளுக்கு புதிய நோய் ஒன்று அறிமுகமானது. இந்நோய் பல்வேறு நாடுகளிலும் பரவி உயிர்களை எல்லாம் காவு கொண்டது.



இதனால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இதனால் "தற்காலிகமாக அரசாங்க வேலையில் இணைந்த அனைவருக்கும் வேலை இல்லை" என அரசாங்கம் அறிவித்தது. இதனால் ரமேஷ் மிகவும் மனம் வருந்தினான். இருப்பினும் அவன் அன்றாடத் தேவைகளுக்காக கூலி வேலை ஒன்றை செய்ய எண்ணினான். புதிய நோயின் காரணமாக அவனை எவரும் வேலைக்கு அழைக்கவில்லை. அவன் வசித்ததோ வாடகை வீடு. ரமேஷ் வேலைக்கு செல்லாதபடியால் அவனால் வாடகையை கொடுக்க முடியவில்லை.

இதனால் அவனும் அவன் மனைவியும் வீட்டை விட்டு வெளியேறினார்கள். சிறிது காலம் கோவிலில் வாழ்ந்தார்கள். பின் அவனுக்கு நிரந்தர கூலி வேலை கிடைத்தது. இதன் மூலம் கிடைக்கும் பணத்தை தன் தேவைகளுக்கு வேண்டியதைச் செலவழித்துவிட்டு மீதியை சேமிப்பான். அவனிடம் இருந்த சேமிப்புப் பணத்தை வைத்துக் கொண்டு குடிசை வீடொன்றைத் தேர்ந்தெடுத்தான்.

அவன் அக்குடிசை வீட்டை மாடமாளிகை என நினைத்து வாழ்வான். பனையோலைப் பாயில் படுத்தாலும் சுகமாகபடுத்துறங்குவான். செய்கின்ற கூலி வேலையைக் கூட உயர் வேலை போன்று நினைத்து திருப்தியாக வேலை செய்வான். தனது மனைவி உப்பில்லாத உணவைச் சமைத்துக் கொடுத்தாலும் அதை அறுசுவை உணவு போல் நினைத்து உண்ணுவான். எவரைப் பார்த்தாலும் உயர்வான சிந்தனைகளோடு தான் பார்ப்பான். ஆனால் முகேஷ் எல்லாவகையிலும் தாழ்வான சிந்தனைகளைக் கொண்டிருப்பான். எதை எடுத்தாலும் ஒவ்வொரு குற்றம் கூறுவான். எதையும் சகித்துக் கொள்ளமாட்டான். நோய் விடயத்திலும் அலட்சியமாக செயற்பட்டான். இவனது செயற்பாட்டால் இவனுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அந்த மாரடைப்பை குணப்படுத்த அவனிடம் போதியளவு பணம் இல்லைாமல் போனது. இதனால் இறுதியில் முகேஷ் இறந்துபோய் விட்டான். ஆனால் ரமேஷ் கொண்டிருந்த உயர் எண்ணங்கள் மற்றும் நற்பழக்கவழக்கங்கள் காரணமாக அவனுக்கு நிரந்தர அரசாங்க வேலை ஒன்றில் பணியாற்ற வாய்ப்புக்கிடைத்தது. ஆகவே நாமும் எப்போதும் உயர் எண்ணங்களை எண்ணி வாழ வேண்டும்.

**த. துளசிகா**, தரம் 10
யாழ். இந்து மகளிர் கல்லூரி, அ.இல92

## அறிவோம்

அழுகையால் சிவனின் அன்பைப் பெற்ற அடியவர்
**மாணிக்கவாசகர்**

என்கடன் பணி செய்து கிடப்பதே எனத் தொண்டாற்றியவர்
**திருநாவுக்கரசர்**

எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என விரும்பியவர்
**தாயுமானவர்**

முருகனின் அழகைக் காண பிரம்மாவிடம் நாலாயிரம் கண்கள் கேட்டவர்
**அருணகிரிநாதர்**

சிவநாமம் எங்கும் சூழ வேண்டும் என பாடியவர்
**ஞானசம்பந்தர்**

கண்ணனை நினைத்து உருகி வாரணம் ஆயிரம் பாடியவர்
**ஆண்டாள்**

யசோதையாக மாறி கண்ணனைத் தாலாட்டியவர்
**பெரியாழ்வார்.**

## புதிர் விலங்கு



படத்தில் கொடுக்கப்பட்டுள்ள இந்த விநோதமான விலங்கின் உள்ளே மொத்தம் ஆறு விலங்குகள் ஒளிந்துள்ளன. என்னென்ன விலங்குகள் என்பதைக் கண்டறியுங்கள்....

## வேளாண்மை வேண்டும்

நாம் எடுத்து வரும்
நீரற்ற குடமும் நிழலற்ற தடமும்
நிகழ்கால உலகின்
நீங்காத அவலம்!

நாம் வாழும் ஆறற்ற ஊரும்
அழிவுற்ற உழவும் அடித்தட்டு
நிலைக்கு நம் அகிலத்தை
நகர்த்தும்!

நம் கூரற்றமதியும் குறுகி விட்ட
நம் ஊர் நதியும் குறிப்பிட்ட
எதற்கும் உதவாமல் சிதையும்
[illegible]!
நம் [illegible]
நம் ஊரோரக்குளமும்
மழையும் சிரிப்பற்ற மனையும்
சிறப்பான எதையும் நம்மிடம்
சேராமல் விலக்கும்!

நம் நாட்டில் வீசும் கேடுற்ற
காற்றும் காடற்ற நாடும்
மேகத்தின் வரவை மெதுவாக
இழக்கும்!

நம் ஓய்வற்ற உழைப்பும்
நோயற்ற உடலும் எம்
ஒப்பற்ற வாழ்வை நமக்காக
வழங்கும்!

உழுகின்ற நிலமும் உயிருள்ள
வரைக்கும் நம்மைக் காக்கும்
நிதமும்!

நம்முடைய ஏரோட்டும் கூட்டம்
இருக்கும் வரைக்கும்
ஏமாற்றம் இல்லா எதிர்காலம்
இருக்கும்!

நம் நேரற்ற வழியும் நெறியற்ற
தொழிலும் நேற்றோடு நம்முடன்
இருந்தது போதும்
இனி வேளாண்மை வேண்டும்

**ச.பிறேமியா** ,தரம் 9
யா/மகாஜனக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாத்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு புதிய ஜெனிவாத் தீர்மானம் தொடர்பாக பிரித்தானியாவையும் கனடாவையும் மையமாகக் கொண்டியங்கும் தமிழ் அமைப்புக்கள் தெரிவித்துள்ள கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. புதிய ஜெனிவா தீர்மானத்தை உருவாக்கியதில் மேற்படி அமைப்புகளுக்கும் ஏதோ ஒரு விகிதமளவுக்கு பங்கு உண்டு.


இலங்கை அரசாங்கம் அவ்வாறு கருதுவதால்தான்ஜெனிவாத்தீர்மானத்துக்கு எதிரான தனது முதல் நகர்வை மேற்படி அமைப்புகளுக்கு எதிராக எடுத்திருக்கிறதா? ஆனால் இங்கேயுள்ள முக்கியமான கேள்வி என்னவென்றால் தமிழ் நோக்கு நிலையிலிருந்து பலவீனமான ஒரு தீர்மானத்தை அல்லது தமிழ் மக்கள் தங்களுக்கு ஒரு பெருவெற்றி என்று கருத முடியாத ஒரு தீர்மானத்தை கடுமையான தீர்மானமாக எடுத்துக்கொண்டு அதற்கு எதிராக அரசாங்கம் கடுமையாக எதிர்வினை ஆற்றியுள்ளதா? என்பதுதான்.

இது தம்மைப் பெரிய அளவில் பாதிக்காது என்று அவ்வமைப்புக்கள் கூறுகின்றன. உண்மைதான். இத்தடை அவர்களை நேரடியாக பாதிக்காது.. ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் தாயகத்தில் வாழும் தமிழ்மக்களுக்கும் இடையிலான இடையூட்டத்தை பாதிக்கும். புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகளிடமிருந்து தாயகத்துக்கு வரக்கூடிய உதவிகளையும் இரண்டு தரப்புகளுக்கும் இடையிலான தொடர்புகளையும் அரசாங்கம் தனக்கு வசதியான விதத்தில் சட்டவிரோதமாக காட்டி தாயகத்தில் இருக்கும் செயற்பாட்டாளர்களை தூக்கி உள்ளேபோட இது உதவக் கூடும். எனவே இதன் உடனடிப் பாதிப்பு தாயகத்தில் வாழும் செயற்பாட்டாளர்களுக்குத்தான். இப்படிப்பார்த்தால் அரசாங்கம் ஐ.நா. தீர்மானத்துக்கு எதிரான தனது முதல் நகர்வின் மூலம் தாயகத்துக்கும் புலம்பெயர்ந்த தமிழ்மக்களுக்கும் இடையிலான இடையூடாட்டத்தை குறைக்க எத்தனிக்கிறது என்று தெரிகிறது.

இது விடயத்தில்புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்பை கையாண்டு தனக்கு வசதியான ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்த மேற்கு நாடுகளுக்கு ஒரு பொறுப்பு உண்டு. ஐ.நா. தீர்மானத்துக்கு எதிரான முதல் நகர்வு எனப்படுவது, புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புக்கு மட்டும் எதிரானது அல்ல. தர்க்கபூர்வ விளைவுகளைக் கருதிக் கூறின், தீர்மானத்தைக் கொண்டு வந்த கருக்குழு நாடுகளுக்கும் எதிரானதுதான். எனவே இதுவிடயத்தில் மேற்கு நாடுகளுக்கு ஒரு பொறுப்பு உண்டு,தீர்மானத்தின் விளைவு அரசாங்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துமோ இல்லையோ, உடனடிக்கு தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை அரசாங்கம் ஐ.நா.வுக்கும் கருக்குழு நாடுகளுக்கும் உணர்த்தியிருக்கிறது.

அதேசமயம் இதுவிடயத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் அமைப்புகளுக்கும் ஒரு பொறுப்பு உண்டு. இதை நான் எனது கட்டுரைகளில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறேன். டயஸ்போறாவுக்கும் தாயகத்துக்கும் இடையே ஏற்றுக்கொள்ளத்தக்க சேர்ந்தியங்கும் தளங்களையும் வழிமுறைகளையும் டயஸ்போறா உருவாக்க வேண்டும். ஒப்பீட்டளவில் அதிகரித்த ஜனநாயகச் சூழலைக்கொண்ட நாடுகளில் வசிக்கும் அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் தூக்கும் கொடிகளும் , சின்னங்களும் தாயகத்திலுள்ள செயற்பாட்டாளர்களோடு அவர்கள் உறவுகளை வைத்துக் கொள்வதற்கு தடையாக இருக்கக்கூடாது. இது விடயத்தில் உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிவில் சமூக இடையூடாட்டத் தளங்களை உருவாக்க வேண்டும். இது மிக அவசியம். புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் தாயகத்துக்கும் இடையிலானஉறவுகளைக் கட்டுப்படுத்தினால் நீண்ட எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலின் ரத்தச் சுற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தலாம் என்று அரசாங்கம் நம்புகிறது.

கடைசியாக நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானமும் அதன் உடனடி விளைவுகளும் தமிழ் மக்கள் வெற்றிபெறத் தவறியதை காட்டுகின்றன. உள்நாட்டில் கூட்டமைப்பும் புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பில் சில அமைப்புகளும் கூறுவது போல அது ஒரு மகத்தான வெற்றியா?




## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

SOS சிறுவர் கிராமங்கள் இலங்கை

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 136 சர்வதேச நாடுகளில் 71 வருடங்களாகவும் இலங்கையில் 40 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். இந் நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி வெற்றிடங்கள்

1. FSP இணைப்பாளர் (Coordinator- Family Strengthening Programme) (பெண் - 40 வயதிற்கு உட்பட்டோர்)
   * அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமூகவியல் பட்டம் (Degree) அல்லது (Diploma) கற்கை நெறிச்சான்றிதழினை கொண்டிருப்பதோடு குறைந்தது ஒரு வருட / ஆறு மாத தொழில் சார் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.
   * சமூகம் சார் வெளிக்கள வேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவராகவும் சாரதி அனுமதிப்பத்திரத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   * கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டவராக இருப்பதோடு, ஆங்கில மற்றும் சிங்கள மொழியறிவு கொண்டிருப்பது விரும்பத்தக்கது.
2. Educator & Counsellor (ஆண்) (இளைஞர் விடுதி)
   * அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முதல்நிலை இளங்கலைப் பட்டம் (Degree) அல்லது அதற்குச்சமமான (Higher Diploma) கற்கை நெறிச்சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருப்பதுடன் உளவியல் சார் கல்வித்தகைமையைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
   * தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவராகவும் திருமணமாகாதவராயிருத்தல் வேண்டும்
   * சாரதி அனுமதிப்பத்திரத்தினை கொண்டிருப்பதோடு, விளையாட்டுத்துறையில் ஆளுமையுடன் அனுபவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

இந்நிறுவனத்தின் சேவையாற்ற விரும்புவோர் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 15.04.2021 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

"SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references.

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்
இல:219, நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
தொ.பே: 021-221 1101 / 077- 373 3711
மின்னஞ்சல்:
jaffna@soscvsrilanka.org


பருத்தித்துறை தும்பளை

# அமரர் திரு. சபாநாயகம் ரவீந்திரன் (சபா ரவீந்திரன்)

## (சமாதான நீதவானும், சட்டத்தரணியும்) அவர்களின்

# முதலாம் ஆண்டு சிரார்த்த தினம்

04.04.2021



தோற்றம்
14.09.1950

மறைவு
04.04.2020

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன !

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திட செடிவந்து சேரும்

பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திட கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க !
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க !
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க!
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க !
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க !
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க !

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org